# சினிமா சீக்ரெட்

பாகம் 3

கலைஞானம்



# சினிமா சீக்ரெட்

## பாகம் - 3

# கலைஞானம்

# சமர்ப்பணம்

 

எனக்கு ஏழு வயதாகியிருந்தபோது, நான் கட்டபொம்மன் நாடகம் பார்த்துவிட்டு வந்து "என்னடா... என்னடா... கட்டபொம்மா... எந்நேரம் பார்த்தாலும் கத்திச்சண்டை..." என்ற பாடலை ஒரு குச்சியைக் கையில் எடுத்து சுழட்டியவாறு பாடிக் கொண்டே ஒரு நாற்காலியிலிருந்து மற்றொரு நாற்காலிக்கு குதிக்க... கால் தடுமாறி நாற்காலியும் சாய்ந்து என் கீழ் உதட்டில் வெட்டிவிட்டது. உடனே என் தாய் பேச்சியம்மாள், அடுப்புக்கரித்துண்டை நொறுக்கி உப்புக்கல்லையும் நசுக்கி உதட்டுக்கு கட்டுப் போட்டார். அப்போது என் தந்தை முத்தையா

வந்து விபரம் கேட்க, நடந்ததை என் தாய் சொல்ல... 'இவன் வருங்காலத்தில் ஒரு புலவனாக வருவான்' என்றார். என் தாயும் 'அப்படியா' என்று மகிழ்ச்சியில் கட்டி அணைத்து முத்தமிட்டார்.
இன்று அவர்கள் லட்சியக்கனவு நிறைவேறியது. சினிமா உலகில் நானும் ஒரு கலைஞன் ஆனேன் என்பதை நினைத்து இந்நூலை என் பெற்றோர்களுக்கு அன்பு காணிக்கையாக்குகிறேன்.

-கலைஞானம்

# முன்னுரை

சினிமாவுக்கு கதைகள் எழுதுவதில் நான் தேர்ந்துவிட்டேன் என்றுதான் நினைக்கிறேன். அதனாலேயே சில நண்பர்கள் என்னை 'கதைத்தாத்தா', 'பீஷ்மர்', 'கதைஞானம்' என்றெல்லாம் பாராட்டுகிறார்கள். ஆனால் வரலாறு எழுதுவது... அதிலும் எழுதி புத்தக மாக வெளியிடுவதில் ஒரு பயம் இருந்துகொண்டே இருக்கிறது. காரணம்... முறையாகக் கற்ற எழுத்தாளர்கள் என்னைக் கறையாக எண்ணி எடுத்தெறிந்து விடுவார்களோ என்ற பயம்தான். இருந்தாலும் கோதைநாயகியம்மாள், கி.ராஜநாராயணன் போன்றோர் ஆரம்பத்தில் படிக்காதவர்கள்தான். பின்னாளில் மிகச்சிறந்த எழுத்தாளர்களானார்களே. அவர்களை வழிகாட்டியாக எண்ணி எழுதத் துணிந்துவிட்டேன். கொள்ளுவதும், தள்ளுவதும் அன்பு வாசகர்களின் உள்ளங்களே.

பார்த்ததை, கேட்டதை, சொன்னதை அனுபவமாக எடுத்துக்கொண்டேதான் இதுவரை சினிமாவுக்கு 30 கதைகளுக்கு மேல் எழுதிவிட்டேன். இதில் மிகப்பெரிய இயக்குநர்களுடன் திரைக்கதை ஒத்துழைப்பு சுமார் நூறைத் தாண்டும். தயாரிப்பு 16 படங்கள். பாடல்கள் எட்டு. இயக்கம் 2. மெயின் காமெடியனாக 'இது நம்ம ஆளு' ஒன்றுதான். சின்னச் சின்ன வேஷங்கள் சில... இதற்குமேல் என் தகுதிக்கு என்ன வேண்டும்? நான் எடுத்துக்கொண்ட இந்த புது முயற்சிக்கு உங்கள் ஆதரவுதான் வேண்டும்.

முக்கியமாக இங்கே சொல்லவேண்டியது ஒன்று உண்டு. என்னவென்றால் 1974-ல் ஒரே மாதத்தில் என்னிடம் ஆறு கதைகளை சினிமா தயாரிப்பாளர்கள் போட்டி போட்டுக்கொண்டு வாங்கினார்கள். எல்லாரும் 'உடனே ஷூட்டிங் போக வேண்டும்; எழுதிக் கொடுங்கள்' என்று அவசரப்படுத்தினார்கள். அப்போது நான் ஒரு யுக்தியைக் கையாண்டேன். தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரையும் டேப்ரிக்கார்டர் வாங்கி வரச் சொல்லி அதிலே கதையைச் சொல்லிவிட்டேன். உதவியாளர்களை வைத்து

அதில் உள்ளதை எழுதிக் கொடுக்கச் சொல்லிவிட்டேன். அவர்கள்... பனசை மணியன், ஜெயபாலு சீனிவாசன், தஞ்சை கே.சுரேஷ் குமார், வி.எம்.ஏ. ஷாலப்பா... தினகரன் அப்பப்ப சிலரும் இப்படிப் பழக்கப்பட்டதால் இதுவரை அதையே கையாண்டு வருகிறேன்.

'சினிமா சீக்ரெட்' தொடரையும் ரெக்கார்டு பண்ணித் தர்றேன் என்றேன், நக்கீரன் துணையாசிரியர் இரா.த.சக்திவேலிடம். அப்போது அவர் சொன்னார்... "ஐயா, நீங்கள் சொல்லிக்கொண்டே வாருங்கள், நான் எழுதுகிறேன். அது சரியில்லையென்றால் ரெக்கார்டு பண்ணலாம்" என்றார். அதையும்தான் பார்ப்போமே என்று உளுந்தமுட்டையை கொத்திவிட்டது போல் பொலபொலவென்று கொட்டிக்கொண்டேயிருந்தேன். மூன்று வாரங்களுக்குச் சேர்ந்தார்போல்... என்ன ஆச்சரியம் ஒருவரிகூட தவறாமலும் கூடாமலும் எழுதியதோடு, அதனை அழகுபடுத்தியும் காட்டி என்னை அசத்தி வருகிறார். அவருக்கு என் முதல் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'சினிமா சீக்ரெட்' தொடர் எழுத எனக்கு தொடர்ந்து ஆதரவு கொடுத்து வரும் நக்கீரன் ஆசிரியர் உயர்திரு நக்கீரன்கோபால் அவர்களுக்கும், நக்கீரன் இணையாசிரியர் காமராஜ், மற்றும் அவருடன் தொழில் செய்யும் அத்தனை பேருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை நக்கீரன் பத்திரிகையில் தொடராக வந்த 'சினிமா சீக்ரெட்'டை பொறுமையாக படித்தும் பாராட்டி யும், அன்பு காட்டியும் வரும் அனைத்து வாசகர்களுக்கும் தலைவணங்குகிறேன்... நன்றி!


-கலைஞானம்

சென்னை.

கைபேசி எண் : **96770 61186**

# உயர்வுக்கு அது உத்திரவாதம்

## கே.பாக்யராஜ்

கவிஞர் கண்ணதாசன் அவர்களது பொருள் நிறைந்த வரிகள் :
''புத்தியுள்ள மனிதர் எல்லாம்

வெற்றி பெற்றதில்லை.

வெற்றி பெற்ற மனிதரெல்லாம்

புத்திசாலி இல்லை...''

இதைப் போலவே நான் நடைமுறையில் அனுபவப் பூர்வமாக உணர்ந்தது.

''படிச்சவங்க எல்லாரும்,

அறிவாளிதான்னு சொல்லிவிட முடியாது.

அதே சமயம் படிக்காதவங்க அறிவாளியாக

இருக்க முடியாதுன்னும் நியதி இல்லை''.

அதாவது படிக்காத மேதைன்னு குறிப்பிடறது ரெண்டாவது சொன்னவங்களத்தான். அண்ணன் கலை ஞானம் அவர்களுக்கு அனுபவம்தான் பள்ளிக்கூடம். சுக துக்கங்களும், லாப, நஷ்டங்களும்தான் அவருக்கு ஆசான். அதனாலதான் மெத்தப் படிச்சவங்களுக்கே சரிவர பிடிபடாத சினிமா, அவர்கிட்ட சிறப்பான முறையில சிறைபட்டிருக்கு.



ஆயிரம் நூல்களைப் படிக்கிறதால வரக்கூடிய அறிவு கூட அவர் அனுபவத்துக்கு முன்னால் கைகட்டித்தான் நிக்கணும். நான் அவர் வழியில் படிச்சவன். அவரைப் படிச்சவன். இன்னும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கிட்ட படிச்சிட்டே இருக்கிறவன். நான் கத்துக்கிட்ட பாடம் எல்லாரும் கத்துக்கணும்னா கலைஞானம் அண்ணன் அனுபவத்தை படிச்சாப் போதும். உங்க உயர்வுக்கு அது உத்திரவாதம்.

இப்படிப்பட்ட ஒரு அரும் பொக்கிஷமான விஷயத்தை புத்தக வடிவாக்கிய மரியாதைக்குரிய நண்பர் நக்கீரன் கோபால் அவர்கட்கு

எனது நெஞ்சார்ந்த நன்றி.

அண்ணனிடம் பயின்ற பெருமிதத்துடன்

உங்கள்

கே.பாக்யராஜ்

# அற்புத ஆற்றல்!

## இயக்குநர் திலகம்

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்



நான் தொடர்ந்து வெற்றிப் படங்களாக எடுத்து வந்த சமயம், அடுத்த படத்திற்கு கதை தேவைப்பட்டது. அப்போது திரு.காகா ராதாகிருஷ்ணன் அவர்களிடம் கேட்டபோது, 'எனக்கு தெரிந்த ஒருவர் கலைஞானம் என்று பெயர்; நல்ல கதைகள் சொல்லுவார்' என்றார். உடனே நான் கலைஞானத்தை அழைத்து வரச் சொன்னேன். அவர் வந்தவுடன் குறவன் குறத்திகளைப் பற்றிய கதையைச் சொன்னார். மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. நானும், அவரும் கலந்துரையாடி 'குறத்தி மகள்' கதையை உருவாக்கினோம். அது மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. இதேபோல் அடுத்தடுத்து நான் எடுத்த வெற்றிப் படங்களுக்கு என்னுடன் கலந்துரையாடலில் சிறப்பாக பணியாற்றி பல நல்ல சுவாரஸ்யமான விஷயங்களை எனக்கு எடுத்துரைத்துள்ளார். அதன் பயனாக 'வாழையடி வாழை', 'ரௌடி ராக்கம்மா' என்று வரிசையாக நான் எடுத்த எல்லா சமூக படங்களுக்கும் திரு.கலைஞானம் என்னோடு பணியாற்றி என் வலதுகரமாக இருந்தார். எழுதாமல் கதை சொல்லும் அற்புத ஆற்றல் பெற்ற கதாசிரியர் திரு.கலைஞானம் பல வெற்றிப் படங்களை தயாரித்தவர், இயக்கியவர் என்று வளர்ந்தார். சிறந்த பண்பாளரும், தமிழ்த் திரை உலகின் மிகச் சிறந்த கதாசிரியர்களில் ஒருவருமான திரு.கலைஞானம் அவர்களின் திரை உலக அனுபவங்களை புத்தக வடிவாக்கியதால் திரு.நக்கீரன் கோபால் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

அன்புள்ள

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்

# மூன்றாம் பாகத்தில்
## முத்தான அனுபவங்கள்!

அனுபவங்களைப் போன்ற திரைக்கதையை எந்த சினிமாவிலும் பார்க்க முடியாது. பார்க்கின்ற சினிமாக்களை விடவும் படிக்கின்ற அனுபவங்கள் சுவாரஸ்யமானவையாக இருக்கும். அதிலும் சினிமாத்துறையில் பழுத்த அனுபவம் பெற்ற ஒரு வித்தகர் தன் அனுபவங்களை வாசகர்களுக்கு வழங்கினால் படிக்கப்படிக்கத் திகட்டாது. ஜாம்பவான்களுடன் பழகிய ஜாம்பவனான திரைப்பட தயாரிப்பாளர்-இயக்குநர்-கதாசிரியர்-நடிகர் கலைஞானம் அவர்களின் திரைத்துறை சார்ந்த வாழ்க்கை அனுபவமும் நமக்குத் திகட்டாத இன்பமாக படிக்கக் கிடைத்திருக்கிறது. இதுவரை வெளிப்படாமல் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் உண்மைகள் அதனை நேரில் கண்டவரின் வார்த்தைகளில் வெளிப்படும் போது சுவாரஸ்யம் மட்டுமல்ல, ஆச்சரியமும் விறுவிறுப்பும் கூடுதலாகச் சேர்கின்றன. அப்படிச் சேர்ந்ததுதான் இந்த 'சினிமா சீக்ரெட்.'

சினிமா போஸ்டர்கள் போல பிரம்மாண்ட போஸ்டர் களுடன் விளம்பரம் செய்யப்பட்ட நக்கீரனின் தொடர்கள் நிறைய உண்டு. ஆனால், ஒரு அவசரச் சூழலில் எவ்வித விளம்பரமும் இல்லாமல் சட்டெனத் தொடங்கப்பட்டு, வாசகர்களின் பேராதரவினால் வெற்றிகரமாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் தொடரான கலைஞானம் அவர்களின் சினிமா சீக்ரெட்டின் மூன்றாம் பாகம்தான் உங்கள் கைகளில் புத்தகமாகத் தவழ்கிறது. சினிமா மொழியிலேயே சொல்வதென்றால் ஆறிலிருந்து அறுபது வரை என்பார்களே, அதுபோல 20-லிருந்து 100 வரை அனைத்துத் தரப்பினரும் விரும்பிப் படிக்கும் வகையிலான நிகழ்வுகளை மேக்கப் போடாமல் வெளிப் படுத்துகிறார் கலைஞானம் அவர்கள். ஒப்பனை இல்லாத அந்த உண்மைகள்தான் வாசகர்களை வசீகரிக்கின்றன.

எம்.ஜி.ஆர். தனிக்கட்சி தொடங்கிய ரகசியத்தை இந்த மூன்றாம் பாகத்தில்தான் முதன்முதலாக படிக்க நேர்ந்தது. அதேபோல் நடிகர் திலகம் அண்ணன் சிவாஜியை வைத்து 'மிருதங்க சக்கரவர்த்தி' என்னும் மெகாஹிட் படத்தை எடுத்த அனுபவம், சாண்டோ சின்னப்ப தேவரின் மகள் லட்சுமியின் நிலையைப் பார்த்து கண் கலங்கிய அண்ணன் ரஜினி, நடிகர், அண்ணன் சிவகுமார் மீது தேவர் வைத்திருந்த பேரன்பு... அந்தப் பேரன்பிற்கு பெரும் கைமாறாக தேவரின் பேரன், அதாவது தேவரின் மகன் தண்டபாணியின் மூத்த மகனுக்கு இரண்டு கிட்னிகளும் செயல் இழந்த நிலையில்... செய்வதறியாது நின்ற தண்டபாணிக்கு தக்கசமயத்தில் உதவிய அண்ணன் சிவகுமாரின் கருணை உள்ளம் கண்டு கண்கலங்கிப் போனேன். மேலும் கொடுமுடி கோகிலம் கே.பி.சுந்தராம்பாளின் வாழ்க்கைக் கதை, கே.பி.எஸ்.ஸின் சொத்தை அவரின் வாரிசுகளுக்கு பிரித்துக் கொடுப்பதற்காக கொடுமுடிக்குப் போய் உயிர்பயத்தில் திகிலுடன் சென்னைக்குத் திரும்பி வந்த அனுபவம்... என இன்னும் பல முத்தான அனுபவங்களை மூன்றாம் பாகத்தில் பகிர்ந்துள்ளார் அய்யா கலைஞானம்.

கலைஞானம் அவர்களை தம்பி இணையாசிரியர் காமராஜ் அவர்களின் ஆலோசனையின் பேரில் நக்கீரனுக்குள் கட்டி இழுத்து வந்தவர் தம்பி இரா.த.சக்திவேல். நக்கீரனின் சினிமா சக்கரவர்த்தி அவர்தான். நக்கீரன் சினிமாப்பகுதியில் வரும் எழுத்துகள் அனைத்தும் துணையாசிரியரான தம்பி சக்திவேலுடையவை. சினிக்கூத்து இதழின் அட்டை டூ அட்டை அனைத்தும் அவரது உழைப்பு. சிறப்பிதழ்களை சிறப்பாக வெளிக்கொண்டு வருவதும் அவர்தான். அயராத உழைப்பு, வசீகரிக்கும் எழுத்துநடை, எளிமையான வார்த்தைகள், கலகலப்புக்குப் பஞ்சமில்லாத செய்திகள் என தம்பி சக்திவேல் சினிமாதுறை சம்பந்தமான தகவல்களில் சிக்ஸர்களாக அடித்துக்கொண்டே இருப்பார். கலைஞானம் அவர்களை நக்கீரனில் தொடர் எழுத சம்மதிக்கச் செய்ததுடன், அவருடைய அனுபவங்களை அப்படியே வார்த்தைகளில் வடிப்பவரும் தம்பி சக்திவேல்தான். அருமையான கதையை ஒரு தேர்ந்த இயக்குநர் எப்படி நேர்த்தியான திரைக் கதையாக்கி சுவாரஸ்யமாகத் தருவாரோ அப்படித்தான் கலைஞானம் தரும் சீக்ரெட்டுகளை சிலுசிலு நடையில் எழுத்துவடிவமாக்கித் தருகிறார் தம்பி சக்திவேல்.

மிகச்சாதாரண விவசாய குடும்பத்திலிருந்து பிறந்து, எளிய மனிதராக திரையுலகில் அடிவைத்து மிகப்பெரும் நட்சத்திரங்களை வைத்து படம் தயாரிக்கவும் இயக்குவுமான நிலைக்கு உயர்ந்த ஐயா

கலைஞானம் தன் வாழ்க்கை அனுபவங்கள் மூலம் இந்த சினிமா சீக்ரெட்டில் சொல்லித் தருகிறார். அனுபவங்களை விட சிறந்த பாடம் வேறெதுவும் உண்டா? மேலும் இந்த தொடரின் வெற்றிக்கு மெருகூட்டுவது அந்தக் கால, இந்த கால சினிமாக்களின் கருப்பு வெள்ளை + கலர் படங்கள். இதை கதைக்கேற்றவாறு கொடுத்து பெரிதும் உதவுவது தம்பி போட்டோ ஞானம். அவருக்கு நக்கீரனின் பாராட்டுக்கள்.

தன்னம்பிக்கையையும் வெற்றிக்கான வழியையும் நமக்கு அளிக்கும் ஐயா கலைஞானத்தின் சினிமா சீக்ரெட் புத்தகத்தின் முதல் இரண்டு பாகத்திற்கு வாசகப் பெருமக்களிடம் கிடைத்த அமோக வரவேற்பைத் தொடர்ந்து... மூன்றாம் பாகத்தை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறது உங்கள் நக்கீரன்.

இதன் நான்காம் பாகமும் விரைவில் வெளிவர விருக்கிறது. வழக்கம்போல் வாசகர்களின் பேராதரவை வேண்டி...

-என்றென்றும் உங்கள்

**நக்கீரன் கோபால்**

# பாகம்-3ல் உள்ள சிறப்பம்சங்கள்!

சின்னப்ப தேவரின் மறைவு

தேவரின் சவ ஊர்வலத்தில் பல்லக்கில் ஏறி, கதறியழுத எம்.ஜி.ஆர்.

அ.இ.அ.தி.மு.க. கட்சியை எம்.ஜி.ஆர். ஏன் தொடங்கினார் என்கிற ரகசியம்.

தேவர் ஃபிலிம்ஸிற்கு ரஜினி காட்டிய நன்றி.

மன அமைதி இழந்த ரஜினி.

பாலுமகேந்திரா, சிலுக்கு ஸ்மிதா, ஜெயமாலினி உள்ளிட்ட வர்களுடன் ஒரு தயாரிப்பாளராக எனது அனுபவம்.

கே.பி. சுந்தராம்பாளின் வாழ்க்கையும் அவர் என்னை மகனாக பாவித்த நிகழ்வுகளும். அத்துடன் தன் இறுதி காலத்தில் பில்லி சூனிய அவஸ்தையால் அவர் பட்ட துயரம்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆருடனான எனது அனுபவம்.

இளஞ்ஜோடிகள்' பட அனுபவம்.

என் மீது பேரன்பு கொண்ட விஜயசாந்தி.

தேவர் மகளுக்கு ரஜினி செய்த உதவி.

நடிகர் திலகம் சிவாஜியுடனான எனது அனுபவம்.

.. இப்படி பல வியப்பூட்டும், திகைப்பூட்டும் விஷயங்கள் மூன்றாம் பாகத்தில் உள்ளது.

வாசியுங்கள்... வரலாறை!

**-கலைஞானம்**

# என் கதைகளில், தயாரிப்புகளில்

அறிமுகமானவர்கள் பட்டியல்

## நட்சத்திரங்கள் :

**ரஜினிகாந்த்**

(கதாநாயகனாக - படம்: பைரவி)

**கமல்ஹாசன்**

(குழந்தை நட்சத்திரமாக இருந்த கமல் வாலிபனாக ஆனதும் மறு அறிமுகம். படம் : குறத்தி மகன்)

**கீதா** (படம் : பைரவி)

**ஜெய்சித்ரா** (படம் : குறத்தி மகன்)

**வாணிஸ்ரீ** (படம் : காதல் படுத்தும் பாடு)

**சுருளிராஜன்** (படம் : காதல் படுத்தும் பாடு)

**எஸ்.எஸ்.சந்திரன்** (படம் : காதல் படுத்தும் பாடு)

**மாதவி** (படம் : புதிய தோரணங்கள்)

**சொப்னா** (படம் : நெல்லிக்கனி)

**'ராஜபார்ட்' உடையப்பா**

(படம் : தாய் வீட்டு சீதனம்)

**கோவிந்தா** (படம் : லவ் 86 - இந்தி)

**கண்ணன்** (எஸ்.எஸ்.ஆரின் மகன்- இரண்டாவது

நாயகன் படம் : காக்கைச் சிறகினிலே)

**முத்துமாணிக்கம்** (எஸ்.எஸ்.ஆரின் தங்கை மகன்- இரண்டாவது நாயகன் படம் : செல்லக்கிளி)

**நாகராஜசோழன்** (கேரக்டர் ஆர்ட்டிஸ்ட்,

படம் : எதிர்வீட்டு ஜன்னல்)

# இயக்குநர்கள்

**எம்.பாஸ்கர்** (படம் : பைரவி)

**எஸ்.எஸ். தேவதாஸ் -** (நடிகை தேவிகாவின்

கணவர், படம் : வெகுளிப்பெண்)

**கே.எம்.பாலகிருஷ்ணன் -** (நடிகர் குமரிமுத்துவின்

அண்ணன். படம் : ஆறு புஷ்பங்கள்)

**பனசை மணியன் -** (படம் : நீதிக்கு ஒரு பெண்)

# பாடலாசிரியர்கள்

**கவிஞர் சிதம்பரநாதன் -** (படம் : பைரவி)

**அருப்புக்கோட்டை தவசுமணி-**

(படம் : இளஞ்ஜோடிகள்)

# பின்னணிப் பாடகர்கள்

**சீர்காழி சிவசிதம்பரம் -**

(படம் : மிருதங்க சக்கரவர்த்தி)

**சந்திரபோஸ் -** (படம் : ஆறு புஷ்பங்கள்)

# புகைப்படக் கலைஞர்கள்

**'ஸ்டில்ஸ்' ரவி -** (படம் : பைரவி)

**வெள்ளைச்சாமி - (**படம் : புதிய தோரணங்கள்**)**

**நடராஜன் - (**படம் : செல்லக்கிளி**)**

# படத் தொகுப்பாளர்கள்

**கௌதமன் - (**படம் : புதிய தோரணங்கள்**)**

**வெள்ளைச்சாமி - (**படம் : புதிய தோரணங்கள்**)**

# நான் அறிமுகம் செய்த தயாரிப்பாளர்கள்

**என். சகுந்தலா**

**டி.என். வெங்கட்ராமன்**

**முருகன் கலைஞானம்**

**பி.மகாலட்சுமி**

**பி.கோப்பெருந்தெவி**

**என்.ஜான்ஸிராணி**

# நான் அறிமுகம் செய்த மூலக்கதையாசிரியர்

**புஷ்பவல்- கலைஞானம் -**

**(**படம் : புதுப்பட்டி பொன்னுத்தாயி**)**

# என் வாழ்க்கை மீது அக்கறை காட்டியவர்கள்

**கவி. கே.பி.காமாட்சி சுந்தரம்**

**கவிஞர் சுரதா**

**எழுத்தாளர் ஏ.எஸ்.முத்து**

நான் ஒரு கலைஞன் ஆவதற்கு அன்பும், அக்கறையும் காட்டிய, காட்டிவருபவர் என் அண்ணன் **ஆர்.எம். கிருஷ்ணசாமி.**

# நான் திரைக்கதைகளில் பங்கேற்ற இயக்குநர்கள்- தயாரிப்பாளர்கள்

**சாண்டோ சின்னப்ப தேவர்**

**கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்**

**ஜோஸப் தளியத்** (சிட்டாடல் ஸ்டுடியோ)

**ஏ.பீம்சிங்**

**எஸ்.தியாகராஜன்**

(சின்னப்ப தேவரின் மாப்பிள்ளை)

**மதுரை திருமாறன்**

**முக்தா சீனிவாசன்**

**எம்.எஸ்.காசிவிஸ்வநாதன்**

**விசு (என்கிற) விஸ்வநாதன்**

**வி.சி. குகநாதன்**

**பாரதிராஜா**

**பாக்யராஜ்**

**ஆர்.வி.உதயகுமார்**

**பி.வாசு**

**கலைமணி**

**கே.ராஜேஷ்வர்**

**பார்த்திபன்**

**கோகுல கிருஷ்ணன்**

மற்றும் பலர்...

# என் கதைகளில், படைப்பில் பங்குபெற்ற பிரபலங்கள், நட்சத்திரங்கள்

**நடிகர் திலகம் சிவாஜிகணேசன்**

**ஜெமினிகணேசன்**

**எம்.என்.நம்பியார்**

**ஜெய்சங்கர்**

**சிவகுமார்**

**ரவிச்சந்திரன்**

**முத்துராமன்**

**ராதாரவி**

**நாகேஷ்**

**கராத்தே மணி**

**ஸ்ரீகாந்த்**

**வி.கே.ராமசாமி**

**தேங்காய் சீனிவாசன்**

**சோ ராமசாமி**

**பாலாஜி**

**மேஜர்சுந்தர்ராஜன்**

**சுதாகர்**

**கே.ஏ.தங்கவேல்**

**கார்த்திக்**

**சுரேஷ்**

**எஸ்.வீ.சேகர்**

**ஆர்.எஸ்.மனோகர்**

**சிலோன் மனோகர்**

**நிழல்கள் ரவி**

**வெண்ணிற ஆடைமூர்த்தி**

**விசு (எ) விஸ்வநாதன்**

**வி.எஸ்.ராகவன்**

**டைரக்டர் கே.விஸ்வநாத்** (சங்கராபரணம்)

**பார்த்திபன்**

**காகா ராதாகிருஷ்ணன்**

**எஸ்.ஏ.அசோகன்**

**கிருபானந்த வாரியார்**

**விஜயகுமார்**

**நெப்போலியன்**

**சங்கி-முருகன்**

**கிருஷ்ணம்ராஜ்** (தெலுங்கு)

**நாகபூஷணம்** (தெலுங்கு)

**ராஜநளா** (தெலுங்கு)

**கலைச்செல்வி ஜெயலலிதா**

**கே.ஆர்.விஜயா**

**சுஜாதா**

**மனோரமா**

**ராதா**

**விஜயசாந்தி**

**தேவிகா**

**கனகா**

**ராஜசுலோசனா**

**எஸ்.வரலட்சுமி**

**சி.ஐ.டி. சகுந்தலா**

**ஸ்ரீப்ரியா**

**ஸ்ரீவித்யா**

**ஒய்.விஜயா**

**ஜெயந்தி**

**ஜெயா**

**சுலக்ஷணா**

**சுகுமாரி**

**சச்சு**

**சுந்தரிபாய்**

**அம்பிகா**

**லட்சுமி**

**ராதிகா**

**மேஜிக் ராதிகா**

**தீபா**

**வசந்தா**

**(**'இரவும் பகலும்' அறிமுகம்**)**

**சூரியகலா**

**காந்திமதி**

**எஸ்.என்.லட்சுமி**

**வெண்ணிறஆடை நிர்மலா**

**மஞ்சுளா**

**ஜமுனா (**தெலுங்கு**)**

**ஜெயப்பிரதா** (தெலுங்கு)

**கிருஷ்ணகுமாரி** (தெலுங்கு)

# இயக்குநர்கள்

**ஜோசப் தளியத்** (சிட்டாடல் ஸ்டுடியோ)

**கே.எஸ். கோபாலகிருஷ்ணன்**

**ஏ.பீம்சிங்**

**கே.சங்கர்**

**பி.வாசு**

**முக்தா சீனிவாசன்**

**மதுரை திருமாறன்**

**எஸ்.எஸ். தேவதாஸ்** (தேவிகா கணவர்)

**எம்.பாஸ்கர்** (பைரவி டைரக்டர்)

**கர்ணன்**

**என்.கே.விஸ்வநாதன்**

**பி.ஆர்.சோமு**

**ஆர்.சி. சக்தி**

**கே.எஸ்.ரவிகுமார்**

**இராம.நாராயணன்**

**முரசொலி கே.சொர்ணம்**

**தாசரி நாராயணராவ்** (தெலுங்கு)

பாடலாசிரியர்கள்

**கவிஞர் கண்ணதாசன்**

**கவிஞர் வா-**

புலவர் புலமைப்பித்தன்

ஆலங்குடி சோமு

முத்துலிங்கம்

பிறைசூடன்

கங்கைஅமரன்

# இசை அரசர்கள்

எம்.எஸ்.விஸ்வநாதன்

கே.வி. மகாதேவன்

இளையராஜா

சங்கர்-கணேஷ்

வி.குமார்

டி.ஆர்.பாப்பா

# பாடியவர்கள்

டி.எம்.சௌந்தரராஜன்

கே.ஜே.யேசுதாஸ்

எஸ்.பி.பாலசுப்ரமணியம்

பாலமுரளிகிருஷ்ணா

மலேசிய வாசுதேவன்

மனோ

பி.சுசீலா

எஸ்.ஜானகி

எல்.ஆர்.ஈஸ்வரி

வாணிஜெயராம்

# வசனம் எழுதியவர்கள்

**ஏ.எல்.நாராயணன்**

**'வியட்நாம்வீடு' சுந்தரம்**

**ஏ.எஸ்.பிரகாசம்**

**தூயவன்**

**பனசை மணியன்**

# டான்ஸ் மாஸ்டர்கள்

**தங்கப்பன்**

**கமலஹாசன்** (உதவி டான்ஸ் மாஸ்டர்)

**சுந்தரம்** (பிரபுதேவா தந்தை)

**விமலா** (படம் : இளஞ்ஜோடிகள்)

# ஸ்டண்ட் மாஸ்டர்கள்

**சங்கர்**

**மாதவன்**

**ஹயாத்**

# என் நாடகங்களில் தலைமை தாங்கியவர்கள்

**'கலைவாணர்' என்.எஸ்.கிருஷ்ணன்**

**டி.ஏ.மதுரம்**

**எம்.ஏ.வேணு** ('சம்பூர்ண ராமாயணம்' படம் எடுத்த தயாரிப்பாளர்)

**எஸ்.ஏ.நடராஜன்** ( 'மந்திரிகுமாரி' படப் புகழ்)

# நாடகங்களில் என்னுடன் நடித்தவர்கள்

**'குலதெய்வம்' ராஜகோபால்**

**காகா ராதாகிருஷ்ணன்**

**கவி கே.பி.காமாட்சி சுந்தரம்**

**வி.எம். ஏழுமலை**

**எஸ்.ஏ.நடராஜன்** (மிட்டாதாரர்)

**கே.தவமணி தேவி** (இலங்கைக் குயில், -ஆரவல்லி சூரவல்லி, வனமோகினி போன்ற படங்களில் நடித்துப் புகழ்பெற்ற தமிழ் சினிமாவின் முதல்கவர்ச்சிக்கன்னி)

**'கண் திறந்தது' ராமநாதன்** (மனோரமாவின் கணவர்)

# நான் நடித்த படங்கள்

## *துணை நடிகராக...*

**கோகிலவாணி**

**தெனாலிராமன்**

**செல்லப்பிள்ளை**

**வெறும் பேச்சல்ல**

## *முக்கிய கதாபாத்திரமாக...*

**கே. பாக்யராஜின் 'இது நம்ம ஆளு'**

**பெரிய இடத்து மாப்பிள்ளை**

## *சிறப்புத் தோற்றத்தில்...*

**கோபுர வாசலிலே**

**பார்த்திபனின் 'கதை-திரைக்கதை-வசனம்-இயக்கம்'**

# மறைந்தார் தேவர்!

அமிதாப்பச்சன் நடித்து வந்த 'தோ அவர் தோ பாஞ்ச்' (இந்தி), ரஜினியின் 'தாய் மீது சத்தியம்' (தமிழ்), மோகன்பாபுவை வைத்து 'கொண்டராமுடு' (தெலுங்கு) ஆகியவற்றின் படப்பிடிப்பு ஊட்டியில் ஏற்பாடானது. படப்பிடிப்பைக் கவனிப்ப தற்காக ஊட்டி சென்றார் தேவர்.

நான் அவரை கடைசியாகப் பார்த்த... 05.09.1978 அன்று இரவு சென்னையிலிருந்து ரயில் மூலம் ஊட்டி சென்றார் தேவர். 06.09.1978 அன்று காலையில் ஊட்டி சென்றடைந்தார். அன்று இரவு தேவருக்கு நெஞ்சுவலி ஏற்படுகிறது. 07.09.1978 அன்று மதியம்... கோவையில் ஒரு மருத்துவமனையில் சிகிச்சைக்காக தேவரைச் சேர்த்தனர். 08.09.1978 அன்று காலை 08.30.மணிக்கு மாரடைப்பால் தேவர் காலமானார். அப்போது தேவருக்கு வயது 64தான்.

அன்று மாலை ஆறுமணியளவில்...

நான் என் அலுவலகத்தில் அமர்ந்து எனது 'செல்லக் கிளி' பட தயாரிப்பிற்கான வேலைகளை கவனித்துக்கொண்டி ருந்தேன். போன் ஒலித்தது. எடுத்தேன். "அய்யா... கலைஞானம் அய்யா... நம்ம தேவரய்யா நம்மளவிட்டுட்டு போய்ட்டாரய்யா..." என தேவர் ஃபிலிம்ஸின் டெலிபோன் ஆபரேட்டர் பெண்மணி குமுறிக் குமுறி அழுதபடி விஷயத்தைச் சொன்னது.

உடனே நான் என் உதவியாளர் ஜெயபாலைக் கூட்டிக் கொண்டு காரில் தேவர் ஃபிலிம்ஸுக்கு விரைந்தேன். ஒரே கூட்டமாக இருந்தது. அங்கே... இரண்டு ரயில் கம்பார்ட் மெண்ட்டுகளை புக்செய்து சினிமாப் புள்ளிகளை அழைத்துச் செல்வது சம்பந்தமாக ரயில்வே அதிகாரிகளிடம் பேசிக் கொண்டிருந்தார் மேஜர் சுந்தர்ராஜன். இரவுதான் ரயில். 'அது வரைக்கும் என்னால் இருப்புக் கொள்ளமுடியாது' என்பதால் வீட்டுக்கு காரை

விட்டேன். பணம் எடுத்துக்கொண்டு உதவியாளர் ஜெயபாலையும் ஏற்றிக்கொண்டு, நானே காரை ஓட்டிக் கொண்டு கோவை நோக்கிக் கிளம்பினேன்.



விழுப்புரத்தை நெருங்கும்போது ஆலங்கட்டி மழை கடுமையாகப் பெய்துகொண்டிருந்தது. 'இடியே விழுந்து தடுத்தாலும் தேவரண்ணனோட முகம் பார்க்காம இருந்திடக் கூடாது' என வைராக்கியமாக காரை ஓட்டினேன். புயல் காற்றின் வீச்சு காரை பின்னோக்கித் தள்ளியது. ஜெயபால் பயந்து 'சார்... சார்...' எனக் கூப்பிட்டார். ஆனால் காரை நிறுத்தினால் 'மனசு மாறி சென்னை திரும்பிவிடுவேனோ' என நினைத்து நிறுத்தாமல் காரை ஓட்டிச் சென்றேன். சேலம் போனபோது மழைவிட்டது. விடிந்தும்விட்டது.

காலை பத்து மணிக்கெல்லாம் கோயம்புத்தூர் சென்று விட்டோம். தேவர் வீட்டுமுன்பு காரை நிறுத்திய துமே மாலையை எடுத்துக்கொண்டு ஓடினேன். அங்கே நின்றிருந்த தூயவனும், மா.ரா.வும் 'அண்ணன் போய்ட்டாரே...' எனக் கதற... நானும் கதறிவிட்டேன். உள்ளே போனேன். தேவரின் உடலைப் பார்த்தேன். தூங்குவதுபோல இருந்தது தேவரின் முகம். மாலையைப் போட்டுவிட்டு, சிறிது நேரம் ஆசைதீர தேவரின் முகத் தைப் பார்த்துவிட்டு வெளியே வந்து உட்கார்ந்தேன்.

தேவர் ஊட்டிக்கு கிளம்பியபோது தேவருக்கு இருந்த நெருக்கடியை நினைத்துப் பார்த்தேன்.

இந்திப் படம் குறிப்பிட்ட நாளில் முடியாததால், அந்தப் படத்திற்காக வாங்கிய ஃபைனான்ஸ், வட்டிக்குமேல் வட்டி ஏறி நின்றது. அதைச் சரிக்கட்ட 'தாய்மீது சத்தியம்', "கொண்ட ராமுடு" படங்களைத் தொடங்கினார். இதனால் ஒரே நேரத்தில் மூன்று படங்களுக்கு பணம் புரட்டுவது தாங்கமுடியாத அளவுக்கு தேவருக்கு சிரமத்தைக் கொடுத்தது. அதனால்தான் சென்னையிலிருந்து கிளம் பும்போது அலுவலகத்தில் இருந்த முருகன் படத்தைப் பார்த்து "முருகா... இதுக்கு மேலயும் சோதிக்காதடா. உன்னோட என்னைச் சேர்த்துக்கப்பா" எனச் சொல்லி விட்டு கிளம்பினார்.

தேவர், முருகனிடம் அப்படி வேண்டிக்கொண்ட நான்காவது நாளில் முருகப் பெருமான் அவரை ஏற்றுக் கொண்டுவிட்டான். இதிலிருந்து எனக்கு என்ன தெரிந்தது என்றால்.... தேவர் சொல்வதையெல்லாம் செய்யும் வேலைக்காரனாகத்தான் இருந்திருக்கிறான் முருகன். அந்த வியப்புத் தாங்காமல் மீண்டும் உள்ளே போய் தேவர் முகத்தைப் பார்த்தேன். அவரின் உடல் அருகே அமர்ந்திருந்த தேவரின் துணைவியார் மாரிமுத்து அம்மாவையும் பார்த்தேன்.

தேவர் முதன்முதலாக சென்னையில் சினிமா கம்பெனி துவங்கியதும் வாய்ப்புக் கேட்டு வந்த ஒரு துணை நடிகை தன் கஷ்டத்தைச் சொல்ல... அடுத்தவரின் கஷ்டத்திற்காக உருகும் தேவர் அந்தப் பெண்ணின் சோகக்கதையை வெகுநேரம் கேட்க... ஆபீஸிற்கு எதிரே இருந்த வீட்டிலிருந்து இதைப் பார்த்த தேவரின் மனைவி 'இவ்வளவு நேரம் என்ன பண்றாங்க?' என சந்தேகப்பட்டு, தேவருடன் சண்டை போட்டு.... அதனால் 'இனி என் வாழ்க்கையில் உடலின்பத்துக்கு இடமில்லை' என முருகன் மீது தேவர் சத்தியம் செய்தார். பழநிமலை முருகனின் கோவணத்தை ஏலத்தில் எடுத்து வந்து அதை தண்ணீரில் நனைத்து பிழிந்து குடித்து தன் உடல் உணர்ச்சிகளை தேவர் கட்டுப்படுத்திக்கொண்டார். தேவரும், அவரின் மனைவியும் தாம்பத்யம் துறந்தனர். (இதுபற்றி நான் ஏற்கனவே விரிவாக கூறியிருக்கிறேன்.)

அந்த நிகழ்வுக்குப்பின் தேவரிடம், தேவரின் மனைவி ஒருசில வார்த்தைகள் மட்டுமே பேசுவார். தன் கணவர் மீது குற்றமில்லை என தெரிந்தபிறகும் கூட இதே நிலைதான் கடைசிவரை இருந்தது.

தினசரி காலை எட்டு மணிக்கு வீட்டிலிருந்து ஆபீஸ் கிளம்பும் தேவர் தன் மனைவியை அழைப்பார்...

"மாரிமுத்து"

"ஏனுங்க"

"என்ன வேணும்மா?"

"எல்லாம் இருக்குங்க"

"நல்லது... நான் ஆபீஸ் போய்ட்டு வரட்டுமா?"

"சரிங்க"

-இப்படிச் சில வார்த்தைகள்தான் பேசுவார் தேவரின் மனைவி.

தேவருக்கு எல்லாமே முருகன்தான். ஆனால்... மாரி முத்து அம்மாவுக்கு எல்லாமே தேவர்தானே. இனி அந்த ஓரிரண்டு வார்த்தைகளையும் கூட அந்தம்மா பேசப் போவதில்லையே... அதை எண்ணி அந்த அம்மா தாரை தாரையாக கண்ணீர் வடிப்பதைப் பார்த்தேன்.

இதையெல்லாம் நான் யோசித்துக்கொண்டிருந்தபோது...

"தேவர் பெருமகனே" என சிதைந்த குரலில் ஒரு அரற்றல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். கவிஞர் கண்ணதாசன் தன் கண்களில் கண்ணீரும்,

கையில் மாலையுமாக வந்தார். தேவரின் கழுத்தில் மாலையைப் போட்டுவிட்டு, 'தேவரே... போய்விட்டீர்களா?' என்று கனத்த குரலில் குமுறினார்.

'அய்யா... எங்க அய்யன் போய்ட்டாங்களே... இனி எங்க ளுக்கு யார் இருக்கா?' என கண்ணதாசனிடம் அழுதனர், தேவரின் உறவினர்கள். நாலாபுறமும் கண்களைச் சுழற்றிய கண்ணதாசன் ஒரு ஓரத்தில் சோகமயமாக நின்றிருந்த தேவரின் மகன் தண்டபாணியிடம் போனார். அவரின் கைகளைப் பற்றிக்கொண்டு 'தண்டபாணி... அய்யாவின் மரணம் உங்களுக்கு  பெரிய இழப்புதான். அதைவிட மிகப்பெரிய இழப்பு என் குடும்பத்திற்கு வந்துவிட்டதே... என் வீட்டில் நான் எந்த விசேஷம் வைத்தாலும் அவர்தானே வாரி வாரிக் கொடுப்பார். கம்பனுக்குக் கிடைச்ச சடையப்ப வள்ளல் மாதிரி... எனக்குக் கிடைச்ச தேவர் போய்ட்டாரே... இனி இப்படி ஒரு மனிதனை நான் என் பிறவியில் எப்படி பார்ப்பேன்' எனக் குமுறி அழுதார் கண்ணதாசன்.

அருகிலேயே கலங்கிய கண்களுடன் ரஜினி மேல்நோக்கி பார்த்தவாறு நின்றிருந்தார்.

'முதன்முதலாக பெரிய நிறுவனமான தேவர் அய்யா கம்பெனி படத்தில் நடிக்கிறேன். ஆனா... கடவுள் இப்படிச் சோதிச்சிட்டானே?' என்கிற சிந்தனையுடன் தாடையை தடவியபடி யோசனையில் இருந்தார் ரஜினி.

தேவரின் நண்பர் ஒருவர் "தேவர் ஒரு புண்ணியவான். முருகக் கடவுளுக்கு உகந்த நாளில் உயிரை விட்டிருக் கிறார். இவரும் கண்ணப்ப நாயனாரைப் போல மூர்க்க மான பக்தர். கண்ணப்ப நாயனார் சிவனடி சேர்ந்த மாதிரி, தேவரும் முருகனடி சேர்ந்திருப்பார்" எனச் சொல்லி விம்மிக் கொண்டிருந்தார்.

அதைக் கேட்டதும் எனக்கு ஆன்மிக சொற்பொழிவாளர் புலவர் கீரன் நினைவுக்கு வந்தார்.

மருதமலையில் தேவரின் அறுபதாம் கல்யாணம் சிறப்புடன் நடந்தபோது... அன்று இரவு புலவர் கீரன் சொற் பொழிவாற்றினார்.

"தேவருக்கு மறுபிறப்பே இல்லை... செங்கண் சோழனைப் போல்..." எனச் சொன்னார்.

தேவரும், நானும், மற்றவர்களும் வியப்புடன் கீரனைப் பார்த்தோம்.

# மறுபிறவி!

'கண்ணப்ப நாயனார் சிவனடி சேர்ந்ததுபோல், நம்ம தேவர் முருகனடி சேர்ந்திருப்பார்' என தேவருக்கு அஞ்சலி செலுத்தவந்த தேவரின் நண்பர் ஒருவர் சொல்லியபடி குமுறி அழ... அதைக்கேட்ட எனக்கு புலவர் கீரன் நினைவுக்கு வந்தார்.
மருதமலையில் தேவரின் அறுபதாம் கல்யாணத்திற்கு சொற்பொழிவாற்றிய புலவர் கீரன்...

"தெய்வ வணக்கம். ஒரு நற்செய்தியைச் சொல்கிறேன். அந்தக் காலத்திலே சோழமன்னன் கோ செங்கண் சோழன் என்பவன் பல சிவாலயங்களைக் கட்டி விட்டு, இறுதியில் தில்லைக்கூத்தரின் (சிதம்பரத்தில் கோயில்கொண்ட ஈசன்) திருவடியில் இணைந்து விட்டான். அதேபோல நமது தேவரய்யா அவர்கள் பல முருகன் கோயில்களுக்கு திருப்பணி செய்துவருகிறார். அவருடைய அந்திம காலத்தில் மருதமலையானின் திருவடியை அடைந்துவிடுவார். தேவருக்கு மறுபிறவியே இல்லை..." எனச் சொல்லிவிட்டு தேவரை உற்றுப் பார்த்தார் கீரன்.

தேவர் கண்ணீர் மல்க... மருதமலை கோபுரத்தைப் பார்த்து வணங்கினார்.

கீரன் தன் சொற்பொழிவைத் தொடர்ந்தார்.

"தற்போது இருக்கும் ஸ்ரீரங்கம் அருகே.. காவிரிக்கரை யில் சந்திரதீர்த்தம் என்கிற இடம் இருந்தது. சுற்றிலும் அழகிய வனம். வனத்தின் வெண்நாவற்பழ மரத்தடியில் சுயம்புவாக ஒரு லிங்கம் இருந்தது. அதன் மீது பக்திகொண்ட ஒரு வெள்ளை யானை துதிக்கையால் நீர் கொண்டுவந்து லிங்கத்தின் மீது அபிஷேகம் செய்து, பூக்களையும் பறித்துப் போடும். இது அந்த யானையின் அன்றாட வழக்கம். அந்த மரத்தில் இருந்து உதிரும் சருகுகள் லிங்கத்தின் மீது விழுந்தன. இதைப் பார்த்த சிலந்திப்பூச்சி, லிங்கத்தின் மீது சருகுகள் விழாமல் இருக்க... தன்

எச்சிலால் லிங்கத்திற்கு மேலே வலை கட்டியது. இப்படி யானையும், சிலந்தியும் சிவன் மீது பக்திகொண்டு வழிபட்டன.



ஒருநாள்... சிலந்தி தன் எச்சிலால் வலைகட்டுவதைப் பார்த்துவிட்ட யானை, 'சிலந்தி லிங்கத்தை அசிங்கப் படுத்துகிறது' எனக் கருதி, துதிக்கையால் வலையை அழித்தது. யானை சென்றவுடன் சிலந்தி மறுபடி வலை கட்டியது. மறுநாள் வந்த யானை 'இந்த சிலந்திக்கு எவ்வளவு திமிர்' என்றபடி மறுபடி வலையை அழித்தது. யானை சென்றதும் மீண்டும் வலை கட்டியது சிலந்தி. அடுத்தநாள் வந்த யானை கடும் சினமுற்று வலையை அழிக்க... அதே சினம் சிலந்திக்கும் ஏற்பட்டு, யானையின் தும்பிக்கை துவாரத்திற்குள் சென்று வெறியுடன் கடிக்க ஆரம்பித்தது. கடி தாங்கமுடியாத யானை வலியுடன் பிளிறி, பாறை மீது தும்பிக்கையை அடித்து அடித்து சிலந்தியைக் கொன்றது. யானையும் இறந்தது.

சிவபெருமான் அங்கு தோன்றி யானையையும், சிலந்தியை யும் உயிர்ப்பித்தார். அவை இரண்டும் சிவனை வணங்கி நின்றன.

நீங்கள் இருவரும் என்மீது தீவிர பக்தி கொண்டு வாழ்ந்தீர்களே தவிர... உண்மையை ஒருவருக்கொருவர் உணரவில்லை. என்மீது தூசுகள் படக்கூடாது என்பதால் சிலந்தி தன் எச்சிலால் கோபுரம் கட்டியது. உனக்கு அது வெறும் எச்சிலாக மட்டுமே தெரிந்தது. அதனால் ஏற்பட்ட கோபத்தால் உங்களுக்கு மரணமும் ஏற்பட்டது. உங்கள் இருவரின் பக்தியை மெச்சுகிறேன்.

சிலந்தியே... நீ வருங்காலத்தில் சோழநாட்டு மன்னனாகப் பிறந்து, நீ ஆசைப்பட்டதுபோல் எனக்கு பல கோயில்களைக் கட்டி வழிபட்டுவர அருள் பாலிக்கிறேன். யானையே... நீ செய்துவந்த பூஜையை மெச்சி, வருங்காலத்தில் இந்த இடம் உன் பெயரில் 'திருவானைக்கா' (திருவானைக்காவல்) என அழைக் கப்படும். இங்கே வரும் பக்தர்கள் முதலில் உன்னை வணங்கிவிட்டு, பிறகு என்னை வணங்கினால் என் ஆசி பெறுவார்கள் என அருள்பாலித்துவிட்டு மறைந்தார் சிவன்.

அதேபோல சோழமன்னன் ஒருவனால் திருவானைக் காவில் கோயில் எழுப்பப்பட்டு கோயிலுக்கு யானை வழங்கப்பட்டது. இன்றளவும் அந்தக் கோயிலுக்கு பக்தர்கள் யானை வழங்கிவருகிறார்கள். அங்கே சிவனுடன் அகிலாண்டேஸ்வரி ஆட்சி செய்துவருகிறாள். அந்தக் கோயிலில்தான் சமையற்காரனாக இருந்தவன் அன்னையின் அருளால் 'காளமேகப் புலவன்' ஆனான்.

இப்போது சிலந்திப்பூச்சி என்ன ஆனது? என்பது பற்றிச் சொல்கிறேன்.

சோழமன்னன் சுபதேவரும், அவரின் மனைவி கமலவதியாரும் பிள்ளைப்பேறு இல்லாததால் சிதம்பரம் கோயிலுக்கு வந்து சிவனை வழிபட்டனர். சிவ பெருமானின் அருளால் அந்தச் சிலந்திப்பூச்சி கமலவதி யின் வயிற்றில் கருவாகியது. இப்போது அரசி கமலவதி நிறைமாதக் கர்ப்பிணி. பிரசவத்திற்கான நேரம் வந்தது.

அரச சபையில் புலவர்களும், ஜோதிடர்களும் இருந்தனர். 'இதோ குழந்தை பிறக்கும் நேரம் வந்துவிட்டது. இது நல்ல நேரம்தானே?' என மன்னன் சுபதேவர் கேட்க... "மன்னா... இன்னும் ஒரு நாழிகைக்குள் குழந்தை பிறக்கக்கூடாது. அப்படிப் பிறந்தால் நாடும், நாட்டு மக்களும் அழிய நேரிடும்" என ஜோசியர்கள் சொன்னார்கள். இந்தச் செய்தி ராணி கமலவதியின் செவிக்கு வந்து சேர்ந்தது.

'அய்யோ... இப்போது நான் பிரசவித்தால் என் தேசம் அழிந்துபோகுமா? என் மக்களும் அழிவார்களா? கூடவே கூடாது. அதற்குப்பதில் நானும், என் குழந்தையும் எங்கள் உயிரைத் தியாகம் செய்கிறோம்' எனச் சொல்லிவிட்டு பணிப் பெண்களை அழைத்தாள். 'என்னை கயிற்றால் கட்டி தலை கீழாக சுவரோரம் சாய்த்து வையுங்கள்' என்றாள். (சாதாரண நிலையில் குழந்தை தானாகவே வெளியே வந்துவிடும். அதைத் தடுக்கத்தான் தலைகீழாக நிறுத்தச் சொன்னாள்) தயங்கிய படியே ராணியின் உத்தரவுப்படி செய்தார்கள். பிரசவ வலி உயிரை வதைத்தபோதும் பிரசவிக்காமல் வேதனையைத் தாங்கிக்கொண்டாள். நேரம் ஆக ஆக ராணிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. தலைப் பிரசவம் என்பது மறுபிறவிக்குச் சமம் என்பதால் ராணி, சிரமமில்லாமல் சுகப்பிரசவம் ஆகவேண்டும் என ஆங்காங்கே உள்ள கோயில்களில் மக்கள் ராணிக்காகவும், குழந்தைக்காகவும் மனமுருக கதறி, பிரார்த்தித்தனர். சுபதேவரோ மனதைக் கல்லாக்கிக் கொண்டு ஜடம்போல அமர்ந்துவிட்டார். ராணியின் நிலைமை மிக மோசமாகவே... பணிப்பெண்கள் கதறி அழ... அரண்மனையே சூனியமாக ஆகிவிட்டது. வானமே அழுவதுபோல மின்னலும், மழையுமாக இருந்தது. ஒரு நாழிகை (24 நிமிட கால அளவு) கடந்துவிட்டது... என்கிற சேதி வந்ததும்... ராணி அப்படியே தரையில் சாய்ந்தாள். குழந்தை பிறந்தது. காலம் தாழ்ந்து... அதிலும் தாய் தலைகீழாக இருந்ததால் குழந்தையின் கண்கள் இரண்டும் சிவந்து இருந்தன. இதைக்கண்ட ராணி தாங்கிக் கொள்ளமுடியாமல் அப்போதே இறந்து விட்டாள்.

குழந்தை வளர்ந்தான். எல்லா தகுதிகளும் கற்று சோழ தேசத்தின் மன்னனானான். கோ என்றால் அரசன். அவன் கண்கள் சிவந்த நிலையிலேயே இருந்ததால் புலவர்கள் அவனை 'கோ செங்கண் சோழன்' எனப் பெயரிட்டு மகிழ்ந்தார்கள்.

ஒரு கட்டத்தில் செங்கண் சோழனுக்கு தனது முந்தைய சிலந்தி ஜென்மம் நினைவில் எட்டியது. திருவானைக்கா சென்று கோயிலை மேலும் சிறப்புடன் அமைத்து அழகாக்கி மகிழ்ந்தான். சோழ நாட்டில் பல சிவ ஸ்தலங்களை உருவாக்கினான். ஒருகட்டத்தில் தான், தன் தாயின் வயிற்றில் கருவுற்றது தில்லைக் கூத்தரின் அருளால்தான் என்பதை உணர்ந்து, சிதம்பரம் கோயிலுக்கே வந்துவிட்டான். கோயிலைப் பராமரித்தும், அந்தணர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தும், அல்லும் பகலும் அறுபது நாழிகையும் இறைவனையே வழிபட்டு இறுதியில் இறைவனின் திருவடியில் சேர்ந்துவிட்டான் கோ செங்கண் சோழன்.

அந்த செங்கண் சோழனைப்போல நமது அய்யா தேவர் அவர்களும், முருகன் கோயில்களுக்கு திருப்பணி செய்து வருகிறார். அந்திம காலத்தில் மருதமலை முருகனின் திருவடியில் சேர்ந்துவிடுவார். மறுபிறப்பே அவருக்கு இல்லை"

-இப்படி புலவர் கீரன் சொல்லி முடித்ததும் தேவர் உணர்ச்சிவசப்பட்டு அழுது... அழுகையை அடக்க முடியாமல் "முருகா... முருகா" என கதறிவிட்டார். அவர் அழுவதைப் பார்த்து நாங்களும் கண்கலங்கிப் போனோம்.

புலவர் கீரன் சொன்னதைப் போல... முருகப் பெரு மானுக்கு உகந்த, ஆவணி மாதம் சஷ்டி, விசாக நட்சத்திரம் நாளில், மருதமலையான் குடிகொண்டிருக்கும் இடத்தை அண்டியிருக்கும் கோயம்புத்தூரில் தேவர் இறந்திருப்பதை நினைத்து... தேவர் இறந்த துக்கத் தையும் மீறி, அவர் முருகனின் திருவடி சேர்ந்திருப்பது எனக்கு மகிழ்வைத் தந்தது.

# எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வைத் தொங்கிய ரகசியம்!

மீண்டும் உள்ளே சென்று திருவடி சேர்ந்த தேவரின் முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றேன்.

'மாரியப்பன்' என குரல் கொடுத்தால் 'அண்ணே' என குறிப்பறிந்து செயல்படும் தேவரின் தம்பி ஒரு மூலையில் நிலைகுலைந்துபோய் உட்கார்ந்திருந்தார். அவரிடம் போய் ஆறுதல் சொன்னேன்.

என் கைகளை இறுகப்பற்றிக்கொண்ட மாரியப்பன் "அண்ணே... எங்க குடும்பஜோதியே அணைஞ்சிருச்சே... எங்க பரம்பரைக்கே இல்லாத பேரையும், புகழையும் வாங்கித் தந்த அண்ணன் போய்ட்டாரே..." என அழுதவர் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு பழைய நினைவுகளை என்னிடம் பகிர்ந்துகொண்டார்.

"அண்ணே... 'ஆத்தி மேரா சாத்தி'னு யானையை வச்சு தேவரண்ணன் இந்தியில் தயாரிச்ச படம் சக்கைப்போடு போட்டது. அந்தச் சமயம் தேவரண்ணனும், நானும் நாகி ரெட்டியாரைப் பார்க்கப் போயிருந்தோம். அண்ணனைப் பார்த்ததும் நாகியார் எழுந்துவந்து தேவரின் கைகளைப் பிடித்துக்கொண்டார். "தேவரே... இந்திய அளவில் யாருக்கும் கிடைக்காத புகழ் உங்களுக்கு கிடைச்சிருச்சு தேவரே. உங்களுக்கு முன்ன எஸ்.எஸ்.வாசன் 'சந்திர லேகா'வை ரிலீஸ் பண்ணி இந்திப் படவுலகின் தயாரிப்பாளர்களையும், டைரக்டர்களையும் வியப்பில் ஆழ்த்தினார். இப்போ ஒங்க புகழ் கொடிகட்டிப் பறக்குது. பம்பாயில் ஒரு தியேட்டரில் உங்க படம் ஹவுஸ்ஃபுல்லா போய்க்கிட்டிருக்கு. அடுத்த ஷோ பார்க்கிறதுக்காக பெண்கள் கூட்டம் தியேட்டருக்கு வெளியில காத்துக் கிடக்கு. அந்த பெண்களில் சுமார் நூறுபேர்கள் கைக்குழந்தையோட

வந்திருந்தாங்க. அவங்கள்லாம் தியேட்டரைச் சுத்தி தொட்டில் கட்டி குழந்தைகளைப் படுக்க வச்சிருந்தாங்க.



இப்படி நூறு தொட்டில்கள் தொங்கியதை நான் பார்த்து பிரமிச்சிட்டேன். உலகத்துல எந்தப் படத்துக்கும் நான் இந்த மாதிரி பார்த்ததில்லை தேவரே. இதுவரைக்கும் எந்த இந்தியப் படமும் வெளிநாடுகள்ல சில்வர் ஜூப்ளி கொண்டாடினதில்லை. உங்க படம் அந்த சாதனையையும் நிகழ்த்தப்போகுது. இதெல்லாம் நீங்க வணங்குற முருகனோட கருணைதான்'னு நாகிரெட்டியார் சொல்ல... 'முருகா'னு சொல்லிட்டு வந்தார் தேவரண்ணன். அதையெல்லாம் நினைச்சுத்தான் நானும் ஜடமாட்டம் ஒட்கார்ந்திட்டேன்'' என்றார் மாரியப்பன்.

தேவரின் உடலை சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வதற்கான சடங்குகள் நடந்தன.

துக்க வீட்டில் எல்லோர் முகத்திலும் தொக்கியிருந்த ஒரே கேள்வி... 'எம்.ஜி.ஆர். வரலையே?' என்பதுதான். இதைப் புரிந்துகொண்ட தேவரின் உறவுக்காரப் பெரியவர்... ''எம்.ஜி.ஆர். கண்டிப்பா வருவார். இப்போ நல்லநேரம் முடியிறதுக்குள்ள தேவரை பல்லக்குல ஏத்துங்க'' என்றார். இதையடுத்து தாரை தப்பட்டைகள் முழங்க... பல்லக்கு தயாரானது. தேவரின் பூதஉடல் பல்லக்கில் ஏற்றப்பட்டு உட்கார்ந்த நிலையில் வைக்கப்பட்டது.

மெதுவாக ஊர்வலம் சென்றுகொண்டிருக்க.... சில நிமிடங்களில்... ஊர்வல கூட்டத்துக்குள் 'சய்ங்ங்' என ஒரு கார் வந்தது. கார் கதவைத் திறந்து எகிறிக் குதித்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஒரே ஜம்ப்பில் பல்லக்கில் ஏறினார். தேவருக்கு மாலையைச் சூட்டினார். அப்படியே தேவரின் உடலைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதவர், துக்கம் தாளாமல் தன் வாயில் கைக்குட்டையை வைத்துக் கடித்துக்கொண்டார். 'பல்லக்கு போகட்டும்' என்பதுபோல் எம்.ஜி.ஆர். கை ஜாடை காட்ட... பல்லக்கு கிளம்பியது. தேவரின் உடலை கட்டிப் பிடித்தவாக்கில் பல்லக்கில் நின்றபடியே வந்தார் எம்.ஜி.ஆர். ஆனால் எம்.ஜி.ஆரின் கண்ணீர் மட்டும் நிற்கவேயில்லை.

தேவரின் இறுதி யாத்திரை சுடுகாட்டை நெருங்கியது.

பல்லக்கை நிறுத்தச் சொன்னார் எம்.ஜி.ஆர்.

நின்றதும் கீழே இறங்கி ஒருபுறமாக நின்று தேவரின் முகத்தையே பார்த்தார்.

இருவரும் ஒருதாய் வயிற்றில் பிறக்கவில்லையென்றாலும் அண்ணன்-தம்பியாகவே வாழ்ந்துகாட்டியவர்கள்.

'நான் வறுமையில் வாடியபோது அரைப்படி அரிசி கொடுத்த தேவரின் அன்பை மறக்க முடியுமா? எனக்கு வளமான வாழ்க்கை கிடைத்த பிறகும்கூட, குண்டடிபட்டபோது இரவோடு இரவாக மருதமலை முருகன் முன்னால் என்னை நிறுத்தி, நான் நலம்பெற வேண்டி அழுதாரே... அதை மறக்க முடியுமா?' என்று தானே தேவரின் முகத்தைப் பார்த்து எம்.ஜி.ஆரின் உள்ளம் பேசியிருக்கும்.

தேவரையே பார்த்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். கனத்த சோகத்துடன் தேவருக்கு பிரியாவிடை கொடுத்துவிட்டுக் கிளம்பினார்.

இதைக் கவனித்துக்கொண்டிருந்த எனக்கு, பளிச்சென ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.

அது... 1972-ல் திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத் தேர்தலின்போது... தேவருக்கும், எம்.ஜி.ஆருக்கும் இடையே அன்பின் மிகுதியால் உண்டான தர்மசங்கடம்.

தேவர் ஃபிலிம்ஸ் அலுவலகத்தில் வழக்கம்போல நாங்கள் கதை விவாதம் செய்துகொண்டிருந்தோம். அப்போது தேவரின் அலுவலகத்திற்கு எம்.ஜி.ஆர். வரப்போவதாக பரபரப்பு நிலவியது. எம்.ஜி.ஆர். அ.இ.அ.தி.மு.க கட்சியைத் தொடங்கி சில மாதங்களே ஆகியிருந்த நேரம் அது.

"அடே... என் தெய்வம் வருதாம்டா. எதுக்கு வருதுனுதான் தெரியல. அவரு வந்திட்டுப் போகிறவரைக்கும் நீங்கள்லாம் பக்கத்து ரூம்லபோய் உட்காருங்கடா" எனச் சொல்லிவிட்டு தேவர் இருப்புக்கொள்ளாமல் காத்திருந்தார். மாலையுடன் வந்த எம்.ஜி.ஆர். அதை தேவருக்கு அணிவித்தார். தேவரின் தனியறைக்குள் இருவரும் போனார்கள். கதவு மூடப்பட்டது.

சுமார் இருபது நிமிடங்களுக்குப் பிறகு எம்.ஜி.ஆர். புறப்பட்டுச் சென்றார்.

தேவர் மகிழ்ச்சியுடன் வெளியே வந்தார்.

'டேய்... கதைக்காரனுங்களா... இங்க வாங்கடா. இப்ப உங்களுக்கு ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போறேன். திண்டுக்கல் எலெக்ஷனுக்காக அரசியல் கலந்த ஒரு கதையை எம்.ஜி.ஆர். ரெடி பண்ணீட்டாரு. அந்தக் கதையை பத்தே நாள்ல படமா எடுத்துக்குடுக்கிற பொறுப்பை என்கிட்ட

ஒப்படைச்சிட்டாரு. கதை ஃபைலை, தன் உதவியாளர்கள் மூலமா கொடுத் தனுப்புறேன்'னு சொல்லீட்டுப் போயிருக்காரு. உடன டியா நாம இந்த உதவியை அவருக்கு செஞ்சாகணும்டா'' என தேவர் உற்சாகமாகச் சொல்லிக் கொண்டி ருக்கும்போதே....

டெலிபோன் ஒலித்தது.

''அலோ...'' என்றார் தேவர்.

எதிர் முனையில் என்ன சொன்னார்களோ.... தேவரின் முகத்தில் இருந்த சந்தோஷக்களை மெல்ல மெல்ல மாறியது. போனை வைத்துவிட்டு... இறுக்கமாக இருந்தார் தேவர்.

''என்னண்ணே... ஒருமாதிரியா இருக்கீங்க?'' எனக் கேட்டேன் நான்.

''கலைஞானம்... யாரோ... எம்.ஜி.ஆருக்கு வேண்டாத ஒரு அரசியல்வாதி என்னை பயமுறுத்துறாரப்பா... ''தேவரே... நீங்க எப்போதும், எல்லாருக்கும் பொதுவான ஆள் என்பதை மறந்துராதீங்க. உங்களுக்கு எல்லாரும் வேணும். எல்லா கட்சி அரசியல்வாதிகள் கூடவும் பழகுறீங்க. அவங்களுக்கு நிதியும் குடுக்குறீங்க. இப்ப மட்டும் ஏன் ஒரு ஸைடா போறீங்க? நீங்க எம்.ஜி.ஆருக்கு அரசியல் சம்பந்தப்பட்ட படம் எடுத்துக் கொடுக்கப்போறதா கேள்விப்பட்டேன். இது உங்களுக்கு தேவையா? பின்னாடி இதனால உங்களுக்கு பிரச்சினைகள் வரலாம்'னு சொல்லி போனை வச்சிட்டாங்க. இதை நான் எம்.ஜி.ஆர்.கிட்ட இப்பவே கலந்து பேசணும்'' எனச் சொல்லிவிட்டுக் கிளம்பினார் தேவர்.

கஷ்டப்படுகிறவர்களுக்கு மட்டுமல்ல, கட்சிகளுக்கும் அள்ளிக் கொடுத்தவர்தான் தேவர். மதுரையில் முத்துராமலிங்கத் தேவருக்கு வெண்கலத்தால் ஆன சிலை வைக்க முடிவானபோது முதல் நிதியாக அள்ளி அள்ளி கொடுத்தவரும் தேவர்தான்.

எம்.ஜி.ஆரின் அலுவலகத்தில் ஒரே கூட்டம்.

தேவரைப் பார்த்ததும் அவரை தனியறைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார் எம்.ஜி.ஆர்.

போன் வந்த விஷயத்தை எம்.ஜி.ஆரிடம் சொல்லியிருக் கிறார் தேவர்.

தேவர் திரும்பி வந்ததும் ''எம்.ஜி.ஆர் என்னண்ணே சொன்னாரு?'' என கேட்டேன்.

"அண்ணே... இப்படி ஒரு விஷயத்தை போனில் உங்ககிட்ட தெரிவித்தவர் உண்மையிலேயே நல்ல மனிதர்தான். இப்போ நான் முழுக்க முழுக்க அரசியல்ல இறங்கிட்டேன். எப்போதுமே அரசியல்வாதிகள் எதிரும், புதிருமாக இருந்தாலும்கூட தேவைப்படும்போது ஒண்ணு சேர்ந்துக்குவாங்க. இது உங்களுக்கும் தெரியுமே. ஆனா... நீங்க வியாபாரி. என் பக்கமா நீங்க வரக்கூடாது. என்னோட அரசியலால் நீங்க பாதிக்கப்பட்டா... அதுக்காக கவலைப்படக்கூடிய ஒரே ஆள் நான்தான்'னு சொல்லி அனுப்பிச்சிட்டாருடா" எனச் சொன்னார் தேவர்.

எம்.ஜி.ஆருக்கு படம் எடுத்துக் கொடுத்து உதவ முடியாதது தேவரை சங்கடப்படுத்தியது. அதனால்... மறுநாள் இரவில் எம்.ஜி.ஆரைப் பார்க்க கிளம்பினார் தேவர்.

தேவர் வழக்கமாக பயன்படுத்தும் காரை விட்டுவிட்டு வேறொரு காரில் பணத்துடன் எம்.ஜி.ஆர். வீட்டுக்குப் போய் அவரைச் சந்தித்தார்.

அ.இ.அ.தி.மு.க. கட்சியைத் தொடங்கியது ஏன்?

தேவரிடம் எம்.ஜி.ஆர். சொன்ன ரகசியம்!

# எம்.ஜி.ஆர். சொன்ன முக்கிய விஷயம்!

திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத்தேர்தல் செலவுக்கு... எம்.ஜி.ஆருக்கு உதவும் விதமாக எம்.ஜி.ஆரைச் சந்தித்து பணத்தைக் கொடுத்தார் தேவர்.
"அண்ணே... இந்தப் பணத்தை நீங்களே வச்சுக்கங்க. தேவையான பணம் எனக்கு கிடைச்சிடுச்சு. கே.ஆர்.விஜயாவின் கணவர் வேலாயுதம் ஒரு தொகை கொடுத்தார். ஜேப்பியார் ஒரு தொகை கொடுத்தார். எனக்கு நெருக்கமான சிலரும் பணம் கொடுத்திருக்காங்க. இப்போது இந்தப் பணம் தேவைப் படாதுண்ணே" என எம்.ஜி.ஆர். சொல்ல...

"அவங்கள்லாம் உங்களுக்கு தேர்தல் செலவுக்கு உதவும்போது, நான் உங்களுக்குச் செய்யலேன்னா நன்றிகெட்ட செயலாயிடும். கண்டிப்பா இந்த பணத்தை ஏத்துக்கணும்" எனச் சொல்லி கொடுத்துவிட்டு வந்ததாக என்னிடம் சொன்னார் தேவர்.

ஒவ்வொரு நாளும் பூஜையறையில் "முருகா... எப்படி யாவது நீ ஜனங்க மனசுல புகுந்து, எம்.ஜி.ஆருக்கு ஓட்டுப் போட வை. நான் உன் உண்டியல்ல நோட்டப் போடுறேன். நீ பாராமுகமா இருந்தா மருதமலைக்கு வந்து உன் தலையில வேட்டப் போடுவேன்" என லட்சார்ச்சனை போல் 'ஓட்டு -நோட்டு -வேட்டு' என இதையே சொல்லி பூஜை செய்து வந்தார் தேவர்.



இடைத்தேர்தலில் எம்.ஜி.ஆருக்கு வெற்றி கிடைத்ததும், மருதமலை சென்ற தேவர் உண்டியலில் நோட்டுக் கட்டுகளைப் போட்டுவிட்டு, முருகனுக்கு நன்றி சொல்லி அபிஷேகமும் செய்துவிட்டு பிரசாதத்துடன் சென்னை திரும்பினார். முதல் வேலையாக எம்.ஜி.ஆரைப் பார்த்து "நீங்க ஜெயிக்கணும்னு முருகனை வேண்டிக்கிட்டேன். அவனும் ஜெயிக்க வச்சிட்டான்" எனச் சொல்லி பிரசாதத்தைக் கொடுத்திருக்கிறார் தேவர். அதை வாங்கிக்கொண்ட எம்.ஜி.ஆர்., தேவரை தனியறைக்கு அழைத்துச் சென்று வெகுநேரம் பேசியிருக்கிறார்.

அப்போது தனது அரசியல் குறித்து தேவரிடம் எம்.ஜி.ஆர். சொன்னதை, தேவர் என்னிடம் பகிர்ந்துகொண்டார்.

தேவரிடம் எம்.ஜி.ஆர். சொன்ன அந்த ரகசியம்...

"அண்ணே... ஒரு முக்கியமான விஷயத்தை உங்ககிட்டச் சொல்றேன்ணே. மக்கள் என்மேல அபரிமிதமான நம்பிக்கை வச்சிருக்காங்க. மக்களுக்கு... குறிப்பா 'ஏழைகளுக்கு நல்லதச் செய்யணும்'னு நான் சினிமா மூலம் சொல்றதையெல்லாம் மக்கள் நம்புறாங்க. 'எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தா நல்லது செய்வாரு'னு நினைக்கிறாங்க. அப்படிப்பட்ட மக்களுக்கு, அவங்களோட எதிர்பார்ப்புகளுக்கு நான் ஏதாவது செஞ்சாகணும். அப்பதான் என்னை நம்பின மக்களை நான் ஏமாத்தியதாக இருக்காது. 'இதுக்கு என்ன செய்யலாம்?'னு யோசிச்சேன்.

தனியாக நான் ஒரு கட்சியைத் தொடங்கினால்தான் மக்களுடைய எண்ணங்களை பூர்த்தி செய்யமுடியும்கிற அரசியல் ஆசையை ரகசியமா என்னோட மனசில் வளர்த்துக்கிட்டு வந்தேன். இருந்தாலும்... அரசியலுக்குள்ள முழுமையா வந்தா, மக்கள் முழுமையா ஆதரிப்பாங்களா? என்பதை மேலும் உறுதி செய்துக்கிறதுக்காக ஒரு முடிவெடுத்தேன். அந்த முடிவு என்னன்னா... தெலுங்கில் என்.டி.ஆர். நடிச்சு பெரிய வெற்றிபெற்ற படம் ஒன்றைப் பார்த்தேன். அது அரசியல் கதை. என்.டி.ஆர். நகராட்சி தேர்தலில் ஜெயித்து தலைவராகிற கதை. அந்தக் கதையை வாங்கி 'நாமளே நடிக்கலாமே'னு முடிவெடுத்து நாகிரெட்டியாரை சந்திச்சு, என் விருப்பத்தைச் சொன்னேன். 'அந்தப் படத்தை நீங்களே எடுங்க'னு ரெட்டியார் சொன்னார். 'நீங்க எடுத்தாத்தான் சரியாவரும்'னு நான் சொன்னேன். அதற்கு ரெட்டியார் சம்மதிச்சார்.

இரவு பகலா விடாம ஷூட்டிங் நடத்தி படத்தை எடுத்து முடிச்சிட்டேன். ரிலீசும் பண்ணியாச்சு. 'ரெட்டியாரே... நாம ரெண்டுபேரும் மட்டும் மேகலா தியேட்டருக்குப் போய் ஈவ்னிங் ஷோ பார்ப்போம். நாம தியேட்டருக்கு வர்ற விஷயம் மேனேஜருக்கு மட்டும் தெரிஞ்சாப் போதும்'னு சொன்னேன்.

திட்டமிட்டபடி படம் ஆரம்பிச்ச பிறகு நானும், ரெட்டியாரும் உள்ள போனோம். தியேட்டரின் கதவருகில் நானும், ரெட்டியாரும் நின்னுக்கிட்டு படம் பார்த்தோம்.

நகராட்சி தேர்தலில் நான் ஜெயித்துவிட்டு வரும் காட்சியில்... 'வாங்கய்யா வாத்யாரய்யா' பாடலை ஜெயலலிதா பாட ஆரம்பிச்சதும்... கரகோஷம், விசில், கைதட்டல், ஆரவாரம்னு தியேட்டரே இடிந்து விழுமோ... என்கிற அளவுக்கு மக்கள் அமர்க்களப்படுத்தினாங்க. கரகோஷம் நிற்கவே இல்லை.

அந்த சந்தோஷத்தில் என் இதயத்துடிப்பே நின்றுவிடும் போல் இருந்தது. ''என் மேல உயிரையே வச்சிருக்க இந்த மக்களுக்கு என் உயிரையே அர்ப்பணிக்கிறது'னு அப்ப முடிவு பண்ணினேன். ரசிகர்கள் திரும்பவும் அந்தப் பாடலைப் போடச் சொன்னார்கள். மீண்டும் ஜனங்க குதூகலிச்சாங்க. அப்போது நான் ரெட்டியாரைக் கட்டிப்பிடித்து... 'ரெட்டியாரே... நான் ஜெயிச்சிட்டேன்'னு சொல்லி கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் அழுதேவிட்டேன். ரெட்டியார் என்னை அணைத்து தட்டிக்கொடுத்து ஆசுவாசப்படுத்தி வெளியே அழைத்து வந்துவிட்டார். 'நம்நாடு' படம் எனக்குக் கொடுத்த ஊக்கத்தால் 'தமிழ்நாடு நம்நாடுதான்' என்று முடிவு செய்தேன். அன்று மக்கள் கொடுத்த உற்சாகம்தான்... இன்று திண்டுக்கல் தேர்தலில் துணிந்து இறங்கினேன். ஜெயிச்சிட்டேன்''

-இப்படி, தான் தனிக்கட்சி துவங்கியதன் காரணங்களை தேவரிடம் சொல்லியிருக்கிறார் எம்.ஜி.ஆர்.

''டேய் கலைஞானம்... எம்.ஜி.ஆர். என்கிட்ட பல ரகசியங்களைச் சொல்லீருக்காருடா. ஆனா... இப்படி ஒரு அரசியல் ரகசியத்த இன்னைக்கித்தாண்டா அவர் வாயாலயே கேட்டேன்...'' என வியப்புடன் என்னிடம் சொன்னார் தேவர்.

பல்லக்கில் இருந்த தேவரின் உயிரற்ற முகத்தை எம்.ஜி.ஆர். பார்த்துவிட்டு பிரியாவிடை தந்த அந்த தருணத்தில் இந்த நினைவுகளெல்லாம் என் மனதில் தோன்றியது.

அண்ணன் எம்.ஜி.ஆரும், அண்ணன் தேவரும் எப்படி யெல்லாம் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நினைத்து அந்த துக்கத்திலும் மனம் மகிழ்ந்துபோனேன்.

மயானத்தில் தேவரின் திருமுகத்தை கடைசியாகப் பார்த்துவிட்டு சென்னை திரும்பினேன்.

ரஜினியை ஹீரோவாக்கி நான் தயாரித்த 'பைரவி' படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் நிலையில் அடுத்து நான் எழுதிய கதையை 'செல்லக்கிளி' என்ற பெயரில் எனது வள்ளி வேலன் மூவீஸ் சார்பில் தயாரிக்கும் பணிகளை துரிதப் படுத்தினேன்.

ஸ்ரீப்ரியா, விஜயகுமார், கீதா, ஸ்ரீகாந்த், சுருளிராஜன், அசோகன் மற்றும் இரண்டு குழந்தை நட்சத்திரங்களை தேர்வுசெய்துவிட்டேன்.

எம்.எஸ்.விஸ்வநாதன் இசை, பாடல்கள் வாலி, 'ஆறு புஷ்பங்கள்' கே.எம்.பால கிருஷ்ணன் டைரக்டர்... என்பதும் முடிவானது.

செகண்ட் ஹீரோவிற்காக... வாய்ப்புக்கேட்டு வந்த புது முகங்களின் புகைப்படங்களை பார்த்துக்கொண்டிருந்தபோது... லட்சிய நடிகர்' எஸ்.எஸ். ராஜேந்திரனின் தங்கை கணவர் டி.வி.நாராயணசாமி ஒரு இளைஞனுடன் அலுவலகத்திற்கு வந்தார்.

டி.வி.நாராயணசாமி திராவிட அரசியல் மேடைப் பேச்சா ளர்களில் முக்கியமானவர். தன் வாழ்நாளையே திராவிட இயக்கத்திற்காக அர்ப்பணித்தவர். அவர் சிறந்த நடிகரும் ஆவார்.

எனக்கு அவரை முன்பே தெரியும் என்பதால் "அண்ணே..." என ஓடிப்போய் வரவேற்றேன். குளிர்பானம் வரவழைத்து உபசரித்தேன்.

"என்னண்ணே திடீர்னு இவ்வளவு தூரம்?"

அவர் சாதாரணமாக பேசும்போதும் தூய தமிழ் நடையில்தான் பேசுவார். அந்த நடையிலேயே பேசினார். "கலைஞானம்... இவன் என் மகன். பெயர் முத்துமாணிக்கம். திரைப்படத்தில் நடிக்க வேண்டும் என்பது இவனுடைய தவிர்க்க முடியாத ஆசையாகிவிட்டது. அதனால்தான் உன்னிடம் அழைத்து வந்தேன். ஒரு நல்ல வேஷம் ஒன்று உன் படத்தில் இவனுக்கு கொடுத்தே ஆகவேண்டும்."

"என்னண்ணே... ஒரு ஆள்மூலம் சொல்லிவிட்டிருந்தா நானே வந்திருப்பேனே?"

"இல்லை. நான் வருவதுதானே முறை".

"அண்ணன் எஸ்.எஸ்.ஆர். நல்லாருக்காரா?"

"நீ புதுமுக ஹீரோ ரஜினிகாந்த்தை வைத்து "பைரவி"படம் எடுத்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருப்பதை என்னிடம் நினைவுபடுத்தி... 'முத்துமாணிக்கத்தை கலைஞானத்திடம் அழைத்துச்சென்று நான் சொன்னேன் என்று சொல்லுங்கள்' என அவர்தான் அனுப்பிவைத்தார்"

"அண்ணே.. நீங்க நல்ல நேரத்துலதான் வந்தீங்க. செகண்ட் ஹீரோவுக்கு ஆள் தேடிக்கிட்டிருக்கேன். நீங்க ஒரு ஹீரோவையே கொண்டுவந்து நிறுத்தீட்டீங்க. எஸ்.எஸ்.ஆரிடம் 'ஓ.கே. ஆயிருச்சு'னு சொல்லீடுங்க. தம்பிய இங்க விட்டுட்டுப் போங்க. காஸ்ட்யூமரை வரவச்சு ட்ரெஸ்சுக்கு அளவெடுத்துக்கிட்டு அனுப்பிச்சிடுறேன்" என்றேன்.

அவர் கிளம்பிச் சென்றார். காஸ்ட்யூமர் வந்தார். முத்து மாணிக்கத்திற்கு அளவுகள் எடுத்துக் கொண்டிருந்தார்.

என் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

1952 -53ல் எஸ்.எஸ்.ஆரும், டி.வி.நாராயணசாமியும் தங்கள் சொந்த ஊரான சேடபட்டிக்கு வந்திருப்பதாக தகவல் கிடைத்து அவர்களைப் பார்க்கப் போனேன்.

அப்போது ஏற்பட்ட அனுபவம்...

# சந்தர்ப்ப சூழ்நிலை!

1952-53 காலகட்டத்தில்... 'லட்சிய நடிகர்' எஸ்.எஸ்.ஆரும், டி.வி.நாராயண சாமியும் தங்கள் சொந்த ஊரான சேடபட்டிக்கு வந்திருப்பதாக கேள்விப்பட்டு... எஸ்.எஸ்.ஆரை சந்திக்க முடிவு செய்தேன்.

காரணம்...

நான் சினிமாவில் நடிக்க விரும்பி பி.யூ.சின்னப்பாவை சந்தித்தபோது "நீ நாடகங்களில் நடித்து அனுபவம் பெற்றுக்கொண்டு வந்து என்னைப் பார். உனக்கு வாய்ப்பு வாங்கித் தருகிறேன்" எனச் சொன்னார். அதனால் திராவிடத் தலைவர்களில் ஒருவரான ஏ.வி.பி. ஆசைத்தம்பி எழுதிய 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்கிற நாடகக் கதையை வாங்கி அதில் வில்லனாக வேஷம் ஏற்று எங்கள் ஊரான எழுமலை மற்றும் சில ஊர் களில் நாடகம் போட்டேன். அதில் எனக்கு ஓரளவு நல்ல பெயர் கிடைத்தது. ஆனால் எதிர்பாராதவிதமாக பி.யூ.சி. இறந்துவிட்டார். இதனால் நான் நம்பிக்கை இழந்திருந்தேன்.

இந்தச் சமயம் 'பராசக்தி' படம் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியிருந்தது. அதில் பிச்சைக்காரர்கள் சங்கத் தலைவராக நடித்து எஸ்.எஸ்.ஆர். புகழ் பெற்றிருந்த நேரத்தில்தான் சேடபட்டிக்கு வந்திருந்தார்.

என் தங்கையின் கணவர் அருணாசலத்தேவரும், எஸ்.எஸ். ஆரின் தந்தை சூரியநாராயணத்தேவரும் ஒருவகையில் பங்காளிகள். இந்த உறவைச் சொல்லி எப்படியாவது எஸ்.எஸ்.ஆரிடம் சினிமாவில் வாய்ப்பு வாங்கிவிட முடிவு செய்தேன்.



எங்கள் ஊர் எழுமலையிலிருந்து சேடபட்டிக்கு பத்து கிலோமீட்டர் தூரம். காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து குறுக்குப் பாதையில் நடக்க ஆரம்பித்தேன். ஒன்பது மணிக்கெல்லாம் எஸ்.எஸ்.ஆரின் வீட்டுக்குப் போய்விட்டேன். வீட்டின் மாடியில் இருந்த அவரைப் பார்க்க கட்சிக்காரர்கள் வந்து போனபடி இருந்தார்கள். நான் மாடிப்படியோரம் நின்றிருந்தேன். என்னைக் கவனித்த வீட்டு வேலைக்காரர் "நீ யார்?" என கேட்டார்.

"நான் எஸ்.எஸ்.ஆர். ஐயாவைப் பார்க்க வந்திருக்கேன். நான் அருணாசலத்தேவரின் மைத்துனர்னு அவர்கிட்ட சொல்லுங்க" என்றேன்.



அவர் என்னை ஏற இறங்கப் பார்த்தார். "என்ன இவ்வளவு சர்வ சாதாரணமா சொல்லீட்ட? அம்புட்டு சீக்கிரம் அவரைப் பார்க்க முடியுமா? போயி வீட்டுக்கு எதிர இருக்க மரத்தடியில உட்காரு. அவரு மாடியவிட்டு இறங்கிவரும்போது உனக்குச் சொல்றேன்" என்றார்.

மரத்தடியில் போய் உட்கார்ந்துவிட்டேன். காலையில் எதுவும் சாப்பிடவில்லை. மதிய உணவுவேளையும் வந்துவிட்டது. எஸ்.எஸ்.ஆர். கீழே இறங்கி வரவில்லை. பசி மயக்கம். தண்ணீர் தாகம். தண்ணீர் குடிக்கப் போனால்... அந்த நேரத்தில் அவர் கீழே இறங்கி வீட்டுக்குள்

போய்விட்டால் என்ன செய்வது? அதனால் பசி, தாகத்துடன் காத்திருந்தேன். மாலை நான்கு மணிக்கு மேல்... கட்சிக்காரர்கள் புடைசூழ மாடியைவிட்டு கீழே இறங்கி வந்தார். ஓடிப்போய் அவர் முன்னால் நின்றேன்.

''அண்ணே... வணக்கம்''

''நீங்க யார்?''

''அருணாசலத்தேவரோட மச்சினன். நாடகத்துல நடிச்சுக் கிட்டிருக்கேன். சினிமாவில் நடிக்க ஒரு வாய்ப்பு வாங்கிக் கொடுங்க'' என தட்டுத்தடுமாறிச் சொன்னேன்.

எஸ்.எஸ்.ஆர் சிரித்துக்கொண்டே ''பெரியவர் (அருணா சலத்தேவர்) நன்றாக இருக்காரா?'' என விசாரித்துவிட்டு ''நீங்க என்னை சென்னையில் வந்து பாருங்க. அப்போது சொல்கிறேன்'' எனக் கூறிவிட்டு வீட்டுக்குள் போய்விட்டார். டி.வி. நாராயணசாமியோ 'போயிட்டு வா' என்பதுபோல ஜாடையாக கை காட்டினார்.

''ஒருநாள் பூரா பசி பட்டினியோட காத்திருந்து பார்த்தா... நாலுவார்த்தை கூட பேசாம.. 'சென்னைக்கு வான்னு சொல்லீட்டுப் போய்ட்டாரே''என சோர்ந்த மனநிலை யுடன் ஊருக்குத் திரும்பினேன்.

''சார்... ட்ரெஸ்சுக்கு அளவெடுத்தாச்சு'' என காஸ்ட் யூமர் குரல் கொடுத்தார். பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டேன்.

டி.வி.நாராயணசாமியின் மகன் முத்துமாணிக்கத்திடம் ''தம்பி.. ஷூட்டிங் டயத்துல உனக்கு கார் அனுப்புறேன்'' எனச் சொல்லி அனுப்பி வைத்தேன்.

எஸ்.எஸ்.ஆருடன் எனக்கு ஏற்பட்ட சந்திப்பு... 1978#ல் அவரின் தங்கை மகனை என் படத்தில் இரண்டாவது ஹீரோவாக்குகிறேன். இந்த வாய்ப்பைத் தந்த இறைவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டேன்.

'நீங்க சென்னை வந்து என்னைப் பாருங்க' என எஸ்.எஸ்.ஆர். அப்போது சொல்லியிருந்ததால் சென்னை வந்த பிறகு பலமுறை அவரைப் பார்க்க வீட்டுக்குப்போவேன். டி.வி.நாராயணசாமி என்னிடம் முகவரி வாங்கிக்கொண்டு செந்தமிழிலேயே பேசி அனுப்பிவிடுவார்.

எஸ்.எஸ்.ஆர். ஒரு வெள்ளந்தியான மனிதர். கட்சிக்காக அதிக அளவில் தன் சம்பாத்தியத்தை செலவு செய்தவர். அவரை நம்பியவர்களை

கைவிடவேமாட்டார். எஸ்.எஸ்.ஆர். மருமகன் என்பதற்காக அல்ல... கேரக்டருக்கு பொருத்தமானவராக தெரிந்ததாலேயே முத்துமாணிக்கத்தை ''செல்லக்கிளி'' படத்தில் அறிமுகப்படுத்தினேன். எஸ்.எஸ்.ஆரின் மகன் மருதுபாண்டியை என் கதையில் ஹீரோவாக அறிமுகப்படுத்தும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அதை பிறகு சொல்கிறேன்.

''செல்லக்கிளி''படப்பிடிப்பு தொடர்ச்சியாக நடை பெற்றது.

ஒரு கப்பல் அதிபரின் ஒரேமகளும் (ஸ்ரீப்ரியா), ஏழை ஓவியனும் (விஜயகுமார்) காதலித்தனர். காதலை அறிந்த கப்பல் அதிபர், மகளை அழைத்துக்கொண்டு வேறொரு ஊருக்கு குடிபெயர்கிறார். உறவுக்கார இளைஞனுக்கு (முத்துமாணிக்கம்) மகளை மணமுடித்து வைக்கிறார். அந்த தம்பதிக்கு ஆண்#பெண் என இரண்டு குழந்தைகள் பிறந்தன. வியாபாரத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு கப்பல் அதிபர் மாரடைப்பால் இறக்கிறார். அப்பாவை இழந்தவள் கொஞ்சநாளில் கணவனையும் இழந்து விதவையாகிறாள். குழந்தைகளைக் காப்பாற்ற வீட்டுவேலை செய்து காலத்தை ஓட்டுகிறாள்.

தன் காதலியைத் தேடி பல ஊர்களுக்கும் அலைந்த ஓவியன், அவளைக் கண்டுபிடிக்க முடியாததால் திருமணம் செய்துகொள்ளாமலே வாழ்கிறான். அதே சமயம் இந்தியாவின் மிகச் சிறந்த ஓவியர்களில் ஒருவனாக வளர்ந்துவிட்டான். ஓவியங்களை ரசிப்பதில் பித்துக்கொண்ட ஒரு தனவந்தர், ஓவியனை தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே... கப்பல் அதிபரின் மகளாக இருந்த தன் காதலி கந்தல் துணியுடன் வேலைக்காரியாக இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியில் உறைகிறான். அவள் எங்கே குடியிருக்கிறாள் என்பதை அறிய அவளை பின்தொடர்கிறான். ஒரு ஓட்டைக்குடிசையில் இரு குழந்தைகளுடன் வாழ்வதைப் பார்த்து அதிர்ச்சி யாகிறான். அவளின் வாழ்க்கையில் நடந்த துயரங்களை கேட்டறிகிறான். மறுபடியும் அவளுடன் காதலைப் புதுப்பிக்கும் செயலில் அவன் ஈடுபடாமல் அவளின் குழந்தைகளை வளர்ப்பதில் முழுமூச்சாக இறங்குகிறான்.

இதுதான் 'செல்லக்கிளி' படத்தின் கதை.

**14-01-1979**-ல் 'செல்லக்கிளி' வெளியானபோது நான் மதுரையில் இருந்தேன். ரிசல்ட் தெரிந்துகொள்வதற்காக அலங்கார் தியேட்டருக்கு நைட்ஷோ போனேன். கேட் அருகே நான் நின்று கொண்டிருந்தபோது... ஒரு நடுத்தரவயதுப் பெண்மணி ''பாவிப்பயக.. படமா

எடுத்துருக்கானுங்க? இவிங்கள நம்பி டிக்கெட் வாங்கி வச்சேன். முக்காவாசி டிக்கெட் விக்கலை. என் பொழப்பைக் கெடுத்துட்டானுங்க. இந்தப் படம் எடுத்தவன் என் கண்ணுல மாட்டினா... நாலு சாத்துசாத்துவேன்'' எனச் சொல்லிவிட்டுப் போனாள். 'ஒரு படம் தோல்வியடைந்தால் தயாரிப்பா ளர், விநியோகஸ்தருக்கு மட்டுமில்லை, பிளாக் டிக்கெட் விற்பவர்களும் நஷ்டப்படுகிறார்கள்' என்பதை உணர்ந்தேன்.

என் 'செல்லக்கிளி' நல்ல கதையாக இருந்தும் ஏன் ஓடவில்லை? கதை, ஸ்ரீப்ரியாவைச் சுற்றி நிகழ்கிறது. அந்தச் சமயம் ஸ்ரீப்ரியா நடித்த 'நீயா' படம் வெற்றி கரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீப்ரியாவின் அழகின் உச்சகட்டம் 'நீயா' படம். என் படத்தில் கிழிந்த புடவை யுடன், விதவைத் தாயாக ஸ்ரீப்ரியா கண்ணீர் சிந்துவதை எவன் பார்ப்பான்?

இதுதான் சந்தர்ப்ப சூழ்நிலையில் வரும் எதிர்பாராத தோல்வி.

2002-ஆம் ஆண்டு என் நண்பர்கள் பலரும் எனக்கு போன் செய்தார்கள்.

''கலைஞானம் உன்னோட 'செல்லக்கிளி' படத்தோட கதையைத் தழுவி இப்போ ஒரு படம் வந்திருக்கு'' என்றார்கள்.

எனக்கு வியப்பாக இருந்தது. நான் அந்தப் படத்தைப் பார்த்தேன்.

நண்பர்கள் சொன்னது உண்மைதான். ஆனால்....

# ரஜினி காட்டிய நன்றி!

1978-ல் வெளியாகி தோல்வியைத் தழுவிய எனது 'செல்லக்கிளி' படத்தின் கதையைத் தழுவி 24 ஆண்டுகளுக்குப் பிறகு படமாக எடுத்து வெற்றிகரமாக ஓடுவதாக என் நண்பர்கள் சொல்லவும், நான் அந்தப் படத்தைப் பார்த்தேன். அது... தங்கர் பச்சான் இயக்கிய 'அழகி' திரைப்படம். என்னைப் போன்ற சிந்தனை... தங்கருக்கும் வந்திருக்கலாமல்லவா? அதனால் ஒரே அலைவரிசையில் சிந்தித்து, அதே சமயம் அதை வெற்றிப்படமாக்கிய அவரை மனதார வாழ்த்தி மகிழ்ந்தேன். ஆகவே அதை தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இன்னொரு முக்கியமான விஷயம்... 'அழகி' கேரக்டருக்கு நந்திதாதாஸை தேர்வு செய்தது தங்கரின் புத்திசாலித்தனம். கதையின் முடிவு அதைவிட புத்திசாலித்தனம்.

'செல்லக்கிளி' தோல்வியைத் தழுவினாலும் கிராமப்புறங் களில் வரவேற்பைப் பெற்றது. இதற்கு முக்கிய காரணம் ஜெயமாலினி. அப்போதெல்லாம் ஜெயமாலினியின் கவர்ச்சி நடனம் அன்றைய திரைப்படங்களில் தவிர்க்க முடியாத ஒரு அம்சமாக இருந்தது. நான் தயாரிப்பாளராக ஆவதற்கு முன்பே... ஜெயமாலினி சினிமாத்துறையில் இறங்க முயற்சி செய்து கொண்டிருந்தபோதே ஜெயமாலினி குடும்பத்துடன் எனக்கு அறிமுகம் இருந்தது.

மயிலாப்பூர் லஸ் கார்னரில் ஒரு ஹோட்டலில் ரெகுலராக சாப்பிடச் செல்வோம். அங்கு அழகான ஒரு இளம்பெண்ணும், அவரின் அம்மாவும் சாப்பிட வருவார்கள். அப்போது எனது உதவியாளர் பனசை மணியன் எனக்கு அவர்களை அறிமுகம் செய்துவைத்தார்.



''சார்... ஒருவகையில் இவங்க எனக்கு ரொம்ப வேண்டப் பட்டவங்கதான். பிரபல நடிகை ஜோதிலட்சுமியோட தங்கச்சி தான் இவங்க. பேரு... ஜெயமாலினி. இது இவங்களோட அம்மா. மூத்தமகள் ஜோதிலட்சுமியை தன்னோட அக்காவுக்கு தத்து கொடுத்தாங்க இந்த அம்மா. ஜோதிலட்சுமி மூலம் பொருளாதார உதவி கிடைக்கும்னு இந்தம்மா நினைச்சாங்க. ஆனா... அப்படி ஒரு நிலமை அமையல. அதனால் ஜெயமாலினியை சினி ஃபீல்டில் இறக்க முடிவு பண்ணீருக்காங்க'' என விபரம் சொல்லி என்னிடம் அறிமுகப்படுத்தினார் பனசைமணியன்.

நான் கதாசிரியர் என்பதையும் அவர்களிடம் சொன்னார்.

என்னை கைகூப்பி வணங்கிய ஜெயமாலினியின் தாயார் ''வாய்ப்பு அமைஞ்சா இவளுக்கு ரெகமெண்ட் பண்ணுங்க சார்'' என்றார்.

கண்டிப்பாகச் செய்வதாக நானும் சொன்னேன்.

'செல்லக்கிளி'யில் ஒரு பாடலுக்கு ஜெயமாலினியை ஒப்பந்தம் செய்ய... அவரின் வீட்டுக்குப் போனேன்.

ஜெயமாலினியின் தாயார் என்னிடம் நலம் விசாரித்தார்.

'' 'பைரவி' படம் எடுத்து ரிலீஸ் பண்ணீட்டேன். இப்போ 'செல்லக்கிளி' படம் எடுக்கப் போறேன். இதில் ஒரு பாடலுக்கு ஜெயமாலினியை ஆடவைக்க கேட்கலாம்னு வந்தேன்'' என்றேன்.

''கேட்கிறதா? நீங்க கண்டிப்பா உங்க படத்துல என் பொண்ணுக்கு வாய்ப்பு கொடுத்தே ஆகணும்'' என்றார்.

அதன்படியே ஜெயமாலினியின் ஆட்டம் இடம்பெற்றது. ஜெயமாலினி டான்ஸ் என் படத்திற்கு நன்றாகவே கை கொடுத்தது. அந்தளவுக்கு அவருக்கு 'ஸ்டார் வேல்யூ' இருந்தது.

எனது 'பைரவி' படத்தின் மூலம் ஹீரோவான ரஜினியை சின்னப்ப தேவர் தனது இரண்டு படங்களுக்கு புக் பண்ணினார். 'தாய் மீது சத்தியம்' படப்பிடிப்பு தொடங்கிய நிலையில் தேவர் இறந்துவிட்டார்.

''டேய்... கலைஞானம். ரஜினிங்கிற நல்ல ஹீரோவை எனக்கு புடிச்சுக்குடுத்திட்ட. உன் புண்ணியத்தால் இனி ரஜினியை வச்சு வருஷத்துக்கு ரெண்டு படம் எடுப்பேன்'' என தேவர் என்னிடம் சொன்னதை ஒரு சந்தர்ப்பத்தில் ரஜினியிடம் நான் சொன்னேன்.

ஒரு தகப்பனைப்போல் என்னை ஆசிர்வதித்து, ஒரே நேரத்தில் இரண்டு படங்களுக்கு புக் செய்ததுடன், ரெண்டு படத்திற்கும் சேர்த்து ஒரு நல்ல தொகையை மொத்தமாகத் தந்ததையும் ரஜினி மறக்கவில்லை. தன்மீது அபரிமிதமான நம்பிக்கை வைத்த தேவரையும், அவருடைய கம்பெனியையும் எக்காரணம் கொண்டும் கைவிடக்கூடாது என்கிற நன்றியுணர்ச்சியுடன்... தொடர்ந்து தேவர் கம்பெனிக்கு எட்டுப் படங்கள் நடித்துக்கொடுத்தார் ரஜினி. வேறு எந்த கம்பெனிக்கும், தயாரிப்பாளருக்கும் இப்படி தொடர்ந்து நடித்துக் கொடுத்ததில்லை. தேவர் கம்பெனியில் ரஜினி நடித்த வெற்றிப்படங்களில் ஒன்று 'அன்னை ஓர் ஆலயம்'.

இந்தப் படத்தின் கதை குறித்து சில சுவாரஸ்யங்களைச் சொல்கிறேன்.

தர்மேந்திரா, ஹேமாமாலினியை சந்தித்து 'மதர் அனி மல்ஸ்... பேபி அனிமல்ஸ்...' என தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் ஒரு கதையைச் சொன்னார் தேவர். படத்திற்குப் பெயர் 'மா'. தேவர் சொன்னது, புரிந் ததோ... இல்லையோ.... ஆனால் தேவரின் புகழை வடஇந்தியாவில் உயர்த்திய 'ஆத்தி மேரா சாத்தி' படத்தின் வெற்றியை நினைத்து 'மா' வில் நடிக்க இருவரும் சம்மதித்தனர். படப்பிடிப்பும் தொடங்கியது.

ஆனாலும் தேவருக்கு அந்தக் கதையில் மனநிறைவு ஏற்படவில்லை. "டேய்... கதைக்காரனுங்களா... 'மா' படம் ஷூட்டிங் போயிட்டிருக்கு. கதைக்கு அழுத்தம் சேர்க்கிற மாதிரி விஷயம் வேணும்டா. கதையைச் சொல்றேன் கேட்டுக்கங்க" என்று தேவர் சொல்ல ஆரம்பித்தார்.

"ஒரு கோடீஸ்வரப் பையன். அம்மா மட்டும்தான் அவனுக்கு. தன்னோட எஸ்டேட்ல இருக்க மிருகங்க ளோட குட்டிகளைப் பிடிச்சு சர்க்கஸ் கம்பெனிகளுக்கு விற்கிறான். 'தாயையும், குட்டியையும் பிரிப்பது பாவம்' என மகனைக் கண்டிக்கிறாள் தாய். அப்போது மகன் 'நம்ம எஸ்டேட்ல ஏகப்பட்ட குட்டிகள் பெருகிக்கிட்டிருக்கு. நான் விற்கிற குட்டிகள் சர்க்கஸ் கம்பெனியில இங்க இருக்கிறதைக் காட்டிலும் வசதியா, சந்தோஷமா இருக்கு' என்பான். ஆனால் தாய் சமாதானமாகவில்லை. இந்தச் சூழ்நிலையில்... மகன் எப்படி? எப்போது மனம் மாறுகிறான்? அதற்கப்புறம் அவன் என்ன செய்கிறான்? என்பதற்கு ஸீன் புடிச்சுக் குடுங்கடா" என்றார்.

கதைக் குழுவைச் சேர்ந்த அத்தனைபேரும் மண்டய ஒடச்சு மாவப் பிசையிறாங்களே தவிர... ஸீன் கிடைக்க வில்லை.

எனக்குள் ஒரு மின்னல் வெட்டியது.

"அண்ணே... கதையை இப்படி நகர்த்தலாமா?"

"எப்படிடா? சொல்லு?"

"ஒருநாள்... வழக்கம்போல அவன் பறித்துவைத்த பள்ளத்தில் யானைக்குட்டி சிக்க.. அதைப் பிடித்து விற்றுவிடுகிறான். வாங்கியவர்கள் குட்டியை ஒரு லாரியில் ஏற்றி கொண்டு செல்ல... இதப் பார்த்த தாய் யானை... வெறிகொண்டு பிளிறியபடி லாரியை மறித்து மறித்து தாக்குகிறது. ஆனாலும் குட்டியை கொண்டுபோய் விடுகிறார்கள்.

சோகமும், வெறியுமாக யானை திரும்பி வரும்போது... கோயிலில் அர்ச்சனை செய்துவிட்டு ஹீரோவின் தாய் எதிரே வர... 'விலகிப் போ' என்பதுபோல் தும்பிக்கையால் அந்தம்மாவை யானை தள்ளிவிட்டுப்போக... அலறியபடி கீழே விழுகிறாள். அவளின் சத்தம்கேட்டு ஓடிவந்த ஹீரோ குற்றுயிரும், குலையுயிருமாகக் கிடக்கும் தாயை மடியில் தூக்கி வைத்துக்கொண்டு 'அம்மா... அம்மா' என கதறுகிறான்.

"மகனே... இப்போதாவது நான் சொல்வதைக் கேள். அந்த யானை என்னை வேண்டுமென்றே தள்ளிவிடவில்லை. குட்டியைப் பிரிந்த வெறியில் அப்படி செய்துவிட்டது. பாசம் என்பது மனிதர்களுக்கு மட்டுமில்லை. மிருகங்கள், பறவைகள், உயிரினங்கள்... எல்லாத்துக்குமே உண்டு. அந்த தாய்ப்பாசத்துக்கு எந்த விலையும் கொடுக்க முடியாது. தாயிடமிருந்து நீ பிரித்த குட்டியை மீட்டுவந்து தாயுடன் சேர்த்துவிடு. அப்போது தான் அந்த தாய் யானை உன்னை ஆசிர்வதிக்கும்'' எனச் சொல்லிவிட்டு மகனின் மடியிலேயே உயிரை விடுகிறாள். தாய் வாக்கை தெய்வவாக்காக எடுத்துக்கொண்டு, பல இடங்களுக்கு கை மாறிப்போன குட்டியை கண்டுபிடித்து தாயுடன் சேர்க்கிறான்'' இப்படிப் பண்ணலாமாண்ணே?''' என்றேன்.

"அடேய்... கலைஞானம்... இப்ப உன்னை கலை ஞானம்னு ஒப்புக்கிறேண்டா. உனக்கும் ஞானம் இருக்குடா" என்றபடி படபடவென டேபிளில் தட்டினார் தேவர்.

தேவரண்ணன் உருவாக்கிய கதைக்கு இந்தக் கருவை நான் கொடுத்தது கதைக்குப் பலமாக அமைந்தது. 'மா' படம் பெரும் வெற்றி பெற்றது.

அந்த 'மா' கதையைத்தான் ரஜினியை வைத்து 'அன்னை ஓர் ஆலயம்' என எடுத்தார் தேவரின் மகன் தண்டபாணி. தேவரின் மாப்பிள்ளை தியாகராஜன் அதை வெற்றிப்படமாக இயக்கினார். தேவர் இல்லாத காலத்திலும் தேவர் கம்பெனிக்கு பெரும் வெற்றிப்படமாக அமைந்தது.

ரஜினிக்கு உண்டான சிக்கல்...

# அமைதி இழந்த ரஜினி!

தேவருடன் நான் கதை விவாதங்களில் கலந்து கொண்டிருக்கும்போது.... ஓய்வு நேரங்களில் மா.ரா., தூயவன் போன்ற நண்பர்களிடம் நான் வைத்திருக்கும் கதைகளையெல்லாம் சொல்லிப் பார்ப்பது என் வழக்கம். அப்படி நான் சொன்ன ஒரு கதை...
வழிப்பறி செய்து வாழும் திருடன் ரெங்கன் ஒருநாள்... கடும் மழை பெய்துகொண்டிருக்கும் நேரத்தில்... கல்யாணத்திற்கு தயாராக இருக்கும் ஒரு பெண்ணின் சங்கிலியை பறித்துக்கொண்டு ஓடுவான். பெண்ணின் உறவினர்கள் அரிவாள், வேல்கம்புடன் ரெங்கனை துரத்த ஒரு பாழடைந்த கட்டிடத்திற்குள் பதுங்குவான். அங்கே விஜயசாமி என்கிற துறவி இருப்பார். ரெங்கன் செயினுடன் பதுங்குவதைப் பார்த்தாலும்கூட, தியானம் செய்வதுபோல் ருத்ராட்சைக் கொட்டையை உருட்டியபடி இருப்பார் சாமியார். துரத்தி வந்தவர்கள் 'திருடன் இங்கே வந்தானா?' எனக் கேட்க... சாமியார் பதில் சொல்லாமல் தியானம் செய்வார். 'சாமியார் மௌனம் கலைக்குறதுக்குள்ள திருடன் தப்பிச்சிடுவான். வாங்கடா...' என வேறு பக்கம் தேடச் செல்வார்கள்.

திருடனிடம், சாமியார் விசாரிப்பார்.

"என் பெயர் ரெங்கன். என் தாய் வீட்டு வேலை செய்து அவளைக் காப்பாற்றிக் கொள்ளவே போராடுகிறாள். தாயின் துயரைத் துடைக்க, படிக்காத நான் எந்த வேலையும் செய்யலாம்னு முடிவு செய்தேன். ஆனா... வேலை கிடைக்கல. நான் சும்மா இருந்தாலும் என் வயிறு வேலை கேட்கிறதே. 'பசி...பசினு எரியுதே. என்னை நான் காப்பாற்றிக்க முடியல. என் வயிற்றைக் காப்பாற்றணுமே? அதனால் சில தவறுகள் செய்தேன். அது பெரிய தவறாக மாறிவிட்டது. என்னோட சூழ்நிலையில் நீங்க இருந்தாலும் இப்படித்தான் செய்வீங்க" என்கிறான்.



சாமியாரைப் பற்றி ரெங்கன் விசாரிப்பான்...

**"என் பேர் விஜயன். என்னை விஜயசாமியார் என்பார்கள். எனக்கு சொந்தபந்தம் இருக்காங்க. ஓரளவு வசதி இருப்பதால்... என் குடும்பத்திற்காக பாடுபடுவதைக் காட்டிலும், ஏழைபாழை, அப்பாவிகளுக்கு ஆன்மிக அறநெறிகளை போதித்து நல்வழிப்படுத்தவே துறவி யானேன்" எனச் சொல்லும் சாமியார்... "ரெங்கா நீ செய்யும் திருட்டு உனக்கு நியாயம். ஆனாலும் என்றாவது ஒருநாள் 'இவ்வளவு பெரிய பாவத்திற்கு ஆளாகிவிட்டோமே' என மனம் வருந்தி நீயும் என் வழிக்கு வருவாய்" என்கிறார்.**

''உங்க குடும்பத்துக்கு வசதி இருந்தாலும் உங்களை நம்பிய குடும்பத்தை விட்டுவிட்டு ஜனங்களுக்கு சேவை செய்ய காவி உடுத்தியிருக்கீங்க. அந்த ஜனங்களே ஒருநாள் உங்களை ஏதோ ஒரு காரணத்திற்காக உங்க மானமரியாதை போற அளவுக்கு துவைச்செடுக்கப் போறாங்க. அப்போது 'துறவறம் தவறு'னு நீங்க காவிய கழற்டி வீசுவீங்க'' என்கிறான் ரெங்கன்.

இந்த பரஸ்பர சவாலை இயற்கையே கவனிப்பதுபோல் இடியும், மழையும் நிற்கிறது.

இருவரும் வெளியேறி ஆளுக்கொரு திசையில் போகிறார்கள்.

ஒருகட்டத்தில் திருடன் பெரிய குற்றவாளியாகிறான். போலீஸ் அவனை துரத்துகிறது. அந்தச் சமயம் அவன் தாய் இறந்துவிட... இறுதிச் சடங்கு நடக்கிறது. சுடுகாட்டில் கடைசியாக தாய் முகத்தை பார்த்துவிடத் துடிக்கிறான் ரெங்கன். போலீஸ் அங்கே மாறுவேடத்தில் இருக்கிறது. இதனால் தூரத்தில் எரியும் தாயின் சிதையை பார்த்தபடி மறைந்து நிற்கிறான். விடிந்தது... 'இனி ரெங்கன் வர மாட்டான்' என போலீஸ் கிளம்ப... ஓடி வந்து தாயின் சிதைச் சாம்பலை எடுத்து முகத்தில் பூசிக்கொண்டு அழுகிறான். தாயிடம் மன்னிப்பு கேட்கிறான்.

'என்றோ ஒரு நாள் நீ மனம் மாறி நல்வழிக்கு வருவாய். அன்றுதான் உனக்கு மனநிம்மதி' என விஜயசாமியார் சொன்னது நினைவுக்கு வருகிறது. அன்றுமுதல் அருணகிரிநாதரைப்போல் முருகக்கடவுளே கதி என ஆவதுடன், பல ஆன்மிக அறிஞர்களின் சொற்பொழிவைக் கேட்டு, ரெங்கனும் பெரிய சொற்பொழி வாளனாகிறான்.

விஜயசாமியார் ஒரு மடத்தில் இரவு நேரம் தவம் செய்துவிட்டு படுக்க... அப்போது கோயில் ஐம்பொன் சிலையை திருடர்கள் திருடிக்கொண்டு வர, காவலாளிகள் துரத்த... அந்தச் சிலையை சாமியாரின் தலைமாட்டில் வைத்துவிட்டுப் போகிறார்கள். 'இப்போதுதான் தவம் செய்தோம். இறைவன் கருணையோ இது...' என சிலையைத் தூக்கி வைத்துக்கொள்ள... 'இது இறைவன் கருணை இல்ல. உன்னோட திடுட்டுத்தனம்' எனச் சொல்லி ஊர்மக்கள் திரண்டு சாமியாரை அடித்து உதைத்து போலீஸில் ஒப்படைக்கிறார்கள்.

''சிலைத்திருடன்' முத்திரையுடன் ஜெயிலில் இருக்கும் விஜயசாமியார்... ''நன்றிகெட்ட ஜனங்கனு ரெங்கன் சொன்னானே. அவன் சாதாரண ஆளில்லை. அனுபவம் மூலம் இந்த உலகத்தை அறிந்தவன்''என

நினைக்கிறார். இனி 'ரெங்கன் வழியே என் வழி'னு சாமியார் திருடனாகிறார்.

ஒருநாள் தப்பி ஓடும் விஜயசாமியை போலீஸ் துரத்த... ரெங்கன் சொற்பொழிவாற்றும் கூட்டத்திற்குள் புகுந்து உட்கார்ந்துகொள்கிறார்.

"மகா ஜனங்களே... நான் தவறான பாதையில் போனவன். இன்று ஞானம் பெற்று நான் புகழ்பெறக் காரணம் என் குரு விஜயசாமிதான். இந்த நேரம்தான் அவர் எனக்கு உபதேசம் செய்த நேரம். இப்போது நீங்களும் என் குருவை நினையுங்கள். அவரின் ஆசி கிடைக்கும்" என்கிறான் ரெங்கன்.

இந்தக் கதையை நான் தூயவனிடம் சொன்னதும்... "கதையை எனக்கு குடுத்துருவோய். இதுக்கு நல்ல ஸ்கிரீன் ப்ளே எழுதி சக்ஸஸ் பண்றேன்" என்றார்.

"எனக்கு சல்லிக்காசு வேணாம். நீயே இந்தக் கதையை வச்சுக்க" எனக் கொடுத்துவிட்டேன்.

தூயவனுக்கு மட்டுமில்லை... என் நண்பர்கள் சிலருக்கு என் கதைகளை இலவசமாக கொடுத்திருக்கிறேன் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

திருடன் சாமியார் கதைதான் ரஜினியும், கராத்தே மணியும் நடித்து ‘ரங்கா’ என்ற பெயரில் வந்தது. நான் சொன்ன மூலக்கதைக்கு தூயவன் அவர் பாணியில் ரஜினிக்கு தக்கவாறு திரைக்கதை அமைத்திருந்தார். அதுவும் வரவேற்கத்தக்கதே.

தேவர் இல்லாதபோதும், அவரின் கம்பெனிக்கு இதுவும் வெற்றிப்படமாக அமைந்தது.

இங்கே நான் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

" 'பைரவி'யில் ரஜினியை ஹீரோவாக்கினீங்க. அடுத் தடுத்து நீங்க ஏன் ரஜினியை வச்சு படம் எடுக்க வில்லை? உங்களுக்கும் ரஜினிக்கும் இடையில் ஏதாவது சண்டை சச்சரவா?" என ரஜினி ரசிகர்களும், எனது நலம் விரும்பிகளும் என்னிடம் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். நானும், ரஜினியும் இந்த காலகட்டத்தில் நேரிடையாக இணைந்து தொழில் செய்யவில்லையே தவிர, 'அன்னை ஓர் ஆலயம்', 'ரங்கா’ என என் கற்பனைகளில் அவர் கதாநாயகனாக நடித்து வந்தார். அதில் எனக்கு ரொம்ப திருப்தி. அந்த சந்தோஷத்தில் தலைக்கு மூன்று தலையணைகள்

வைத்துத் தூங்கியிருக்கிறேன். "எங்களுக்கிடையே எந்தப் பிரச்சினையுமில்லை. சமயம் அமையும்போது தனியாக எனக்கு ஒரு படம் நடித்துக் கொடுப்பார்" எனச் சொல்லி வந்தேன். இருப்பினும் ரஜினிக்கும், எனக்கும் தொழில் ரீதியாக பெரிய கேப் வந்துவிட்டது.

இதற்குக் காரணம்...

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சிக்கலான பிரச்சினையில் ரஜினி சிக்கிக்கொண்டார். அதனால் மன உளைச்சலுக்கு ஆளானார். அந்தச் சமயங்களில்தான் 'ரஜினி அங்கே கலாட்டா பண்ணினார்... இங்கே கலாட்டா பண்ணினார்' என பத்திரிகைகளில் செய்தி வந்துகொண்டே இருந்தது. ரஜினியோ அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனாலும் திருமதி லதா ரஜினிக்கு 'தன் கணவர் மேலும் மேலும் பேரும் புகழும் வாங்க வேண்டிய நேரத்தில் இப்படி அமைதியில்லாமல் இருக்கிறாரே' என்ற கவலை ஆக்கிரமித்துவிட்டது. திருப்பதி வெங்கடாஜலபதிக்கு தலைமுடி காணிக்கை கொடுப்பதாக வேண்டிக் கொண்டார் லதா. அதன்படியே திருப்பதி சென்று மொட்டையடித்துக் கொண்டுவந்தார். லதாவின் வேண்டுதலால் ரஜினிக்கு மன அமைதியும், ஆரோக்கியமும் மீண்டும் கிடைத்து மறுபடி உயர்வடைந்தார். செய்யும் தொழிலே தெய்வம் என்கிற சித்தாந்தத்தில் மூழ்கிவிட்டார் ரஜினி.

இந்த நேரத்தில்... தான் மன உளைச்சலாக இருந்தபோது தனக்கு பேருதவி செய்த சில வி.ஐ.பி.களுக்கு நன்றிக்கடனாக அவர்களுக்கு படம் நடித்துக் கொடுக்க வேண்டிய சூழ் நிலைக்கு ஆளானார் ரஜினி. (இது 'வீரா' படப்பிடிப்பின்போது ரஜினியே என்னிடம் சொன்ன விஷயங்கள்தான்.) அதன்பிறகு ரஜினி எனக்கு தொழில் ரீதியாக சில நன்மைகள் செய்தார். என்னை மறவாமல்.. என்னென்ன நன்மைகள் செய்தார் என்பதையும், ரஜினியுடனான சுவாரஸ்யமான விஷயங்களையும் அந்தந்தச் சமயங்களில் நான் எழுதுகிறேன்.

# ஆவி!

'செல்லக்கிளி' படம் தோல்வியடைந்ததை அடுத்து... விட்டலாச்சார்யா பாணியில் ஒரு ஆவிக்கதையை படமாக்க முடிவு செய்து 'புதிய தோரணங்கள்' என்ற கதையையும் எழுதி முடித்தேன். இந்தக் கதையை இயக்குபவர் ஒளிப்பதிவாளராகவும், இயக்குநராகவும் இருந்தால் நன்றாக இருக்கும் என முடிவு செய்தேன்.

'முள்ளும் மலரும்' படத்தின் வெற்றிக்கு கேமரா மேன் பாலுமகேந்திராவும் ஒரு காரணம்... என கேள்விப் பட்டேன். அவரை 'கேமராமேன்-கம்-டைரக்டராக' ஒப்பந்தம் செய்ய... கே.கே.நகரில் நடிகை ஷோபாவின் வீட்டில் தங்கியிருந்த பாலு மகேந்திராவைப் போய்ப் பார்த்தேன். இருவருக்கும் ஓரளவு பரிச்சயம். என்றாலும் சுயஅறிமுகம் செய்துகொண்டேன்.

''உங்களை எனக்குத்தான் நல்லாத் தெரியுமே'' என்றார். அப்போது ஷோபாவும் அங்கே இருந்தார். ஷோபாவின் அம்மா எனக்கு குளிர்பானம் கொண்டுவந்து கொடுத்தார்.

''நீங்க எனக்கு ஒரு படம் பண்ணித்தரணும்.''

''செய்றேன். கதையைச் சொல்லுங்க.''

''புதிய தோரணங்கள்''கதையை அவரிடம் சொன்னேன்.

''நிச்சயம் இதைப் படம் பண்ணலாம். ஆனா... எனக்கு ஒரு லட்சியம். மலையாளத்தில் வெற்றிபெற்ற ஒரு படத்தோட கதை ரைட்ஸ் வாங்கி வச்சிருக்கேன். அதை படமாக்கும் முயற்சியில் இருக்கேன். நீங்களே தயாரிச்சா ரொம்ப சந்தோஷப்படுவேன்'' என்ற பாலுமகேந்திரா, அந்த மலையாளக் கதையையும் சொன்னார்.



பசுமாடுகளுக்கு கருவூட்டும் பொலிகாளை ஒன்றை வாடகைக்கு விட்டு பிழைக்கிறார்கள் ஒரு வயதான தம்பதி. அவர்களின் பக்கத்துவீட்டில் ஒரு இளம் தம்பதி. இவர்களைச் சுற்றி நிகழும் சம்பவங்கள்தான் கதை.

கதையைக்கேட்ட நான் "இது 'ஏ' சர்ட்டிபிகேட்டா இருக்குமே" என்றேன்.

"யெஸ்" என்றார்.

"சார்... 'ஏ' சர்ட்டிபிகேட், மலையாள ரீ மேக் அப்படின் னாலே டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் வாங்குறதுக்கு யோசிப்பாங்க. அதனால் இப்போதைக்கு மினிமம் கியாரண்டி உத்திர வாதம் இருக்கிற ஆவி கதையையே எடுப்போம்" என்றேன்.

"நான் சொல்றதை தயவுசெஞ்சு கேளுங்க. மலையாளத் தில் பெரிய அளவில் வெற்றிபெற்ற படத்தோட கதை இது" என்று மேலும் வற்புறுத்தினார். என்னுடைய விருப்பத்திற்கு அவர் உடன்பாடாக இல்லை. அவருடைய விருப்பத்திற்கு நான் உடன்பாடாக இல்லை.

"யோசனை பண்ணிச் சொல்றேன்" என அவரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு வந்துவிட்டேன்.

தேவரால் எனக்கு அறிமுகமான 'உமையாம்பிகா' சுப்பிரமணிய செட்டியார்தான் 'புதிய தோரணங்கள்' படத்திற்கு ஃபைனான்ஸ் செய்கிறவர். அதனால் அவரைச் சந்தித்து... பாலுமகேந்திராவைப் பார்த்துப் பேசியதையும், அவர் வேறு கதையை எடுக்கலாம் எனச் சொன்னதையும் தெரிவித்தேன்.

"அந்த சப்ஜெக்ட் இப்போதைக்கு வேணாம். 'புதிய தோரணங்கள்' கதையையே படமா எடுங்க. நான் ஒரு யோசனை சொல்றேன். கேமரா மேதை கர்ணனை டைரக்டரா போடுங்க" என்றார் ஃபைனான்ஸியர்.

கேமராமேன் -கம் - டைரக்டராக அப்போது சக்ஸஸ் பண்ணிக்கொண்டிருந்த கர்ணனைப் பார்த்து விஷயத்தைச் சொன்னேன். கதையைக் கேட்டுவிட்டு உடனே ஒப்புக்கொண்டார் கர்ணன்.

கதாநாயகியாக யாரைத் தேர்வு செய்வது'என சிந்தனை வயப்பட்டிருந்தேன். வாய்ப்புக் கேட்டு ஏஜெண்ட்டுகள் மூலம் வந்திருந்த பெண்களின் புகைப்படங்களைப் பார்த்தேன். அதில் ஒரு இளம்பெண்ணின் கண்கள் இரண்டும் பவர்ஃபுல்லாக இருந்தது. அவரையே கதாநாயகியாக அறிமுகம் செய்ய முடிவு செய்தேன். ஆமாம்... அவர்தான் என்னால்

தமிழ் சினிமா உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட மாதவி. (பின்னாளில் தமிழ் சினிமாவின் மிகப்பெரிய நாயகியாக ஆனதுடன், பிற தென்னிந்திய மொழிகளிலும் புகழ் பெற்று விளங்கினார். இந்தியிலும் நடித்தார். அதன் பிறகு தொழிலதிபரை மணந்துகொண்டு அமெரிக்காவில் இப்போது இனிய இல்லறம் நடத்தி வருகிறார்.)

ஹீரோ சரத்பாபு, ஹீரோயின் மாதவி, நகைச்சுவைக்கு காந்திமதி, சுருளிராஜன் ஆகியோர் ஒப்பந்தம் செய்யப் பட்டனர். ஏ.எஸ்.பிரகாசம் வசனம் எழுதவும், இசைக்கு சங்கர்-கணேஷும் ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.

சங்கர்-கணேஷ் இசையில் படத்திற்கான முதல் பாடல் பதிவு நடந்தது.

'தீர்த்தக்கர.... மாரியம்மா... ஊர்கோலம் வரும் மொளப் பாரியம்மா' என்கிற கங்கை அமரன் எழுதிய பாடல் பதிவா னது. இந்தப்பாடல் இன்றுவரை கிராமங்களில் திருவிழாக் காலங்களில் ஒலிபரப்பாகிக்கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

அடுத்த பாடல்.... உருக்கமானது. செத்துப்போன நாயகி யின் ஆவி தன் காதலனை நினைத்துப் பாடும் பாடல்.

'ஓடக்கர மண்ணெடுத்து ஓவ்வுருவம் செஞ்சுவச்சேன்

ஓடயெல்லாம் தண்ணிவந்து

ஒன்னமட்டும் பிரிச்சதென்ன ராசாவே...

படுத்தா பல நெனைவு பாயெல்லாம் கண்ணீரு

எடுத்துச் சொல்ல யாரிருக்காங்க ராசாவே'

இதுவும் ஹிட் பாடல்தான். இந்தப் பாடலை எழுதியது... நானேதான்.

அடுத்து ஒரு காதல் பாடல் பதிவானது.

'மூக்குத்தி தொங்கலிலே

முன்னே ஒரு பச்சக்கல்லு

பச்சக்கல்லு பக்கத்திலே

செவப்புக்கல்லு இழுக்குதடி

யம்மாடி ஆத்தாடி

ஏதோ ஒண்ணு உண்டாச்சு...'

இதுவும் நான் எழுதிய பாடல்தான்.

ஆவி கதை என்பதுடன், சண்டை சாகஸக் காட்சிகளும் கதையில் இருந்ததால் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகில் வத்திரா யிருப்பை ஒட்டிய... சதுரகிரி மலை அடிவார கிராமமான கூ.மா.பட்டியில் படப்பிடிப்பைத் தொடங்கினோம்.

அந்த ஊர் பெரியமனிதர் பாலசுப்பிரமணியத்தேவர் எனக்கு உறவினரும்கூட. அவரிடம் ''ஒரிஜினல் சிலம்பாட்டம் தெரிந்த ஆயிரம்பேர்கள் தேவை. இரு கிராமங்களுக்கிடையேயான சண்டைக்காட்சிக்கு தேவைப்படுது'' என்றேன். மறுநாள் ஷூட்டிங் ஸ்பாட்டில் ஆயிரம் சிலம்பாட்டக் கலைஞர்கள் குவிந்துவிட்டனர். ஸ்டண்ட் யூனியனைச் சேர்ந்த 15 கலைஞர்களை இங்கிருந்து அழைத்துப் போயிருந்தோம். அவர்களை முன் வரிசையில் நிறுத்திவிட்டு கிராமத்து ஆட்களை பின்னாடி நிறுத்தினோம்.

''சகோதரர்களே... நீங்களெல்லாம் எனக்கு சொந்தக் காரர்கள் மாதிரி. அண்ணன்மார், தம்பிமார், அப்பாமார், மாமன்மார் என வந்திருக்கிறீர்கள். நீங்கள் எனக்கொரு உதவி பண்ணணும்'' என மைக்கில் அறிவித்தேன்.

'சொல்லுங்க' என கிராமத்தினர் குரல் கொடுத்தார்கள்.

''இது சினிமாவுக்கான சண்டை. அதாவது... சண்டை போடுவதுபோல நடிக்கணும். நீங்க கம்புகளைச் சுழற்றும் போது தப்பித்தவறி உங்க ஆளுக மேல தெரியாம அடி விழுந்திட்டா... 'அடிச்சிட்டானே'னு சொல்லி திருப்பி அடிச் சிராதீங்க. மாத்தி மாத்தி அடிச்சிக்கிட்டா... இது போர்க் களமாகிடும்'' என்றேன்.

''அதெப்படிங்க... எங்க ஊர்க்காரனை அசலூர்க்காரன் அடிச்சா நாங்க சும்மா இருக்கமுடியுமா?'' என்றார் ஒரு பெரியவர்.

''இதத்தான் செய்யாதீங்கனு சொல்றேன். அடிதடி ஆகிருச்சுன்னா ஷூட்டிங் நடத்த முடியாது'' என்றபடி கையெடுத்து கும்பிட்டேன்.

''சரிங்க... நீங்க படம்புடிங்க'' என்றார்கள்.

கேமராவை ஸ்டார்ட்பண்ணி 'ஆக் ஷன்' என்றார் கர்ணன்.

# சிலுக்கு ஸ்மிதா கேட்ட டிரெஸ்!

'புதிய தோரணங்கள்' படப்பிடிப்புத்தளம்.

சுற்றுப்புற கிராமத்தைச் சேர்ந்த சிலம்பாட்டக் கலைஞர்களையும், 15 சினிமா ஸ்டண்ட் கலைஞர்களையும் வைத்து, ஸ்டண்ட் ஸீன் எடுக்கத் தயாரானோம்.

'கேமரா ஸ்டார்ட்... ஆக்ஷன்...' என கர்ணன் சொன்னார்.

அவ்வளவுதான்... புழுதி பறக்க ஆரம்பித்தது. அலை அலையாய் சிலம்பங்கள் சுழல ஆரம்பித்தன. ஆளாளுக்கு திறமை காட்ட நினைத்ததன் விளைவு... அடுத்தவர் மீது அடி விழுந்தது. ஒருசிலருக்கு முன்பகையும், ஒரு சில குரூப்புகளுக்கு இடையே ஊர்ப்பகையும் இருந்திருக்குமோ என்னமோ? பழி தீர்க்கும் வாய்ப்பாக ஷூட்டிங் ஸ்பாட்டை பயன்படுத்திக் கொண்டார்கள் போல. ஒருவரையொருவர் தாறுமாறாக தாக்கிக்கொண்டு விரட்டி விரட்டி அடிக்க ஆரம்பித் தார்கள். சிலர் அலறினார்கள். சிலர் அடிபொறுக்க மாட்டாமல் ஸ்பாட்டை விட்டு ஓட... ஓடியவர்களை துரத்தித் துரத்தி தாக்கிக்கொண்டு ஓடினார்கள்.

ஏரியாவே ரணகளமானது. எங்களுக்கு வேர்த்து விறு விறுத்துவிட்டது. கேமரா ஆங்கிளுக்குள் பலரும் வர வில்லை. இருந்த மிச்சசொச்ச பேர்களை வைத்து ஸ்டண்ட் காட்சிகளை படமாக்கிவிட்டு வந்தோம்.

கர்ணனின் சாமர்த்தியம், அந்த சண்டைக்காட்சி ஓரளவு தேறியது. பொதுவாக சண்டைப் படங்களை 'பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்' என விளம்பரப்படுத்துவார்கள். உண்மையிலேயே இது எங்களுக்கு பயங்கர சண்டைக்காட்சி அனுபவமாகத் தான் இருந்தது.



அன்று இரவு... கூமாபட்டியில் இருக்கும் எங்கள் உறவினர்கள் சிலரையும், ஸ்டண்ட் கலைஞர்களையும் வைத்து தீப்பந்த ஃபைட் ஸீன் எடுத்து முடித்தோம்.

இத்துடன் ஸ்டண்ட் கலைஞர்களின் வேலை இங்கே முடிந்ததால் அவர்களை காலையில் சென்னைக்கு அனுப்ப எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிவிட்டோம்.

அதிகாலையிலேயே சரத்பாபு, மாதவியைக் கூட்டிக் கொண்டு வெகுதூர லொகேஷன் ஒன்றில் பாட்டு ஸீன் எடுக்க கிளம்பிவிட்டார் கர்ணன்.

சென்னை கிளம்பவேண்டிய ஸ்டண்ட் கலைஞர்கள் "சார்.. ரெண்டு நாளா சைவமா சாப்பிட்டு நாக்குச் செத்துப் போச்சு" என காதைக் கடித்தார்கள்.

ஸ்டண்ட் கலைஞர்களைப் பொறுத்தவரை அசைவம் சாப்பிட்டால்தான் தெம்பாக வேலை செய்வார்கள். ஆனால் டைரக்டர் கர்ணன் சைவம் மட்டுமே சாப்பிடுவார். அதோடு தனது படக் குழுவையும் சைவம்தான் சாப்பிடச் சொல்வார். சைவ உணவுக்கு ஒப்புக்கொள்கிறவர்கள் மட்டுமே கர்ணன் படத்தில் வேலை செய்ய முடியும்.

இதனால் அவர்களை மகிழ்விக்க விருந்துக்கு ஏற்பாடு செய்தேன்.

எனக்கு மனசு கேட்கவில்லை. புரொடக்ஷன் நிர்வாகி யான என் தம்பி நித்யானந்தத்தையும், என் தங்கை மகன் எஸ்.ஏ.நடராஜனையும் அழைத்தேன்.

"மலைப்பக்கம் ஷூட்டிங் போயிருக்க டைரக்டர் நைட்டுதான் திரும்பி வருவார். அதுக்குள்ள சமையல் பண்ணி, எல்லாரையும் நல்லெண்ணய் குளியல் போடவச்சு வயிறார சாப்பிட வச்சு அனுப்பிடணும். தேடிப் பிடிச்சு ஒரு பெரிய ஆடு வாங்குவாங்க. ஒரு டின் நல்லெண்ணய் வாங்கிட்டு வந்திடுங்க" என அனுப்பி வைத்தேன்.

காலை ரயிலில் சென்னைக்குப் போட்டிருந்த 15 டிக்கெட்டுகளையும் ரத்து செய்துவிட்டு இரவு ரயிலுக்கு டிக்கெட்டும் போட்டாகிவிட்டது. குளிரக் குளிர எண்ணெய்க் குளியல் போட்டுவிட்டு, மணக்க மணக்க கறிச்சோறு உண்டுவிட்டுக் கிளம்பினார்கள். அவர்களின் அசைவ ஆசையை நிவர்த்தி செய்த மனதிருப்தி எனக்கு.

படத்தின் ஒரு பகுதி ஷூட்டிங்கை முடித்துவிட்டு சென்னை வந்தோம். ஸ்டண்ட் யூனியனில் இருந்து தரப்பட்டிருந்த சம்பள பில்லைப்

பார்த்தேன்.

ஒரு சிலம்பச் சண்டை, ஒரு தீப்பந்தச் சண்டை என இரண்டு சண்டைக் காட்சிகள் மட்டுமே எடுத்திருந்தோம். ஆனால் 'இரண்டரை சண்டைக் காட்சிகள்' எனக் குறிப்பிட்டு பில் போட்டிருந்தார்கள்.

"ரெண்டு ஸ்டண்ட் ஸீன்தானே எடுத்தோம். இரண்டரை ஸ்டண்ட்னு போட்டு பில் கொடுத்தா எப்படித் தர்றது?" என பணம் வாங்க வந்திருந்தவரிடம் கேட்டேன்.

"ரெண்டு பைட்தான் எடுத்தீங்க. ஷூட்டிங் முடிஞ்சதும் அவங்களை திருப்பி அனுப்பாம... தங்க வச்சு கறி விருந்து போட்டீங்களே..."

"அதுக்கு?"

"எங்க சங்க ரூல்ஸ் பிரகாரம்... திட்டமிட்டதுக்குமேல ஆட்களை தங்கவச்சா அதுக்குரிய சம்பளமும் கொடுக்க ணும்."

"என்னப்பா இது? எண்ணெய்க் குளியல் போட வச்சு, கறிச்சோறு போட்டேன். அதுக்கு அபராதமா?"

"உங்கள யார் சார் கறிச்சோறு போடச் சொன்னது? ரூல்ஸ் படி வெயிட்டிங் சார்ஜ் குடுத்தே ஆகணும்" என்றார் யூனியன் ஆள். உடனே நான் ஸ்டண்ட் யூனியன் தலைவர் தர்மலிங்கத்தை வரவழைத்தேன்.

"தர்மலிங்கம்... உங்கபேருக்கு ஏத்தமாதிரி... தர்மத்தை மனசுல வச்சு சொல்லுங்க. டைரக்டருக்குப் பயந்து ரெண்டு நாளா கறி திங்காம இருந்தாங்களேனு இரக்கப் பட்டதுக்கு தண்டனையா? இது நியாயமா?" எனக் கேட்டேன்.

"அண்ணே... பில் போட்ட ஆளுங்க புதுசு. அதான் ரூல்ஸ்படி வெயிட்டிங் சார்ஜ் சேர்த்துப் போட்டுட்டாங்க. அதுக்காக நான் ஸாரி கேட்டுக்கிறேன். நீங்க ரெண்டு ஃபைட்டுக்கான சம்பளம் குடுங்க போதும்" என்றார்.

"தவற உணர்ந்திட்டீங்கள்ல அதுபோதும். தொழி லாளிக்கு அரை நாள் கூலி சேர்த்துக் கொடுக்கிறதால நான் குறைஞ்சுப் போயிடமாட்டேன்" என பில்லில் குறிப்பிட்ட தொகையையே கொடுத்தனுப்பினேன்.

சிலுக்கு ஸ்மிதா அப்போது அப் கம்மிங்கில் இருந்தார். அதனால் "ஒரே ஒரு பாட்டுக்கு ஆட... சிலுக்குவைப் புக் பண்ணுங்க" என்றார்

ஃபைனான்ஸியர். அதற்கு ஒப்புக்கொண்டு சிலுக்குவின் வீட்டிற்குப் போனேன்.

''உங்க படத்துல நான் ஆடுறேன். ஆனா ஒரு கண்டிஷன். கண்டிஷன்னு கூட சொல்ல முடியாது. ரெக்வெஸ்ட்தான்'' என்றார் சிலுக்கு.

'என்னம்மா' என்றேன்.

''எனக்கு சேலையை காஸ்ட்யூமா கொடுக்காதீங்க. ஜெய மாலினி போடுற மாதிரி மேல ஒரு பீசும், கீழ ஒரு பீசும் குடுங்க. இதைத்தான் ஜனங்க விரும்புறாங்க' என்றார்.''

''சரிம்மா'' எனச் சொல்லிவிட்டு வந்தேன்.

கதையை மீண்டும் மீண்டும் விவாதம் பண்ணியதில் வித்தியாசமான ஒரு ஸீன் கிடைத்தது.

மரக்காணம் பீச்சுக்கு சுற்றுலா வந்த ஒரு வெள்ளைக்கார தம்பதி பீச்சில் மடக்கு டேபிளை விரித்து அதில் பிரியாணி, முழுக்கோழியை விரித்து வைத்து சாப்பிடுவார்கள். அப்போது அவர்களின் கைடு 'இங்கவச்சுஅசைவம் சாப்பிடாதீங்க. ஒரு பொண்ணோட ஆவி இங்க சுத்திக்கி ட்டிருக்கு. அந்த ஆவி உங்களைப் பிடிச்சுக்கும்' என்பான்.

'டோண்ட் கேர்' எனச் சொல்லிவிட்டு சாப்பிட ஆரம் பிப்பார்கள். ஆவி வெள்ளைக்காரிக்குள் புகுந்துவிடும். வெள்ளைக்காரி சாப்பிட வாய் திறக்க... முழுக்கோழியும் அவள் வாய்க்குள் போகும். அவளின் கணவன் மிரண்டு ஓட... ஆவி பிடித்த வெள்ளைக்காரி ''நான்தாண்டா தமிழ்ப் பொண்ணு'' என பாட்டுப்பாடி ஆடுவாள்.

பாண்டிச்சேரிக்கு சுற்றுலா வந்த ஒரு பிரெஞ்ச் தம்பதியை அணுகி இதில் நடிக்க வைத்தோம். பிரபு தேவாவின் அப்பா சுந்தரம் மாஸ்டர் டான்ஸ் அமைக்க, அந்தப் பெண் பிரமாதமாக ஆடினாள். பாட்டுக்கேற்ப வாயசைக்க வரவில்லை. அதனால் ''ஒன் டூ த்ரி'யை சொல்லிக்கொண்டே இருக்கச் சொல்லி பாடலை படமாக்கினோம். வழக்கத்துக்கு மாறாக, அதே சமயம் கிளாமருடன், நகைச்சுவை கலந்து இந்த பாடல் காட்சி அமைந்ததால் 'புதிய தோரணங்கள்' படத்தில் சிலுக்கு ஆடுவதற்கு தேவை ஏற்படவில்லை. அந்த வெள்ளைக்காரியின் 'தமிழ்ப் பொண்ணு' பாட்டுக்காகவே பல ஊர்களில் ரசிகர்கள் இரண்டாம் முறையாக இந்தப் படத்தைப் பார்த்தனர்.

மிரள வைத்த பேய்க்குதிரை...

# பேய்க்குதிரையின் அட்டகாசம்!

மேட்டுப்பாளையம் பவானி ஆறு நெல்லித் துறையில் 'தீர்த்தக்கர மாரியம்மா', ''ஓடக்கர மண்ணெடுத்து...' பாடல் காட்சி களை அற்புதமாகப் படமாக்கினார் கர்ணன்.
ஆற்றின் அக்கரை கிராமத்தில் மாட்டுக்கு லாடம் கட்டுபவனாக சரத்பாபு. இக்கரையில் கல்யாண விசேஷங் களுக்கு குதிரையை வாடகைக்கு விடுபவளாக மாதவி. இரு ஊருக்கும் நீண்டநாள் பகை. ஊர்ப்பகையை பொருட்படுத்தாமல் இருவரும் காதலிக்கிறார்கள். இந்த காதலை எதிர்க்கிறான் இக்கரை வில்லன் மைனர். எதிர்ப்பை அலட்சியப்படுத்துகிறாள். விடிந்தால் அக்கரையில் திருமணம். இக்கரையில் தன் வீட்டில் மணப்பெண் அலங்காரத்தில் மாதவி இருக்க... கற்பழிக்க முயலுகிறான் மைனர். இதில் தப்பி ஒவ்வொரு வீடாக கதவைத்தட்டி அடைக்கலம் கேட்க... வில்லனுக்குப் பயந்து கதவடைத்துக் கொள்கிறார்கள் மக்கள். மைனர் துரத்த... அவள் ஓடி மலைமீது ஏறுகிறாள். மைனரும் துரத்திவர... அதற்குமேல் பாதையில்லை. அதனால் அங்கிருந்து குதிக்கிறாள். ஒரு மரத்தின் மீது விழுந்து உயிர் துறக்கிறாள்.

அவள் உயிர்விட்ட இடத்தில் சோகமாக நிற்கிறது அவள் வளர்த்த குதிரை ராணி. அப்போது மாதவியின் ஆவி ''ராணி நீ கவலைப்படாதே... எனக்கு ஒரு நல்ல காரியம் நடக்கவிடாமல் மைனர் கெடுதல் செய்தான். அவனுக்கு இந்த ஊரே ஆதரவு. இனி இந்த ஊரில் எந்த நல்ல காரியம் நடந்தாலும்... நான் உனக்குள் புகுந்து நல்லது நடக்கும் வீட்டை நாசம் செய்வேன்'' என்கிறது ஆவி.



அதன்படி ஊரில் மங்களமேளச் சத்தம் கேட்க... அந்தச் சத்தம் மலையில் கேட்டதும் அவள் இறந்த மரக்கிளை ஆடுகிறது. ஆவி கிளம்பி குதிரைக்குள் புகுந்துவிடுகிறது. இப்போது அது பேய்க்குதிரை. காற்றாக பறந்து ஊருக்குள் வந்த குதிரை கல்யாணவீட்டை துவம்சம் செய்துவிட்டு மலைக்குத் திரும்பி ஒரு குகைக்குள் நுழைகிறது. குதிரையைப் பிடிக்க வந்த ஊர்மக்களின் கண்களில் அது சிக்கவில்லை.



'மைனருக்குப் பயந்து அநியாயத்துக்கு துணை போன நம்மை அந்த ஆவி இனி வாழவிடாது' என முடிவெடுத்த மக்கள் ஊரைவிட்டு பொருட்களுடன் வண்டிகட்டி வெளியேற... அக்கரை ஹீரோ இங்கே வந்து அந்த மக்களை தடுக்கிறான்.

"நீங்க போக வேண்டாம். ஆவியா இருக்கும் அவள் என்னை நேசித்தவள். நான் சொன்னா அவள் கட்டுப் படுவா" என நம்பிக்கை சொல்ல... மக்கள் வீடு திரும்புகிறார்கள். பேய் புகாமல் இருந்த நேரத்தில் குதிரையைப் பிடித்துவந்து துர்க்கையம்மன் கோயிலில் கட்டிய ஹீரோ, தன் தலைமையில் ஒரு திருமணத்தையும் நடத்துகிறான். மேளச் சத்தம் கேட்டு குதிரையைத் தேடிவந்த ஆவி, கோயிலுக்குள் நுழைய முடியவில்லை.

ஊருக்கு வெளியே அய்யனார் கோயிலுக்காக 20 அடி உயர மண் குதிரையை ஒரு சிற்பி செய்து முடித்து வர்ணம் பூசிக்கொண்டிருக்க... ஆவி அந்த குதிரைக்குள் புகுந்து வானில் பறக்கிறது. மரங்களைச் சாய்க்கிறது. அதன் மூக்கிலிருந்து தீ கிளம்பி ஊரை பற்றவைக்க முயலுகிறது. ஹீரோ அந்தக் குதிரைமீது ஏறி அடக்கியபடி... "ஒருவன் உனக்குச் செய்த துரோகத்திற்கு அப்பாவி மக்களை பழிவாங்குவது என்ன நியாயம்? வேண்டுமானால் என் உயிரையும் எடு" என்கிறான்.

ஆவி நிதானிக்கிறது. "நீ ஒருத்தி மட்டும் பெண்ணல்ல... இந்த ஊரில் எத்தனை பெண்கள் இருக்கிறார்கள். 'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்பார்கள். அந்த நியதி உன்னிடம் இல்லையா?" என ஹீரோ கேட்க... மனம் மாறிய ஆவி மன்னிப்புக் கேட்டு மறைகிறது.

இதுதான் 'புதிய தோரணங்கள்' படத்தின் கதை.

நான் ஏற்கனவே சொன்ன வெள்ளைக்குதிரை சென்ட்டி மெண்ட்டை இங்கே நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

'ஹரிதாஸ்' படத்தின் முதல் காட்சியிலேயே தியாகராஜ பாகவதர் மாசு மருவற்ற வெள்ளைக்குதிரையில் ஏறி பாடியபடி வருவார். அந்தப் படம் பாகவதரின் உச்சகட்ட புகழுக்கு காரணமாக அமைந்தது. இருப்பினும் அந்தப் படம் வந்த பிறகுதான்... லட்சுமிகாந்தன் கொலை வழக்கு உள்ளிட்ட சங்கடங்களை பாகவதர் சந்திக்க நேர்ந்தது. "வெள்ளைக்குதிரை என்பது கிராமப்புறங்களில் முனி உள்ளிட்ட காவல் தெய்வங்கள் ஏறிவரும் வாகனம். அதில் பாகவதர் வந்ததால்தான் அவருக்கு இத்தனை கஷ்டம்"

என எங்கள் ஊரில் நான் இருந்தபோது மக்கள் பேசிக்கொண்டது என் நினைவுக்கு வந்தது.

'புதிய தோரணங்கள்' படத்தின் முதல் காட்சியி லேயே மாதவி வெள்ளைக்குதிரையில் வருவதுபோல் எடுக்கவேண்டி வந்தது. எங்கள் ஊர் என்னை பயமுறுத்தியிருந்ததால் வெள்ளைக் குதிரை சென்ட்டி மெண்ட்டை நினைத்து தயங்கி, டைரக்டர் கர்ணனிடம் சொன்னேன். 'அதெல்லாம் விடுங்க' என கர்ணன் வெள்ளைக்குதிரையில் மாதவி ஏறிவரும் காட்சியை திட்டமிட்டபடி எடுத்தார். வெள்ளைக்குதிரை சென்ட்டிமெண்ட் மாதவியை எதுவும் செய்யவில்லை. எங்களையும் எதுவும் செய்யவில்லை.

21-03-1980ல் வெளியான 'புதிய தோரணங்கள்' படம் சென்னை சிட்டியைத் தவிர தமிழகம் முழுக்க நீண்ட நாட்கள் ஓடி நல்ல வருவாயைப் பெற்றுத் தந்தது. இந்த வெற்றிக்குக் காரணம்... விட்டலாச்சார்யா பாணியை கர்ணன் பாணியில் கலந்து சொன்னவிதம் ரசிகர்களுக்குப் பிடித்திருந்தது. அதிலும் பேய்க்குதிரையின் அட்டகாசத்தை மிரட்சியுடன் ரசித்தார்கள் ரசிகர்கள். பாலுக்கு அழும் பச்சிளம் குழந்தையின் பசி தீர்க்க, ஆவி ஒரு ஆட்டுக்குள் புகுந்து மடுவால் குழந்தைக்குப் பாலூட்டும். இந்தக் காட்சி பெண்களை ரொம்பவும் வசீகரித்தது என்றே சொல்லலாம்.

3-ஏ போயஸ் ரோடு, தேனாம்பேட்டை முகவரி கொண்ட வீடு, மற்றும் அலுவலகத்தில் இருந்தபடியே 'பைரவி', 'செல்லக் கிளி' படங்களைத் தயாரித்து வெளியிட்டேன். 'புதிய தோரணங்கள்' படத்தையும் இங்கிருந்து தயாரித்துக் கொண்டிருந்தேன். இட நெருக்கடியாக இருந்ததால்... "வீட்டிற்கும், அலுவலகத்திற்கும் சேர்த்து வேறு ஒரு பெரிய இடம் பார்த்துச் சொல்லுங்கள்" என்று வீட்டு புரோக்கரிடம் சொன்னேன்.

"17, முரேஸ்கேட் ரோடு, ஆழ்வார்பேட்டை முகவரியில், கமலஹாசனின் வீட்டுக்குப் பின்புறம் ஒரு வீடு இருக்கு. கீழே ஹவுஸ் ஓனரம்மா இருக்கிறார். மேலே மாடியில் வாடகைக்கு வீடு இருக்கு. நல்ல ஆளா இருந்தா கூட்டிட்டுவானு நேத்துதான் அந்தம்மா சொன்னாங்க. அந்தம்மா யாருனு தெரிஞ்சா... உங்களுக்கு வியப்பாக இருக்கும். வீட்டைப் போய் பார்க்கலாமா?" எனக் கேட்டார் புரோக்கர்.

உடனே நானும், புரோக்கரும் அந்த வீட்டுக்குப் போனோம். வீட்டின் முகப்பு முழுக்க இரும்பு கம்பிகளால் அடைக்கப்பட்டு ஒரு பெரிய

ஜன்னல் போல இருந்தது.

புரோக்கர் அழைப்பு மணியை அழுத்தியதும் அந்த அம்மா கதவைத் திறந்துகொண்டு வந்தார்கள். கேட்டைத் திறக்காமல் உள்ளே இருந்தபடி பார்த்தார். அந்தம்மாவைப் பார்த்ததும் எனக்கு வியப்பு.

கைகூப்பி வணக்கம் தெரிவித்தேன். அந்தம்மாவிடம் என்னைப் பற்றிய விபரங்களை கேட்டுக்கு வெளியே இருந்தபடியே தெரிவித்தேன். என்னை ஏற இறங்கப் பார்த்த அந்தம்மா 'நாளைக்கி இதே நேரத்துக்கு வா' என்றார்.

மறுநாள் அதே நேரத்திற்கு நான் மட்டும் சென்றேன். இப்போதும் அந்த அம்மா கதவைத் திறக்கவில்லை. கம்பிக் கிராதிக்கு உள்ளிருந்தபடியே என்னைப்பற்றி மேலும் சில விபரங்களைக் கேட்டவர், 'நாளைக்கு இதே நேரத்துக்கு வாயேன்' என்றார்.

'சரிங்கம்மா...' எனச் சொல்லிவிட்டு வந்தேன்.

"எதற்காக இப்படி தினம் தினம் வரச்சொல்லிவிட்டு 'மறுநாள் வா' என்கிறார்?' என எனக்கு குழப்பம். ஆனாலும் ஏதோ ஒரு ஆர்வம். அதனால் அவர் சொல்கிறபோதெல்லாம் விடாமல் நானும் சென்றேன். நான்காவது நாள்...

கேட்டைத் திறந்து "உள்ளே வந்து உட்காரு" என்றார்.

அந்தம்மா.... சங்கீத மேதை கே.பி.சுந்தராம்பாள்.

# கே.பி.சுந்தராம்பாள் வாழ்க்கை!

"கேட்டைத் திறந்து 'உள்ள வந்து உட்காரு' என்றார் 'சங்கீத மேதை' கே.பி.சுந்தராம்பாள்.

அவரின் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு கைகட்டி அமர்ந்தேன். மலர்ந்த முகத்துடன் என்னைப் பார்த்தவர் "ஞானம்... நீ வார்த்தைக்கு வார்த்தை முடியும்போது 'முருகா'னு சொல்றது எனக்குப் பிடிச்சிருக்குப்பா. தவறாம நெத்தியில் குங்குமம் வச்சுக்கிட்டு குமரிப் பெண்ணாட்டம் நீ குலுங்கிச் சிரிப்பது ரொம்பவும் பிடித்துவிட்டது'' எனச் சொல்லிவிட்டு சிரித்தவர்...

"இப்போ நான் உங்கிட்ட முக்கியமான விஷயங்கள்லாம் சொல்றேம்ப்பா. நீ என் வீட்டு மாடியில வந்து குடியேறிக்க. ஒரு நானூரு ரூபா வாடகை குடு போதும். நீ எப்படி எதற்கெடுத்தாலும் என்னை 'அம்மா... அம்மா'னு சொல்றியோ அதேபோல உன்னை நான் இனிமே 'மகனே'னுதான் கூப்பிடுவேன். உன்னைப் பத்திய எல்லா விபரங்களையும் புரோக்கர் சொன்னான். அவனும் உன் ஜாதிக்காரனாம். அவனும் நாணயமான புரோக்கர்தான். இப்போ நீ எழுத்தாளன், தயாரிப்பாளர் என்கிறதைவிட... இந்த அம்மாவுக்கு நீ காவல்காரனாக இருக்கணும்'' என்றார்.

'நான் இந்தம்மாவை பாதுகாக்கணுமா' என வியப்பும் திகைப்புமாக அவரைப் பார்த்தேன்.



"ஆமாப்பா... என்னை நீ பாதுகாக்கணும். என்ன காரணம்னு அம்மா சொல்றேன்... கவனமா கேட்டுக்க. என்னோட வாழ்க்கை வரலாறை இந்த

வீட்டுக்கு நீ குடிவந்த பிறகு முழுசா சொல்றேன். அதுக்கு முன்னாடி... நான் எப்பவுமே சுத்தி இரும்புச் ஜன்னல் போட்டு, கேட்டைப் பூட்டீட்டு பாதுகாப்பா உள்ள இருக்கிறதுக்கான காரணத்தை சொல்லீர்றேன். என்னோட உறவினர்களுக்கும், எனக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு 'என் முகத்திலேயே யாரும் விழிக்கக் கூடாது'னு நான்தான் சொல்லீட்டேன். அது கசப்பா ஆயிருச்சு. அதனால் உறவினர்கள் கோபத்தில் ஏதேதோ பேசிக்கிட்டு இருக்காங்க. என்னோட சொந்த ஊரான கொடுமுடியில் இருந்து வந்த சிலர்... 'அம்மா உங்களுக்கு எதிரா ஒரு சதித்திட்டம் நடக்குது. ஜாக்கிரதையா இருங்க'னு சொல்லீட்டுப் போனாங்க. இவ்வளவு பெரிய வீட்டில் நான் தனியா இருக்கேன். ஏதாவது அசம்பாவிதம் நடந்தா நான் என்ன செய்ய முடியும்? அதனால... என் வீட்டு முன்னாடி சந்தேகப்படுற மாதிரி யாராவது வந்தா... நான் இங்கயிருந்தபடி பெல் அடிச்சு சிக்னல் குடுப்பேன். பெல் சத்தம் கேட்டதும் நீ ஓடிவந்து 'என்ன? ஏது?'னு கேட்கணும்... பார்க்கணும். இதுதான் எனக்கு நீ செய்ய வேண்டிய முதல் உதவி. ரெண்டாவது உதவி என்ன?னு சொல்லட்டுமா?"

"சொல்லுங்கம்மா"

"நான் மத்தியானம் ஒருவேளை மட்டும்தான் சாப்பிடு வேன். நான் சொல்ற ஓட்டல்ல இருந்து சைவ சாப்பாடு எடுத்துக் குடுக்கணும். இது ரெண்டையும் உன்னால செய்ய முடியுமா?"

"அம்மா... உங்கள பாதுகாக்குறதுக்கு ஆள் பஞ்சமே இல்ல. என்கிட்ட ஒரு பட்டாளமே இருக்கு. உங்களுக்கான மதியச் சாப்பாடை நீங்க சொல்ற ஓட்டல்ல இருந்து எடுத்துக் கொடுக்கிறதைவிட... நீங்க விரும்புறபடியே, உங்க ருசிக்கு ஏற்ப என் மனைவியை சமைக்கச் சொல்லி கொடுக்கச் சொல்றேன். ஓட்டல்ல சாப்பிட்டு ஏன் வயித்தக் கெடுத்துக்குறீங்க?"

ஒருகணம் என்னையே பார்த்த அம்மா... "சரி, நீ சொல்றபடியே ஆகட்டும். அதையும்தான் பார்ப்போமே. ஆனா ஒரு கண்டிஷன்... காலைல காபியைத் தவிர வேறெதுவும் சாப்பிடமாட்டேன். அதனால் சரியா பகல் 12 மணிக்கெல்லாம் என் வீட்டுக்குள்ள சாப்பாடு வந்திடணும். என்னால பசி பொறுக்க முடியாது. நேரத்துக்கு சாப்பாடு கொடுக்க உன்னோட மனைவியால முடியுமா?"

"நிச்சயமா முடியும்மா"

"சரிப்பா... வீட்டுக்கு குடி வர்றதுக்கான வேலையைப் பாரு" என்று சொல்லி என்னை அனுப்பி வைத்தார்.

அடுத்த ஓரிரு நாட்களிலேயே கே.பி.எஸ்.அம்மாவின் வீட்டு மாடியில் குடியேறினேன். குடியேறிய சில தினங் களில்... நான் மாடிப்படி ஏறிக்கொண்டிருந்தபோது... அம்மாவின் தாய்மாமாவுடைய வீட்டில் சம்பந்தம் பண்ணியிருந்த ஒருவர் எனக்கு வணக்கம் வைத்து சுய அறிமுகம் செய்துகொண்டார்.

"நீங்கதான் இந்த வீட்டுக்கு குடி வந்திருக்கீங்கனு தெரிஞ்சு தான் உங்களைப் பார்க்க வந்தேன். எங்களோட சார்பிலயும் சேர்த்து அம்மாவ நீங்க நல்லபடியா கவனிச்சுக்கணும்" என்றார்.

"தப்பா நினைக்காதீங்க. அம்மாவுக்கு சொந்தபந்தங்க நிறைய இருக்காங்கனு கேள்விப்பட்டேன். அப்படி யிருந்தும் ஏன் இப்படி தனிமையில் அம்மா கதவைப் பூட்டிக்கிட்டு வாழ்றாங்க?"

"ஒண்ணுமில்லீங்க. எங்க குடும்பத்துல சின்ன கருத்து வேறுபாடு. அதை அம்மா ரொம்ப சீரியசா எடுத்துக்கிட் டாங்க. அம்மாவோட தாய்மாமன், பிள்ளைங்க, அம்மாவோட தம்பி கனகசபாபதி, அவரோட பிள்ளைங்க... எல்லாரும் அம்மாவ தெய்வமாத்தான் நினைக்கிறாங்க. 'யாரு வச்ச தீயோ... வீடு வெந்துபோச்சு'ங்கிற மாதிரி எங்க குடும்பத்துல இப்படி ஒரு குழப்பம். எது எப்படியோ... நாங்கள்லாம் ஒண்ணு சேர்ற நாளை எதிர்பார்த்து தெய்வத்தை வேண்டிக்கிட்டிருக்கோம்" என்றார்.

"நீங்க ஒண்ணு சேர்றீங்களோ... இல்லையோ...? கண்டிப்பா உங்களையெல்லாம் ஒண்ணு சேர்க்க நான் முயற்சி எடுப்பேன்" என அவருக்கு நம்பிக்கையூட்டி அனுப்பினேன்.

ரோட்டில் கிராஸ் பண்ணுகிற யாராவது தற்செயலாக கே.பி.எஸ்.அம்மாவின் வீட்டைப் பார்த்தாலும் உடனே பெல் கொடுத்துவிடுவார் அம்மா. பதறியடித்து ஓடிவந்து விசாரிப்பேன். நான் வீட்டில் இல்லாதபோது பெல் சத்தம் கேட்டால் என் மனைவியோ, பிள்ளைகளோ ஓடிவந்து விசாரிப்பார்கள்.

எனது நான்காவது தயாரிப்பான 'எதிர்வீட்டு ஜன்னல்' படத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். நானே கதை எழுதி படத்தை இயக்கவும் முடிவு செய்தேன். என் நண்பர் வெங்கட்ராம அய்யர் குறித்தும், அவர் செய்த உதவிகள் குறித்தும் ஏற்கனவே நான் பலமுறை

சொல்லியிருக்கிறேன். அந்த நண்பரை கௌரவப் படுத்தும் விதமாக அவர் பெயரிலேயே தயாரிக்க முடிவு செய்தேன்.

அந்தச்சமயம்... பாடலாசிரியர் ஆலங்குடி சோமு கை, கால் சரியாக வராமல் வீட்டில் இருப்பதாக கேள்விப்பட்டேன். ஒரு காரையும், துணைக்கு ஒரு ஆளையும் அனுப்பி அவரை வரவழைத்து சங்கர்-கணேஷ் இசையில் ஒரு பாடல் எழுத வைத்து அதற்குரிய சன்மானத்தையும் கொடுத்தனுப்பினேன். மற்ற பாடல்களை கண்ணதாசன் எழுதினார்.

சுதாகர், ராதிகா ஜோடி. சுருளிராஜன், மனோரமாவுடன் மிக முக்கிய வேடத்தில் காஜா ஷெரிப் ஆகியோருடன் நாகராஜ சோழனை வில்லனாக அறிமுகம் செய்தேன். இது மலைப்பகுதியில் முக்கியமான சம்பவங்கள் நடக்கும் கதை என்பதால் சேலம் ஏற்காடு மலையில் ஷூட்டிங் நடத்த ஏற்பாடானது.

கே.பி.எஸ்.அம்மாவின் கால்களில் விழுந்தேன். "அம்மா... முதன்முதலா நான் டைரக்ஷன் பண்ணப்போறேன். என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க" என்றேன்.

"நல்லபடியா ஜெயிப்படா மகனே. நீ படத்த முடிச்சிட்டு வா. என்னைப் பத்தி இன்னும் ஏகப்பட்ட விஷயங்கள் உங்கிட்ட சொல்லவேண்டியிருக்கு" என ஆசிர்வதித்தார்.

சேலம் துவாரகா ஹோட்டலில் தங்கி ஏற்காடு போய் ஷூட்டிங் நடத்திக்கொண்டிந்தோம்.

ஒரு நாள்... ஏற்காடு செல்வதற்காக ஹோட்டலைவிட்டு கிளம்பி வெளியே வந்தோம். எதிரே... எம்.ஜி.ஆர். உடன் க.ராஜாராம். கேட்டுக்கு வெளியே ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள்.

1980-ல் எம்.ஜி.ஆரின் அரசை மத்திய அரசு டிஸ்மிஸ் செய்துவிட்டது. இதையடுத்து நடந்த சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்திற்காகத்தான் எம்.ஜி.ஆர். சேலம் வந்திருக்கிறார். இந்த ஹோட்டலில்தான் எம்.ஜி.ஆருக்கு டபுள் சூட் ரூம் போடப்பட்டிருக்கிறது.

எங்களை நோக்கி எம்.ஜி.ஆர். வருவதைப் பார்த்து நாங்கள் வரிசையாக நின்றோம்.

"எங்கே போறீங்க?" என்றார் எம்.ஜி.ஆர்.

"ஏற்காட்டுல ஷூட்டிங். அதுக்குத்தான் கிளம்புறோம்" என்றோம் கோரஸாய்.

உடனே க.ராஜாராமை அருகே அழைத்த எம்.ஜி.ஆர்... "இன்னிக்கி நான் எங்க ஆளுங்களோட (சினிமாக் காரர்கள்) கலந்துரையாடப் போறேன். இந்தப் பக்கம் யாரையும் விடாதீங்க" என்றார்.

உடனே ராஜாராம் கேட் அருகே போய் நின்று கொண்டார்.

"இன்னிக்கி ஷூட்டிங்கை கேன்ஸல் பண்ணுங்க. எல்லாரும் என் ரூமிற்கு வாங்க" எனச் சொல்லிவிட்டு எம்.ஜி.ஆர். போக... நாங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி அவரின் பின்னாலேயே சென்றோம்.

# எம்.ஜி.ஆர். செய்த பயிற்சி!

சேலம் துவாரகா ஓட்டலிலிருந்து 'எதிர்வீட்டு ஜன்னல்' படப்பிடிப்பிற்காக ஏற்காடு கிளம்பிக் கொண்டிருந்த நேரத்தில், "ஷூட்டிங்கை கேன்ஸல் பண்ணீட்டு என் ரூமிற்கு எல்லாரும் வாங்க" என எம்.ஜி.ஆர். சொல்ல.... அவரின் அறைக்குச் சென்றோம்.
முதலில் ராதிகாவிடம் குடும்ப நலன் விசாரித்துவிட்டு, ராதிகா நடித்துவரும் படங்கள் பற்றி விசாரித்த எம்.ஜி.ஆர். அடுத்து, சுதாகரிடம் விசாரித்தார். இந்தப் படத்தில் கேரளாவைச் சேர்ந்த ஒரு இளம்பெண்ணை செகண்ட் ஹீரோயினாக அறிமுகப்படுத்தினோம்.

அந்தப் பெண்ணிடம் "படத்தில் உனக்கு என்ன கேரக் டர்?" என எம்.ஜி.ஆர். கேட்க... "செகண்ட் ஹீரோயின் சேட்டா" என மலையாளத்தில் பதில் சொன்னார்.

"உனக்குத் தமிழ் தெரியும்ல" என எம்.ஜி.ஆர் அதட்ட லாகக் கேட்க... "தெரியும்" என்றார் அந்தப் பெண்.

"சரி... நீங்கள்லாம் கிளம்புங்க" என்ற எம்.ஜி.ஆர் என்னை யும், நாகராஜசோழனையும், 'ஜூபிடர் பிக்ஸர்ஸ்' ஆறுமுகத் தையும் இருக்கச் சொன்னார்.

நாகராஜசோழன் புதுமுக நடிகர் என்றாலும் அவர் பாடிபில்டர். உடற்கட்டை பேணிக்காப்பதில் எம்.ஜி.ஆர். சிறந்தவர். தன்னைப்போல் உடற்கட்டைப் பேணுபவர்களைக் கண்டால் அவருக்கு ரொம்பப் பிடிக்கும். அப்படித்தான் நாகராஜசோழனைப் பிடித்துப் போனது.



"நீங்க ரெகுலரா எக்ஸர்ப்ஸஸ் பண்றீங்களா?" என கேட்க... எம்.ஜி.ஆரைப் பார்த்த பதட்டத்தில் நடுக்கத்துடன் தலையாட்டினார்.

நாகராஜனின் நெஞ்சில் ஒரு குத்து விட்டு "ஸ்டெடியா நில்லுங்க. எக்ஸர்ஸைஸ் பண்ணிக்காட்டுங்க" என்றார்.



'தத்தக்காபித்தக்கா' என பதட்டத்துடன் பண்ணிக் காட்டினார். இதைப் பார்த்த எம்.ஜி.ஆர். "எப்படியெல் லாம் எஸ்ஸர்ஸைஸ் பண்ணணும்" என சுமார் அரை மணிநேரம் செய்துகாட்டினார்.

பிறகு, அவரை அனுப்பிவிட்டு என்னை விசாரித்தார்... "உங்களைப் பத்திய விபரம் சொல்லுங்க" என்றார்.

"அண்ணே... இப்ப நான் மூணாவது முறையா உங்களைச் சந்திக்கிறேன்ணே. சமரசம் உலாவுற மயானத்துல முதல்ல உங்களை சந்திச்சேன். கவி.கேபி.காமாட்சி சுந்தரம் மரணத்தின் போது அவரோட உடலை சுமந்து வந்தீங்க. 'காமாட்சி அண்ணன் கடன் எதுவும் வச்சிருக்காரா?'னு என்கிட்ட விசாரிச்சு... கடனை அடைக்க ஏற்பாடு பண்ணினீங்க. அப்புறமா... மைசூர்ல 'பல்லாண்டு வாழ்க' படப்பிடிப்பில் இருந்த உங்களிடம் 'கொடுத்துச் சிவந்த கரம்'னு ஒரு கதை சொல்ல

வந்தேன். (இந்த இரு சம்பவங்கள் குறித்தும் நான் ஏற்கனவே விரிவாக எழுதியிருக்கிறேன்) இப்போ மூணாவது முறையா சந்திக் கிறேண்ணே'' என்றேன்.

அதை புன்னகையுடன் வரவேற்றவர், ''இப்போ என்ன செய்றீங்க?'' என்றார்.

''அண்ணே... 'எதிர்வீட்டு ஜன்னல்' படத்தை கதை எழுதி, தயாரித்து நானே இயக்குகிறேன்.''

''கதையைச் சொல்ல முடியுமா?''

''சொல்றண்ணே...''

ஒரு கிராமத்து கோயில் வாசலில் பனைஓலைப் பொருட்கள் செய்துவிற்கும் பெண் ருக்மணி (ராதிகா). ஆண்கள் பிரியமாகப் பேசினாலும் அவர்கள் தப்பான ஆசையுடன் அசடு வழிபவர்கள் என்கிற எண்ணத்தால் ஆண்களிடம் மிகக் கண்டிப்பாக இருப்பாள். இந்த குணாதிசயத்திற்காகவே அவளை எஸ்டேட் மேனேஜர் (சுதாகர்) காதலிப்பான். அவன் பந்தாவாக காரில் வலம் வருவதும், அவளுக்கு 'ஹாய்' சொல்வதும் அவளுக்குப் பிடிக்காது. 'நான் உன்னை சின்ஸியரா லவ் பண்றேன்' என்பான். 'பணக்காரனை நான் நம்புறதில்லை. ஆசைக்கு லவ் பண்ணீட்டு... அம்போனு விட்டுட்டுப் போயிடுவீங்க' என்பாள். இந்த வார்த்தையால் சண்டை உருவாக... 'கால்ல இருக்கிறத கழட்டி அடிப்பேன்' என்பாள். இதனால் அவமானமான அவன், 'உன்னை அடையாம விடமாட்டேன்'னு தனக்குள்ளயே சபதம் போடுவான்.

மூக்கு வளையம் மாட்டி, தலைக்கு விக் வைத்து பக்கா கிராமத்தானாக மாறி... அவளுடைய வீட்டுக்கு எதிரே இருக்கும் மனோரமா வீட்டில் வந்து தங்குவான். மனோரமாவிடம் 'ருக்குவின் காதலைப் பெறத்தான் இப்படி வேஷம். இதுக்கு உதவணும்' எனச் சொல்லி விடுவான்.

அடிக்கடி மனோரமா வீட்டுக்கு வரும் ருக்கு, அவனைப் பார்த்து விசாரிப்பாள். மனோரமாவும் 'தூரத்து உறவு... அத்தை மகன் தங்கராசு' என அறிமுகம் செய்துவைக்க... கூச்சமும், வெட்கமுமாக நெளியும் அவனுடைய இன்னோ செண்ட் ருக்குவுக்கு பிடித்துவிடும். தங்கள் வீட்டு ஜன்னல் வழியாகவே இருவரும் சைட் அடித்து காதல் வளர்ப்பார்கள்.

ஒருநாள்... ஒரு பூந்தோட்டத்தில் சந்திப்பார்கள். இருவருக்கும் இடையே உடல் உறவு ஏற்பட்டு விடும். உறவு முடிந்ததும் தன் கிராமிய வேஷத்

தைக் கலைத்துவிட்டு 'நினைச்சபடி உன்னை அடைஞ் சிட்டேன்' என சவால் விட்டுவிட்டுப் போவான். அவனை கொலை செய்யும் வெறியோடு அவள் இருப்பாள். 'அவளை உண்மையாகவே காதலித்தோமே... அவளுக்கு துரோகம் பண்ணக்கூடாது. மன்னிப்புக் கேட்டு அவளையே திருமணம் செய்துகொள்ள வேண்டும்' என அவன் நினைப்பான்.

குருவிக்காரன் ஒருவன் வேட்டைத் துப்பாக்கியை வைத்துவிட்டு அசந்து தூங்க... அதை எடுத்துக்கொண்டு, ஏமாற்றியவனை கொலைசெய்யப் போவாள். தன் காதல் உண்மை எனச் சொல்லி துப்பாக்கியை அவன் பறிக்க முயல்வான். இந்தப் போராட்டத்தில் துப்பாக்கி எதிர்பாராதவிதமாக வெடித்து இருவருக்கும் பொதுஎதிரியான வில்லன் மீது குண்டுபட்டு இறந்து போவான்.

போலீஸ் வர.... தலைமறைவாகும் இந்த ஜோடி.

காட்டுப் பகுதியில் கேரளப்பெண் ஒருத்தி டீக்கடை நடத்துவாள். அவளுக்கு ஊமைத் தம்பி (காஜா ஷெரீப்). அவர்களிடம் இந்த ஜோடி அடைக்கலம் கேட்கும். அவளும் அவளின் தம்பியும், உணவு உள்ளிட்ட உதவிகளைச் செய்வதுடன்... 'மலையில் 200 அடி உயரத்தில் ஒரு மரம் இருக்கு. அதில் பரண் வீடு இருக்கு. ஏறிப்போக கயிற்றேணியும் இருக்கு. அங்க தங்குங்க. அதுதான் பாதுகாப்பு' என அந்தப் பெண் சொல்லுவாள். அதன்படி அங்கு சென்று அந்த அழகிய பரண் வீட்டில் தங்குவார்கள். காஜா மூலம் தாலி வாங்கி வரச்சொல்லி, காட்டு அம்மன் கோயிலில் கல்யாணம் செய்துகொண்டு பரணிலேயே குடும்பம் நடத்துவார்கள். ருக்கு கர்ப்பமடைவாள். ஒருநாள் பிரசவ வலி ஏற்படும். கிராமத்திற்குள் போய் மருத்துவச்சியை அழைத்துவரச் செல்வான். அப்போது போலீஸ் அங்கு வர... பரணுக்கே திரும்புவான். பிரசவ வலியால் அவள் கத்த... பரணுக்குக் கீழே போலீஸ் நிற்பதால் அவளின் வாய்க்குள் விரல்களை வைப்பான். வலியில் விரல்களைக் கடிப்பாள். ரத்தம் வரும். அந்த வேதனையைத் தாங்கிக் கொண்டே... மனைவிக்கு கணவனே பிரசவம் பார்ப்பான். பிறந்த குழந்தை வீறிட்டு அலற... போலீஸார் பரணை அண்ணாந்து பார்ப்பார்கள்.

கோர்ட்.

எதிர்பாராத விபத்தால் உண்டான மரணம்... என்பதாலும், வாழவேண்டிய இளம் தம்பதிகள் என்பதாலும் குறைந்த தண்டனை விதிக்கும் கோர்ட். குழந்தையை டீக்கடைப் பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டு சிறை

செல்வார்கள். தண்டனை முடிந்து திரும்ப வந்து குழந்தையை பெற்றுக்கொள்வார்கள்.

"...இதுதாண்ணே... கதை" எனச் சொன்னேன்.

"கதை நல்லாருக்கு. ஆனா... படத்துக்கு 'ஏ' சர்ட்டிபிகேட் வரும்போலிருக்கே. எல்லாரும் பார்க்கிற மாதிரியா படம் பண்ணுங்க. படம் ரெடியானதும் என் வீட்டுக்கு ஒரு பிரிண்ட் அனுப்புங்க" என்றார் எம்.ஜி.ஆர்.

ஜூபிடர் ஆறுமுகத்திற்கு எம்.ஜி.ஆருடன் நீண்டகால பழக்கம் உண்டே. "அண்ணே... இந்த எலெக்ஷன்ல ஜெயிச்சு மறுபடி சி.எம். ஆகி... பிஸியாயிடுவீங்க. எங்க படத்தைப் பார்க்க உங்களுக்கு நேரம் கிடைக்குமா?" என்றார் ஆறுமுகம்.

"கண்டிப்பா பார்ப்பேன். பிரிண்ட் அனுப்புங்க. சரி... நீங்கள்லாம் கிளம்பலாம். என்னோட சகாக்கள்லாம் காத்துக்கிட்டிருக்காங்க பாருங்க" என ஜன்னல் வழியே காட்டிவிட்டு குளிக்கச் சென்றார் எம்.ஜி.ஆர்.

பாவம் க.ராஜாராம்... சுமார் நான்குமணி நேரம் கேட்டி லேயே நின்று கூட்டத்தைக் கட்டுப்படுத்த போராடினார்.

ஹோட்டலிலிருந்து தேர்தல் பிரச்சாரத்திற்காக எம்.ஜி.ஆர் கிளம்பியபோது நாங்கள் வரிசையாக நின்று கும்பிட்டு வழியனுப்பினோம். அவ்வளவு அரசியல் நெருக்கடியான சூழலிலும் எங்களுடன் வெகு இயல்பாக எம்.ஜி.ஆர். பேசியது, கதையைக் கேட்டது எங்களுக்கு மனநிறை வைத் தந்தது.

# கம்பீர ஸ்டுடியோவின் கண்ணீர்!

'எதிர்வீட்டு ஜன்னல்' படத்திற்காக பரண் வீட்டின் உட்புற காட்சிகளை மலை மீது எடுப்பது சிரமமாக இருந்ததால், சேலம் மாடர்ன் தியேட்டர்ஸின் ஸ்டுடியோவில் செட் போட்டு படமாக்க முடிவு செய்து நானும் கேமராமேனும் அங்கு போனோம். இந்திய சினிமாவின் அடையாளங்களில் ஒன்றாக ஒரு காலத்தில் திகழ்ந்த அந்த ஸ்டுடியோவின் முகப்பில் பெயரளவுக்குக் கூட ஒரு காவலாளி இல்லை. நுழைவு வாயிலைப் பார்த்ததும்... எனக்கு பழைய நினைவுகள் வந்தன.

1949-ல் எனது 19 வயதில் நான் இங்கே வந்தபோது... மாடர்ன் தியேட்டர்ஸின் புகழையும், பரபரப்பையும் ஸ்டுடியோ முகப்பே எடுத்துச் சொன்னது. நடிக்க சான்ஸ் கேட்டுப் போன என்னை காவலாளி உள்ளே விடவில்லை. அப்போது... ஹீரோ நரசிம்ம பாரதியும், ஹீரோயின் மாதுரிதேவியும் ஜோடியாக கம்பெனி பஸ்ஸில் வந்து இறங்கினார்கள். திரை நட்சத்திரங்களை நேரில் பார்த்து பிரமித்து... அந்த மகிழ்ச்சியுடன் ஊருக்குத் திரும்பினேன்.

இப்போது 1980-ல்... ஒரு தயாரிப்பாளராக, ஒரு கதாசிரியராக... ஒரு இயக்குநராக அதே ஸ்டுடியோ விற்குள் நுழைகிறேன்.

அங்கிருந்தவரிடம் "ஸ்டுடியோவில் செட் போட்டு ஷூட்டிங் பண்ணணும். ஸ்டுடியோவுக்குப் பொறுப்பா யார் இருக்கா?" என கேட்டேன்.

"மேனேஜர் கிருஷ்ணன் இருக்கார். அவர்தான் முடிவு செய்வார்" எனச் சொல்லிவிட்டு மேனேஜருக்கு போன் செய்தார்.



"மேனேஜர் வர்ற வரைக்கும் ஸ்டுடியோவை சுத்திப் பார்க்கலாமா?"

"வாங்க" என அழைத்துச் சென்று ஒவ்வொரு இடமாக காட்டினார்.

டி.ஆர்.சுந்தரத்தின் அறை, அவர் அமர்ந்திருந்த இருக்கை களைப் பார்த்தேன்.

''எப்பேர்ப்பட்ட நடிகராக இருந்தாலும் அவர் முன்பு உட்காரமாட்டார்கள். அவ்வளவு மரியாதை. ஒரு சிங்கம்போல் கர்ஜித்தபடி நிறுவனத்தை சிறப்புடன் நடத்தினார். இந்த ஸ்டுடியோவிலிருந்து குறைந்த பட்சம் 100 கலைஞர்களாவது உருவாகியிருப்பார்கள். ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இந்த ஸ்டுடியோவை நம்பி பிழைத்தார்கள்'' என்றபடி சுற்றிக் காண்பித்தார்.

எவ்வளவு சாதனைகள் செய்த நிறுவனம் இது.

ஒருமுறை டி.ஆர்.சுந்தரம் சென்னை வந்தபோது... ''தென் னிந்திய சினிமா தயாரிப்பாளர்கள் சங்கம் உருவாக்கி அலுவலகம் அமைத்து, ஒவ்வொரு மொழி தயாரிப்பாளர் அமைப்புக்கும் ஒரு அலுவலக அறை ஏற்பாடு செய்யணும். ஆனா... போதிய பணவசதி இல்லை'' என சினிமா புள்ளிகள் சொல்ல...

''இடம் எங்கே இருக்குனு சொல்லுங்க. நானே வாங்கித் தர்றேன்'' என்றார் சுந்தரம்.

''மவுண்ட்ரோட்டுல ஒரு ஜமீந்தாருக்கு சொந்தமான இடம் இருக்கு. அவரைப் பார்த்துப் பேசினா இடத்தை வாங்கிட லாம்'' என்றார்கள்.

உடனே சுந்தரம் தலைமையில் ஜமீந்தாரை சந்தித்தார் கள். எல்லாரையும் வரவேற்ற ஜமீந்தார் 'ஒரு நல்ல தொகை கொடுத்தீங்கன்னா இடத்தை உங்களுக்கு கொடுக்குறதில் ஆட்சேபணை இல்லை' என்றார். உடனே பத்தாயிரம் ரூபாயை, தன் சொந்தப்பணத்தை எடுத்துக் கொடுத்தார் சுந்தரம்.

அந்த இடம்தான்... அதுதான்... இன்று 'ஃபிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸ்' எனப்படும் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை. இன்று பல நூறு கோடி ரூபாய் மதிப்புடன் இருக்கிறது அந்த இடம். வாடகை உள்ளிட்ட வருமானங்கள் மூலம் சேம்பருக்கு கோடிக்கணக்கில் பணம் கொட்டுகிறது.

பல நடிகர்கள், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் என பலருக்கும் வாழ்வளித்த இடம் மாடர்ன் தியேட்டர். தமிழ் சினிமா வரலாற்றில் ஒரு தாரகையாகத் திகழ்ந்தவர் டி.ஆர்.சுந்தரம். சாதனை சிகரத்தைத் தொட்டவர் அந்த மாமனிதர். நினைத்ததை முடிப்பதில் வல்லவராக இருந்த காரணத்தினால்தான் 97 படங்களை இந்த

ஸ்தாபனத்தில் திறம்பட அவரால் எடுக்க முடிந்தது. அவரின் மறைவுக்குப் பின் அவர் விட்டுச்சென்ற பணியை அவரது மூத்த மகன் ராமசுந்தரம் செய்தார். தொடர்ந்து பல வெற்றிப்படங்களை தயாரித்து வெளியிட்டார். அதில் 'வல்லவன்' வரிசைப் படங்கள் புகழ் பெற்றவை. தொடர்ந்து இருபது வருடங்களாக இயக்குநராக இருந்து மாடர்ன் தியேட்டர்ஸின் புகழைக் கட்டிக்காத்தார்.

ராமசுந்தரத்தின் மறைவுக்குப் பிறகு அவரின் மனைவியும், டி.ஆர்.சுந்தரத்தின் மருமகளுமான திருமதி.கலைவாணி சுந்தரம், மாடர்ன் தியேட்டர்ஸ் நிர்வாகத்தை திறம்பட நடத்திவருகிறார். கம்பெனியின் வருவாயை பெருக்கும் வகையில் டி.ஆர்.எஸ். கல்யாண மண்டபம் என்கிற நவீன வசதியுடன் கூடிய மண்டபத்தை நிர்வகித்து வருகிறார். அந்த மண்டபம் டி.ஆர். சுந்தரத்தின் பெருமையை இந்தத் தலைமுறைக்கு சொல்லும் அடையாளமாகத் திகழ்கிறது. ராமசுந்தரத்தின் மகன் சுமன்சுந்தரம், தற்போது ஜப்பானில் பணிபுரிந்து வருகிறார். மொத்தத்தில்... மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரத்தின் வம்சம் நல்லபடியாக வாழ்ந்துகொண்டிருக்கிறது. மென்மேலும் சீரும் சிறப்பும் பெற்று வாழ அவர்களை வாழ்த்தி இறைவனிமுடம் வேண்டிக்கொள்கிறேன்.

மேனேஜர் வந்தார். அவரிடம் விஷயத்தைச் சொன்னேன்.

"சார்... முன்னவெல்லாம்... எங்க செலவுலயே செட் போட்டு, ஷூட்டிங் முடிஞ்சதும்தான் பணத்தை வாங்கு வோம். இப்போ நிலமை அப்படியில்ல. நீங்க பணம் கொடுத்தா விரும்பினபடி செட் போட்டுத் தருவோம். ஷூட்டிங் முடிஞ்சதும் கணக்குப் பார்த்துக்கலாம்" என்றார் மேனேஜர்.

ஒரு நல்ல தொகையை உடனே கொடுத்தேன்.

தொழிலாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. கூட்டம் கூட்டமாக வந்த தொழிலாளர்கள் என்னை வியப்பும், சந்தோஷமுமாக பார்த்துவிட்டு உற்சாகமாக வேலையைத் தொடங்கினார்கள்.

'மாடர்ன் தியேட்டர்ஸில் தொழில் செய்கிற பாக்கியத்திற்கு நிகரே இல்லை இறைவா...' என மனம் பூரித்தேன். செட் வேலைகள் முடிந்து.. சுமார் ஒருவாரகாலம் அங்கே படப்பிடிப்பு நடத்தினேன். கடைசிநாள் படப் பிடிப்பு முடிந்ததும் நான் என்னால் முடிந்த அன்பளிப்பை தொழிலாளர்களுக்கு தந்து மகிழ்ந்தேன்.

மேனேஜர் கணக்குப் போட்டுப் பார்த்ததில் அவர்தான் எனக்கு பத்தாயிரம் ரூபாய் தரவேண்டியிருந்தது.

"உங்க முகவரிக்கு செக் பேமெண்ட்டா இந்த தொகையை விரைவில் அனுப்பி வச்சிடுறோம்" என்றார்.

சொன்னபடி இரண்டு மாதங்களில் செக் அனுப்பினார்கள்.

பட வேலைகளில் பிஸியாக இருந்ததால் தினமும் இரவு ஒருமணிக்குத்தான் வீடு திரும்பினேன். ஒருநாள்...

இரவு ஒருமணிக்கு... காரை நிறுத்திவிட்டு வீட்டுக்குப் போக மாடிப்படி ஏறினேன்.

'ஞானம்' என குரல் கொடுத்தார் கே.பி.சுந்தராம்பாள் அம்மா.

"என்னம்மா... இன்னும் தூங்கலையா?" என்றேன்.

கதவைத் திறந்தவர்... "உள்ள வாப்பா" என்றார். போனேன்.

"இப்படி உட்காரப்பா.... நான் உன்னிடம் மதிய சாப்பாடைப் பற்றி என்ன சொன்னேன்?"

"சரியா 12 மணிக்கெல்லாம் குடுத்திரணும்னு சொன்னீங் கம்மா"

"ஆனா... உன் மனைவி இன்னைக்கு 12 மணிக்கு சாப்பாடு தரலை. கொஞ்சம் தாமதமா கொண்டுவந்தா. பசி வெறியும், கோபமும் என்னால தாங்க முடியல. 'அன்பிலார் கையில் உண்பதும் தீதே. உன் சாப்பாட்டை எடுத்துக்கிட்டுப் போ'னு சொல்லீட்டேன். புஷ்பாவும் எடுத்துக்கிட்டுப் போய்ட்டா. நான் பட்டினியாவே இருக்கேன்" என்றார்.

"என்னம்மா இது. இரவு ஒரு மணியாச்சேம்மா" எனப் பதறினேன். வயதான தாய் பட்டினியோடு இருப்பதாகச் சொன்னது மனதை கஷ்டப்படுத்தியது.

"நீ எந்நேரம் வந்தாலும் உன்கிட்ட சொல்லியாகணும்னு தான் காத்திருந்தேன்" என்றார்.

"இதோ... வர்றேம்மா" எனச் சொல்லிவிட்டு வெளியே வந்து காரை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். கடைகள் பெரும்பாலும் அடைக்கப்பட்டிருந்தது. ஒரு ஹோட்டலில் ஜூஸ் போடுவதற்காக வைத்திருந்த பழங்களை வாங்கிக் கொண்டு வந்தேன்.

"அம்மா... இந்தப் பழங்களைச் சாப்பிடுங்க" என்றேன். ஆவலுடன் சாப்பிட்டு பசி தீர்த்துக்கொண்டார்கள்.

"அம்மா... ஒரு நிமிஷம்... இதோ வந்திடுறேன்" எனச் சொல்லிவிட்டு மாடியேறி கட்டுப்படுத்த முடியாத கடும் கோபத்துடன் வீட்டுக்குள் நுழைந்தேன்.

அதுவரை நான் அறிந்திராத... இதுவரை நீங்கள் அறிந்தி ராத கே.பி.சுந்தராம்பாளின் கதை...

# குருக்கள் தந்த பிரசாதம்!

நள்ளிரவு ஒருமணி வரை பசியோடு இருந்த கே.பி. சுந்தராம்பாள் அம்மாவுக்கு பழங்களை வாங்கிக் கொடுத்துவிட்டு, சரியான நேரத்துக்கு என் மனைவி சாப்பாடு தராத கோபத்துடன் வீட்டுக்குள் நுழைந்தேன்.

என் மனைவி தூங்கிக்கொண்டிருந்தாள். அவளை எழுப்பினேன்.

"அம்மாவுக்கு மதியம் கரெக்ட்டா 12 மணிக்கு சாப்பாடு ஏன் குடுக்கல?"

"அஞ்சு நிமிஷம் லேட்டாயிடுச்சுங்க"

அடுத்த நிமிஷமே அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டேன். "பாவி... அம்மாவ பட்டினிபோட்டு கொன்னுட்டியே"என சத்தம் போட்டேன்.

சத்தம் கேட்டு "ஞானம்... ஞானம்..."என கீழிருந்து குரல் கொடுத்தார் அம்மா.

மறுபடி அம்மாவிடம் வந்தேன்.

"என்னடா சச்சரவு?"என்றார்.

"ஒண்ணுமில்லம்மா"என நான் சமாளித்தேன்.

ஆனாலும் அம்மா புரிந்துகொண்டார்கள்.

"முதல்ல என் முன்னால உட்காருடா"

உட்கார்ந்தேன்.

"நீ உன் மனைவியை கண்டிச்சது வரைக்கும் சந்தோஷம். ஆனா... அடிச்சிருக்கக் கூடாது. அது ரொம்ப தவறு. முதல்ல நீ உன் தவறை ஒப்புக்கோ"

அம்மா சொல்லச் சொல்ல... நான் மௌனமாக இருந்தேன். இதுவரை நான் என் மனைவியை அடித்ததே யில்லை. அதனால் எனக்கு சங்கடமாக இருந்தது.



மீதமிருந்த ஒரு பழத்தை எடுத்து "நீ சாப்பிடு" என்றார் அம்மா.

சாப்பிட்டேன். இப்போது நிலைமை சகஜமானது.

கே.பி.சுந்தராம்பாளம்மா என்னிடம் மனம்விட்டு பேச ஆரம்பித்தார்.



"நான் பெத்த மகன் இருந்தா என்ன செய்வானோ? அதை நீ செய்ற ஞானம். என்னால அந்த மகிழ்ச்சியை அடக்க முடியலைப்பா. எனக்கு கோடிக்கணக்கில் சொத்து இருந்தும் ஒரு வாய் சோறு போட ஆளில்லையேப்பா''என தழுதழுத்தார்.

எஸ்.எஸ்.வாஸன் சென்னை

15-10-53

ஸ்ரீ மதுரைக் கொண்டைக்கு அவர்களுக்கு நமஸ்காரம்.

தங்கள் அன்பு கனிந்த கடிதம் கண்டேன். நம் ஜெமினியின் ஔவையார் [illegible] [illegible] அமோகமாக [illegible] இது. இந்த சமயத்தில் என்னை ஸ்ரீ K.B.S. க்குப் புகழ் உச்சநிலை அடைந்திருப்பதாகத் தாங்கள் கூறுவது [illegible] ஸ்ரீ K.B.S. ஐயும் தங்களை [illegible] பெருந்தன்மையை [illegible] [illegible] புகழ் [illegible] [illegible] வேண்டுமானால் [illegible] புகழும் உச்சநிலை அடைந்திருக்கிறது என்று சொல்வதில் [illegible] பொருத்தமில்லை. ஏனென்றால் K.B.S. இல்லாவிடில் ஔவையாரே இல்லை. மேலும் தங்களுடைய [illegible] கிராமபோனையும் ஸ்ரீ K.B.S. க்கு உள்ள அன்பையும் என்னிடமுள்ள பற்றுதலையும் நன்கு அறிந்த நான் அந்த நன்றியை வெகுவாகத் [illegible] [illegible] இவைகளையே [illegible]. அதற்கு நன்றி என் இருதயத்தில் [illegible] பதிந்திருக்கிறது.

உலகத்திலேயே [illegible] [illegible] [illegible] இப்பொழுது [illegible] [illegible] தெரிந்து [illegible] இல்லை.

நீங்கள் தங்கள் அகத்தில் தீபாவளியை நன்றாகக் கொண்டாடுங்கள். [illegible] அவர்களுக்கு [illegible] ஸ்ரீ K.B.S. க்கு [illegible] [illegible] அவர்களின் அவ்வையார் [illegible] [illegible] [illegible]. இதுதானும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

[illegible] ~~[illegible]~~ [illegible] [illegible] [illegible] [illegible]. ~~[illegible]~~ [illegible] [illegible]? தங்கள் [illegible] [illegible] [illegible].

தங்கள் விசுவாசமுள்ள

எஸ்.எஸ்.வாஸன்

[illegible]

[illegible] [illegible] அன்பு

[illegible]

''அம்மா... நான் கேட்கிறேனேனு தப்பா நினைக்காதீங்க. உங்க உறவினர்கள் என்கிட்ட உங்களைப்பத்தி சில விஷயங்கள் சொன்னாங்க...''என நான் சொல்ல... வியப்புடன் ''என்ன?' என்பதுபோல் என்னைப் பார்த்தார்.

''எந்த வேலைக்காரங்களும் உங்ககிட்ட நிலைக்கிற தில்லை. உறவினர்களும் அண்டுவது கிடையாது. இதுக் கெல்லாம் உங்களோட முன்கோபம்தான் காரணம்னு உறவினர்கள் சொல்றாங்களேம்மா?''

''ம்... ம்... ஞானம்... கோபமுள்ள இடத்துலதான் குணம் இருக்கும்னு உனக்கு தெரியும்ல. இந்த வயசுல என்னை அனுசரிச்சுப்போக யாரும் தயாரில்லேன்னா... அப்படிப்பட்ட யாரும் எனக்கு தேவையில்லை. இப்போ என் மனசுல அடங்கிக் கிடக்கிற உண்மைகளை யெல்லாம் உன்கிட்ட சொல்லீடுறேன். அதை வச்சு நீ ஒரு படமே எடுக்கலாம்'' என்றார்.

நான் ஆர்வமாக நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

''என்னை பெரிய பெரிய ஜாம்பவான்களெல்லாம் பாராட்டுறாங்க. ஆனா... என்னைச் சுத்தி இருக்கிற உறவுகளுக்கு என்னோட அருமை பெருமை புரியலை. 'ஔவையார்' படத்துல நடிக்கிறதுக்காக எஸ்.எஸ்.வாசன் என்கிட்ட கேட்டாரு. நானும் சம்மதிச்சேன். செலவுன்னா... எங்கவீட்டு, ஒங்கவீட்டு செலவில்லப்பா. நீ எம்புட்டோ படம் பார்த்திருப்ப. பெரிய பெரிய சுவர்களைக் கட்டி, இத்தனை யானைகளை வச்சு அந்த சுவரை இடிக்கிற மாதிரி எடுக்குறதுன்னா சும்மாவா?. படம் முழுக்க இப்படி பிரமிக்க வச்சாரு வாசன். இவ்வளவு செலவு பண்ணி படமெடுக்க வேற யாராலும் முடியாது. படம் ரிலீஸான உடனே, என்னோட தாய்மாமா மலைக்கொழுந்துவை வச்சு வாசனுக்கு ஒரு லெட்டர் எழுதச் சொன்னேன்.

''உங்களைத் தவிர யாராலும் 'ஔவையார்' படத்தை எடுக்க முடியாது. இந்த வெற்றிக்கு முழுக்காரணமும் உங்களோட உழைப்புதான். உங்களைத் தவிர இந்த வெற்றியில் வேற யாருக்கும் பங்கு இல்லை'னு மாமா பாராட்டி எழுதினார். அதுக்கு வாசன் ஒரு பதில் கடிதம் எழுதினாரு'' எனச் சொன்ன அம்மா... ''கொஞ்சம் இரு'' என எழுந்து போய் பீரோவைத் திறந்து அந்தக் கடிதத்தை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தார்.

''இந்தா.. இதுல முக்கியமான விஷயங்களை நீயே படி'' என்றார்.

சத்தமாக வாசித்தேன்...

"இதுசமயத்தில் என்னால் ஸ்ரீ K.B.S.க்குப் புகழ் உச்சநிலை அடைந்திருப்பதாகத் தாங்கள் கூறுவதை மறுத்து, ஸ்ரீ K.B.S.ஆலும், தங்களுடைய பெருந்தன்மையினாலும் என்னுடைய புகழும், ஜெமினி ஸ்டுடியோவினுடைய புகழும் உச்சநிலை அடைந்திருக்கிறதென்று சொல்வதில் மிகையொன்றுமில்லை. ஏனென்றால் K.B.S. இல்லை யெனில் ஔவையாரே இல்லை. மேலும் தங்களுடைய குணத்தையும், நியாயாபிமானத்தையும், ஸ்ரீ K.B.S.இன் உயர்வுமிக்க அன்பையும், என்மீதுள்ள பற்றுதலையும் நன்கு அறிந்த நான் எனது நன்றியை வெறும் வார்த்தை களால் கூற இயலாதவனாக இருக்கிறேன். அந்த நன்றி என் இருதயத்தில் எப்பொழுதும் படிந்திருக்கும்...''

கடிதத்தைப் படித்த நான் "வாசன் அய்யா எழுதியிருக் கிறது நூத்துக்கு நூறு உண்மை'' என்றேன்.

"என் ஞாபகார்த்தமா இந்த கடிதத்தை நீயே வச்சுக்க'' என்றார் அம்மா.

(15-10-1953 தேதியிட்டு எஸ்.எஸ்.வாசன் எழுதிய அந்தக் கடிதத்தை 1980-ல் என்னிடம் அம்மா கொடுத்தார். கிட்டத்தட்ட 61 ஆண்டுகளாகிறது அந்தக் கடிதத்திற்கு வயது. அதை பொக்கிஷம் போல் இன்றளவும் பாதுகாப் பாக வைத்திருக்கிறேன்)

"என் வாழ்க்கை கதையை சொல்லட்டுமாடா?"

"சொல்லுங்கம்மா''

"கொடுமுடியில் எங்க குடும்பம் ரொம்ப ஏழ்மைல இருந்தது. அப்போ எனக்கு ஏழு வயசு இருக்கும். என் தம்பி கனகசபாபதிக்கு ஐந்து வயசு இருக்கலாம். அப்பா இல்ல. அம்மாதான் படாதபாடுபட்டு பசியும், பட்டினியுமா காப்பாத்தி வளத்தாங்க. எனக்கும், என் தம்பிக்கும் உடுத்துன துணிக்கு மாத்துத் துணி கிடையாது. அம்மாவோட சேலையில அங்கங்க கிழிசலா இருக்கும். வீதியில போகையில சேலையை இழுத்து இழுத்துவிட்டு சரிபண்ணிக்கிட்டே போவாங்க. இப்படிப்பட்ட சூழ்நிலைல ஒருநாள் முழுக்க பட்டினி கிடக்கவேண்டியதாகிப் போச்சு.

கரூர்ல எங்க அம்மாவுக்கு தெரிஞ்ச வசதியானவங்க இருந் தாங்க. அவங்களைப் போய் பார்க்க முடிவு செஞ்ச அம்மா, என்னையும் என் தம்பியையும் கூப்பிட்டு "நான் கரூர் போறேன். அங்க போய் ஏதாவது வேலை கிடைக்குதானு பார்க்குறேன். இல்லேன்னா பணம் குடுத்தாங்கன்னா வாங்கிட்டு வர்றேன். நான் போயிட்டு வர்ற வரைக்கும்

நான் சொல்ற இடத்துல இருக்கணும்' எனச் சொல்லி... ரொம்ப ஃபேமஸான கொடுமுடி கோயிலுக்கு கூட்டி வந்தாங்க.

கோயில் குருக்களைப் பார்த்து கஷ்டங்களைச் சொல்லி அழுதாங்க அம்மா.

'எனக்கு வேற வழிதெரியல. நான் கரூர் போய்ட்டு வர்ற வரைக்கும் நீங்கதான் பிள்ளைங்களைப் பார்த்துக்க ணும்'னு குருக்கள்கிட்ட சொல்ல...

இரக்கப்பட்ட குருக்கள் 'கவலைப்படாதேம்மா... நான் பார்த்துக்கிறேன். நீ சீக்கிரமா வந்து சேர்'னு சொல்ல... அம்மா எங்களை விட்டுட்டு போனாங்க. போன கொஞ்ச நேரத்துலயே திரும்ப ஓட்டமும் நடையுமா வந்தாங்க. எங்கயோ ஒரு மாம்பழம் கிடைச்சிருக்கு. அதை என் கைல குடுத்திட்டு 'தம்பியும், நீயும் சாப்பிட்டுக்கங்க. நாளைலருந்து அய்யர் சாப்பிட ஏதாவது தருவார்'னு சொல்லீட்டு எங்களையே திரும்பித் திரும்பி பார்த்துக்கிட்டே போனாங்க.

'திக்கற்றவர்களுக்கு தெய்வம்தான் துணை'னு எங்கம்மா அடிக்கடி சொல்வாங்க. அதே மாதிரி... பழத்தை சாப்பிட் டுட்டு நானும், தம்பியும் கோயில்லயே படுத்துக்கிட்டோம்.

காலையில் குருக்கள் அர்ச்சனை செய்றதும், ஓதுவார் பாடுறதும் கேட்டது. ரெண்டுபேரும் எழுந்து கைகட்டி நின்றோம். ஓதுவார் பாடுவது எனக்கு பிடித்திருந்தது. நான் அதை உன்னிப்பா கவனிச்சேன். கடவுளுக்கு நெய்வேத்தியம் முடிந்து அந்த பிரசாத சோற்றில் கொஞ்சம் காக்கைகளுக்கு வச்ச குருக்கள் மீதி பிரசாதத்தை எங்களிடம் கொடுத்து 'குழந்தைகளா... இது எங்க வீட்ல சிலரோட பசியாத்துற பிரசாதம். இதை நீங்க நிம்மதியா சாப்பிடுங்கோ''என்றார். அடுத்த நிமிஷமே பிரசாதம் எங்க வயித்துக்குள்ள போனது. உடனே என் உடம்பில் ஏதோ ஒரு புத்துணர்ச்சி வந்தது' எனச் சொன்ன அம்மா, அந்த புத்துணர்ச்சி இந்த நிமிஷம் ஏற்பட்டதுபோல் சிலிர்த்தார். நான் அம்மாவின் முகத்தையே பார்த்தேன்.

# தங்கக்காசு!

கே.பி.சுந்தராம்பாளம்மா தன் வாழ்க்கைக் கதையை விரிவாக என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

என்னையும், என் தம்பியையும் நாடகக் கம்பெனியில் நல்லா கவனிச்சுக்கிட்டாங்க. நாடகத்தில் நல்லதங்காள் பாடுற பாடலை எப்படிப் பாடணும்னு எனக்கு சொல்லிக் கொடுத்தாங்க. நல்லதங்காளின் ஏழு குழந்தைகளில் மூத்த குழந்தையாக என்னை நடிக்கச் சொன்னாங்க. என் தம்பியும் ஒரு குழந்தையாக நடிக்கணும்னு சொல்லிட் டாங்க.

நல்லதங்காள் கதையில் மிகமுக்கியமான கட்டம்... தன் குழந்தைகளை ஒவ்வொன்றாக நல்லதங்காள் கிணற்றில் தூக்கிப்போடும் காட்சி. இது நாடகம் என்பதையும் மீறி ஏதோ அந்தச் சம்பவம் தங்கள் கண்முன்னால் நடப்பது போல நாடகம் பார்க்கும் மக்கள் துக்கம் தாளாமல் அழுதுவிடுவார்கள். இந்த காட்சிக்காக மரத்தால் செய்யப்பட்ட கிணறு மாதிரி வட்ட வடிவத்தில் வச்சிருந்தாங்க.

நாடக வாத்தியார் என் தம்பியிடம் டேய் சபாபதி... கிணறு மாதிரி இருக்க தொட்டிக்குள்ள உன்னைத் தூக்கிப் போடுவாங்க. நீ வெளிய தலையை தூக்காம உள்ளுக்குள்ளயே படுத்துக்கணும். நாங்க சொல்லும்போது வெளிய வந்தா போதும்’ எனச் சொல்ல கிணறு வடிவ தொட்டியைப் பார்த்த தம்பி... அது நிஜ கிணறு, நம்மள கொல்லப்போறாங்கனு நினைச்சு பயந்து 'ஓ...'னு கத்திக்கிட்டே மின்னல் வேகத்தில கொட்டகையைவிட்டே வெளியே ஓடிட்டான். நாடகம் முடிந்ததும் தம்பி வந்துவிடுவான் என என்னை சமாதானப்படுத்திக் கொண்டேன்.



நான் பிரமாதமா பாட்டுப்பாடி பேர் வாங்கிட்டேன். நாடகம் நல்லபடியா முடிஞ்சது. எங்கம்மா கரூரிலிருந்து திரும்பி வந்துட்டாங்க. நடந்ததையெல்லாம் அம்மாகிட்ட சொன்னேன்.

'கோயில்ல நீ பாடினதுனாலதான் உனக்கு இப்படி ஒரு வாய்ப்பு கிடைச்சிருக்கு. இது கடவுளே குடுத்த வாய்ப்பு. அதைத் தவறவிடக்கூடாது. நீ நாடகக் கம்பெனியிலேயே இரு. நான் அப்பப்போ உன்னை வந்து பார்க்கிறேன். நீ தம்பியப் பத்திக் கவலைப்படாத. எங்க போயிருந்தாலும் திரும்ப வீட்டுக்கு வந்திருவான். நீ கிளம்பு'னு அம்மா என்னை அனுப்பிவச்சாங்க.

நாடகக்குழு ஒவ்வொரு ஊரா போனது. என்னோட பாட்டுக்காகவே கூட்டம் அலைமோதியது.

இப்போ எனக்கு 12 வயசு.

திருநெல்வேலி வட்டாரத்தில் நாடக கம்பெனி முகாமிட்டி ருந்தது.

நாடகத்தில் நான் டான்ஸ் ஆடவேண்டியதிருந்தது. நட்டுவனார் எனக்கு சொல்லிக் கொடுத்தார். 'சரியாக ஆடலே'ன்னு என் காலில் பிரம்பால் அடித்தபடியே சொல்லிக் கொடுத்தார். அடிக்கடி பிரம்பால் அடிக்க... அழுகையும், வலியும் தாங்க முடியாமல் ஒருநாள் இரவு... கொட்டகையிலிருந்து தப்பிச்சு திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு வந்துவிட்டேன். முருகனை நோக்கி நான் மனம் உருகப் பாடி நின்றேன். என் பாட்டைக் கேட்டு அதில் உருகி ஐக்கியமான கோயில் குருக்கள் என்னிடம் விசாரித்தார்.

நான் நடந்ததைச் சொன்னேன். நாடக கம்பெனிக்கு ஒரு ஆளை அனுப்பி உரிமையாளரை அழைத்துவர ஏற்பாடு செய்தார் குருக்கள்.

உரிமையாளர் வந்தார். என்னைப் பார்த்ததும் ஓடிவந்து என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு "இப்படி மோசம் பண்ணீட்டியேம்மா..." என அழ ஆரம்பித்துவிட்டார்.

'சுந்தராம்பா எங்க கம்பெனியை விட்டு வெளியேறினதி லிருந்து நாடகம் சரியா நடக்கல. இவளை மாதிரி பாடுறதுக்கு ஆள் இல்லை. இவளோட பாட்டுக்காகவே நாடகம் பார்க்க வந்த ஜனங்க இப்ப வரல. நல்லவேளை... திருச்செந்தூர் முருகன் இந்தக் குழந்தையை என்கிட்ட ஒப்படைச்சிட்டான். இவளுக்கு புத்தி சொல்லி என்னோட அனுப்பி வைங்க' என குருக்களிடம் சொன்னார்.

எனக்கு குருக்கள் புத்தி சொல்றதுக்கு முன்பே... எனக்கு சோறு போட்டு வளர்த்த நாடக முதலாளி என்னை கட்டிப்பிடிச்சு அழுததில் என் மனசு கரைஞ்சு போச்சு. குருக்களுக்கு வணக்கம் சொல்லிவிட்டு நாடகக் கம்பெனி முதலாளியுடன் கிளம்பி கொட்டகைக்கு வந்து விட்டேன்.

'சுந்தராம்பா... உனக்கு அப்பப்போ ஒரு சவரன் தங்கக்காசு சம்பளமா தர்றேன். அதை நீ பத்திரமா சேமிச்சு வச்சுக் குவியா?'னு முதலாளி கேட்டார்.

நான் குஷியில் தலையை பலமாக ஆட்டினேன்.

மறுபடி நாடகம் பிரமாதமாக நடந்தது. சொன்னபடியே எனக்குச் சம்பளமாக முதலாளி தங்கக்காசுகளைக் கொடுத்தார். அந்த தங்கக் காசுகளையெல்லாம் ஒரு துணியில் முடிந்து, முடிந்து நாடகக் கம்பெனி முதலாளியின் மனைவியிடம் கொடுத்து பத்திரப்படுத்தினேன்.

வருஷங்கள் ஓடிக்கிட்டிருந்தது. ஊர் ஊராகப் போய் நாடகம் நடத்திக்கொண்டிருந்தோம்.

இப்போ எனக்கு 14 வயசு.

நான் பெரிய மனுஷியாகிவிட்டேன். முதலாளி உடனே என் தாய்க்கு தகவல் அனுப்பினார். அம்மாவும் வந்து சேர்ந்தார்.

'யம்மா... நான் ஐம்பது தங்கக்காசுகள் சேர்த்து வச்சிருக்கேன்' என சந்தோஷமாகச் சொன்னேன். அதை அம்மா வாங்கிக்கொண்டார்.

'பொண்ணு வயசுக்கு வந்துருச்சு. இனிமே நாடகத்தில் நடிக்கமாட்டா. நாங்க ஊருக்கு கிளம்புறோம்' என முதலாளியிடம் அம்மா தெரிவிச்சிட்டு என்னையும் கூட்டிக் கொண்டு கிளம்பினார்.

சொந்த ஊரான கொடுமுடிக்கு வந்து சேர்ந்தோம். நாடகத்தின் கிணறு காட்சிக்குப் பயந்து ஊரைவிட்டே ஓடிப்போன என் தம்பி ஏழெட்டு வருஷங்களுக்குப் பிறகு பெரிய பையனாக வந்து சேர்ந்தான். நான் சம்பாதித்துக் கொண்டுவந்திருந்த பவுன் காசுகளில் ஒவ்வொன்றாக விற்று ஜாம்ஜாம்னு குடும்பம் நடத்தினாங்க எங்கம்மா.

வருஷங்கள் விறுவிறுன்னு ஓடிக்கிட்டிருந்தன.

நாடக வருமானம் இல்லாமல் ஏற்கனவே சம்பாதித்த பவுன் காசுகளை விற்று... விற்று குடும்பம் நடத்தியதில் பவுன்காசு இருப்பு கிட்டத்தட்ட தீர்ந்துபோன நிலை!

இப்போ எனக்கு 18 வயசு.

இப்பத்தாண்டா கலைஞானம், நான் கிட்டப்பாவை சந்திக்கிற கட்டம்'' என்று சொல்லி நிறுத்தினார் அம்மா.

நான் ஆர்வ மிகுதியுடன் அம்மாவின் முகத்தையே பார்த்தேன்.

தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார்...

''கிட்டப்பா பாகவதர் இலங்கையில் தங்கி 'வள்ளி திருமணம்' நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தார். இந்த நாடகத்தில் 'காயாத கானகத்தே' என முருகன் பாடி வரும்போது, முருகன், வள்ளி இருவரிடையே தர்க்கவாதம் நடக்கும். இதுதான் இந்த நாடகத்தின் உச்சகட்ட விஷேசம். முருகனாக நடிக்கும் நடிகரும், வள்ளியாக நடிக்கும் நடிகையும் தங்கள் திறமையை நிரூபிக்க இந்த தர்க்க காட்சியில் பெரிய போராட்டமே நடத்துவாங்க. இலங்கைத் தமிழர்கள் இந்த நாடக விவாத காட்சியில் ஜெயிப்பவருக்கு தங்கக்காசு பரிசளிப்பார்கள்.

ஒவ்வொரு முறையும் கிட்டப்பாவே ஜெயித்தார். வந்த வள்ளிகளெல்லாம் தோற்றுப் போனார்கள். இதனால் அங்கிருந்த தமிழர்களுக்கெல்லாம் இயல்பான ஒரு உணர்ச்சிக் கொந்தளிப்பு...

'ஒரு பிராமணன் இங்க வந்து வள்ளியா வர்ற தமிழ்ப் பெண்களையெல்லாம் மட்டம்தட்டி, அவன் ஜெயிச்சுக்கிட்டு வர்றானே... தமிழ்நாட்டுக்குப் போய் எப்படியாவது தேடிப் பிடிச்சு ஒரு தமிழ்ப் பெண்ணைக் கொண்டுவந்து இவனைத் தோக்கடிக்கணும்' என்கிற வைராக்கியத்துடன் கப்பல் ஏறி தமிழ்நாட்டுக்கு ஒரு குழுவா வந்தாங்க.

'நல்லா பாடக்கூடிய திறமையுள்ள நாடக நடிகை யாரு?'னு பல நாடகக் கம்பெனிகள்லயும் விசாரிச்சிருக்காங்க.

'கே.பி.சுந்தராம்பாள்னு ஒரு பொண்ணு இப்போ கொடு முடியில இருக்கு. இப்ப நடிக்கிறதில்லை. இருந்தாலும் அந்தப் பொண்ணப்போல பாடுறதுக்கு தமிழ்நாட்டில மட்டுமில்ல... உலகத்திலயே யாருமில்லை'னு சொல்லீருக்காங்க நாடகக் கம்பெனிகள்ல.

இலங்கைத் தமிழர்கள் எங்க வீட்டுக்கு வந்தாங்க...'' என்ற அம்மா...

''டேய் ஞானம்... கிட்டப்பா போட்ட திட்டத்தைச் சொல்றேன் கேட்டுக்கோ'' என்றார்.

# கிட்டப்பாவோடு கல்யாணம்!

கே.பி.சுந்தராம்பாளம்மா தன் வாழ்க்கை அனுபவங்களை தொடர்ந்து சொன்னார்.

'முருகனாக நடிக்கும் பிராமணன் கிட்டப்பா, வள்ளியாக நடிக்கும் தமிழ்ப் பெண்களை மட்டம் தட்டி தோற்கடிப்பதா? ஒரு தமிழ்ப் பெண்ணை வள்ளியாக நடிக்க வச்சு கிட்டப்பாவுக்கு பதிலடி கொடுக் கணும்' என்கிற வைராக்கியத்துடன் தமிழகம் வந்த இலங்கைத் தமிழர்கள் கொடுமுடிக்கு... எங்கள் வீட்டுக்கு வந்தனர்.

'இலங்கையில் நாடகம் நடத்த சுந்தராம்பா வரவேண்டும்' என என் அம்மாவிடம் கேட்டார்கள்.

எங்களுக்கு அந்தநேரம் கையில் இருந்த பொற்காசுகள் தீர்ந்த நிலைமையாச்சே. பிழைப்பிற்காக நாடகம் நடத்தித் தான் ஆகவேண்டும் என்கிற சூழ்நிலை. அம்மா சம்மதிச் சார். நானும், அம்மாவும் அவர்களுடன் கப்பலில் சிலோன் சென்றோம்.

அங்கே...

'வள்ளி திருமணம்' நாடகத்தின் தர்க்கக் காட்சி இரவு தொடங்கியது. கிட்டப்பா பாட... நான் அவருக்கு போட்டியாக பதிலடி கொடுத்துப் பாட... பதிலுக்கு அவர் பாட... இப்படியே விடிந்துவிட்டது. 'கிட்டப்பாவும் தோற்கவில்லை, சுந்தராம்பாவும் தோற்கவில்லை' என அறிவித்தார் நாடகம் நடந்த ஊரின் தலைவர். 'இருவருமே ஜெயிச்சிட்டீங்க' எனச் சொல்லி பரிசை இருவருக்குமே பகிர்ந்து கொடுத்தார்.



ஆனா... இந்த அய்யர் இருக்காரே... கிட்டப்பா பாகவதர்.... ஒரு திட்டம் போட்டுட்டாரு.‘

'சுந்தராம்பாள விட்டா தமிழ்நாட்டுல நம்ம புகழை, பேரை கெடுத்துடுவா. அதனால இவளை நம்ம பிடியிலயே வச்சுக்கணும்'னு நினைச்சி 'சுந்தராம்பாளை நான் கல்யாணம் செஞ்சுக்க ஆசைப்படுறேன்'னு எங்க அம்மாகிட்ட சொல்லீட்டார்.

எங்க அம்மாவுக்கு சந்தோஷம். 'ஏழிசை மன்னர்’ என பெயர் பெற்றவர், நம்மளைவிட உயர் ஜாதிக்காரர். நம்ம மகளைக் கட்டிக்க ஆசைப்படுறாரே’’ என மகிழ்ச்சியாகி, என்னை கிட்டப்பா அய்யருக்கு கட்டிக் கொடுத்துட்டாங்க.

நாங்க சந்தோஷமா இல்லறம் நடத்தினோம். ஒரு குழந்தை பிறந்தது. ஆனால் குழந்தை இறந்துவிட்டது.

ஏற்கனவே மொடாக்குடியன் எங்க வீட்டுக்கார அய்யரு. குழந்தை செத்த சோகத்துல... இருபத்தினாலு மணிநேரமும் குடிச்சுக் குடிச்சே செத்துப் போயிட்டாரு.

அந்த அதிர்ச்சிய தாங்க முடியல. அன்னிக்கி வெள்ளைப் புடவை உடுத்தி நெத்தியில வெண்நீர் (விபூதி) அணிஞ்சேன். இதுவரை 'முருகனே தெய்வம்'னு வாழ்ந்துக்கிட்டிருக்கேண்டா மகனே'' என சொல்லி முடித்தார் அம்மா.

நான் பிரமிப்பு விலகாமல் அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''எப்படிடா ஞானம்... என் வாழ்க்கைக் கதையை படமா எடுக்கலாமாடா?'' எனக் கேட்டார்.

''படமா... ஒரு காவியமே எடுக்கலாம்மா. இன்னொரு முறை நீங்க உங்க வாழ்க்கையை என்கிட்ட சொல்லணும். அதுக்கு அருமையா திரைக்கதை அமைக்கணும். அதுக்கு முன்னாடி நீங்க எனக்கொரு முருகன் கதையில் நடிச்சுக் கொடுக்கணும்'' என்றேன்.

''முருகா... முருகா...'' என முருகன் படத்தை வணங்கிவிட்டு... “கதையைச் சொல்லு ஞானம்'' என்றார்.

''ஒரு கிராமம். மிராசுதார் வீடு. அங்கே ஒரு பாட்டி. அது நீங்கதான். உங்க மகளைக் கட்டிக் கொடுத்திட்டீங்க. வீட்டுக்கு எதிரே சின்னதா பழநியாண்டவர் கோயில் கட்டி வழிபட்டு வர்றீங்க. ஒருகாலத்தில் உங்க

அப்பா டைமண்ட் பிசினஸ் பண்ணியவரு. மதிப்புமிக்க ஒரு வைரத்தை எடுத்து வச்சு, பழநிக்கு பாதயாத்திரையாகவே வந்து கோயிலில் அந்த வைரத்தை போடணும்னு வேண்டிக்கிட்டார். ஆனா.. அவர் இறந்திட்டார். கால ஓட்டத்துல உங்களுக்கும் வயசாயிடுச்சு. அப்பாவோட வேண்டுதல்படி அந்த வைரத்தை முருகனிடம் சேர்க்கணும்னு அப்பப்போ நினைக்கிறீங்க. ஆனா... உங்க மருமகன் இந்த வைரத்தை வித்து அதில் கொஞ்சம் பணத்தை கோயில் உண்டியலில் போட்டுட்டு மீதிப் பணத்தை, தான் வச்சுக்கணும்னு அடிக்கடி உங்களோட தகராறு பண்றான். இந்தச் சூழ்நிலையில் உங்க மகளுக்கு பெண்குழந்தை பிறக்குது.

"அப்பா காலத்துல வேண்டினது... நான், இப்போ என் பேத்தினு மூணு தலைமுறையாயிடுச்சு. இனியும் தாமதிக்காம வைரத்தை கோயில் உண்டியலில் போடப் போறேன்'னு சொல்றீங்க. வழக்கம் போல மருமகன் தடுக்க... குழந்தைக்கு வலிப்புநோய் வருது. வீட்டுக் கோயிலில் குழந்தையைப் போட்டு பாட்டுப்பாடி அழுறீங்க. அப்போ பேத்திக்கு குணமாயிடுது. குழந் தையை நீங்க தூக்கும்போது வானத்திலிருந்து ஒரு பருந்து கவ்வியிருந்த கோழிக்குஞ்சு தவறி உங்ககிட்ட விழுது. அந்த குஞ்சையும் வளர்க்கிறீங்க. அது வளந்து பெரிய சேவல் ஆகுது. பேத்தியும், சேவலும் பிரியமாப் பழகுறாங்க. வீதியில் சேவல் ராஜநடை போட்டுப் போகும்போது மக்கள் அதை நல்ல சகுனமா கருதுவாங்க. சேவலை 'முருகா'னு கும்பிடுவாங்க.

பங்குனி உத்திரத்தில் சேவலையும், வைரத்தையும் கோயிலில் ஒப்படைக்க முடிவு செய்து பேத்தியுடன் பாதயாத்திரை கிளம்பிப் போறீங்க. யாத்திரையின் முதல்நாள் இரவு ஒரு சத்திரத்தில் தங்கியிருக்க... உங்க மருமகன் ஏற்பாடு செய்த ரௌடிகள் உங்களை தாக்கி வைரப் பெட்டியை பறிக்கிறாங்க. அதில் வைரம் இல்லை. 'எங்கே வைரம்' எனக்கேட்டு உங்களை கடுமையா தாக்குறாங்க. 'முருகா'னு நீங்க பழநி திசை நோக்கி கத்த, சேவலும் கூவ... பழநிமலை முருகனின் சேவற்கொடியிலிருந்த சேவல் உயிர் பெறுது. அந்த ஒரு சேவல் பல நூறாகப் பெருகி வானத்தில் பறந்து சம்பவ இடத்துக்கு வருகிறது. உங்க வளர்ப்புச் சேவல் தலைமையில் அந்த சேவற் கூட்டம் ரௌடிகளை தாக்கி துரத்தியடிக்கிறது.

மறுநாள்... பழநிகோயில் அறங்காவலரிடம் நடந்த விஷயங்களைச் சொல்லி சேவலை ஒப்படைக்கிறீங்க. 'சேவலை கொடுத்திட்டீங்க. வைரம் எங்கே?'னு அறங்காவலர் கேட்க... சேவலின் இறக்கையை விரித்து காட்றீங்க. உள்ளே பாதுகாப்பா வைரம் இருக்கு. நேர்த்திக் கடனை

நிறைவேற்றின மனநிறைவு உங்களுக்கு ஏற்படுது. இதுதான் கதை'' என்றேன்.

'ஞானம்... நிச்சயமா இந்தக் கதையில நடிக்கிறேண்டா. ஏற்பாடு பண்ணுடா மகனே' என்றார்.

'அம்மா... ஒரு நிமிஷம்...' எனச் சொல்லிவிட்டு மாடியேறி வீட்டுக்குப் போனேன். ஒரு நல்ல தொகையை எடுத்து வந்து அம்மாவிடம் கொடுத்தேன்.

''எதுக்கு மகனே... இதெல்லாம்?''

''தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேற. இதை நீங்க வாங்கிக்கிட்டாத்தான் 'அம்மா என் படத்துல நடிக்கப்போறாங்க' என்கிற உறுதி எனக்குக் கிடைக்கும்'' என்றேன்.

சிரித்தபடி பணத்தை வாங்கி ஒரு பேப்பரில் சுருட்டி பீரோவில் வைத்தார்.

'எதிர்வீட்டு ஜன்னல்' பட வேலைகள் முடிந்தன. என் கதையில் உருவாகும் படங்களிலெல்லாம் புதுமுகங்கள் அறிமுகமாகும் ராசிப்படி இதில் நாகராஜ சோழன் நடிகராக அறிமுகமானார். 05-09-1980-ல் படம் வெளியானது. மனைவிக்கு கணவனே பிரசவம் பார்க்கிற காட்சிகளை நெகடிவ்வாக காண்பித்தேன். எனது டைரக்ஷன் உத்தி பத்திரிகையாளர்களால் பாராட்டப்பட்டது. படமும் பெரும் வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆர். சொன்னது போலவே படத்திற்கு 'ஏ' சான்றிதழ்தான் கிடைத்தது.

சேலத்தில் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்த எம்.ஜி.ஆர். கேட்டதன்படி அவரிடம் நான் இந்த கதையைச் சொன்னபோது 'படம் முடிஞ்சதும் என் வீட்டுக்கு ஒரு பிரிண்ட் அனுப்புங்க' என சொல்லியிருந்ததால் ஒரு பிரிண்ட் அனுப்பி வைத்தேன்.

மீண்டும் முதல்வரான எம்.ஜி.ஆர் வேலைப்பளு காரண மாக மூன்று மாதங்களுக்குப் பிறகே படத்தைப் பார்த்து 'நன்றாக இருக்கு' என டைரக்டர் என்.எஸ்.ராமதாஸிடம் படப்பெட்டியை கொடுத்து அனுப்பினார். (இந்த ராமதாஸ் எம்.ஜி.ஆர். நடித்த 'தாழம்பூ' படத்தை இயக்கியவர்)

'சிறந்த நகைச்சுவை நடிகை' என்கிற தமிழக அரசின் விருது 'எதிர்வீட்டு ஜன்னல்' படத்திற்காக மனோரமா வுக்கு கிடைத்தது.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில் கே.பி.சுந்தராம் பாளாம்மாவுக்கு தொடர் வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. டாக்டர் மருந்து கொடுத்துவிட்டுப் போனார். நானும், என் மனைவியும் படுக்கையில் இருந்த அம்மாவை தூக்கி உட்கார வைத்தோம்.

அம்மாவால் தலையை நிமிர்த்தி உட்கார முடியவில்லை. அவரின் முட்டிக்கால் அருகே அவரின் தலை வளைந்து நின்றது. 'முருகா முருகா' என அரற்றியபடி இருந்தார்.

# கே.பி.எஸ்.க்கு பில்லி சூன்யம்!

கே.பி.சுந்தராம்பாளம்மாவால் நிமிர்ந்து உட்கார முடியவில்லை. அவரின் தலை வில்லாக வளைந்து அவரின் முட்டிக் காலை உரசியபடி இருந்தது. 'முருகா... முருகா' என அனத்தியபடி இருந்தார். வேறெதுவும் பேசவில்லை.

அம்மா இருந்த நிலையைப் பார்த்ததும் எனக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

"அம்மா... நிச்சயமா இது பில்லி சூனிய செய்வினை தாம்மா" என்றேன்.

உடனே குனிந்தவாக்கிலேயே என்னை ஓரக்கண்ணால் பார்த்தார்.

"ரெண்டு மாசம் முன்ன... நம்ம வீட்டு வாசல்ல செய்வினை எடுத்தோம். ஞாபகம் இருக்காம்மா?"

நான் கேட்டதும் அம்மா என்னையே பார்த்தார்.

ஈரோடு அருகிலிருந்து ஒரு தீவிர முருக பக்தரும், செய்வினை முறிக்கிறவருமான ஒருவரை அம்மாவுக்கு வேண்டப்பட்டவர் இங்கே அழைத்து வந்திருந்தார்.

அந்த சாமியார் தனது காவி உடைகளைக் களைந்து விட்டு, கோவணம் மட்டும் கட்டிக் கொண்டார். கையில் வேல் வைத்திருந்தார். ஏதேதோ மந்திரங்களை உச்சரித்தபடி... வாசற்படி அருகே ஒரு இடத்தைத் தோண்டச் சொன்னார்.



எனது கம்பெனி புரொடக்ஷன் அஸிஸ்டெண்ட்டுகள் இரண்டுபேர் அந்த இடத்தில் தோண்டினர். இரண்டரை அடி ஆழம் தோண்டியதும்... அங்கே ஒரு பொம்மை இருந்தது. நாலு இஞ்ச் உயரம் கொண்ட அந்த பொம்மை கால்நீட்டி உட்கார்ந்தபடி இருந்தது. பொம்மையின் தலையை வளைத்து அதன் முழங்காலில் வைத்து தலைமுடியால் கட்டப்பட்டிருந்தது.

அதை வெளியே எடுத்த சாமியார்... 'இந்த பொம்மை மாதிரியே நீங்க அவஸ்தைப் படணும்னு மலையாள மாந்திரீகனை வச்சு செய்வினை செஞ்சிருக்காங்க' எனச் சொல்லிவிட்டு தன் கையில் இருந்த வேலால் தன் தலையில் தட்டி யோசித்தார். பிறகு 'இதே மாதிரி செய்வினை உங்களோட கொடுமுடி வீட்லயும் வாசற்படிக்குக் கீழ வைக்கப்பட்டிருக்கு. அதையும் வெளியே எடுத்தாத்தான் நீங்க செய்வினை பாதிப்புல இருந்து முழுமையா தப்பிக்க முடியும். செய்வினை எடுக்க எனக்கு பணமெல்லாம் வேணாம். எப்ப நான் உங்களுக்குத் தேவையோ... அப்போ கூப்பிட்டு அனுப்புங்க. நான் வந்து செய்வினையை எடுக்கிறேன்' எனச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அப்போது அதை அம்மாவோ, நாங்களோ பெரிதுபடுத்த வில்லை.

ஆனால் அடுத்த ரெண்டு மாதத்தில் அந்த செய்வினை பொம்மையைப் போலவே அம்மா ஆகிவிட்டதை நினைத்து பயந்தோம்.

"அம்மா... அந்த பொம்மை மாதிரியே இருக்கீங்க. அந்த பொம்மையை அப்போது நீங்களும் பார்த்தீங்கள்ல. கார்லயே கொடுமுடிக்கு போவோம்மா. அதே சாமியாரை வரவச்சு செய்வினையை முறிச்சிரலாம். அப்பத்தான் நீங்க நல்லா பழையமாதிரி ஆவீங்க" என்றேன்.

'வேண்டாம்' என்பதுபோல கை ஜாடை காட்டினார் அம்மா.

'அம்மாவுக்கு ஏதாவது விபரீதமா ஆயிட்டா வம்புதானே' என நினைத்து அம்மாவின் உறவினர்களுக்கெல்லாம் தகவல் அனுப்பினேன். பெரும்பாலான உறவினர்கள் வந்து சேர்ந்தனர்.

'முருகா... முருகா' என்கிற முனகலைத் தவிர அம்மாவால் இப்போது எதுவும் பேசமுடியவில்லை. உறவினர்கள் தங்களுக்கு வேண்டிய டாக்டரை வைத்து சிகிச்சை செய்தனர்.

படுத்த படுக்கையாகிவிட்ட அம்மா 'பித்து... முருகு... தாசு' என உளறினார்.

முருக பக்தரும், பக்திப் பாடகருமான பித்துக்குளி முருகதாஸிற்கு தகவல் அனுப்பி வரவழைத்தனர்.

ஒருநாள் முழுக்க அம்மாவின் அருகிலேயே இருந்து முருகன் பாடல்களைப் பாடினார்கள் பித்துக்குளி முருகதாஸும் அவரது மனைவியும். அதன்பின், தான் பாடிய பாடல்கள் அடங்கிய கேஸட்டை ஓடவிட்டுவிட்டு "நாளைக்கு வர்றேன்" எனச் சொல்லிவிட்டுப் போனார்கள்.

பித்துக்குளியின் பாடல்களைக் கேட்டபடி படுத்திருந்த அம்மா... 'முருகா' என்றார். மூச்சு நின்றது.

உடனே நான் ராமாவரம் தோட்டத்திற்கு போன் செய்தேன்.

"அம்மா கே.பி.எஸ். இறந்துட்டாங்க. அண்ணன்கிட்ட சொல்லீடுங்க" என்றேன்.

அடுத்த பத்து நிமிஷத்தில் எம்.ஜி.ஆர். லைனுக்கு வந்தார்.

"என்ன கலைஞானம்?"

''அம்மா இறந்துட்டாங்கண்ணே...''

சில நொடிகள் மௌனமானார். ''''அங்கே வேற யாரு இருக்காங்க?''''

''முன்கூட்டியே... கொடுமுடிக்கு தகவல் அனுப்பி பெரும் பாலான உறவினர்களை வரவழைச்சிட்டேண்ணே''

''சரி... நான் ஆர்.எம்.வீ.கிட்ட சொல்றேன். என்ன செய்யணும்கிறதை அவர் பார்த்துக்குவார்''

''நீங்க எப்பண்ணே வருவீங்க?''

''யோவ்.. நான் சி.எம்.ங்கிறதை மறந்துட்டீங்களா? நான் என்னோட இஷ்டத்துக்கு வரமுடியாது. பாதுகாப்பு அதிகாரிகள் சொல்ற நேரத்துலதான் வரமுடியும். தேவை யான ஏற்பாடுகளை ஆர்.எம்.வீ. வந்து செய்வார்'' என்றார் எம்.ஜி.ஆர்.

அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் வந்தார்.

''வேற யாரும் வரவேண்டியிருக்கா?''என விசாரித்தார்.

''முக்கியமான சில உறவினர்கள் வரணும். அவங்கள்லாம் நாளைக்கி சாயங்காலத்துக்குள்ள வந்திரு வாங்க''என்றார்கள் உறவினர்கள்.

உடனே டாக்டர்கள் அடங்கிய குழுவை வரவழைத்தார். அம்மாவின் பாடி இருந்த இடத்தைச் சுற்றி ஸ்கிரீன் போட்டனர். உடல் கெட்டுப்போகாமல் இருக்க அம்மா உடம்பில் பல இடங்களில் இன்ஜெக்ஷன் போட்டனர்.

மறுநாள் காலை... பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற் காக அம்மாவின் உடல் நடிகர் சங்க வளாகத்தில் வைக்கப் பட்டது. முதல்வர் எம்.ஜி.ஆர் உள்ளிட்ட பிரபலங்களும், பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினர்.

அரசு மரியாதையுடன் கே.பி.எஸ்.ஸின் இறுதிச் சடங்கு நடைபெற வேண்டும் என விரும்பிய முதல்வர் எம்.ஜி.ஆர்., சிறப்பு அனுமதி கொடுத்தார். அதன்படி கண்ணம்மாபேட்டை சுடுகாட்டில் அரசு மரியாதையுடன், துப்பாக்கிக் குண்டுகள் முழங்க... கே.பி.எஸ்.ஸின் இறுதிச்சடங்கு நடந்தது.

காலையில் காபி சாப்பிட்டு முடித்ததும் தெய்வீகக் குரலில் முருகன் பாடல்களைப் பாட ஆரம்பிப்பார் அம்மா.

திருவிளையாடல் படத்தில் தான் பாடிய

'பழம் நீ அப்பா, ஞானப்பழம் நீ அப்பா,

தமிழ்ஞானப் பழம் நீ அப்பா' பாடலை அடிக்கடி பாடுவார்.

சிலசமயம் 'கலைஞானப் பழம் நீ அப்பா' என மாற்றிப் பாடுவார்.

'அம்மா கூப்பிடுறாங்களோ?'னு நினைச்சு ஓடிவந்து ''என்னம்மா?''என்பேன்.

''உன்னை யாருடா கூப்பிட்டது. நான் என் முருகனைக் கூப்பிட்டேன்''என்பார்.

''ஏண்டா ஞானம்... 'கலைஞானம்'ங்கிற பேருக்கான காரணத்தை தெரிஞ்சுதான் வச்சிக்கிட்டியா?'' என ஒருநாள் கேட்டார்.

''பாலகிருஷ்ணன்ங்கிற என்பேர்ல வேற சிலர் சினிமாவில் இருக்காங்க. அதனால அபிதான சிந்தாமணியை புரட்டினேன். அதில் '64 கலைகளையும் உள்ளடக்கியதுதான் கலைஞானம்'னு போட்டிருந்தது. அதையே பேரா வச்சுக்கிட்டேம்மா''

''இந்தப் பேருக்கான காரணத்தை சொல்றேன் கேட்டுக்கோ. தேவலோக மகரிஷிகள்லாம் யாகம் நடத்தினாங்க. அதில் 64 கலைகளைக் கொண்ட 'கலைஞானம்ங்கிற பொக்கிஷம் வந்தது. மகரிஷிகள் அதை கலைவாணிகிட்ட குடுத்தாங்க. 'என்னோட கல்வி ஞானத்தைப் பெற்ற பலர் அதை தப்பா பயன்படுத்துகிறார்கள். இது வேறயா? இதை மகாலட்சுமியிடம் கொடுங்க'னு சொல்லீட்டா. லட்சுமி கிட்ட கொடுத்தாங்க. 'கலைவாணியே வேணாம் எனும்போது இதில் ஏதாவது பிரச்சினைகள் வரலாம்னு நினைச்சு... 'இதை சக்திகிட்ட கொடுங்க'னு சொல்லீட்டா. சக்திகிட்ட கொடுத்தாங்க. 'நான் ஏற்கனவே எல்லா ஞானங்களையும் உள்ளடக்கி வேல் வடிவத்தில் முருகனிடம் கொடுத்திட்டேன்'னு சொல்ல... அந்தம்மா காலடியிலயே அந்த பொக்கிஷத்தை வச்சுட்டு வந்துட்டாங்க. அதனால் ஞானவேலான முருகனின் பெயர்தான் கலைஞானம்'' என அம்மா சொன்னார்.

இப்படி அன்புமிக்க தாயாக திகழ்ந்தவரை இழந்தது எனக்கு மிகவருத்தமாகவே இருந்தது.

# கொடுமுடி பேலஸ் பகீர்!

முதல்வர் எம்.ஜி.ஆரின் சிறப்பு உத்தரவின்படி கே.பி. சுந்தராம்பாளம்மாவின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் துப்பாக்கிக் குண்டுகள் முழங்க சென்னை கண்ணம்மா பேட்டை மயானத்தில் நடந்தது.

மறுநாள்... அம்மாவின் உறவினர்கள் எம்.ஜி.ஆரின் கவனத்திற்கு சில விஷயங்களைக் கொண்டு சென்றிருக் கிறார்கள். 'அது என்ன? என்பது எனக்குத் தெரியாது. காலை 11 மணியளவில் எம்.ஜி.ஆர். போன் செய்தார்.

"கலைஞானம்... நான் சொல்றதை கவனமா கேட்டுக் கங்க. அம்மாவோட உறவினர்கள் பீரோ சாவியை உங்ககிட்ட கொடுக்கச் சொல்றாங்க. அதை வாங்கி வச்சிக்கங்க. அடுத்து அம்மாவோட கொடுமுடி பேலஸ் வீட்டுக்குப் போங்க. உங்க தலைமையில் அம்மாவின் உறவினர்களை வச்சுக்கிட்டு அறைகளையெல்லாம் திறந்து பாருங்க. அதில் இருக்க பொருட் களையெல்லாம் எடுத்து, என்னென்ன பொருட்கள் இருக்கு? யார், யாருக்கு பிரித்துக் கொடுக்கணும்னு, உறவினர்களோட சம்மதத்தின்பேரில் பங்கிட்டுக் கொடுங்க. இந்த பெரிய பொறுப்பை நீங்க செய்யணும். இதுக்குமேல நான் உங்களுக்குச் சொல்லணுமா என்ன?" என்றார் எம்.ஜி.ஆர்.

"அப்படியே செய்றேண்ணே" என்றேன்.

சென்னை வீட்டு பீரோ சாவிக்கொத்தை என்னிடம் உறவினர்கள் கொடுத்தார்கள்.



பீரோவைத் திறந்தேன். ஒரு நல்ல தொகையை சேர்த்து வைத்திருந்தார் அம்மா. அதில் ஒரு பேப்பரில் ஒரு தொகை சுற்றப்பட்டும் இருந்தது. 'அட... நம்ம படத்தில் அம்மா நடிக்கிறதுக்காக நாம கொடுத்த அட்வான்ஸ் தொகையாச்சே' என என் நினைவுக்கு வந்தது. 'இது அம்மாவோட கால்ஷீட் கேட்டு நான் கொடுத்த பணம். அம்மாதான் இறந்திட்டாரே... இந்தப் பணத்தை என்கிட்ட கொடுத்திடுங்க' என இந்த நேரத்தில் சொன்னால்... 'என்னடா... எரியுற வீட்ல பிடுங்குறது ஆதாயம்னு நினைக்கிறியா?'னு நம்மளை கேவலமா நினைப்பாங்களே'' என எண்ணியபடி வெளியே சொல்லாமல் அந்தப் பேப்பரில் இருந்த பணத்தையும் மற்ற கரன்சிகளுடன் சேர்த்து ஒரு பெட்டியில் வைத்தேன். அந்த பீரோவுக்குள் இன்னொரு பெரிய சாவிக்கொத்து இருந்தது.

''இதுதான் கொடுமுடி பேலஸ் வீட்டுச் சாவி'' என்றார் அம்மாவின் தாய்மாமன் மலைக்கொழுந்துவின் மகன்.

இவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு அம்மாவின் சொத்துக்கு பாத்தியப்பட்ட நான்கு உறவினர்கள் குடும்பத்தினரிலிருந்து தலா ஒருவர் வீதம் நான்குபேரை என் காரில் ஏற்றிக் கொண்டு நானே கொடுமுடிக்கு காரை ஓட்டினேன். காலையில் புறப்பட்டோம். மாலையில் கொடுமுடி போய்ச் சேர்ந்தோம். வழிச்செலவு, பெட்ரோல் செலவு எல்லாம் என்னுடையதுதான்.

பேலஸ் வீடு என்பதற்கேற்ப அரண்மனை வீடாகவே இருந்தது கொடுமுடி வீடு. பெரிய பூட்டு. திறந்தேன். எல்லோ ரும் உள்ளே போனோம். ஒரு அறையைக் காட்டி ''இங்குதான் அம்மாவின் சகல ஐஸ்வர்யங்களும் இருக்கு'' என்றார்கள்.

அந்த அறையைத் திறந்தேன்.

தங்க ஆபரணங்கள், காசுகள், வெள்ளிப் பொருட்கள், வைர கற்கள்.. என ஒரு பேழையில் சேமித்து வைத்தி ருந்தார் அம்மா. அந்தக்கால ரூபாய் நோட்டுக்கள், சமகால ரூபாய் நோட்டுக்கள் என ஒரு மரக்கா முழுக்க இருந்தது. எனக்கு மிக பிரமிப்பாக இருந்தது.

எல்லாவற்றையும் வெளியே எடுத்துவந்து வைத்தோம். ஆபரணங்கள் தனியாக, ரூபாய் நோட்டுக்கள் தனியாக, என நள்ளிரவு வரை எல்லாரும் உட்கார்ந்து பிரித்து முடித்து லிஸ்ட் எழுதினோம்.

"தங்கத்தை மதிப்பிட்டுவிட முடியும். ஆனால் வைரம் என்பது விலை மதிப்பிட முடியாதது. அதனால் இந்த வைரங்களை சென்னையில் ஒரு யோக்கியமான மார்வாடியை வைத்து மதிப்பிட்டுக்கொள்வோம். அதன் பிறகு பங்கு பிரிக்கிற வேலையைப் பார்க்கலாம்" என்றேன்.

இந்த ஆபரணங்கள், பணத்தையெல்லாம் இன்னொரு பெரிய பெட்டியில் வைத்துப் பூட்டி, அதன் சாவியை நான் வைத்துக்கொண்டேன்.

தூக்கம் அசத்தியது. வெளி வராண்டாவில் கட்டில் போட்டு படுத்தேன். அப்போது உள்ளூர் உறவினர்களில் ஒருவர் வந்து, என் காதோரமாக கிசுகிசுப்பான குரலில் ""அய்யா... விடியிறவரைக்கும் நீங்க தூங்காம இருக்கிறது நல்லது" என்றார்.

திடுக்கிட்டுபோய் கேட்டேன்... "ஏன்?"

"மதிப்பிட முடியாத வைரம், தங்கம், வெள்ளினு இவ்வளவு இருக்கிறது அம்மாவின் உறவினர்களுக்கே தெரியாத விஷயம். ஆனா... மூணாம் மனுஷரான உங்களுக்கு இப்போ தெரிஞ்சு போச்சு"

"அதனால..."

"இதெல்லாம் வெள்ளையா? கருப்பா?னு தெரியாது. இந்த ரகசியங்களை நீங்க வெளியில சொல்லக்கூடும்னு சந்தேகப்பட்டு 'கசுபுசு'னு ஏதோ பேசறாங்க. அதனால உங்க உயிருக்கே ஆபத்து வரலாம்" என மெல்லிய குரலில் பேசிவிட்டுப் போனார்.

இதுக்கு மேல எனக்கு தூக்கம் வருமா?

நான் முழித்தபடியே படுத்துக் கொண்டு நைஸாக தூரத்தில் படுத்திருந்த உறவினர்களையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவர்கள் புரண்டு படுக்கிறபோதெல்லாம் எனக்கு திடுக் கென்றிருந்தது. 'நம்மள நோக்கி வர்றாங்களோ... ஆயுதத்தை கைல எடுக்கிறாங்களோ?'னு பார்த்துக் கிட்டே இருந்தேன்.

"என்ன சார் இன்னும் நீங்க தூங்கலையா?" என கேட்டார் ஒருவர்.

'இந்த ஆளு ஏன் கேட்கிறாரு? ஒரு வேளை அந்த ஆளு சொல்லீட்டுப் போனது சரிதானோ? ஒரு டிரைவரையாவது துணைக்கு கூட்டீட்டு வந்திருக்கலாமோ? இந்த மாதிரி சொத்துப் பஞ்சாயத்துல ஈடுபடுறது தப்போ?' என குழம்பிப் போனேன்.

அதற்குமேல் எனக்கு படுக்கப் பிடிக்கவில்லை. எழுந்து ஊருக்குள் நடந்தேன். அம்மாவுக்குச் சொந்தமான 'கே.பி.எஸ். தியேட்டர் பக்கம்' போனேன். அருகே ஒரு டீக்கடைக்காரர் கடையை இழுத்துப் பூட்ட தயாராக இருந்தார்.

"ஐயா நான் மெட்ராஸ்லருந்து வந்திருக்கேன். டீ வேணும்" என்றேன். அவர் என்னைப் பற்றி விசாரித்தார். நான் சினிமா தயாரிப்பாளர் என்றதும் சுவாரஸ்யமாகப் பேச்சுக் கொடுத்தார். அப்படியே ஒரு மணிநேரம் கழிந்தது. வீட்டில் கட்டிலில் படுத்திருந்த என்னைக் காணாமல் அம்மாவின் உறவினர்கள் மொத்தமாக என்னைத் தேடி வந்துவிட்டனர்.

"புது இடம். அதான் தூக்கம் வரல. ஒண்ணு பண்ண லாமா? மெட்ராஸ்ல எனக்கு முக்கியமான வேலை இருக்கு. இப்பவே கிளம்பீரலாமா?" என்றேன்.

"சரிங்க" என்றார்கள்.

உயிர் தப்பித்த ஃபீலிங் எனக்கு.

மெட்ராஸ் வந்து சேர்ந்தோம்.

இப்போது விஜய்யை வைத்து 'தலைவா' படத்தை தயாரித்த சந்திரபிரகாஷ் ஜெயினின் சித்தப்பா ஜவரிலால் எனக்கு பரிச்சயமானவர்.

வைரக்கற்களை அவரிடம் மதிப்பிடச் சொல்லலாம் என முடிவு செய்தோம். அந்த சேட்டு தன்னுடன் இரண்டு பேர்களை அழைத்து வந்தார். அவர்கள் வைர மதிப்பீட்டாளர்கள்.

நான்கு வைரக்கற்களையும் அவர்களிடம் கொடுத்தோம்.

பரிசோதித்துவிட்டு "யாரோ... டைமண்ட்னு சொல்லி அம்மாவ ஏமாத்தி இதைக் குடுத்திருக்காங்க" என்றார் சேட்டு.

"இப்படிச் சொன்னா எப்படி? சபையில் சரியா சொல்லுங்க. இதை வித்தா என்ன தேறும்?" என்றேன்.

"டிபனுக்குக்கூட தேறாது. உங்க சினிமாப் படத்துல காட்ற டூப்ளிகேட் வைரம் இது. எங்க மேல நம்பிக்கை இல்லேன்னா வேற யார்கிட்டயாவது குடுத்து பரிசோதனை பண்ணிக்கங்க" என்றார். அவரை அனுப்பிவிட்டு பங்கு பாகம் பிரித்தேன்.

சுந்தராம்பாளம்மாவின் தாய்மாமன் பிள்ளைகளுக்கு இரண்டு பங்குகள். சுந்தராம்பாளம்மாவின் தம்பி கனகசபாபதியின் இரு மனைவிகளின்

பிள்ளைகளுக்கு தலா ஒரு பங்கு... என சமமாக நான்கு பங்குகள் பிரித்து அவர்களிடம் ஒப்படைத்தேன். அந்த வைரம் போன்ற நான்கு கற்களையும் நான்கு பங்குதாரர்களுக்கும் கொடுத்துவிட்டேன்.

"ஒரு வழியா வேலை முடிஞ்சதே..'' என பெருமூச்சு விட்டேன்.

# இன்றைய நீதிபதி வாசுகி அன்றே சொன்ன முடிவு!

கே.பி. சுந்தராம்பாளம்மா இறந்து இரண்டு மாதங்கள் கழிந்த நிலையில்....

''அம்மா உயிரோட இருக்கும்போதே இந்த வீட்டை எனக்கு வித்துட்டாங்க. நானும் அட்வான்ஸ் கொடுத்திட்டேன். இதோ அம்மா எனக்கு எழுதிக் கொடுத்த லெட்டர். உடனே நீங்க வீட்டைக் காலி பண்ணுங்க'' எனச் சொன்னபடி வீட்டு புரோக்கரான அய்யர் ஒருவர் அம்மா வீட்டில் குடியேறி விட்டார்.

ஐந்து கிரவுண்ட் இடத்துடன் கூடிய இந்த வீட்டுக்கான மதிப்பு ரொம்பவே குறைக்கப்பட்டிருந்தது.

'அய்யரை வெளியேத்தணும். அதே சமயம் வீட்டை நியாயமான விலைக்கு விற்று அதை நாலு பங்காக பிரித்து கொடுத்துவிட வேண்டும். இதற்கு என்ன செய்யலாம்?' என நான் யோசித்துக்கொண்டிருந்தபோது... சென்னை உயர்நீதிமன்றத்தில் வக்கீலாக பணிபுரிந்துவந்த வாசுகி, எனது உறவினரான மாப்பிள்ளை வக்கீல் இளங்கோவனுடன் வந்து என்னைப் பார்த்தார். சுந்தராம் பாளம்மாவின் தம்பி கனகசபாபதியின் மகள்தான் வக்கீல் வாசுகி.

வாசுகியின் யோசனைப்படி நான் செயல்பட்டேன். புரோக்கர் அய்யர் இந்த வீட்டின் மீது கொடுத்திருந்த அட்வான்ஸைவிட இரு மடங்கு கொடுத்து அய்யரை வெளியேற்றினோம். பிறகு இந்த வீட்டை நல்ல விலைக்கு விற்று நான்கு பங்குகளாக பிரித்து கொடுக்கப்பட்டது.



சிக்கல் நிறைந்த இந்த விஷயம் புத்திசாலித்தனமாகவும், சுமுகமாகவும் முடிய வக்கீல் வாசுகிதான் காரணம். (அதன்பிறகு பல சந்தர்ப்பங்களில் வாசுகியை சந்திக்க வேண்டும் என நினைப்பேன். வாய்ப்பு அமையவில்லை.)

அந்த வக்கீல் வாசுகி இன்று உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதியாக இருக்கிறார். திறமையுள்ள வாசுகி, சீரும் சிறப்புமாக நோயற்ற வாழ்வு வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.



'எதிர்வீட்டு ஜன்னல்' படத்திற்குப் பிறகு எனது இயக்கத்தில் 'நெல்லிக்கனி' படத்தைத் துவங்கினேன். என் தம்பி ஆர்.எம்.நித்யானந்தனின் மனைவி என்.சகுந் தலா பெயரில் இந்தப் படம் தயாரிக்கப்பட்டது. 'இளஞ்ஜோடிகள்', 'பக்கத்து வீட்டு ரோஜா', மிருதங்க சக்கரவர்த்தி', 'ராஜரிஷி' போன்ற படங்களையும் சகுந்தலா பெயரிலேயே தயாரித்து வெளியிட்டேன். என் தயாரிப்பு பணிகளில் என் தம்பி நித்யானந்தமும், என் தங்கை மகனும், மருமகனுமான எஸ்.ஏ.நடராஜனும் உறுதுணையாக இருந்தனர். வள்ளல் அதியமானுக்கு கிடைத்த கருநெல்லி போல் எனக்கும் 'நெல்லிக்கனி' என்கிற அருமையான கதை கிடைத்தது. சிவக்குமார், சிவச்சந்திரன் என இரண்டு ஹீரோ. கதாநாயகியாக புதுமுகம் சொப்னாவை அறிமுகம் செய்தேன். (அதன் பிறகு சொப்னா இந்திப் படங்கள்வரை நடித்து புகழ் பெற்றார்.)



வில்லனாக நடித்து வந்த சிவச்சந்திரனை 'நெல்லிக் கனி'யில் அப்பாவியாக நடிக்க வைத்தேன். ஜனங்கள் அதை ஏற்கவில்லை. அதனால் இது சுமார் ரக படமாக அமைந்தது. அதே சமயம் சர்க்கஸ் மரணக் கிணற்றில் பைக் ஓட்டும் சாகஸ வீரராக பிரமாதமாக நடித்திருந்தார் சிவக்குமார்.

ஊட்டியில் சிவக்குமார் சம்பந்தப்பட்ட காட்சிகளை படமாக்க ஸ்பாட்டுக்கு போய்விட்டோம். ஆனால் நீண்ட நேரமாக வெயில் வராததால் ஷூட்டிங் நடத்த முடிய வில்லை. 'ஷூட்டிங் நடக்காவிட்டால் நஷ்டமாகுமே' என்கிற கவலையில் முக வாட்டமாக இருந்தேன். இதை சிவக்குமார் கவனித்து விட்டார்.

''என்ன ஒரு மாதிரியா இருக்கீங்க. கண்டிப்பா வெயில் வரும். பதட்டமில்லாம இப்படி வந்து உட்காருங்க'' என்றார்.

பல விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தபோது... பேச்சு சின்னப்ப தேவரைப் பற்றி வந்தது.

நான் எப்படி தேவருக்குப் பிடித்த கதைக்கார னாக இருந்தேனோ... அதுபோல தேவரின் செல்லப் பிள்ளையாக இருந்தவர் சிவக்குமார். இருவரும் தேவர் நினைவுகளிலேயே மூழ்கிப் போனோம்.

விட்டலாச்சார்யாவின் மகன் சீனிவாசன் இயக்கத்தில் சிவக்குமார் நடித்த ஒரு படத்தை மவுண்ட்ரோடு குளோப் தியேட்டரில் தேவர் பார்த்திருக்கிறார். சிவக்குமாரின் நடிப்பு ரொம்ப பிடித்துப்போகவே... 'இவன்தான் நம்ம அடுத்த படத்து ஹீரோ' என தேவர் தியேட்டரிலேயே முடிவு செய்துவிட்டார். அந்தச் சமயம் சிவக்குமார் ஐம்பது படங்களில் நடித்திருந்தாலும் 'நீ தேவர் ஃபிலிம்ஸ்ல நடிச்சாத்தான் பட்டி தொட்டியெல்லாம் புகழ்பெற முடியும்' என பலரும் சொல்லிக் கொண்டிருந்த நிலையில் தேவரிட மிருந்து அழைப்பு. தேவரைச் சந்தித்தார் சிவக்குமார்.

''வாப்பா... நீ நம்ம ஊர்க்காரனில்லியா''

''ஆமாண்ணே... நான் ஐம்பது படம் நடிச்ச பிறகுதான் இது உங்களுக்கு தெரிஞ்சிருக்கு''

'என்னடா இந்தப்பய எடுத்தவுடனே இப்படி மடக்குறான்' என தேவருக்கு ஆச்சர்யம்.

''ஏம்ப்பா நீ இப்போ படத்துக்கு எவ்வளவு சம்பளம் வாங்குற?''

''என்னை புக் பண்ணணும்னு முடிவு செஞ்சப்பவே நாலு கம்பெனிகளுக்கு போன் போட்டு விசாரிச்சிருப்பீங்களே... உங்களுக்குத் தெரியாதா?''

''சரிப்பா... நம்ம கம்பெனிக்கு எவ்வளவு கேட்குற?''

''படம் ஓடின உடனே சம்பளத்தை ஏத்துற ஆள் நான் இல்லை. விட்டலாச்சாரியார் குடுத்த 25 ஆயிரத்தையே நீங்களும் குடுங்க''

''ரெண்டு படத்துக்கு அக்ரிமெண்ட் போட்டுக்கலாம். நாற்பதாயிரம் சம்பளம். பத்தாயிரம் அட்வான்ஸ் வாங்கிக்க''

''தேவர் ஃபிலிம்ஸ்ல நான் நிறைய படம் பண்ணணும். இப்போதைக்கு ஒரு படத்துக்கு மட்டும் பேசுவோம்''

''யப்பா... சரியான எம்டனா இருக்க. உன் பேச்சுப்படியே இருக்கட்டும். அட்வான்ஸை வாங்கிக்க''

"வேண்டாண்ணே... நீங்க செட்ல பயங்கரமா கோயம்புத் தூர் பாஷயில திட்டுவீங்களாம். 'காசு வாங்கினேல்ல. ஒழுங்கா நேரத்துக்கு வந்து நடி'னு கோபப்படுவீங்களாம். அதனால் படம் முடியிறவரை நான் பணம் வாங்கிக்க மாட்டேன்"

சிவக்குமார் இப்படிச் சொல்லவும் தேவர் டென்ஷனாகி விட்டார்.

"ஆமா... ஹீரோயின் யாருண்ணே?"என சிவக்குமார் கேட்க... தேவர் சிரிக்க ஆரம்பித்துவிட்டார்.

"நீ என்ன பண்றியோ, ஏது பண்றியோ... எனக்குத் தெரியல. ஆனா... உன் பேரைச் சொன்னா எல்லா நடிகைகளுக்குமே ஒரு கிளுகிளுப்பு வருது" என தேவர் சொல்ல... ’’

சிவக்குமார் ‘உம்மென ஆகிவிட... தேவரோ, "அட.. சிரியேம்ப்பா" எனச் சொல்லியிருக்கிறார்.

"அண்ணே... கோவணம் கட்டாத ஊர்ல, கட்டினவன் கோமாளி. உங்களுக்கு எங்க அப்பா வயசிருக்கும். இருந்தாலும் உங்ககிட்ட சொல்றேன். நான் ராமனோ, புத்தனோ இல்லை. ஆனா... அரிதாரப் பொட்டுவச்சு நடிக்கிற எந்த ஹீரோயினையும் நான் கெட்ட எண்ணத் துல தொட்டதில்ல. நாளைக்கே அப்படி ஒரு தப்பை பண்ணினா.. 'அண்ணே என்னை மன்னிச்சிடுங்க. நான் யோக்கியமானவனில்லை'னு நெஞ்சை நிமிர்த்தி சொல்லுவேன்" என நான் சொன்னதும்... உணர்ச்சி வசப்பட்ட தேவர், "அட சாமி... என்ன பையன்டா நீ? டேய் சிவா... கடைசிவரைக்கும் நீ இப்படியே இருந்தேன்னா அந்த முருகன்கூட உன்னை ஒண்ணும் பண்ணமுடியாதுடா... நீ நல்லா இருடா" என ஆசிர் வதித்தார்.

"தேவரண்ணனோட ஆசிர்வாதம் எனக்கு எப்பவுமே இருக்கும் கலைஞானம் சார். நான் பொறந்தப்பவே எங்கப்பா இறந்துட்டாரு. அம்மாதான் வளர்த்தாங்க. "ஒருவேளை எனக்கு பொண்ணு கொடுக்க யாராவது முன்வந்தா நீங்கதான் கல்யாணத்த நடத்தி வைக்கணும். கல்யாணச் செலவுக்காக என்னோட சம்பளம் உங்ககிட்டவே இருக்கட்டும்'னு தேவரண்ணன்கிட்ட சொல்லீருந்தேன். ஆனா அவர் அதை மறந்திட்டார் போல. 'வெள்ளிக்கிழமை விரதம்’ படப்பிடிப்பு முடியிற கட்டத்தில் போன்பண்ணி 'அக்கவுண்ட்ட குளோஸ் பண்ணணும். உடனே வந்து உன் சம்பளத்தை வாங்கிட்டுப் போ' என்றார்.

எனக்கு பயங்கர கோபம். "அண்ணே... நீங்கள்லாம் கல் சிலைக்கு கனகாபிஷேகம் பண்ணுவீங்க. பழநி முருகனுக்கு தங்கத் தேர் இழுப்பீங்க. மனுஷனுக்கு எதுவும் செய்யமாட்டீங்க. நீங்க கல்யாணம் பண்ணிவச்சா நான் நல்லா இருக்க மாட்டேன். இதோ... வந்து பணத்தை வாங்கிக்கிறேன்'' என்றேன்.

"கோவிச்சுக்காத சிவா, மறந்துட்டேன்''னு சொன்னதுடன் பெருந்தன்மையுடன் 'மன்னிச்சுக்கப்பா' என்றார் தேவர்.

"என்ன பாசம்... என்ன நேர்மை... உருகிப் போய்ட்டேன் கலைஞானம் சார்'' என்றார் சிவக்குமார்.

# சுடுகாட்டு ஞானம்!

**ஊ**ட்டியில் 'நெல்லிக்கனி' ஷூட்டிங் ஸ்பாட். படம் பிடிக்கத் தேவையான வெயில் வராமல் மோடமாக இருந்ததால், நானும் சிவக்குமாரும் சின்னப்பத்தேவரின் நினைவலைகளில் மிதந்தோம். தேவருடனான தனது அனுபவங்களை சிவக்குமார் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

"கோயம்புத்தூர் தண்டுக்காரன்பாளையம் கம்மாநாயுடு கோயில் அருகேதான் என்னோட கல்யாணம் நடந்தது கலைஞானம் சார். சொன்னபடியே தேவரண்ணன் வந்து முன்ன நின்னு வாழ்த்தினார். டைரக்டர் ஏ.பி.நாகராஜனும் வந்து வாழ்த்தினார். 06-01-1974-ல் சென்னை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் கல்யாண வரவேற்பு. தேவர் ஃபிலிம்ஸ் பொறுப்பில், மேஜர் சுந்தர்ராஜன் நாடகக்குழுவைச் சேர்ந்தவர்கள் உதவியோட ஜாம்ஜாம்னு நடந்தது. மணமக்களான நாங்க மண்டபத்துக்குள் நுழைஞ்ச துமே... 3அடி உயரமுள்ள ரெண்டு வெள்ளிக் குத்து விளக்குகளை எங்ககிட்ட கொடுத்து ஆசிர்வதித்தார் தேவரண்ணன். ஆனால் அதன்பிறகு அவரை மண்டபத் தில் பார்க்க முடியலை. மறுநாள்... தேவர் ஃபிலிம்ஸ் புரொடக்ஷன் மேனேஜர் கணேசனிடம் 'அண்ணே... தேவரண்ணனை திடீர்னு காணலையே ஏன்?'னு கேட்டேன்.

"தேவரண்ணனோட மாமியார் நேத்தைக்கி காலைல இறந்துட்டாங்க. ஆனா உங்க கல்யாண ரிஷப்ஷன்ல கலந்துக் கிடணும்கிறதுக்காக சாயங்காலம்வரை இருந்து... முதல்ஆளா உங்களை வாழ்த்திட்டு... அதன் பிறகு தன்னோட மாமியாருக்கு இறுதிச்சடங்கு செய்ய, கோயம்புத்தூருக்கு கிளம்பிப் போனாரு'ன்னு சொல்லவும் நான் நெகிழ்ந்துபோய்ட்டேன். தன்னோட துக்கத்தை மனசில அடக்கிக்கிட்டு வழக்கமான புன்னகை மாறாமல் எங்களை வாழ்த்தினாரே...'''என உருகிப்போய் சொன்னார் சிவக்குமார்.



ஊட்டியில் லாஸ் ஃபால்ஸ் அருகில் பகல் ஒருமணிக்கு 'ஆட்டுக்கார அலமேலு' ஷூட்டிங் நடந்துகொண்டிருந்தது. உணவு இடைவேளையிலும் டைரக்டர் தியாகராஜன் ஷூட்டிங் நடத்தியதால் கோபமான தேவர், தன் மருமகன் என்றும் பாராமல் தியாகராஜனை கெட்டவார்த்தையால் திட்ட... சுற்றுலாப் பயணிகள், தேவரின் வசவைப் பார்த்து மிரண்டு போனார்கள். இது சிவக்குமாருக்கு வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

மதிய உணவு... கல்லாறு இரும்பு பாலத்தையொட்டிய ரோட்டோரம் பவானி கம்பளம் விரித்து பரிமாறப்பட்டது. தேவருக்கு மட்டும் ஒரு டிபன் கேரியரில் உணவு வந்திருந்தது. சிவக்குமாரின் அருகில் சாப்பிடுவதற்காக உட்கார்ந்தார் தேவர். அப்போது இருவருக்கும் இடையே நடந்த சம்பாஷனை....

"என்னண்ணே... உங்களுக்கு மட்டும் ஸ்பெஷல் சாப்பாடா?"

"ஆமாம்ப்பா... ராகிக்களியும், கொத்தமல்லி சுண்டாங்கி யும்."

''அண்ணே... நீங்க பெரிய கில்லாடிண்ணே. ''தேவர் எவ்வளவு பெரிய மனுஷன். ஆனா சிம்பிளா ராகிக்களி சாப்பிடுறார்'னு ஊர் உலகத்தை நம்ப வச்சிட்டு, வீட்டுக்குப் போய் சிக்கன் பிரியாணி, மீன் வருவல்னு வெட்டுவீங்க. எனக்குத் தெரியாதா...?''

''சிவா... என் கோவத்தைக் கிளறாத. கெட்டவார்த்தையில் திட்டிப்போடுவேன். எனக்கு சர்க்கரை வியாதி. இதைத் தான் சாப்பிடணும்னு டாக்டர் உத்தரவு போட்டிருக்காரு.''

''உங்க இதயத்துல கோளாறு இருக்குனு டாக்டர் சொல்றாரு. ஆனா நீங்க வைத்தியம் பார்க்கிறீங்களா? ரெண்டு கையாலயும் நடு நெஞ்சுப் பகுதியை ரெண்டு குத்து குத்தி 'ஒண்ணுமில்லை'னு உங்களை நீங்களே ஏமாத்திக்கிறீங்க.''

''இல்லப்பா. இருக்குற வரைக்கும் நோவு இல்லாம இருக்கணும்னா நான் இந்தக் களியைத் தின்னுதான் காலம் தள்ளணும்.''

''ஊர்ல கூலிநாலிக்குப் போற ஏழைங்கதான் ராகிக்களி திம்பாங்க. மத்தவங்க சோளச்சோறு, தினைச்சோறு, கம்மஞ்சோறு சாப்பிடுவாங்க. பெரிய பணக்காரங்கதான் அரிசிச்சோறு சாப்பிடுவாங்க. இவ்வளவு பணக்காரனான பிறகும் கடவுள் பழையபடி உங்களை களி திங்க வச்சுட்டாரே. அப்புறம் எதுக்கு அப்படி காட்டுக் கத்து கத்தி, ஷூட்டிங் ஸ்பாட்ல மாப்பிள்ளையை திட்டினீங்க?. நம்ம பொண்ண கௌரவமா வாழ வச்சுக்கிட்டிருக்க மாப்பிள்ளையை நடுரோட்டில் வச்சு நீங்க திட்டினது தப்பு.''

இப்படி சிவக்குமார் சொல்ல... சின்னக் குழந்தை மாதிரி கண்களாலேயே 'ஸாரிப்பா' என்றாராம் தேவர்.

'ஆட்டுக்கார அலமேலு' படப்பிடிப்பின்போது...

''ஏண்ணே... ஹீரோ செய்ற வேலைகளையெல்லாம் ஆடு செய்யுது. டிரான்ஸிஸ்டரை ஆன் பண்ணுது. ரெயில்வே கேட்டை மூடுது. ஹீரோயினுக்காக சண்டை போடுது. அப்புறம் ஹீரோவா நான் எதுக்குண்ணே?''னு தேவரண்ணன் கிட்ட கேட்டேன்.

'அட சும்மாருப்பா. அடிச்சுப்பிடிச்சு இந்தப் படத்தை எடுத்து முடிச்சு ரிலீஸ் பண்ணீருவோம். அடுத்தாப்ல உன்னை வச்சு நல்லபடம் எடுக்குறேன்'னு தேவர் சொன்னார். ஆனா.. தேவர் ஃபிலிம்ஸ் வரலாற்றிலேயே ரெக்கார்ட் பிரேக் கலெக்ஷனா 'ஆட்டுக்கார

அலமேலு'அமைஞ்சதும், முதல்வர் எம்.ஜி.ஆர். கையால் ஷீல்டு வாங்கினது உங்களுக்குத் தெரிஞ்ச விஷயம் தானே'''என்ற சிவக்குமார், ''என்னோட மகன் சரவணன் (சூர்யா) பிறந்தபோது வடபழனி முருகன் கோயில்ல அர்ச்சனைபண்ணி நர்ஸிங் ஹோமிற்கே வந்து ஆசிர்வதித்து ஒரு சவரன் நாணயம் கொடுத்தார். கார்த்தி பிறந்தபோதும் இப்படிச் செய்தார். என் மகள் பிருந்தாவுக்கு தேவரண்ணனின் நேரடி ஆசிர்வாதம் கிடைக்கல. ஆனாலும் இன்றளவும் தேவரண்ணனோட ஆசி எங்க குடும்பத்துக்கு உறுதுணையா இருந்துக்கிட்டு தான் இருக்கு'' என என்னிடம் சொன்னபோது சிவக்குமாரின் கண்கள் பனித்துப் போயிருந்தன.

அந்த நெகிழ்வில் இருந்த எங்களை சுட்டெழுப்பியது வெயில். ஆமாம்... வெயில் வந்தது. விறுவிறுவென படப் பிடிப்பை நடத்திவிட்டுக் கிளம்பினோம்.

சிவக்குமார் என்கிற அபூர்வ மனிதனைப் பற்றி நான் சில விஷயங்களைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

'தங்கத்திலே வைரம்', 'பாதபூஜை' என நான் கதை எழுதிய இரண்டு படங்களில் நடித்த சிவக்குமார் மூன்றாவதாக எனது இயக்கத்தில் ''நெல்லிக்கனி'யில் நடித்தார். 'தங்கத்திலே வைரம்' படப்பிடிப்பு மைசூரில் நடந்தபோதே நானும், சிவக்குமாரும் நெருங்கிப் பழக ஆரம்பித்துவிட்டோம். அந்தப் படத்தில் கமலும் ஒரு ஹீரோ. அவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாகும்போது நானும் சிவக்குமாரும் மைசூர் பிருந்தாவனத்தில் ஒரு ஓரமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்போம்.

''பெரிய பெரிய ஹீரோக்கள்கூட சேர்ந்து நடிச்சதால எனக்கு அவ்வளவா முக்கியத்துவம் கிடைக்கலையேனு ஒரு சலிப்புத் தன்மை இருந்தது. இனிமே நான் தனிப்பட்ட முறையில் ஹீரோவா நடிக்கணும். இல்லேன்னா... கமல் மாதிரி அப்-கம்மிங் ஹீரோக்களுடன் நடிக்கலாம்னு முடிவு செஞ்சிருக்கேன். நான் நிறைய சம்பாதிக்கணும்னு பேராசைப்படல. ஆனா நல்ல பெயர் கிடைக்கணும்னு ஆசைப்படுறேன். சூலூருக்குப் பக்கத்துல பத்தாயிரம் ரூபாய்க்கு கரும்புத் தோட்டம் வாங்கிவிட்டேன். எனக்கு அது போதும் கலைஞானம் சார்'' என்றார் சிவக்குமார்.

பத்தாயிரம் ரூபாய் என்பதை ஏதோ பத்தாயிரங்கோடி என்பது போல் நீட்டி முழக்கிச் சொன்னார். இன்றுவரை அவர் பேராசைப்படாமல் இருப்பதை நான் அறிவேன். அவருக்குத் தெரிந்த சில நல்ல மனிதர்களின் சோகமான தோற்றத்தைப் பார்த்தால்... ''என்ன ஒருமாதிரி

இருக்கீங்க? பணம் எதுவும் தேவையா?" எனக் கேட்டு எதிர்பார்த்து வந்தவர், எதிர் பார்க்காத அளவுக்கு கூடுதலாக கொடுத்து சந்தோஷப்படுத்தி அனுப்பி விடுவார்.

'சுடுகாட்டு ஞானம்' என்கிற கதையைச் சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு மகாகஞ்சன் ஒரு சாவு நிமித்தம் சுடுகாட்டிற்கு போய் ஒரு ஓரமாக உட்கார்ந்திருக்கிறான். அங்கே எலும்புக்கூட்டின் கை ஒன்று 'நீ எப்போது வரப்போற?' என கஞ்சனைப் பார்த்து கேட்பதுபோல் இருக்கிறது. பக்கத்தில் ஒரு மண்டைஓடு 'சௌக்யமா? என் கதை தெரியுமா? நான் என் மகனுக்கு கோடி கோடியா சேர்த்து வச்சேன். அந்தப் படுபாவி என்னை புதைக்கப் போகையில் நான் கட்டியிருந்த தங்கப் பல்லைப் பார்த்துவிட்டு அதை தட்டி எடுத்துப்போனான். அவன் செத்தா அந்த சொத்தையெல்லாம் தூக்கிட்டா வரப்போறான்?. ரொம்ப வேதனையா இருக்கு. நீ சீக்கிரமா இங்கு வா. என்னோட மிச்ச கதையைச் சொல்றேன்''என மண்டைஓடு சிரிப்பதுபோல இருந்தது. அப்போது 'அய்யா' என ஒரு குரல். திரும்பிப் பார்த்தான் கஞ்சன்.

'எங்க அம்மா ஆஸ்பத்திரியில இருக்காங்க. மாத்திரை வாங்க நீங்க பணம் குடுத்து உதவணும்' என்றான். 'அடப்பாவி... நேத்து இருந்தவன் இன்னைக்கு இல்ல. பணத்தை வச்சு என்னடா கட்டியாளப் போறேன். சாயங்காலமா வீட்டுக்கு வா, பணம் தர்றேன்' எனச் சொன்னான் கஞ்சன். மாலைநேரம். 'அய்யா.. ஒங்க சுடுகாட்டு நண்பர் பணம் கேட்டு வந்திருக்கார்' என்றான் வேலைக்காரன். 'ஒரு பேச்சுக்குச் சொன்னா உடனே வந்திட்டானே' என்றபடி ஐநூறு ரூபாயை வேலைக்காரனிடம் கொடுத்தான். திடீரென மனம் மாறிய கஞ்சன் 'கஷ்டப்பட்டு சம்பாதிச்ச பணம். அவனுக்கு 250 ரூபா குடு போதும்' என பாதியை வாங்கிக்கொண்டான். 'சரிங்க...' என வேலைக்காரன் செல்ல... 'டேய் நில்லு. நான் அவனுக்கு இனாம்தானே கொடுக்கிறேன். நூறு ரூபா குடு போதும்' என பாக்கியை வாங்கிக் கொண்டான்.

கஞ்சனுக்கு காலையில் ஏற்பட்டது சுடுகாட்டு ஞானம். மாலையில் ஏற்பட்டது சொத்து சேர்க்கிற ஞானம். இப்படிப்பட்ட புத்தி உள்ளவர்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற மாட்டார்கள். ஆனால் சிவக்குமாருக்கு சுடுகாட்டு ஞானமோ, சொத்து ஞானமோ கிடையாது. அவர் சுயஞானம் கொண்டவர். கொடுத்த வாக்கை எந்த நிலையிலும் காப்பாற்ற தவறமாட்டார் சிவக்குமார்.

# நாக்கு ஏன் படைக்கப்பட்டது!

தேவரின் பேரன்... அதாவது தேவரின் மகன் தண்டபாணியின் மூத்த மகனுக்கு இரண்டு சிறுநீரகங்களும் பழுதாகி விட்டது. ஆபரேஷன் செய்வதற்காக மகனை அழைத்துக் கொண்டு 20-10-2011 வாக்கில் சென்னை வந்த தண்டபாணி, தி.நகர் ராஜாபாதர் தெருவில் ஒரு ஹோட்டலில் தங்கினார். ஆபரேஷனுக்கு குறைந்தபட்சம் இரண்டு லட்ச ரூபாய் தேவை. இதற்காக தண்டபாணி பலரிடம் பணம் கேட்டும் கிடைக்காமல் சோர்ந்துபோய் ஹோட்டலில் உட்கார்ந்திருக்க... இதையெல்லாம் அறிந்த, எனக்குத் தெரிந்த அந்த ஹோட்டலின் ஊழியர் ஒருவர் எனக்கு போன் பண்ணிச் சொன்னார்.
உடனே நான் தண்டபாணிக்கு போன் செய்தேன். நான் அவரை எப்போதும் "முதலாளி"என்றே அழைப்பேன்.

"முதலாளி நீங்க எப்ப சென்னைக்கு வந்தீங்க?"

"மூணுநாள் ஆயிடுச்சுங்கண்ணே."

"மூத்த பையனுக்கு ஏதோ பிரச்சினைனு..."

"ஆமாண்ணே. ரெண்டு கிட்னியும் ஃபெயிலியர். திருச்சி யில எங்களுக்கு வேண்டப்பட்ட டாக்டர் இருக்கார். 'ரெண்டு லட்சம் இருந்தா ஆபரேஷன் பண்ணிடலாம்'னு சொல்றார். பல இடங்கள்ல முயற்சி பண்ணியும் கிடைக்கலண்ணே."

"பல இடங்கள்னா... எந்த இடம்?"

"சினிமா சம்பந்தப்படாத நண்பர்களிடம்..."

"என்ன முதலாளி. பையன் சீரியஸ் கண்டிஷன்ல இருக்கான். மூணுநாளா அசால்ட்டா இருக்கீங்களே? நீங்க பணம் கேட்க வேண்டிய இடமே...

உங்க அப்பாகிட்ட தொழில் பண்ணின நடிகர்களிடம்தான். அவங்ககிட்ட கேட்டா உடனே கிடைக்குமே?'



"அவங்களுக்கெல்லாம் அப்பா குடுத்துத்தான் பழக்கம். நான் போய் அவங்களிடம் கையேந்த அவமானமா இருக்கே" என தழுதழுத்த குரலில் சொன்னார் தண்ட பாணி.

"முதலாளி... உங்களோட கௌரவப் பிரச்சனையை முதல்ல மூட்டைகட்டி வெச்சிட்டு, பையனைக் காப்பாத் துற வேலையைப் பாருங்க. நான் ஒரு யோசனை சொல்றேன். அஞ்சு நிமிஷத்துல நான் திரும்பவும் உங்க லைனுக்கு வர்றேன்"என போனை கட் பண்ணினேன்.

சிவக்குமாருக்கு போன் போட்டு விஷயத்தை விளக்கிச் சொன்னேன்.



பதறிப்போன சிவக்குமார், "அண்ணா... இப்ப நான் என்ன செய்யணும்? எங்கே இருக்கார் தண்டபாணி? யார்கிட்டேயும் அவர் கேட்கவேண்டாம். எவ்வளவு பணம் தேவையோ... அவ்வளவையும் இப்பவே தர்றேன். தண்டபாணி இருக்கும் இடம் சொல்லுங்க"என்றார்.

"நீங்க போகவேணாம். பணத்தை மட்டும் எடுத்துவைங்க. அவரை வந்து பார்க்கச் சொல்றேன்"எனச் சொல்லிவிட்டு போனை கட் பண்ணினேன்.

மறுபடி தண்டபாணிக்கு போன்போட்டு விஷயத்தைச் சொன்னேன்.

"அண்ணா... அங்க போறதுக்கு மனசு கஷ்டமா இருக்கு. நீங்களே வாங்கிக் கொடுத்திடுங்க."

"இங்கதான் தப்பு பண்றீங்க முதலாளி. ஒரு மனுஷன் எவ்வளவு பணம் வேணும்னாலும் தர்றேங்கிறார். பையனோட உயிர் முக்கியம்னு பதறுறார். கைல பணத்தை வச்சுக்கிட்டு வீட்டு வாசற்படியிலயே நிற்கிறாரு. உடனே கிளம்புங்க" என்றேன்.

தண்டபாணியிடமிருந்து பதில் இல்லை. அதட்டலாய்க் கேட்டேன்... "புறப்பட்டாச்சா?"

"இதோ... புறப்பட்டுட்டேன்..."என்றார்.

போனை கட் பண்ணிவிட்டு, மீண்டும் சிவக்குமாருக்கு போன் போட்டேன். என் போனை எதிர்பார்த்திருந்த சிவக்குமார் "சொல்லுங்கண்ணா"என்றார்.

"நீங்க பணத்தோட வாசற்படியில் தயாரா நிற்பதா சொல்லீட்டேன். இப்போ வந்திடுவார். தயாரா இருங்க" என்றேன்.

சிறிது நேரத்தில் தண்டபாணி வந்ததும் வரவேற்று கூடுதலாகவே பணம் கொடுத்த சிவக்குமார் "உடனே ஆபரேஷனுக்கான வேலையைப் பாருங்க. மேலும் பணம் தேவைப்பட்டா தயங்காம எனக்கு போன் பண்ணுங்க" எனச் சொல்ல... நன்றி சொல்லிவிட்டு தண்டபாணி கிளம்பினார்.

திருச்சி மருத்துவமனையில் பையனுக்கு ஆபரேஷன் நடந்து... குணமானான்.

அடிக்கடி எனக்கு போன் செய்து 'தண்டபாணியின் பையன் நல்லா இருக்காரா?'னு என்னிடம் கேட்டுக் கொண்டேயிருப்பார் சிவக்குமார்.

எத்தனையோ பேர் கஷ்டங்களுக்கு தேவரண்ணனிடம் சொல்லி பணம் வாங்கிக் கொடுத்திருக்கேன். அள்ளித் தந்த தேவர் பேரனுக்கு இப்படி ஒரு நிலையா?' என நான் அந்தச் சமயம் கலங்கிப் போனேன். 'நல்லவேளை சமயத்தில் உதவினாரே...' என சிவக்குமாரை மனசார வாழ்த்தினேன். 'தேவரண்ணன் பேரனுக்கு உதவும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தீர்களே' என சிவக்குமார் அன்றிலிருந்து நட்பையும் தாண்டி என்னை மூத்த சகோதரனாக இன்றுவரை பாவித்து வருகிறார்.

பக்கத்து இலைக்கு நான் பாயாசம் கேட்டால் முதலில் என் இலை காலியாக இருப்பதைப் பார்த்து எனக்கு முதலில் பாயாசம் ஊற்றிவிட்டுத்தான் பக்கத்து இலைக்கு ஊற்றுவார். இது சிவக்குமாரின் குணாதிசயம். அந்த அளவுக்கு என் கஷ்டங்களுக்கு குறிப்பறிந்து உதவி வருகிறார். சிவக்குமாரை புகழ்ந்து பேசினால் அவருக்கு பிடிக்கவே பிடிக்காது. ஆனாலும் நான் பாராட்டுகிறேன். நாக்கு ஏன் படைக்கப்பட்டது? உண்பதற்காக மட்டு மல்ல... நல்லவர்களை வாழ்த்தவும்தான்.

1981-ஆம் ஆண்டின் இறுதியில் 'இளஞ்ஜோடிகள்' என்கிற கதையை எழுதி முடித்தேன். இந்தக் கதை இந்திய சினிமாவையே கலக்கியது.

'இளஞ்ஜோடிகள்' தலைப்பிற்கேற்ப இரண்டு இளஞ் ஜோடிகள் தேவைப்பட்டார்கள். அந்தச் சமயம் கார்த்திக்- ராதாவை அறிமுகப்படுத்தி, பாரதிராஜா இயக்கிய 'அலைகள் ஓய்வதில்லை' பரபரப்பாக ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு ஹீரோவாக கார்த்திக்கை ஒப்பந்தம் செய்வதற்காக அவரின் வீட்டுக்குப் போனேன். கார்த்திக்கின் தந்தை முத்துராமன் எனக்கு மிக நெருங்கிய நண்பர்.

முத்துராமன் சென்னையில் நாடகங்களில் நடித்தபடியே எஸ்.எஸ். ஆரின் சிபாரிசில் ஒரு படத்தில் வக்கீலாக சினிமாவுக்குள் நுழைந்தார். கோடம்பாக்கம், சூளைமேட்டில் முத்துராமன் குடியிருந்தார். அப்போது முதலே எனக்கு முத்துராமனிடம் அறிமுகம் ஏற்பட்டது. நான் கவி கே.பி.காமாட்சி சுந்தரத்தின் ஒன்றுவிட்ட சகோதரன் என்பதால் என்மீது அதீத பற்றுகொண்டார் முத்துராமன்.

கார்த்திக்கின் கால்ஷீட் விஷயமாக முத்துராமனிடம் பேசினேன். கதையைச் சொன்னேன்.

"கலைஞானம் சார்... உங்க படம்தான் என் மகனுக்கு இரண்டாவது படம். அவன் 'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் அய்யர் பையனாக நடித்துவிட்டான். உங்க படத்தில் சண்டைக்காட்சி இருக்கு என்கிறீர்கள். ஆனால் ரெண்டு ஹீரோக்கள் கதை. அதனால் ஒரு ரெக்வெஸ்ட்" என்றார் முத்துராமன்.

"சொல்லுங்க சார்."

"சண்டைக் காட்சிகளில் என் மகனுக்கு முக்கியத்துவம் கொடுங்க. அதேமாதிரி டூயட் காட்சிகளிலும் அவனுக்கு கொஞ்சம் முக்கியத்துவம் கொடுங்க. இந்த வினாடி முதல்... உங்கள் மகனாகவே அவனை உங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்ற முத்துராமன், தனக்கே உரிய பாணியில் மிகச் சத்தமாகச் சிரித்தார்.

"நிச்சயமா என் பிள்ளைபோல் பார்த்துக்கிறேன்" என நானும் சத்தமாக சிரித்து மகிழ்ச்சியை வெளிப் படுத்தினேன்.

# வந்தார் விஜயசாந்தி!

'இளஞ்ஜோடிகள்' படத்திற்கு ஒரு ஹீரோவாக கார்த்திக்கை ஒப்பந்தம் செய்ததும், 'இந்த வினாடியில் இருந்து என் மகன் கார்த்திக்கை உங்க மகனாகவே உங்ககிட்ட ஒப்படைக்கிறேன்' என்று சொன்ன முத்துராமன்... "எப்போது பட பூஜை?" எனக் கேட்டார்.
நான் தேதியைச் சொன்னதும்... "தேதிகளில் நான் ஊட்டியில் ஒரு படத்தில் நடித்துக்கொண்டிருப்பேன். அங்கிருந்தபடியே என் ஆசிர்வாதத்தைக் கொடுக்கி றேன்" என்றவர் மறுபடியும் என் கைகளைப் பிடித்துக் கொண்டு "திரும்பவும் சொல்றேன்... என் மகனை உங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்றார்.

"அந்த நம்பிக்கை வீண் போகாது" எனச் சொல்லிவிட்டு வந்தேன். ஆனால்...

'இளஞ்ஜோடிகள்' பூஜைக்கு முன்பாகவே ஊட்டியில் ஒரு படத்தின் படப்பிடிப்பிற்காகப் போயிருந்த முத்துராமன் மாரடைப்பால் காலமானார். ஒரு நல்ல நண்பரை இழந்த துக்கம் எனக்கு.

கார்த்திக்கிற்கு ஜோடியாக ராதாவை ஒப்பந்தம் செய்ய விரும்பினேன். பாரதிராஜாவின் அறிமுகம்தானே ராதா. அதனால் பாரதிராஜவைப் போய்ப் பார்த்தேன்.

"என்னோட படத்தில் ராதா நடிக்கணும். நீங்க சிபாரிசு பண்ணணும்" என்றேன்.

அப்போது நான் பாரதிராஜாவின் பட கதை விவாதங் களில் பங்கெடுத்து வந்தேன். அதனால் என்மீது அவருக்கு ரொம்பவே மதிப்பும் மரியாதையும் இருந்தது. (இப்போதும் என் மீதான மதிப்பு குறையாமலேயே இருக்கிறார் பாரதிராஜா)



**அந்தச் சமயம் பாரதிராஜாவிடம் சித்ராலட்சுமணன் பணிபுரிந்துகொண்டிருந்தார். (என்னுடைய முதல் தயாரிப்பான 'பைரவி' படத்திற்கு சித்ராதான் மக்கள் தொடர்பாளராக பணிபுரிந்தார். பின்னாளில் 'வாழ்க்கை', 'ஜல்லிக்கட்டுக் காளை', 'சூரசம்ஹாரம்' படங்களைத் தயாரித்தார் சித்ரா லட்சுமணன்.)**



"சித்ரா, நீ உடனே கலைஞானத்தை கூட்டிக்கிட்டுப் போய் ராதாவோட கால்ஷீட் வாங்கிக் கொடு" என்றார் பாரதிராஜா.

அதன்படியே சித்ரா என்னை அழைத்துச் சென்று ராதா விடம் என் அருமை, பெருமைகளை அருமையாக எடுத்துச் சொல்லி ராதாவின் கால்ஷீட் வாங்கிக் கொடுத்தார்.

கார்த்திக் ராதா  ஆகிய ஒரு ஜோடியை ஒப்பந்தம் செய் தாகிவிட்டது.

தயாரிப்பாளர் கோபிநாத் எனக்கு ரொம்ப பரிச்சய மானவர். அவர் தன் மகன் சுரேஷை அழைத்துக்கொண்டு என் ஆபீசுக்கு வந்துவிட்டார்.

"டேய் சுரேஷ்... அய்யாகிட்ட ஆசிர்வாதம் வாங்கு" என்றார். சுரேஷ் என் காலில் விழ... நான் அவரை ஆசிர்வதித்தேன்.

"கலைஞானம் அண்ணே... என் மகன் நடித்த 'பன்னீர் புஷ்பங்கள்' படம் பார்த்தீங்களா?"

"பார்த்தேன். ரொம்ப நல்லா இருந்துச்சு. சுரேஷும், சாந்தி கிருஷ்ணாவும் நல்லா நடிச்சிருந்தாங்க. டைரக்டர்கள் பாரதி-வாசு (சந்தானபாரதி, பி.வாசு) இருவரும் நூறு படம் இயக்கி அனுபவப்பட்ட மாதிரி பிரமாதமா எடுத்திருந் தாங்க."

"என் மகனுக்கு நீங்க உங்க படத்துல ஒரு வேஷம் கொடுத்தே ஆகணும். 'பன்னீர் புஷ்பங்கள்' படத்துக்குப் பிறகு வேற படமே வரலை" என்றார் கோபிநாத். நண்பர் வலியுறுத்தியதாலும், அந்த கேரக்டருக்கு சுரேஷ் பொருத்தமாக இருந்ததாலும் இன்னொரு ஹீரோவாக சுரேஷை ஓ.கே. செய்தேன்.

இன்னொரு கதாநாயகி தேவை.

நளினியை அழைத்துக்கொண்டு அவரின் தாயார் என் அலுவலகத்திற்கு வந்தார். நளினியின் அம்மா மதுரைக் காரர் என்பதால் ஊர்ப்பாசம் எனக்கு. அதோடு... இளம் நாயகிக்கு நளினி சரியாகவும் இருந்தார். அவரையே அறிமுகப்படுத்த உறுதிகொடுத்து அனுப்பி வைத்தேன்.

மறுநாள்...

எனது உயிருக்குயிரான நண்பர் சீனிவாசன் தன் மகளுடன் வந்தார். (நான் ஒரு கிளப் தலைவராக இருந்தபோது அங்கே சீட்டாட வருவார் சீனிவாசன். அந்த வகையில் எனக்கு நண்பரானவர். நான் கிளப் தலைவராக இருந்தது பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன் விரிவாக.)

''கலைஞானம் சார்... என் மகள் விஜயசாந்தியை, மகராசன் பாரதிராஜா 'கல்லுக்குள் ஈரம்' படத்தில் அறிமுகம் செய்து வைத்தார். படம் சரியாக போகாத காரணத்தால் என் மகளுக்கு வேற சான்ஸ் கிடைக்கலை. இப்ப உங்களை விட்டா எனக்கு வேற ஆளு இல்லை''' என கண் கலங்கினார் சீனிவாசன்.

''நேத்தே நீங்க வந்திருக்கக்கூடாதா? நளினிங்கிற புதுப் பொண்ணை புக் பண்ணீட்டேனே?'' என்றேன்.

உடனே சீனிவாசன் என் கைகளைப் பற்றி தனியாக அழைத்துச் சென்று சில முக்கியமான விஷயங்களைச் சொன்னார்.

''எங்க உறவினர் வீட்டுலதான் தங்கியிருக்கோம். ஆனா... அவர்களால் எங்களுக்கு எந்த ஆதரவும் இல்லை. வீட்டை விட்டு நாங்கள் வெளியேறும் அளவுக்கு சதா போராட்டமும், நெருக்கடியுமாக இருக்கு'' எனச் சொல்லி அழுதேவிட்டார் சீனிவாசன்.

இதை தூரத்திலிருந்து கவனித்த என் மனைவி 'இந்தப் பொண்ணையே நடிக்க வைங்க' என்பதுபோல் ஜாடையாகச் சொன்னாள். நான் வராண்டாவில் நின்றிருந்த விஜயசாந்தியை அழைத்துப் பேசினேன். இந்த உலகத்திலேயே அப்பாவிப் பெண் மாதிரி இருந் தார். ஆனால் அழகாக இருந்தார். அவரை ஒப்பந்தம் செய்தேன்.

மறுநாள்....

நளினியையும், அவரின் அம்மாவையும் ஆளனுப்பி வரவழைத்தேன்.

''அம்மா... தட்டமுடியாத ஒரு சூழ்நிலையில் என்னோட நண்பர் மகள் விஜயசாந்திக்கு அந்த வாய்ப்பைத் தரவேண்டியதாகிவிட்டது. ஆனா... நான் உங்களுக்கு கொடுத்த வாக்குப்படி ஒரு படத்துக்குப் பதில் ரெண்டு படத்தில் நளினிக்கு வாய்ப்புக் கொடுப்பேன்'''என சமாதானம் செய்தேன்.

(சிறிது காலத்தில் 'உயிருள்ளவரை உஷா' படத்தில் நளினியை ஹீரோயினாக அறிமுகப்படுத்தினார் டி.ஆர். அதன் மூலம் பெரிய நடிகையாகிவிட்டார் நளினி. இருப்பி னும் நான் சொன்னபடி 'ராஜரிஷி' படத்தில் நாயகியாகவும், 'தங்கக் கோப்பை' படத்தில் காமெடி கதாநாயகியாகவும் நளினியை நடிக்க வைத்தேன். நளினி பிஸியாக இருந்த போதும் நளினியின் தங்கை கணவர் சுப்பையா எனக்காக சிரத்தையெடுத்து கால்ஷீட் ஒதுக்கிக் கொடுத்தார்)

கார்த்திக், ராதா, சுரேஷ் மற்றும் விஜயசாந்தி ஆகியோருக்கு இரண்டாவது படமாக அமைந்தது 'இளஞ்ஜோடிகள்.' (சில படங்களில் நடித்திருந்தாலும், கதாநாயகி அந்தஸ்தில் விஜயசாந்திக்கு இது இரண்டா வது படம்)

அப்போது இராம.நாராயணனின் இயக்கத்தில் 'சிவப்பு மல்லி' படம் ஓடிக்கொண்டிருந்த நேரம். அவரை இயக்குந ராக ஒப்பந்தம் செய்வதற்காக அவரின் வீட்டுக்குப் போனேன். நான் கதாசிரியராக, தயாரிப்பாளராக பிரபலம் என்பதால், நான் அவரை அவரின் வீடு தேடிப்போய் பார்ப்பேன் என அவர் எதிர்பார்க்கவில்லை. என்னைப் பார்த்ததும் முகம் மலர வரவேற்று படத்தை இயக்க முன்வந்தார்.

பட வேலைகளுக்காக தேனாம்பேட்டை எல்டாம்ஸ் ரோட்டில் உள்ள எல்டாம்ஸ் ஹோட்டலில் ரூம் போட்டிருந்தோம். அப்போது சினிமாக்காரர்களுக்கு அதுதான் ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் மாதிரி. நான் சாப்பிட வரும்போதெல்லாம் டேபிள் கிளீனராகவும், சப்ளை யராகவும் இருந்த ஒரு இளைஞர் என்னை குனிந்து வணங்கி 'எனக்கு பாட்டெழுதத் தெரியும். ஒரு சான்ஸ் குடுங்கய்யா' எனக் கேட்பார். பலமுறை இது நடந்ததால்... ஒருநாள்... "சரி நீ ரூமிற்கு வாப்பா" எனச் சொல்லிவிட்டு வந்தேன். அந்த இளைஞன் வந்து, தான் எழுதியிருந்த பாடலை பாடியே காண்பித்தார்.

'அடி ஆப்பக்காரி மகளே... ஆல மரக்கிளியே

நான் ராப்பகலா உன்னை நினைச்சு வாடுறேன்

ஏதோ ராகத்துல பாட்டும்கூட பாடுறேன்'

"டேபிள் கிளீனர் என நினைத்தோம். இவரிடமும் இவ்வளவு கற்பனை இருக்கே"என அந்தப் பாடலை 'இளஞ் ஜோடிகள்' படத்தில் சேர்த்தேன். பாட்டு செம ஹிட். என் ராசிப் படி என் படங்களில் ஒரு புதுமுகம் அறிமுகமாவார். அருப்புக்கோட்டை தவசுமணி இந்தப் படத்தில் கவிஞராக அறிமுகமானார்.

ஷூட்டிங் வெகுவேகமாக நடந்துகொண்டிருந்தது. கார்த்திக்-ராதா, சுரேஷ்-விஜயசாந்தி... இந்த இரு ஜோடிகளும் சேர்ந்து நடிக்கிற காட்சிகளை எடுக்கும் போதெல்லாம் சுரேஷ், டபுள் மீனிங்கில் வல்கரா ஜோக் அடித்து மற்றவர்களை சிரிக்க வைப்பார்.

# கண்ணீர் விட்ட நடிகர்கள்!

'இளஞ்ஜோடிகள்' படப்பிடிப்பின்போது... டபுள் மீனிங்கில் வல்கரான ஜோக் சொல்லுவார் சுரேஷ். இந்த ஜோக்கைக் கேட்டு கார்த்திக்கும், விஜயசாந்தியும் வாய்விட்டுச் சிரிப்பார்கள். ஆனால் ஜோக்கை கண்டுகொள்ளாமல் 'தானுண்டு தன் வேலை உண்டு' என ரிஸர்வ்டாக இருப்பார் ராதா. இது வாடிக்கை யாக நடந்துவந்தது.
ஒருநாள்... இந்த இரு ஜோடிகளும் சேர்ந்து நடிக்கிற முக்கியமான காட்சி எடுக்க வேண்டும். ரிகர்ஸல் பார்த்து டேக்கிற்கு போயாச்சு. கேமரா ஓடிக்கொண்டிருக்கிறது. சுரேஷ் வழக்கம் போல ஸைலண்ட்டாக வல்கர் ஜோக் அடிக்க... வசனத்தை விட்டுவிட்டு கார்த்திக்கும், விஜயசாந்தியும் சிரிக்க ஆரம்பித்துவிட்டனர்.

இதனால் அடுத்த டேக்கிற்கு ரெடியானார் இராம. நாராயணன். மீண்டும் அதேபோல ஜோக், அதேபோல வசனத்தை விட்டுவிட்டு சிரித்தனர். இப்படியே டேக் மேல் டேக் போனது. நான் அவர்களை எச்சரித்தேன். ஆனால் அடுத்தடுத்த டேக்குகளின்போதும் இதேநிலை.

ஒன்பதாவது டேக்கிலும் சொதப்பினார்கள்.

''ஃபிலிம் விரயம், கால விரயம், பண விரயம் ஆகுதே'' என கோபத்தின் உச்சிக்கே போய்விட்டேன் நான்.

''டைரக்டர் சார்... இந்த ரெண்டு ஹீரோவையும் படத்திலி ருந்து தூக்கிடுங்க. நாளைக்கே வேற ரெண்டு புது ஹீரோக்களைக் கொண்டு வர்றேன். நாளைக்கி ஷூட்டிங் வச்சிக்கலாம். இப்போ ஷூட்டிங் பேக்-அப்'' எனச் சொல்லி விட்டு காரில் ஏறி அமர்ந்தேன்.



அதிர்ச்சியடைந்த சுரேஷும், கார்த்திக்கும் ஓடி வந்து காரின் முன்னால் கைகட்டி நின்றனர். இருவரின் கண் களிலும் நீர் ததும்பியது.

"ஸாரிசார்... ஸாரி சார்''’என தொடர்ந்து சொல்லிக் கொண்டி ருந்தார்கள் வேறு வார்த்தை வராமல்.

என் உள்ளம் ஒன்றை உணர்ந்தது. "இவர்கள் இருவரை யும் படத்திலிருந்து தூக்கிவிட்ட செய்தி சினிமா உலகில் பரவினால்... அடுத்தடுத்து இவர்களுக்கு வாய்ப்புகள் கிடைப்பதில் குழப்படி உண்டாகி இவர்களின் வாழ்க்கை பாதிக்குமே?'

அவர்களைப் பார்த்தேன். பரிதாபமாக நின்றிருந்தார்கள்.

"கார்த்திக்... உன் தந்தை என்கிட்ட என்ன சொல்லீட்டு ஊட்டிக்குப் போனாரு தெரியுமா? 'என் மகனை உங்க மகனா உங்ககிட்ட ஒப்படைச்சிட்டேன். அவனோட எதிர்காலம் உங்க கைலதான்'னு என் கைகளைப் பிடிச்சுக்கிட்டு சொன்ன மனுஷன், ஊட்டியில் போய் இறந்துவிட்டாரடா பாவி. அந்த நினைவு இன்னமும் என்னைவிட்டு நீங்கல. அதையெல்லாம் உன்கிட்ட ஏற்கனவே சொல்லி கலங்கியிருக்கேன். ஆனா அதை உணராம இப்படி சிறுபிள்ளைத்தனமா நடந்துக்கிறியே? தயவு செஞ்சு இனிமேலாவது தொழில்ல அக்கறையா இரு''’என்றேன். கார்த்திக் தலையாட்டினார்.

"சுரேஷ்... இந்த வாய்ப்பை உனக்காக உங்க அப்பா என் கிட்ட கேட்டபோது நீயும்தான கூட இருந்த? பிழைக்கிற வழியைப் பாருப்பா" என சுரேஷுக்கும் அட்வைஸ் செய்தேன்.

"சரி... நீங்க போயி நடிப்பைத் தொடரலாம்" என்றேன்.

அன்று முதல் படப்பிடிப்பு முடியும்வரை நல்ல ஒத்துழைப் புக் கொடுத்து படத்தை முடித்துக் கொடுத்தார்கள் இருவரும்.

'இளஞ்ஜோடிகள்' முதல் காப்பி தயாரானது. விநியோகஸ் தர்களுக்கு போட்டுக் காட்டினேன். டைரக்டர் ஸ்ரீதரின் 'தேனிலவு' படத்தில் செகண்ட் ஹீரோயினாக நடித்த வசந்தியும், அவரது கணவரும் படம் பார்க்க வந்திருந்தனர். (காமராஜரை தேர்தலில் தோற்கடித்த விருதுநகர் சீனிவாசன்தான் வசந்தியின் கணவர்). படம் முடிந்து வெளியே வந்த வசந்தியும், சீனிவாச னும் 'தெலுங்கு டப்பிங் ரைட்ஸை எங்களுக்கு கொடுத்திடுங்க' என்றார்கள். நான் சொன்ன விலைக்கு உடனே சம்மதித்து அட்வான்ஸூம் கொடுத்தார்கள்.

'இளஞ்ஜோடிகள்' படம் வெளியாகி சூப்பர் டூப்பர் ஹிட்டடித்தது.

படத்தில் நடித்த ஒவ்வொருவருக்கும் பத்து பத்துப் புதிய படங்கள் புக் ஆனது. டைரக்டர் இராம.நாராயணனுக்கோ பதினோரு படங்கள் புக் ஆனது. அந்த அளவு தாக்கத்தை உண்டாக்கியது படம்.

தெலுங்கில் 'மாமியார் மெச்சிய மருமகன்கள்' என்கிற அர்த்தத்தில் டைட்டில் வைத்து டப்பிங் செய்து வெளியிட... அங்கேயும் அபார வெற்றி. 125 நாட்கள் ஓடியது. ஆந்திராவில் விஜயசாந்தி மீது கவனம் ஏற்படுத்தியது இந்தப்படம். சில வருடங்களுக்குப்பின் தெலுங்கில் விஜயசாந்தி நடித்த ஒரு படம் அவரை சூப்பர் ஸ்டாரினியாக்கியது. அந்தப்படம் 'பூ ஒன்று புயலானது"என்ற பெயரில் தமிழிலும் டப் செய்யப்பட்டு வெற்றி பெற்றது. லேடி சூப்பர் ஸ்டாராக உயர்ந்தார். 'கல்லுக்குள் ஈர'மாக' இருந்த விஜயசாந்தி 'கங்கை நதியாக' பெருக்கெடுத்து ஓடுவதைப் பார்த்து ஒரு தகப்பனைப்போல் பெருமகிழ்ச்சியடைந்தேன்.

இந்திய அளவில் புகழ்பெற்ற விஜயசாந்தி... சென்னை ஸ்டுடியோக்களில் படப்பிடிப்பில் இருக்கும்போது, தற்செயலாக நான் அந்த ஸ்டுடியோ பக்கம் போகநேர்ந் தால்... தூரத்தில் இருந்து என்னைப் பார்த்துவிட்டாலும் நடித்துக் கொண்டிருப்பதை அப்படியே விட்டுவிட்டு,

மான்குட்டி போல துள்ளித் துள்ளி ஓடிவந்து என் இரு கரங்களையும் பற்றிக்கொள்வார்.

''சார்... நீங்க நல்லாருக்கீங்களா? அம்மா (என் மனைவி) நல்லாருக்காங்களா? இப்ப என்ன படம் எடுத்துக்கிட்டி ருக்கீங்க?'' என விசாரித்தபடியே இருப்பார்.

விஜயசாந்தியை யாரும் 'டேக் ரெடி வாங்க' என அழைக்க முடியாது. அவர்முன் கை கட்டித்தான் நிற்பார்கள். அவ்வளவு பெரிய ஸ்டாராச்சே.

''ஷூட்டிங் நிற்குதும்மா. நீ போம்மா. எல்லாரும் உனக்காக காத்திருக்காங்க''என்பேன்.

''பரவால்ல சார்''என நன்றி பெருமிதத்துடன் என்னிடம் விசாரித்தபடியே இருப்பார். நானாக வம்புபண்ணி அவரை ''நீ ஷூட்டிங் போம்மா'' என அனுப்பி வைப்பேன்.

''எனக்கு ஒரு படம் நடித்துக் கொடும்மா'' என அன்றைக்கு நான் கேட்டிருந்தால்... ஒன்றல்ல... நாலு படங்கள் நடித்துக் கொடுத்து என்னை கோடீஸ்வரனாக்கியிருப் பார். ஆனால் அந்தப் புத்திதான் எனக்கு வரவில்லையே.

'இளஞ்ஜோடிகள்' என்கிற பெரும் வெற்றிப் படத்திற்குப் பிறகு அண்ணன் சிவாஜியை வைத்து 'மிருதங்க சக்கரவர்த்தி' படம் எடுத்தேன். 'ராஜரிஷி' படம் எடுத்தேன். அந்த அனுபவங்களைச் சொல்வதற்கு முன் 'இளஞ்ஜோடிகள்' தொடர்புடைய ஒரு விஷயத்தை இங்கே சொல்லிவிடுகிறேன்.

'ராஜரிஷி' படம் மூலம் நான் நஷ்டப்பட்டு இருந்த நேரத்தில்...

பிரான்லால் மேத்தா என்ற ஒரு இந்திக்காரர் 'இளஞ் ஜோடிகள்' படத்தின் கதை உரிமையை இந்திக்குக் கேட்டு ஒரு மீடியேட்டர் மூலம் என்னை அணுகினார்.

''இரண்டு லட்சரூபாய்'' விலை சொன்னதும்... ''நாளை சோழா ஓட்டலுக்கு வாங்க. பேசி முடிச்சிடலாம்'' என்றார் மீடியேட்டர்.

'ஸ்... அப்பாடா... நஷ்டத்தில் இருக்கிற இந்த நேரத்தில் இந்தப் பணம் வந்தால் தெம்பாக இருக்கும்' என் சந்தோஷ மாக தூங்கிவிட்டேன்.

மறுநாள்... பிரான்லாலை சந்திக்க ஹோட்டலுக்குப் போனேன்.

'நேத்து நைட்டே அந்த இந்திக்காரர் ரூமை காலி செய்துட்டுப் போயிட்டாரே' என்றார் ஹோட்டல் பேரர்.

'காதுக்கு எட்டினது கைக்கு எட்டலையே'னு வந்துவிட் டேன். அந்த விஷயத்தையும் அத்துடன் மறந்து போயிருந்தேன்.

ஆறு மாதங்கள் கடந்த நிலையில்...

'லவ்-86' என்றொரு இந்திப் படம் வெளியாகி பரபரப்பாக வடஇந்தியாவில் ஓடிக்கொண்டிருந்தது. தூர்தர்ஷன் டி.வி.யில் படத்தின் சில முக்கியக் காட்சிகள் ஒளிபரப்பாவதை தற்செயலாகப் பார்த்தேன். 'இளஞ்ஜோடிகள்' ஸீன்கள் அப்படியே இருந்தன. உடனே இந்திப் பட கேஸட் விற்கும் கடைக்குச் சென்று அந்தப் பட கேஸட் வாங்கினேன். பார்த்தேன். முழுக்க முழுக்க 'இளஞ்ஜோடிகள்' படத்தை காப்பியடித்து எடுத்திருந்தார் தயாரிப்பாளர் பிரான்லால் மேத்தா. அந்த கேஸட்டை அப்போதைய ஃபிலிம் சேம்பர் பிரஸிடெண்ட் முக்தா சீனிவாசனிடம் கொடுத்து நடந்ததையெல்லாம் சொன்னேன்.

இந்தி கேஸட்டைப் பார்த்துவிட்டு உண்மையை அறிந்த முக்தா, பாம்பேவிலுள்ள ஃபிலிம் சேம்பர் தலைவரான ராம்நாத் நகாதாவுக்கு போன்மூலம் விபரம் சொல்லி 'இளஞ்ஜோடிகள்' பட கேஸட்டை பாம்பேவுக்கு அனுப்பி வைத்தார்.

அதைப் பார்த்துவிட்டு பிரானை அழைத்து விசாரித்தார் ராம்நாத் நகாதா.

சில நாட்களில் என்னை பாம்பேக்கு அழைத்தார்கள் முக்தா மூலம். எனக்கு தமிழைத் தவிர வேறு பாஷை தெரியாது என்பதால் இந்தி தெரிந்த என் நண்பரான வங்கி ஊழியர் ராஜாவை அழைத்துக்கொண்டு விமானம் மூலம் பாம்பே சென்றேன்.

# ஏமாற்றிய பாம்பே!

எனது 'இளஞ்ஜோடிகள்' படத்தின் கதையை என் அனுமதியில்லாமல் இந்தியில் எடுத்தது சம்பந்தமான பஞ்சாயத்து மும்பையில் பிரபல இந்தி சூப்பர் ஸ்டார் தேவ்ஆனந்த்தின் வீட்டில் நடந்தது. தேவ்ஆனந்த்தின் தம்பி பிரேம்ஆனந்த், பிரபல நடிகரும், கதாசிரியரும், டைரக்டருமான குருதத்தின் உடன்பிறந்த சகோதரர், பிரான்லால் மேத்தா, ராம்நாத் நகாதா ஆகியோர் இருந்தனர். என் நண்பர் ராஜாவுடன் நான் அங்கே சென்றதும் தயாரிப்பாளர் பிரான், என் காலில் விழுந்து "உங்க அனுமதியில்லாம உங்க கதையை படமெடுத்ததுக்கு என்னை மன்னியுங்கள்" என்றார். நான் அவரைத் தூக்கி அணைத்துக் கொண்டு அமரவைத்தேன்.

"கலைஞானம்... உங்களைப் பத்தி முக்தா சீனிவாசன் நிறைய சொல்லீருக்கார். நீங்க பெரிய தயாரிப்பாளர். இப்போ நஷ்டத்தில் இருக்கீங்களாம். உங்களோட "மிருதங்க சக்கரவர்த்தி"படம் பாம்பேயில் ரிலீஸ்ஸனபோது பார்த்தேன். இரண்டு வாரம் இங்கே ஓடியது. பாலிவுட் பிரபலங்கள்லாம் படம் பார்த்துட்டு சிவாஜியோட நடிப்பை, அதுவும் க்ளைமாக்ஸில் அவர் மிருதங்கம் வாசிப்பதை ரொம்பவே நெகிழ்ச்சியோட ரசிச்சாங்க. அப்படி ஒரு படமெடுத்த உங்களை வாழ்த்துறேன். இப்போ இந்த விஷயத்துக்கு வருவோம். உங்களைப் போலவே நஷ்டத்தில் இருந்த பிரான்லால் நீங்க கதைக்காக கேட்ட தொகையை கொடுக்க முடியாமத்தான், 'பின்னாடி குடுத்துக்கலாம்'னு துணிஞ்சு படம் எடுத்துட்டார். உங்க கதையை வைத்து எடுக்கப்பட்ட 'லவ்-86' படம் பெரிய ஹிட். ஆனாலும் பிரானோட பழைய கடனுக்கு விநியோகஸ்தர்கள் இந்தப் படத்தை வாங்கிக் கிட்டதால் இவர் கைக்கு பைசா வரல. 60ஆயிரம் தர்றாரு பிரான்லால். பெரிய மனசுபண்ணி அதை வாங்கிக்கணும்'"என்றார் பாம்பே ஃபிலிம் சேம்பர் தலைவர் ராம்நாத் நகாதா.



இந்தியில் பிரபலமான குருதத்தின் சொந்த ஊர் கும்ப கோணம். அவரின் பெயர் குருசாமி. அவரின் மனைவி கல்கத்தாக்காரர். அதனால் அவரின் மனைவியின் குடும்பப் பெயரான 'தத்' என்பதை தன் பெயருடன் சேர்த்து 'குருதத்' ஆனார் கும்பகோணம் குருசாமி. காதல் கதை எழுதி புகழ் பெற்ற குருதத் ஒரு காதல் பிரச்சினையால்தான் துக்கப்பட்டு இறந்தார். கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் 'சாரதா' இந்திப்படத்தில் குருதத் நடித்தார். அப்போது குருதத் பற்றி அறிந்த தகவல் களை என்னிடம் சொன்னார் கோபாலகிருஷ்ணன். அதை மனதில் வைத்து குருதத்தின் சகோதரரிடம் "சார் உங்களுக்கு தமிழ் தெரியும்ல" எனக் கேட்டேன்.

தலையாட்டினார்.

"ரெண்டு லட்சத்துக்கு அறுபதாயிரம் கொடுத்தா நியா யமா?. முதல்லயே இந்தத் தொகைதான் தருவோம்னு சொல்லீருந்தா நானும், என் நண்பரும் ஃபிளைட்ல வராம, மாட்டு வண்டியிலேயே பாம்பேவுக்கு வந்திருப்போம்" என்றேன்.

குருதத்தின் சகோதரர் சிரித்ததுடன் அதை இந்தியிலும் மொழி பெயர்த்துச் சொல்ல... அவர்களும் சிரித்தனர்.

என்னைப் போலவே பிரான்லாலும் கடனில் இருந்ததால் அவர் கொடுத்த தொகையை வாங்கிக் கொண்டு சென்னை திரும்பினேன்.

பொதுவாக எனது கதைகளில் நட்சத்திரங்களாகவோ, அல்லது பிற துறை கலைஞர்களாகவோ புதுமுகங்கள் அறிமுகமாவார்கள். அந்த செண்ட்டிமெண்ட்படி, இந்தியில் எடுக்கப்பட்ட, அதாவது என் அனுமதியில்லாமலே எடுக்கப்பட்ட எனது 'இளஞ்ஜோடிகள்' கதையில்... அதாவது 'லவ்-86' படத்தில் கோவிந்தா ஹீரோவாக அறிமுகமானார். அதன் பிறகு பெரிய ஹீரோவாகி எம்.பி.யாகவும் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மையைச் சொல்வதற்கு ஒத்திகை தேவையில்லை என்பார்கள். அப்படி ஒரு நிகழ்வை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சின்னப்பா தேவர் இறந்தபிறகு.... தேவர் ஃபிலிம்ஸ் மற்றும் தண்டாயுதபாணி ஃபிலிம்ஸ் சார்பில் தேவரின் மகன் தண்டபாணி தயாரிப்பில், தேவரின் மருமகன் எஸ்.தியாகராஜன் இயக்கத்தில் 'தாய்மீது சத்தியம்', 'அன்னை ஓர் ஆலயம்', 'அன்புக்கு நான் அடிமை' என ரஜினி மூன்று படங்களில் நடித்துக் கொடுத்தார். அதேபோல் 'தாயில்லாமல் நானில்லை', 'ராம் லட்சுமண்' படங்களில் கமல் நடித்தார். 'தாயில்லாமல் நானில்லை' படத்தில் ரஜினி கெஸ்ட் ரோலில் நடித்தார். இது எல்லாமே வெற்றிப்படங்கள்தான்.

இந்நிலையில் ஒருநாள் தேவரின் மருமகன் எஸ்.தியாக ராஜன் எனக்கு போன் செய்தார். அவர் என்னை ''அண்ணன்' என்றுதான் அழைப்பார். தேவரின் மகள் லட்சுமியின் கணவர் என்பதால் நான் தியாகராஜனை மதிப்புடன் 'மாப்பிள்ளை' என்றுதான் அழைப்பேன்.

''சொல்லுங்க மாப்பிள்ளை.''

''நம்ம கம்பெனிக்கு ரஜினி மூணு படங்கள் நடிச்சுக் கொடுத்திட்டார். தற்போது அவருக்கு நிறைய படங்கள் கமிட் ஆகியிருப்பதால் ''கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. கால்ஷீட் தர்றேன்'னு ரஜினி சொல்லீருக்கார். அவரோட கால்ஷீட் கிடைக்கும்வரை வேறு ஹீரோவை வச்சு படம் எடுக்கணும். அதனால் வழக்கம்போல நீங்க ஒரு கதை பண்ணித்தரணும். உடனே நீங்க வரமுடியுமா?''எனக் கேட்ட மாப்பிள்ளை, ''நீங்களும் இப்போ தொடர்ந்து படம் எடுத்துக்கிட்டு இருக்கீங்க. அதனால் உங்க வசதியையும் நீங்க பார்த்துக்கங்க. இந்த நேரத்தில் உங்க உதவி எங்களுக்குக் கிடைச்சா... சீக்கிரமா ஒரு படத்தை ஆரம்பிச்சுடலாம்''என்றார்.

''என்ன மாப்பிள்ளை... இப்படிச் சொல்லீட்டீங்க? எனக்கு எது இருக்கோ, இல்லையோ... நன்றி மறவாத உள்ளம் இருக்கு. அதுதான் இறைவன் எனக்குக் கொடுத்த சொத்து. தேவரண்ணன் எனக்குச் செய்த உதவிகளுக்கு எத்தனை ஜென்மம் எடுத்தாலும், அத்தனை ஜென்மத்திலும் தேவரின் குடும்பத்தினருக்கு நன்றியுடையவனாகத்தான் வாழ்வேன். இதோ... இப்பவே கிளம்பீட்டேன்''எனச் சொல்லிவிட்டு என் காரில் கிளம்பினேன்.

காரில் போய்க்கொண்டிருக்கும்போது மாப்பிள்ளை தியாகராஜனின் சிறந்த குணாதிசயங்கள் என் நினைவுக்கு வந்தன.

பல சூப்பர் ஹிட் படங்களை இயக்கியவர் மாப்பிள்ளை. ஆனாலும் அவரிடம் கர்வம் கிடையாது. சிரித்த முகத்துட னேயே பேசுவார். வரம்பு மீறி ஒருவார்த்தைகூட பேசமாட்டார். எந்த கெட்ட பழக்கங்களும் இல்லாத ஒழுக்கசீலர். குறிப்பாக கதையையோ, காட்சியையோ நடிகைகளிடம் விளக்கிப் பேசும்போதுகூட கூச்ச சுபாவத்துடன், சற்று எட்ட நின்றே பேசுவார். தேவரிடம் பேசும்போது தலைகுனிந்தே பேசுவார். 'தேவருக்குக் கிடைத்த வரப்பிரசாதம்தான் மாப்பிள்ளை' என்று சொன்னால் அது ரொம்பவே பொருந்தும்.

மாப்பிள்ளைதான் அப்படியென்றால்... அவருக்கு மனைவியாக கிடைத்த தேவரின் மகள் லட்சுமி... மாப்பிள்ளைக்குக் கிடைத்த வரப்பிரசாதம்தான். மாப்பிள்ளை சொல்லுக்கு மறுபேச்சு இருக்காது அவரிடம். மாப்பிள்ளை என்ன சொன்னாலும் 'சரிங்க... சரிங்க... அப்படியே செய்றேனுங்க' என்பார். லட்சுமி அன்றாடம் சொல்லும் பதிபக்தி மந்திரம் இதுதான். வீட்டுக்கு பிற ஆண்கள் வந்தால், கதவு மறைவில் நின்றபடிதான் பேசுவார். அன்பு காட்டுவதிலும், இரக்க சிந்தனையிலும் தேவரைப் போலவே இருப்பார். ‘கணவன்-மனைவி என்றால் இப்படித்தான் வாழவேண்டும்’ என்பதற்கேற்ப வாழ்ந்துகாட்டுபவர்கள் இந்த தம்பதி.

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது... தேவர் அண்ணன் குடும்பத்திற்கு என் வாழ்நாள் முழுக்க தொண்டு செய்துகொண்டே இருக்க வேண்டும் என்று பேராசைப்படுகிறேன்.

மாப்பிள்ளையைச் சந்தித்தேன். மா.ரா, தூயவன் ஆகியோரும் அங்கே இருந்தார்கள்.

''மாப்பிள்ளை... உடனே கதை ரெடிபண்ணி படம் பண்ண ணும்னா ஒரு ஐடியா இருக்கு. நான் 'ஃபைவ்மேன் ஆர்மி'னு ஒரு இங்கிலீஷ் படம்

பார்த்தேன். அத இன்ஸ்பிரேஷனா வச்சிக்கிட்டு, நம்ம தமிழ் கல்ச்சருக்கு ஏத்த மாதிரி கதை பண்ணினால் சூப்பர் ஹிட் அடிக்க லாம்'' என்றேன்.

தூயவன் வழக்கம்போல என்னைக் கிண்டல் செய்தார்... ''ஓய்... தமிழே சரியா படிக்காத நீரு... எப்பவோய் இங்கிலீஷ் படம் பார்த்தீரு? எப்படி கதையை புரிஞ்சுக்கிட்டீரு?'' என்றார்.

இதனால் எனக்கு ரோஷம் வந்தது. விலாவாரியாக அந்த கதையைச் சொன்னேன்.

கைதட்டி வரவேற்ற மாப்பிள்ளை ''அண்ணே... உடனே இந்தக் கதையை பண்ணுவோம்''என்றார்.

தூயவன், மா.ரா, மற்றும் நானும் சேர்ந்து இரவு பகலாக கதையை தயார் செய்து முடித்தோம். சுமன், சரிதா, கராத்தே மணி, ராஜீவ், ஜெய்சங்கர், கே.ஆர்.விஜயா உள்ளிட்ட நட்சத்திரங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டார்கள். ஆங்கிலப் படங்களுக்கு இணையான லொகேஷன் வேதாரண்யத்தில் கிடைத்தது. அங்கே படப்பிடிப்பு துவங்கியது. இந்தப் படத்தை மாப்பிள்ளை ரொம்பவே ஈடுபாடுகாட்டி இயக்கினார். அதற்கு முக்கிய காரணம்... எப்போது பார்த்தாலும் மிருகங்களையும் அல்லது பக்தி கதைகளையும் அல்லது இரண்டையும் சேர்த்தும் படம் இயக்கும் வாய்ப்புகளே மாப்பிள்ளைக்கு கிடைத்தது. இந்தக் கதை மாப்பிள்ளையின் டேஸ்ட்டுக்கு இருந்ததால் உற்சாகமாக, கடும் உழைப்புடன் படத்தை இயக்கினார். தேவரின் மகன் தண்டபாணி தயாரிப்பில் வெளியாகி படம் சூப்பர் டூப்பர் ஹிட் அடித்தது. அந்தப்படம்... 'அஞ்சாத நெஞ்சங்கள்.'

அடுத்து... கே.பாக்யராஜ் கதை வசனத்தில் 'பொண்ணுப் பார்க்கப் போறேன்' படம் எடுக்கப்பட்டது. இதுவும் வெற்றிப்படமே. இந்த இரு படங்களையும் கூடவே இருந்து முடித்துக் கொடுத்த மகிழ்வோடு, எனது படத்தயாரிப்பில் கவனம் செலுத்தி வந்தேன்.

# சோதனை மேல் சோதனை!

வீடே உலகம் என்று வாழ்பவர் சின்னப்ப தேவரின் மகளும், டைரக்டர் எஸ்.தியாகராஜனின் மனைவியுமான லட்சுமி. ஆனால் தேவரைப் போல் இரக்க சுபாவம் கொண்டவர். அப்பாவைப் பார்க்க பிற ஆண்கள் வீட்டுக்கு வந்தால் கதவு மறைவில் நின்றபடிதான் வரவேற்பார். அப்படிப்பட்ட அன்பு மகள் ஒருநாள்... கண்ணீரும், கம்பலையுமாக என்னைப் பார்க்க, என் வீட்டுக்கு வந்தார். என்னைப் பார்த்ததும் "அண்ணே..." என கதறியபடி தேம்பித் தேம்பி அழுதார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.
'தேவரின் மகள்தானா இவள்?. கூண்டுக்கிளியாக, அதேசமயம் செல்லமாக வளர்ந்த மகள் இப்படி பரம ஏழையாய் வந்து கதறிக் கதறி அழுகிறாளே... இந்த அன்பு மகள்' என குழப்பமாக அவரைப் பார்த்தேன். அவரின் அழுகை என் இதயத்தையே சுக்கு நூறாக்கிவிட்டது. லட்சுமியின் கோலத்தைப் பார்த்து என் மனைவியும் அழ ஆரம்பித்து விட்டாள்.

"லட்சுமி... லட்சுமி... என்னம்மா இது?" என தழுதழுத்த குரலில் கேட்டேன்.

வெடி வெடித்ததுபோல் மேலும் கதறிய லட்சுமி "அண்ணே... என் மகனுக்கு அரெஸ்ட் வாரண்ட் வந்துவிட்டதண்ணே. உடனே ஒரு லட்சரூவா கட்டணும்ணே" என்றார். தொடர்ந்து பேச வாயே வராமல் குமுறி அழ... எனக்கும் அழுகை வந்துவிட்டது. இருப்பினும் கட்டுப்படுத்திக் கொண்டு "என்னாச்சும்மா? விபரம் சொல்லும்மா" என்று கெஞ்சிக் கேட்டேன்.



தியாகராஜன்-லட்சுமி தம்பதியின் ஒரே மகன் வேல்முருகன், சினிமா அல்லாத ஒரு தொழில் செய்து வந்தார். அதில் மிகப்பெரிய நஷ்டம் வந்துவிட்டது. எப்படி தேவரின் மகன் தண்டபாணி பெரும் நஷ்டத் தில் எல்லாவற்றையும் இழந்தாரோ... அதே மாதிரி, மாப்பிள்ளை தியாகராஜனும் வீடு, நிலம் அனைத்தையும் இழந்துவிட்டார். கடனுக்கு மேல் கடன். வட்டியோ தூங்கவிடாமல் விரட்டியடித்திருக்கிறது. நகரின் ஒதுக்குப் புறத்தில் ஒரு சிறிய வாடகை வீட்டில் குடி புகுந்தார்கள். தொழில் பிரச்சினை காரணமாக இப்போது அரெஸ்ட் வாரண்ட் வரை வந்திருப்பதை உணர்ந்துகொண்டேன்.



"நாலைஞ்சு இடத்துல புரட்டி நாற்பதாயிரம் ரெடி பண்ணி யாச்சுண்ணே. இன்னும் அறுபதாயிரம் தேவைப்படுது. எங்க போறது? என்ன செய்றது? ஒண்ணும் புரியலண்ணே..."

"அம்மா லட்சுமி... அழாதம்மா. முதல்ல நீ உட்காரும்மா. நான் இருக்கேன். எப்பாடுபட்டாவது பணம் புரட்டித் தர்றேன். எதுக்கும்

கவலைப்படாதம்மா. முதல்ல இந்த டீயைச் சாப்பிடு'' என்றேன்.

டீ தம்ளரை கையில் வாங்கிய லட்சுமி அதை சாப்பிடும் நிலையில் இல்லை.

''நான்தான் பார்த்துக்கிறேன்னு சொல்லீட்டேனேம்மா. தைரியமா இரு. நீ உடனே வீட்டுக்குப் போ. மாப்பிள்ளையை உடனே அனுப்பி வைம்மா'' என்றேன்.

'அண்ணே... உங்களை நம்பி நான் போகலாமா?' என்பதுபோல் கண்ணீராலேயே கேள்வி எழுப்பினார்.

அதைப் புரிந்துகொண்ட நான் ''நம்பும்மா. நான் ஏற்பாடு செய்றேன்'' என லட்சுமியை அனுப்பிவைத்தேன். அவர் போன பிறகு இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டேன்.

'கஷ்டம்னு வந்தவங்களுக்கெல்லாம் வாரிவாரி வழங்கி னாரே தேவர். வட்டிக்கி வாங்கி எத்தனையோ கோயில் களுக்கு திருப்பணி செய்தாரே. அவருடைய மகளுக்கு இவ்வளவு கஷ்டத்தை கொடுத்துவிட்டாயே முருகா' என அரற்றியபடி கதறி அழுதேன் நான்.

சிறிது நேரத்தில் மாப்பிள்ளை தியாகராஜன் வந்தார்.

அவரை வரவேற்று அமர வைத்துவிட்டு பீரோவைத் திறந்தேன். அதில் முப்பதாயிரம் ரூபாய் பணம் இருந்தது. அப்படியே எடுத்து மாப்பிள்ளையின் கையில் கொடுத் தேன்.

'மாப்பிள்ளை... இதை வச்சுக்கங்க. இப்போ நான் ஒருத்தரைப் பார்க்கப் போறேன். நீங்களும் என்கூட வரணும்' என்றபடி அவரை காரில் அழைத்துக் கொண்டு டைரக்டர் பி.வாசுவின் வீட்டுக்கு வந்தேன். மாப்பிள்ளையை காரிலேயே உட்கார வைத்துவிட்டு நான் மட்டும் உள்ளே போனேன்.

''வாசு.. உடனே முப்பதாயிரம் ரூபாய் அவசரமாக தேவைப் படுகிறது'' என்றேன்.

மறுபேச்சில்லாமல் எடுத்துவந்து என்னிடம் கொடுத்தார்.

''எதுக்கு இந்த முப்பதாயிரம்னு கேட்கலையே?''

''நான் ஏன் கேட்கணும்? 'அவசரம்' என்று சொன்னீர்கள். உங்களுக்கு இல்லாத பணமா? எத்தனை படத்திற்கு நீங்கள் என்னோடு

உழைத்திருக்கிறீர்கள். உங்களுக்குச் செய்யா விட்டால் எப்படி?" என்றார் வாசு.

உடனே நான் வெளியே, காருக்குள் காத்திருந்த மாப்பிள் ளையை அழைத்து வந்தேன். வாசு, கைகூப்பி வரவேற்று அமரவைத்தார். பணத்தின் அவசரத் தேவைக்கான காரணங்களை நான் வாசுவிடம் சொன்னேன். "உங்களுக்கு சிரமம் கொடுத்திட்டேன்" என வாசுவிடம் சொன்னார் மாப்பிள்ளை.

கண்கலங்கியபடியே "சார்... உங்களுக்கு உதவி செய்ய நான் குடுத்து வச்சிருக்கணும். என் தந்தை மேக்-அப்மேன் பீதாம்பரம், தேவர் தயாரித்த எல்லா எம்.ஜி.ஆர். படங்களிலும், எம்.ஜி.ஆருக்கு மேக்-அப் போட்டவர். அதற்காக தேவரிடம் என் அப்பா வாங்கிய பணம்தான் இந்த வீட்டின் ஒவ்வொரு செங்கற்கல்லாகவும் இருக்கு" என மனமுருகச் சொன்னார் வாசு.

அவரிடம் விடைபெற்றுக்கொண்டு வந்தோம்.

எப்படியோ... தேவரின் மகள் குடும்பத்திற்கு வந்த அன்றைய ஆபத்து நீங்கியது.

பின்பொரு சமயம்....

திடீரென ஒருநாள்... மாப்பிள்ளை தியாகராஜன் என் வீட்டுக்கு வந்தார்.

"என்ன மாப்பிள்ளை... ஒரு மாதிரி சோகமா வந்திருக் கீங்களே?"

"அண்ணே... என்னால குடும்பத்தை நகர்த்த முடியலண்ணே..."

"என்ன செய்யலாம் மாப்பிள்ளை?"

"ரஜினியைப் பார்க்கணும். அவருக்கு சிரமம் கொடுக் கிற மாதிரி இருக்கக் கூடாது. அதே சமயம் பார்த்துத் தான் ஆகணும். அதுக்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங் கண்ணே."

"எனக்கொரு யோசனை தென்படுது."

"சொல்லுங்கண்ணே" என்றார் ஆர்வமாக.

"ரஜினியோட சின்னப்பொண்ணு சௌந்தர்யாவுக்கு திருமணம் முடிஞ்சிருச்சு. கல்யாண வரவேற்பு நடக்கப் போகுது. வரவேற்பு விழாவில் பெரிய, பெரிய ஆட் களெல்லாம் கலந்துக்குவாங்க. அவர்களை ரிஸீவ்

பண்றதுக்காக ரஜினி மேடையில்தான் இருப்பார். வேற எங்கேயும் நகரமாட்டார். அந்த சந்தர்ப்பத்தை நாம ஏன் பயன்படுத்திக்கக் கூடாது?''

''ஏண்ணே... அந்த இடத்துல நாம வாழ்த்துச் சொல்லத் தான் முடியும். ஸ்டேஜ்ல போயி...'' என மாப்பிள்ளை தயங்கினார்.

''வாழ்த்தைச் சொல்லுவோம். சொல்லும்போதே... ரஜினி காதோரமா நம்ம வறுமையையும் சொல்லீரலாம் மாப்பிள்ளை. வேற வழியில்லை.''

மாப்பிள்ளை தயக்கம் காட்டி யோசித்தார்.

''நான் சொல்றபடி செய்ங்க மாப்பிள்ளை. எல்லாம் நல்ல படியா நடக்கும்.''

''எப்படிண்ணே?''

''நீங்க, உங்க மனைவி லட்சுமி, உங்க மகன் மூணுபேரும் உங்க கார்ல வாங்க. நான் என் கார்ல வர்றேன். ரிஷப்ஸனுக்கு நாம தனித்தனியா போற மாதிரி அங்க போயிரணும். போனதும், ரஜினி ஸ்டேஜ்ல இருக்கும்போது... குறுக்க புகுந்து ஸ்டேஜ்ல ஏறி, நீங்க மூணு பேரும் 'டபார்'னு அவர் முன்னால நில்லுங்க. அது போதும். நான் தூரத்துல நின்னுக்கிறேன்'' என்றேன்.

மாப்பிள்ளைக்கு மகிழ்ச்சி. இருந்தாலும்... ''இப்படிப் போகலாமாண்ணே'' என்றார்.

''போயே ஆகணும். ஏன்னா... வயித்தவலி நமக்குத்தான். ரஜினிங்கிற டாக்டர்கிட்ட போயே ஆகணும். இல்லேன்னா வலி தீராது'' என அழுத்தமாகச் சொன்னேன்.

''அப்படியே செய்யலாம்'' என சிரித்தபடி மாப்பிள்ளை விடை பெற்றார்.

திட்டமிட்டபடி கல்யாண வரவேற்பிற்குச் சென்றோம்.

நாங்கள் போன நேரம்... மணமக்களின் அருகில் நின்று, வாழ்த்த வந்தவர்களை கும்பிட்டு மரியாதை செய்து கொண்டிருந்தார் ரஜினி.

'அருமையான சந்தர்ப்பம். இதை நழுவ விடக்கூடாது' என முடிவு செய்தேன்.

மணமக்களை வாழ்த்த கூட்டம் திரண்டு நின்றிருந்தது. இந்த வரிசையில் நின்றுபோவது சாத்தியப்படாது என்பதால் ''தள்ளுங்க... தள்ளுங்க... வழிவிடுங்க'' என சத்தமிட்டபடியே மூன்று பேர்களையும்

தள்ளிக்கொண்டே முன்னேறினேன். கிடைத்த கேப்பில் நுழைத்து அவர்களை மேடையில் ஏற்றிவிட்டேன்.

வேகமாக போன லட்சுமி ரஜினி முன் நின்று "அண்ணே..." என்றபடி கையெடுத்துக் கும்பிட்டார்.

ரஜினிக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி.

லட்சுமியின் கூப்பிய கைகளை தன் கைகளால் இறுக்கிப் பிடித்துக்கொண்டு "என்னம்மா... என்னம்மா" என்றபடி லட்சுமியின் ஒட்டி உலர்ந்த இரு கன்னங்களையும் தன் இரு கைகளால் தாங்கிக்கொண்டு "மகாராணியாட்டம் இருந்த நீ... இப்படி உருக்குலைஞ்சு வந்திருக்கியேம்மா..." என்றார் ரஜினி.

அப்போது ரஜினியின் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டது.

# கண் கலங்கிய ரஜினி!

ரஜினியின் இளைய மகள் சௌந்தர்யா திருமண வரவேற்பு மேடையில் தேவரின் மகள் லட்சுமி தன் குடும்பத்தினருடன் ரஜினி முன் போய் நின்றார்.

''அண்ணே...'' என லட்சுமி அழைத்தபடி கைகளைக் கூப்ப, லட்சுமியின் கூப்பிய கைகளை இறுகப் பற்றிக்கொண்ட ரஜினி ''என்னம்மா இது? மகாராணி மாதிரி இருந்த பொண்ணு... இப்படி உருக்குலைஞ்சு நிக்கிறீயேம்மா'' என்றபடி லட்சுமியின் ஒட்டிய கன்னங்களை தன் கைகளில் தாங்கிக் கொண்டார். அப்போது ரஜினியின் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டது.

லட்சுமியும் கலங்கிய கண்களுடன் சிரித்தபடி ரஜினியின் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றார்.

மகளின் திருமண வரவேற்பு மேடை என்பதால் கண்ணீரை கட்டுப்படுத்திக் கொண்டார் ரஜினி. ஆனாலும் முடியவில்லை. அவரின் கண்ட்ரோலை மீறி இரண்டு சொட்டு கண்ணீர் உருண்டது. உடனே லட்சுமி அழுக... லட்சுமியின் உச்சந்தலையை பாசத்துடன் தடவிக் கொடுத்த ரஜினியால் ''என்னம்மா?...'' என்பதைத்தவிர வேறெதுவும் பேசமுடியவில்லை.

இதைப் பார்த்து லட்சுமியின் கணவர் தியாகராஜனும் அழுதுவிட்டார்.

''அண்ணே... உங்களைப் பார்க்க வந்தேன்'' என லட்சுமி சொல்ல...

''நாளைக்கி நீ ராகவேந்திரா மண்டபத்துக்கு வர்றம்மா. ஓ.கே.யா? அப்ப நாம...'' என ரஜினி சொல்ல... லட்சுமி தலையாட்டினார். லட்சுமியின் கைகளைப் பற்றிக் கொண்ட ரஜினியால் கைகளை விட மனமில்லை. இருவரும் ரொம்ப எமோஷனலாக, பாசத்தின் உச்சகட்டத் தில் இருந்தார்கள்.





அந்த சமயம் மணமக்களை வாழ்த்த ஒரு பிரபலம் வர... மண்டபத்தில் பரபரப்பு நிலவியது. அதைக் கவனித்த ரஜினி, லட்சுமியின் கண்ணீரைத் துடைத்துவிட்டு "நாளைக்கு வாம்மா" என அனுப்பிவைத்தார்.

மூவரும் கீழே இறங்க... நான் அவர்களை அழைத்துக் கொண்டு வெளியே வந்தேன்.

"அண்ணே... நீங்க ரஜினியைப் பார்க்கலையா?" என கேட்டார் மாப்பிள்ளை தியாகராஜன்.

"மணமக்களுக்கு தூர இருந்தே என் ஆசிர்வாதத்தை தந்துவிட்டேன். ரஜினியை நான் எப்ப வேணும்னாலும் பார்த்துக்கலாம் மாப்பிள்ளை" எனச் சொல்லியபடி கார் நிறுத்தத்திற்கு வந்தோம்.

"லட்சுமி... என்னம்மா சொன்னாரு ரஜினி?"

''நாளைக்கி ராகவேந்திரா மண்டபத்துக்கு வரச் சொல்லீ ருக்காருண்ணே. என்ன விமோசனம் கிடைக்குதுன்னு பார்க்கலாம்ணே. நீங்க செஞ்ச உதவியை மறக்க முடியா துண்ணே'' என்றபடி என் காலில் விழ வந்தார் லட்சுமி. நான் அவரைத் தடுத்து ''கவலப்படாத லட்சுமி... கண்டிப்ப ரஜினி நல்ல உதவி செய்வார்'' என்றேன்.

அங்கிருந்து அவரவர் கார்களில் திரும்பினோம்.

மறுநாள்...

லட்சுமி தன் குடும்பத்துடன் ரஜினியை சந்தித்தார். ஒரு தொகை கொடுத்து உதவிய ரஜினி ''உங்க குடும்பத்திற்கு கண்டிப்பா ஒரு படம் பண்ணித் தர்றேன். தைரியமா இருங்க. இதை தண்டபாணியிடமும் சொல்லுங்க'' எனச் சொல்லி அனுப்பி வைத்திருக்கிறார் ரஜினி.

ரஜினி படம் பண்ணித் தருவதாகச் சொன்னதையறிந்து என்னை தொடர்பு கொண்ட தண்டபாணி, ''என்கிட்டயும் ரஜினி சார் ஒருமுறை சொல்லீருந்தார். பார்ப்போம்... எல்லாம் அந்த முருகன் செயல்தான்'' என்றார்.

வறண்ட பூமி, வான் மழையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுபோல், இவர்களின் வாழ்க்கை வளம் பெற, ரஜினியின் கருணை மழை பொழியும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்த்து ஏங்கி இருக்கிறார்கள்.

'பைரவி' படத்தில் நான் டைரக்டராக அறிமுகப்படுத்திய எம்.பாஸ்கருக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்தை முறைப்படி கொடுத்தபோதும் ஒரு நன்றிகூட சொல்லாமல் போய்விட்டார். நான் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. 'பைரவி' படத்தின் என்.எஸ்.சி . ஏரியா விநியோகஸ்தர் பாட்ஷாபாய் நன்றாக சம்பாதித்தார். ‘ஹிட் பட டைரக்டர்’ என்கிற ஸ்டார் வேல்யூ பாஸ்கருக்கு உண்டானதால் பாட்ஷா பாயின் ஃபைனான்ஸில் 'சூலம்’ படத்தை தயாரித்து இயக்கினார் பாஸ்கர். நடிகை லதாவின் தம்பி ராஜ்குமாரும், ராதிகாவும் நடித்தனர். இந்தப் படத்தின் பூஜைக்கு பாஸ்கர் என்னை அழைக்கவில்லை.

'சூலம்’ படம் வெற்றி பெற்றது. அடுத்து 'தீர்ப்புகள் திருத்தப்படலாம்' படத்தை இயக்கித் தயாரித்தார். ஆனால் படம் வெளியாகவில்லை.

இந்த காலகட்டத்தில் நான் ஆறு படங்களைத் தயாரித்து விட்டு ஏழாவது படமாக ‘பக்கத்துவீட்டு’ ரோஜா'வை இயக்கித் தயாரிக்க முடிவு செய்தேன். இதுவும் டபுள் ஹீரோ சப்ஜெக்ட். கார்த்திக், ராதா ஜோடியை

ஒப்பந்தம் செய்துவிட்டு காரில் வந்துகொண்டிருந்தேன். அப்போது பாஸ்கர் வேகாத வெயிலில் நடந்து வந்துகொண்டிருந்தார். எனக்கு பகீரென ஆகிவிட்டது. காரை நிறுத்திவிட்டு இறங்கி எதிர்புறம் ஓடி "என்ன பாஸ்கர்?" எனக் கேட்டு அவரின் கைகளைப் பற்றினேன்.

ஊடலால் நீண்ட நாட்கள் பிரிந்திருந்த கணவன்-மனைவி கூடினால் எப்படி மகிழ்ச்சியில் கண்ணீர் தளும்புமோ... அப்படி உணர்ச்சிவசப்பட்டார். "வாங்க... ஆபீஸ்ல போய் பேசலாம்" என்றார். காரில் அவரின் அலுவலகம் வந்தோம்.

"எப்படியோ பணம் புரட்டி 'தீர்ப்புகள் திருத்தப்படலாம்' படத்தை முடிச்சிட்டேன். 'படம் நல்லா இருக்கு. ஆனா ஏதோ ஒண்ணு குறையுது'னு விநியோகஸ்தர்கள் சொல்றாங்க. அதனால் வியாபாரம் ஆகலை. கே.பாக்யராஜ் சார் கூட படத்தைப் பார்த்திட்டு 'ஏதோ குறையுதுனு'தான் சொன்னார். என்னான்னு எனக்கும் புரிபடல''என்றார்.

"ஒண்ணு செய்ய முடியுமா பாஸ்கர்?"

"சொல்லுங்க... செய்றேன்."

"என்னோட கம்பெனி இப்போ நல்ல வளர்ச்சியடைஞ் சிருக்கு. நான் தயாரிச்சு இயக்க திட்டமிட்டிருக்க 'பக்கத்து வீட்டு ரோஜா'வை நீங்க டைரக்ட் பண்றதா நாளைக்கே விளம்பரப்படுத்துறேன். என் கம்பெனிக்கும், எனக்கும் இருக்க ஏதோ கொஞ்சம் ஸ்டார் வேல்யூவை வச்சு உங்க படம் வியாபாரம் ஆகிறதுக்கு வாய்ப்பு இருக்கு" என்றேன்.

பாஸ்கர் என் கைகளைப் பிடித்து குலுக்கினார்.

மறுநாள்... அதேபோல் விளம்பரம் செய்தேன்.

'தீர்ப்புகள் திருத்தப்படலாம்' படத்தின் குறையை கண்டு பிடிக்க படம் போட்டுக் காண்பிக்கச் சொன்னேன். அதன்படி செனடாப் ரோட்டில் உள்ள மனோரமாவின் பிரிவியூ தியேட்டரில் நானும், பாஸ்கரின் குருநாதர் ஸ்ரீதரும் மட்டும் படம் பார்த்தோம்.

படம் பார்த்து முடிந்ததும்... "இந்தக் கதையில் பெரிய ஓட்டை இருக்கு பாஸ்கர்"என்றேன்.

"குட். எனக்கும் அது தோணுது"என்றார் ஸ்ரீதர்.

"ஸாரி சார். நீங்க இருப்பதை மறந்துட்டேன். நீங்க சொல்லுங்க சார். நான் ஏதாவது முட்டாத்தனமா உளறப் போறேன்."

"இல்ல கலைஞானம். குறை இருக்குனு தெரியுது. அதை எப்படி சரிசெய்யணும்னு நான் இனிமேதான் யோசிக்கணும். உங்களால குறையை சொல்ல முடியுமா?"

"சொல்றேன் சார்...?"

சிவகுமார், அவரின் மனைவி மனநோய் பாதித்த அம்பிகா. காமவெறியனாக சத்யராஜ், அவரின் மனைவி சத்யகலா. இரு குடும்பமும் ஒரே காம்பவுண்ட் வீடுகளில் வசிக்கிறார்கள். மனைவி எவ்வளவோ கண்டித்தும் திருந்தாத சத்யராஜ், ஒரு நாள் மனநலமில்லாத அம்பிகாவை கற்பழிக்க முயல... சத்யகலா தடுத்தும் சத்யராஜ் கேளாததால் வாளை எடுத்து கணவனையே கொலை செய்கிறார். பிறகு பதட்டமாகி எதுவும் தெரியாதது போல் தன் வீட்டுக்குப் போய்விட... சிவக்குமார் வருகிறார். தன் மனைவிதான் கொலைகாரி என நினைத்து பதட்டமாக... 'பைத்தியக்காரி என் புருஷனை கொன்னுட்டாளே' என' சத்யகலா நாடகம் போட... அவளை சமாதானப்படுத்தி சத்யராஜின் உடலை காரில் கொண்டுபோய் மலையில் உருட்டிவிடுகிறார் சிவக்குமார். இந்தக் கொலை பற்றி சிவக்குமார் ஒரு புறமும், போலீஸ் ஒரு புறமும் தனித்தனியாக துப்பறிய... க்ளூ கிடைக்கிறது சிவக்குமாருக்கு. சத்யகலாவை மிரட்டிக் கேட்க... 'உன் மனைவி கற்பைக் காப்பாற்றத் தான் கொலை செய்தேன்' என சத்யகலா சொல்ல... சிவக்குமாருக்கு சத்யகலா மீது பரிதாபம். மறைந்திருந்து கேட்ட போலீஸ் சத்யகலாவை கைது செய்கிறது. இது தான் கதை.

"மனநலமில்லாத ஒரு பெண்ணின் கற்பைக் காப்பாற்ற தன் கணவனையே கொலை செய்தவள் மிகச் சிறந்த கேரக்டர். அப்படிப்பட்டவள் கொலைப்பழியில் அந்தக் குடும்பம் சிரமப்படுவதை பார்த்துக் கொண்டிருக்க மாட்டாள். அவளுக்கு கண் தெரியாத, வாய் பேசமுடியாத ஒரு ஐந்து வயது பெண் குழந்தை இருப்பதால் அவளை வளர்க்கவேண்டிய தாய்மை உணார்ச்சியில் உண்மையை மறைத்தாள்... என லாஜிக் இருந்தால் சரியாக இருக்கும்" என்றேன். ஸ்ரீதர் இதை வரவேற்றார். அதன்படி பாஸ்கர் ரீ-ஷூட் பண்ணி நான் சொன்ன காட்சியை படமாக்கினார்.

# ஸ்ரீதரின் துணிச்சல்!

நான் சொன்ன திருத்தங்களை ரீ-ஷூட் செய்து படத்தில் இணைத்தார் டைரக்டர் எம்.பாஸ்கர். இருப்பினும் 'தீர்ப்புகள் திருத்தப்படலாம்' படம் வியாபாரம் ஆவதில் மந்த நிலையே நீடித்தது. கார்த்திக்-ராதா நடிக்க, பாஸ்கர் இயக்கத்தில், எனது தயாரிப்பில் 'பக்கத்துவீட்டு ரோஜா' படத்திற்காக திருவனந்தபுரம் கோவளம் பகுதியில் ஒரு பாடல் காட்சியை எடுத்துவிட்டு நான், பாஸ்கர், கார்த்திக் மூவரும் ரயிலில் சென்னைக்கு வந்துகொண்டிருந்தோம்.

"சார்... ஒரு சின்ன ரெக்வெஸ்ட்" என்ற கார்த்திக் "" 'இளஞ்ஜோடிகள்' மாதிரியே இந்தப் படத்திலும் இரண்டு ஹீரோனு சொன்னீங்க. அந்தப் படத்தில் நடிச்ச சுரேஷையே இந்தப் படத்துக்கும் போடப் போறதா சொல்றீங்க. இது எங்க அம்மாவுக்கு தெரிஞ்சு... ஹோட்டல்ல நான் இருந்தப்போ போன் பண்ணினாங்க சார். "சிங்கிள் ஹீரோ சான்ஸ் உனக்கு நிறைய வந்திட்டிருக்கு. அதனால கலைஞானம் சார்கிட்ட சொல்லி, இந்தப் படத்தின் கதையை சிங்கிள் ஹீரோ சப்ஜெக்ட்டா மாத்தச் சொல்லு'னு அம்மா சொன்னாங்க சார். ப்ளீஸ்... எனக்கு தகுந்த மாதிரி கதையை மாத்துங்க சார்" என்றார்.

கோபமான பாஸ்கர் "என்னா மேன் சொல்ற? ஒரு ஸாங் ஷூட் பண்ணியாச்சு. நிறைய்ய செலவு பண்ணியாச்சு. இப்பப் போய் கதையை மாத்துன்னா எப்படி முடியும்?" என்றார்.

உடனே நான் பாஸ்கரைப் பார்த்து கண் ஜாடை காட்டிவிட்டு, "உன் விருப்பப்படியே செய்யலாம்ப்பா. நீ போய் உன் பெர்த்ல படு" என கார்த்திக்கை அனுப்பி வைத்தேன்.



பாஸ்கர் என்னை கோபமாகப் பார்த்தார்.

"சார்... 'இளஞ்ஜோடிகள்' ரிலீஸுக்குப் பின்னாடி கார்த்திக்கிற்கு பத்துப் படம் புக் ஆகியிருக்கு. பையன் ரொம்ப பிஸி. நம்ம ரெண்டு பேருக்கும் தெரியாத கதையா? புதுக் கதை ஒண்ணு ரெடி பண்ணுவோம்" என அவரை சமாதானப்படுத்தினேன்.



ஓடும் ரயிலிலேயே ஒரு கதையை ரெடி செய்தோம். ஆனால் முதலில் இருந்த கதையின் டெப்த் இந்தக் கதையில் கிடைக்கவில்லை. இருப்பினும் 'ஷூட்டிங்கின்போது சரி பண்ணீடலாம்' என சமாதனப் படுத்திக்கொண்டோம்.



ஒருபுறம் தனது 'தீர்ப்புகள் திருத்தப்படலாம்' வியாபார மாகாத கவலையை மனதில் வைத்துக்கொண்டே, வியாபாரத்திற்கான வேலைகளையும், எனது 'பக்கத்து வீட்டு ரோஜா' படப்பிடிப்பையும் மாறி மாறிச் செய்தார் பாஸ்கர். 02-09-1982-ல் 'பக்கத்து வீட்டு ரோஜா' ரிலீஸ். கம்மியான மார்க்கில் பாஸ் ஆனது. 09-10-1982-ல் 'தீர்ப்புகள் திருத்தப்படலாம்' ரிலீஸ். 25 வாரங்கள் ஓடி வெற்றிக்கொடி நாட்டியது.

இப்படிப்பட்ட சூழலில் தன் சிஷ்யர் பாஸ்கரின் ஆபீஸுக்கு ஸ்ரீதர் அடிக்கடி வருவார். நானும் அடிக்கடி அங்கு செல்வேன். இதனால் ஸ்ரீதருடன் மிகமிக நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

1991 காலகட்டத்தில்... விக்ரமை ஹீரோவாக அறிமுகப் படுத்தி (ஹீரோயின் ரோஹிணி) 'தந்துவிட்டேன் என்னை' படத்தை இயக்கித் தயாரித்திருந்தார் ஸ்ரீதர். முன்பு 'தீர்ப்புகள் திருத்தப்படலாம்' படத்திற்கு நான் ஆலோசனை சொன்னதை பார்த்திருந்த ஸ்ரீதர் "என் படத்தைப் பார்த்துவிட்டு நிறை குறைகளை ஓபனா சொல்லுங்க கலைஞானம்" என்றார்.

அதன்படி மேனா பிரிவியூ தியேட்டரில் ஏற்பாடு செய்தார். நானும், பாஸ்கரும் படம் பார்த்தோம்.

"ஏன் சார்... இந்தப் படத்தை எடுத்தீங்க? இது உங்க பாணி இல்லையே?" என்றேன் ஸ்ரீதரிடம்.

"ஒரு சினிமா எழுத்தாளனுக்கு ஒரே பாணி என்பது கிடையாது. எந்த பாணியில் வேண்டுமானாலும் எழுதி எடுக்கலாம். சொல்லப்படும் விதம் சுவையாக இருந்தால் அதில் ஓட்டைகள் தெரியாது. சுவையில்லாவிட்டால் எப்பேர்ப்பட்ட கதையும் அடிபட்டுவிடும். இது என் அனுபவத்தில் நான்கண்டது கலைஞானம். எனக்கு இந்த படம் மீது டவுட் இருக்கு. இருந்தாலும் துணிந்து வெளியிடப்போறேன்" என்று சொல்லிச் சிரித்தார் ஸ்ரீதர்.

படம் வெளியானது. சூப்பர் ஃபிளாப்.

சிலநாட்கள் கழித்து பாஸ்கர் ஆபீஸில் ஸ்ரீதர் இருந்த சமயம் நானும் அங்கே போனேன்.

"சார், படம் சரியா போகலைனு கேள்விப்பட்டேன்..." என நான் சொல்லி முடிப்பதற்குள்... "சரியா போகலையா? ரொம்பவும் சரியாப் போகலை" என வேதனையுடன் சிரித்தார். பிறகு பாஸ்கரிடம் திரும்பி "எல்லா தியேட்டர்ல இருந்தும் போன்பண்ணி 'சார் படப் பொட்டியை வைக்க இடமில்லை. எடுத்திட்டுப் போங்க'னு சொல்றாங்க. என்ன செய்யலாம் பாஸ்கர்?" எனக் கேட்டார்.

"அதையெல்லாம் தியேட்டர் தியேட்டரா போய் எடுக்க ணும்னா நிறைய செலவாகும். அதுக்கு மறுபடி வட்டிக்கி பணம் வாங்கணுமா?. அப்படியே விட்டுடுங்க'சார்" என்றார் பாஸ்கர்.

எந்த அசைவுமில்லாமல் அப்படியே உட்கார்ந்திருந்தார் ஸ்ரீதர். நான் ஸ்ரீதரையே இமைக்காமல் பார்த்துக்கொண்டி ருந்தேன்.

"தமிழ்நாட்டிலேயே 'அட்வான்ஸ் தாட்' எனப்படும் முற்போக்கான படங்களை முதலில் எடுத்தவர் ஸ்ரீதர். மக்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்ற இயக்குநர். அவர் படங்களைப் பார்த்து அவர் பாணியில் கதை எழுதி, படம் எடுத்தார்கள் பலர். அதில் நானும் ஒருவன். அப்படிப்பட்ட டைரக்டருக்கு இப்படி ஒரு கதியா? நானெல்லாம் இனிமே என்ன ஆகப் போகிறேனோ?"என கதிகலங்கிப் போனேன்.

மனித வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளுக்கு பிரபலங்களிட மிருந்துதான் பாடம் பெறவேண்டும் என்பதில்லை. சாதாரண மனிதர்களிடமும் அந்தப் பாடம் கிடைக்கும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால்...

1965-ல் சென்னை மைலாப்பூர் காரணீஸ்வரர் கோவில் தெருவில் 40-ஆம் நம்பர் காம்பவுண்ட் வீட்டில் மாதம் பத்து ரூபாய் வாடகைக்கு ஒரு ஒற்றை அறையில் குடும்பத்துடன் குடியிருந்தேன். அந்த வீட்டின் உரிமையாளர் பொன்னம்பலம், மாம்பலத்தில் குடியிருந்தார். மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தேதியில் காலை 7 மணிக்கு இங்கு வந்து வாடகை வசூலிப்பார். மொத்த வாடகை மாதம் 130 ரூபாய். இதை வாங்கித்தான் அவர் குடும்பச் செலவு செய்து வந்தார். நான் பத்து ரூபாய் வாடகை கொடுக்க முடியாமல் அவர் வருவதற்கு முன்பாகவே தலைமறைவாகிவிடுவேன். கடற்கரை காந்தி சிலைக்கு ஓடி வந்துவிடுவேன்.

"எங்க வீட்டுக்காரரர் வெளியில போயிருக்கார். அடுத்த மாச வாடகையோட சேர்த்து தர்றம்னு சொல்லச் சொன்னார்" என மனைவி சொல்லிவிடுவாள். அவரும் மிகத்தன்மையாக சென்றுவிடுவார்.

ஒருமுறை "அம்மா... மூணு மாசமா வாடகை தரலேன்னா எப்படிம்மா? இதை வச்சுத்தானே நான் குடும்பம் நடத்துறேன். வாடகை தரமுடியலேன்னா வீட்டை காலி பண்ணீடுங்கம்மா" என அப்போதும் தன்மையாகச் சொல்லியிருக்கிறார் ஹவுஸ் ஓனர்.

இந்தச் சமயம்தான் என் அண்ணன் கிருஷ்ணசாமி ஊரிலி ருந்து வந்து நான்கு மாதங்களுக்குச் சேர்த்து வாடகை கொடுத்துவிட்டு என் மனைவி, குழந்தைகளை ஊருக்கு அழைத்துச் சென்றார். 'நாலாவது மாச வாடகை முழுமையடைய இன்னும் 15 நாட்கள் இருந்ததால் நான் மட்டும் இங்கேயே தங்கினேன். அந்தச் சமயத்தில்தான் சிட்டாடல் ஸ்டுடியோ எனது 'காதல் படுத்தும் பாடு', 'அமுதம்' ஆகிய இரண்டு கதைகளை விலைக்கு வாங்கிக் கொண்டு ஐநூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்தது. (இது பற்றி ஏற்கனவே விரிவாக சொல்லியிருக்கிறேன்)

இப்போது என் கையில் பணப்புழக்கம். நான் அதே தெருவில் 90 ரூபாயில் வேறு வீடு பார்த்து பார்த்து விட்டேன். அப்போது மற்ற குடித்தனக்காரர்களிடம் வாடகை வசூலிக்க வந்த பொன்னம்பலம் "கதாசிரியரா யிட்டீங்க. அதுவும் சிட்டாடல் நிறுவனத்துல. வாழ்த்துகள்.

அப்புறம் ஒரு சின்ன ரெக்வெஸ்ட்... எனக்கு 300 ரூபா கடனா கொடுங்க. முடிஞ்சா வட்டி போட்டு அடுத்த மாசம் வாடகை வசூலிக்க வரும்போது திருப்பித் தர்றேன்'' என்றார்.

நானும் உடனே பணத்தைக் கொடுத்து, என் புதுவீட்டு முகவரியையும் அவரிடம் தெரிவித்தேன்.

'அடுத்த மாதம் எப்படியும் கொடுத்துவிடுறேன்' என இரண்டு மாதங்களுக்கு மேல் கடத்தினார். மூன்று மாதங் களுக்கு மேல் ஆன நிலையில்... மாம்பலத்திலுள்ள அவரின் வீட்டுக்குப் போனேன்.

''எங்க வீட்டுக்காரர் வெளியில போயிட்டார். உங்களுக்கு பணம் தரணும்னு சொல்லிக்கிட்டிருந்தார். அவர் வந்ததும் சொல்றேன்'' என்றார் அவரின் மனைவி.

''சரிம்மா'' எனச் சொல்லிவிட்டு ரோட்டை கிராஸ் செய்தேன். ''அடுத்து 'எங்க போகலாம்?'' என யோசித்த படியே தற்செயலாக பொன்னம்பலத்தின் வீட்டைப் பார்த்தேன். ஜன்னல் வழியே அவர் என்னைப் பார்த் துக்கொண்டிருந்தார். நான் பார்த்ததும் தலையை உள் ளுக்குள் இழுத்துக் கொண் டார்.

'வாடகை கொடுக்க முடியாமல் வீட்டு உரிமையாள ருக்குப் பயந்து நான் தலைமறைவானது என்னைச் சங்கடப்படுத்தியதுபோல் இன்று என்னைப் பார்த்து அவர் தலைமறைவாவது எவ்வளவு சங்கடத்தை அவருக்குத் தரும். அதனால் அவராக வந்து தரும் வரை நாம் அவரைத் தேடிப்போய் கேட்கக்கூடாது' என முடிவு செய்தேன்.

# வந்தார் சிவாஜி!

வீட்டு உரிமையாளரைப் பார்த்து குடித்தனக் காரனான நான் தலைமறைவானது மாறி, என்னைப் பார்த்து வீட்டு உரிமையாளர் தலைமறைவானது எப்படி நிகழ்ந்தது?
எல்லாமே சூழ்நிலைதான்.

'எப்பேர்ப்பட்ட டைரக்டர் ஸ்ரீதருக்கே இப்படி திரைத்தொழிலில் தாழ்வென்றால் நானெல்லாம் எம்மாத்திரம்?' என கலங்கிப்போய் ஸ்ரீதரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

சில வருடங்களுக்குப் பிறகு தி.நகர் வீட்டை விற்றுவிட்டு அடையாறு பக்கம் குடியேறினார் ஸ்ரீதர். அதன்பின் கை, கால் செயல்படாமல் இருந்து... இறந்தும்விட்டார்.

திரையுலகமே சென்று ஸ்ரீதருக்கு அஞ்சலி செலுத்தியது. நானும் கண்ணீர் அஞ்சலி செலுத்தினேன். அப்போது சோகமயமாக நின்றிருந்த ஸ்ரீதரின் ஒன்றுவிட்ட தம்பியும், பிரபல டைரக்டருமான சி.வி.ராஜேந்திரன் என்னிடம் வந்தார்.

''விக்ரமை ஹீரோவா அறிமுகப்படுத்தி 'தந்துவிட்டேன் என்னை' படம் எடுத்தார். அதில் பெரும் நஷ்டம். வட்டிக்கு மேல் வட்டி ஏறி... பெரும் மன உளைச்சலில்தான் அவரை நோய் தாக்கியது. கை, கால் விழுந்துவிட்டது. பாருங்க... அவர் இறப்புக்கு எல்லாரும் அஞ்சலி செலுத்தினாங்க. ஆனா.. அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட விக்ரம் வரலை. இப்படியுமா இருப்பாங்க மனுஷங்க...'' என வேதனைப்பட்டார்.



''ராஜேந்திரன் சார்... ஏத்திவிட்ட ஏணியை எட்டி உதைக்கிற பலரை நான் என் அனுபவத்தில் பார்த்திருக் கேன். அதேபோல ஏத்திவிட்ட ஏணி மரத்தை தெய்வமாக கொண்டாடுனவங்க... அண்ணன்மார்கள் எம்.ஜி.ஆர்., சிவாஜி போன்றவர்கள்தான். இதுவும் என் அனுபவம்தான்'' என அவரை ஆசுவாசப்படுத்தினேன்.

இதுவரை 7 படங்களை தயாரித்து முடித்துவிட்டேன். எட்டாவது படமாக... என் வாழ்வின் லட்சியப் படமாக சிவாஜி அண்ணனை வைத்து 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தை எடுக்க வேண்டும் என்பது எனது பெரும் கனவாக இருந்தது. சிவாஜியிடம் கதை சொல்ல நேரமும் வாங்கிவிட்டேன். கிளம்பும்போது எனக்குள் நடுக்கம் கலந்த பதட்டம்.

'இப்படி ஒரு கலையம்சம் உள்ள படத்தை எடுக்க நான் தகுதியுள்ளவனா?' என்கிற கேள்வி எனக்குள். 'ஏதோ ஒன்று இருப்பதால்தானே நாமும் சினிமாவில் ஒரு ஆளாகியிருக்கோம்' என நானே பதிலும் சொல்லிக் கொண்டேன். 'இப்படிப்பட்ட கலையம்சப் படங்களுக்கு வழிகாட்டியான டைரக்டர் ஏ.பி.நாகராஜனை மனதில் வைத்து இந்தப் படத்தை தயாரிப்போம். நிச்சயமா சிவாஜி அண்ணன் கதையை ஓ.கே. பண்ணிடுவார்'' என நினைத்தபடியே சிவாஜியின் அன்னை இல்லத்தை நோக்கிக் கிளம்பினேன்.

என் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

**1953-**ல் 'பராசக்தி'யில் பூசாரியாக நடித்த என் ஒன்று விட்ட அண்ணன் கவி கே.பி.காமாட்சி என்னை ஏவி.எம்.மிற்கு கூட்டிச் சென்றார். தெலுங்குப் படம் ஒன்றில் நடித்துக் கொண்டிருந்த சிவாஜியிடம், 'டேய் கணேசா... இவன் என் தம்பி. நடிப்பில் உன்னை 'வின்'பண்ண வந்திருக்கான்' என அறிமுகம் செய்ய, சிவாஜி வரவேற்று சிரித்தார்.

நான் கதாசிரியரான ஆரம்ப காலகட்டத்தில்... 'அண்ணன் தம்பி''என்ற கதையை சிவாஜிக்குச் சொன்னேன். சிவாஜியின் கண்களில் ராஜகம்பீரமான ஒரு புலிப்பார்வை இருந்தது. அதனால் நடுங்கியபடியே அவரிடம் கதை சொன்னேன். நான் பயத்தில், பதட்டத்தில் உளறுகிறேன் என்பதை உணர்ந்து கொண்ட சிவாஜி, மிகப் பொறுமை யாகவே கதையைக் கேட்டார். திக்கித் திணறி சொல்லி முடித்தேன்.

'நல்லா இருக்கு' என அவர் சொல்லி முடிப்பதற்குள்... ''அண்ணே... தம்பி கேரக்டருக்கு எஸ்.எஸ்.ஆரைப் போட லாம்'' என்றேன்.

சிவாஜி சிரித்தபடியே கேட்டார்... ''எஸ்.எஸ்.ஆர். உனக்குச் சொந்தமா?''

சந்தோஷம் தாங்க முடியாமல் சொன்னேன்... 'ஆமாண்ணே...'

''உனக்கு மட்டுமில்ல... எனக்கும் அவர் சொந்தக்காரர் தான். ஒரு நல்ல கதையா எங்க ரெண்டுபேருக்கும் தகுந்த மாதிரி எழுதிக்கிட்டு வா... இந்தக் கதை வேண்டாம்'' என்றார்.

சில வருடங்களுக்குப் பின்....

நான் கதை எழுதி, முக்தா சீனிவாசன் இயக்கத்தில் சிவாஜி-ஜெயலலிதா நடித்த 'அன்பைத் தேடி' படத்தின் கதைக்கருவை மட்டும் சிவாஜியிடம் சொன்ன அனுபவம் எனக்கு உண்டு.

எனது இரண்டாவது மகள் ஜான்ஸிராணிக்கும், எனது தங்கையின் மகன் வக்கீல் நடராஜனுக்கும் எங்கள் ஊரில், நடராஜன் குடும்பத்திற்குச் சொந்தமான அருணாசலம் தியேட்டரில் திருமணம் நடந்தது. என் மாப்பிள்ளையின் குடும்பம் தீவிரமான காங்கிரஸ் அரசியல் பாரம்பரியம் கொண்டது. மாப்பிள்ளை வீட்டாரின் அழைப்பின் பேரில் திருமணத்தை நடத்தி வைக்க வருகை தந்தார் சிவாஜி.

மாங்கல்யத்தை சிவாஜி எடுத்துக் கொடுக்கும் நேரத்தில் சிவாஜி முன் நின்றேன்.

''யே... ஞானம். நீ என்ன இங்க?'' என்றார்.

''மணப்பெண் என்னோட மகள்தாண்ணே''

''அயோக்யா... என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லலையே''’என்றவர் ''இதெல்லாம் நியாயமா?னு ஞானத்தைக் கேளுங்க'' என கூடியிருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து சிவாஜி சொல்ல... மக்கள் கரகோஷம் பண்ணினார்கள்.

திருமணத்தை நடத்தி வைத்து ஆசி வழங்கினார் சிவாஜி.

பழைய நினைவுகளிலிருந்து மீண்டு... சிவாஜியின் வீட்டுக் குள் நுழைந்தேன். சிவாஜியிடம் 'மிருதங்க சக்ரவர்த்தி' கதையைச் சொல்ல ஆரம்பித்தேன். சில முக்கியமான காட்சிகளை விவரிக்கையில், நான் சிவாஜியைப் போலவே நடித்துக் காட்டினேன். அந்த காட்சிகளை விழி விரிய, ஆர்வமாகக் கேட்டவர் 'நம்மகிட்டயே நடிச்சுக் காட்டுறானே' என கிண்டலாக ரியாக்ட் பண்ணவும் தவறவில்லை. ஆனாலும் நான் அசரவில்லை. நடித்துக் காட்டியபடியே கதை முழுவதையும் சொல்லி முடித்தேன்.

என் முதுகில் தட்டிய சிவாஜி ''நான் என்னமோ நினைச் சேன். உண்மையிலேயே நீ என்னை அசத்தீட்டப்பா. தாராளமா நீ மிருதங்கத்தை அடிக்கலாம். (பட வேலைகளை ஆரம்பிக்கலாம் என்பதைத்தான் அப்படிச் சொன்னார்). மத்த விஷயங்களை தம்பி சண்முகத்தைப் பார்த்து பேசி முடிச்சிக்கோ. டைரக்டரா யாரைப் போடப் போறே?'' எனக் கேட்டார்.

''நீங்களே சொல்லுங்கண்ணே''

''கலையம்சத்தோட எடுக்கணும்னா... கே.சங்கர் இருக் கானே... அவனைப் போய்ப் பாரு. மகா கெட்டிக்காரன். நீ சொன்னதைவிட ரெண்டுபங்கு நல்லா எடுத்துக் காட்டுவான். அவனை அடிச்சிக்க ஆளில்லை. ஆனா... அவன்கிட்ட ஒரு சின்ன குறை.... சில நேரங்கள்ல காட்சிகளை அழகுபடுத்துறதில் கவனம் செலுத்துவான். அப்ப கதையில் முக்கியமான ஸீன்கள்ல சின்னச் சின்னக் குறைவரும். கடைசியா படத்தைப் போட்டுப் பார்த்து ரீ-ஷூட் பண்ணி சரிப்படுத்திடுவான். ரீ-ஷூட்ங்கிறது ஒரு செலவு. அந்த கூடுதல் செலவை நீ தாங்கமாட்ட. அதுக்காக நான் உனக்கொரு யோசனை சொல்லவா?''

''சொல்லுங்கண்ணே''

# சினிமாவுக்கு வந்த சிவ.சிதம்பரம்!

'மிருதங்க சக்ரவர்த்தி'க்கு' டைரக்டராக கே.சங்கரை பரிந்துரைத்த நடிகர் திலகம் சிவாஜி, ''மிகச்சிறப்பா படத்தை எடுப்பான். ஆனா ரீ-ஷூட் செலவு வைப்பான். அதைத் தவிர்க்க உனக்கு நான் ஒரு டெக்னிக் சொல்லித் தர்றேன்'' எனச் சொன்னார்.
''சொல்லுங்கண்ணே'' என்றேன்.

''நீ சொன்ன கதையில் முக்கியமான ஸீன்கள் ஷூட்டிங் எடுக்கும்போது செட்ல நீ ஒரு ஓரமா நின்னுக்க. காட்சி படமானதும் நான் ஒன்னைப் பார்ப்பேன். அது ஓ.கே.ன்னா மெதுவா நீ தலையாட்டு. ஓ.கே. ஆகலேன்னா வேற ரியாக்ஷன் காட்டு. ஆனா... இது சங்கருக்கு தெரியக்கூடாது. அவன் பயங்கரக் கோபக்காரன். இப்படி யெல்லாம் நான் எவனுக்கும் சொன்னதில்லை. ஏதோ உன்மேல எனக்கு ஒரு பற்று. அதான் சொல்றேன்'' என்றார்.

''அப்படியே செஞ்சுக்கிறேண்ணே'' எனச் சொல்லிவிட்டு விடை பெற்றேன்.

காரில் வரும்போது யோசித்துக்கொண்டே வந்தேன்.

'சிவாஜி அண்ணனிடம் நாம சிக்னல் கொடுக்கும்போது சங்கர் பார்த்து நம்ம தலைக்கே ஆபத்து வந்திட்டா என்ன பண்றது?' என நினைத்தேன்.



சிவாஜியிடம் கதை சொன்ன கையோடு சங்கரை போய்ப் பார்த்தேன்.

நான் வீட்டுக்குள் நுழைந்ததும் "வாய்யா கலைஞானம்... இப்பத்தான் சிவாஜி போன் பண்ணினார்" என்றார்.

தேவர் ஃபிலிம்ஸில் பணியாற்றிய காலங்களில் சங்கர் எனக்கு பரிச்சயமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கரிடம் கதையைச் சொல்லி முடித்தேன்.

"நடிகர் திலகம் கதையை ஓ.கே. பண்றார்னா சாதாரண மாவா இருக்கும்? சூப்பர்யா" என்றார்.



கை வசம் இருந்த பணத்தை அவருக்கு அட்வான்சாகக் கொடுத்தேன். அதை வாங்கிக் கொண்ட சங்கர் "சம்பளம் பத்தி அப்புறம் பேசிக்கலாம்யா" என்றார்.

"சார் நீங்க டைரக்ட் பண்ணின படங்களைப் பத்தி எடுத்துச் சொல்லலாமா?" என்றேன்.

"சொல்லுய்யா" என்றார்.

அவரின் சூப்பர் ஹிட் படங்களின் வசீகரமான காட்சி களை, இயக்கிய விதத்தைக் குறிப்பிட்டு "இந்த மாதிரி யாரும் எடுக்க முடியாது" என்றேன்.

உடனே தன் பிள்ளைகளை அழைத்த சங்கர் "பார்த்தீங் களா... பெரிய ரைட்டர் கலைஞானம் என்னோட படங்களை எப்படி பாராட்டுகிறார்

பாருங்கள்'' என்றார்.

''சார் தனியா ரெண்டு வார்த்தை பேசணும்.''

பிள்ளைகளை அனுப்பிவிட்டு... ''சொல்லுய்யா'' என்றார்.

''எப்படி அந்தப் படங்களையெல்லாம் பிரமாதமா எடுத்தீங் களோ... அதுமாதிரி என்னோட படத்தையும்....''

''அதில் என்ன சந்தேகம்? நிச்சயமா... நல்லா எடுத்துத் தர்றேன்.''"

''அதுக்கில்ல சார். நானே கதாசிரியர். முக்கியமான ஸீன்களை எடுக்கும்போது கொஞ்சம் முன்னப்பின்ன இருந்தா... ஸ்பாட்டில் ரகசியமா உங்க காதோரம் ஏதாவது ஆலோசனை சொல்லலாமா?''

தனக்கே உரிய வெடிச் சிரிப்பு சிரித்த சங்கர் 'காதோரம் என்ன... ஓபனா சொல்லுய்யா. உனக்கு அந்த ரைட்ஸ் உண்டு' என்றார்.

விடைபெற்று வந்தேன். (நான் ஐடியா சொல்ல வேண்டிய அவசியமே இல்லாதபடி அருமையாக இயக்கினார் சங்கர்)

கே.ஆர்.விஜயா, பிரபு, சுலக்ஷணா, நம்பியார், வீ.கே.ராம சாமி, மனோரமா, தேங்காய் சீனிவாசன் ஆகியோருடன் சிறப்புத் தோற்றத்தில் நடிக்க, ஆன்மிக சிந்தனையாளர் கிருபானந்த வாரியாரையும் ஒப்பந்தம் செய்தேன்.

அடுத்து, படத்தின் இசைக்காக மெல்லிசை மன்னர் எம்.எஸ்.வி.யைச் சந்தித்தேன்.

கதையின் ஜீவனே மிருதங்க இசை என்பதால்... எம்.எஸ்.வி.யிடம் ஆலோசனை நடத்தி 'தினத்தந்தி'யில் ஒரு விளம்பரம் செய்தேன். 'மிருதங்க சக்ரவர்த்தி' படத்திற்காக மிருதங்கம் வாசிக்க, 'மிகச்சிறந்த வித்வான் தேவை' என்ற அந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு தென்னிந்தியாவின் பிரபல மிருதங்க வித்வான்களெல் லாம் வந்து குவிந்தனர்.

அவர்களை ஒவ்வொருவராக சோதித்தார் எம்.எஸ்.வி. இறுதியில் தேர்வானவர் உமையாள்புரம் சிவராமன். அமெரிக்காவில் இசைத்திறமையை நிரூபித்து அங்கே 'மிருதங்க சக்ரவர்த்தி' பட்டம் வாங்கியவர்.

''உங்ககிட்ட மிருதங்க வாசிப்பில் என்னென்ன திறமைகள் இருக்கோ... அத்தனையும் காட்டுங்க'' என எம்.எஸ்.வி. சொல்லிவிட்டார்.

ரெகார்டிங் ஆரம்பமானது.

64 கலைகளையும் விரலுக்குள் வைத்து வாசித்தது போல் இருந்தது அவரின் வாசிப்பு. தொடர்ந்து நாலு மணிநேரம் அசராமல், விதம்விதமாக வாசித்து பிரமிக்க வைத்தார். நாலு மணிநேரம் போனதே தெரியவில்லை. சிவராமனின் தனிஆவர்த்தனத்தைப் பதிவு செய்து கொண்டபின், அவரைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு வாழ்த்தினார் எம்.எஸ்.வி.

"நீங்கள் வாசித்ததில் எது கதைக்குத் தேவையோ, அதை பயன்படுத்திக்கொள்கிறோம்" எனச் சொல்லி அவருக்கு உரிய கௌரவ மரியாதை செய்து அனுப்பினோம்.

கதைப்படி பிரபு-சுலக்ஷணாவுக்கான டூயட் பாடலை புலவர் புலமைப்பித்தன் எழுதினார்.

அபிநய சுந்தரி ஆடுகிறாள்

என் ஆசை கனலை ஊதுகிறாள்...''என்பது அந்தப் பாடல்.

இந்தப் பாடலை யார் பாடுவது?

சீர்காழி கோவிந்தராஜனின் மகன் டாக்டர் சிவ.சிதம்பரத் தைப் பற்றிக் குறிப்பிட்ட எம்.எஸ்.வி., 'அந்தத் தம்பி, நல்ல இசைஞானம் உள்ளவர். கச்சேரியில் கேட்டிருக்கேன். ஆனா... இதுவரை சினிமாவில் பாடியதில்லை. நீங்க ஓ.கே.ன்னா அந்தத் தம்பியை வரச் சொல்றேன்' என்றார்.

"வரச் சொல்லுங்க" என்றேன்.

அடுத்த ஒருமணி நேரத்தில் சிவ.சிதம்பரம் வந்து சேர்ந்தார். பாடல் பதிவானது.

எங்களுக்கு மிகுந்த மனநிறைவு. சிவ.சிதம்பரத்தை கௌரவித்து அனுப்பி வைத்தோம்.

மறுநாள் காலை...

சீர்காழி கோவிந்தராஜன் தன் மகன் சிவ.சிதம்பரத்துடன் என் அலுவலகத்திற்கு வந்தார். 'வணக்கம்' என்றார்.

'சீர்காழியா நம்மை பார்க்க வந்திருக்கார்' என நான் வியப்பில் இருக்கும்போதே... சந்தன மாலையையும், பொன்னாடையையும் மகன்

கையில் கொடுத்து 'அய்யாவுக்கு அணிவிச்சு, அவர் கால்ல சாஷ்டாங்கமா விழுந்து வணங்கு' என்றார்.

அதேபோல் என் காலைத் தொட்டு வணங்கி "அய்யா ஆசிர்வதிங்க" என்றார். நான் அவரை ஆசிர்வதித்தேன்.

'இப்படியெல்லாம்கூட எனக்கு ஒரு மரியாதை கிடைக்குமா? சீர்காழி எங்கே... நான் எங்கே?' என நினைத்துக்கொண்டிருந்தேன்.

"இப்போ நீ அய்யாவிடம் காட்டும் மரியாதை... அவரை நீ எப்போது, எங்கு பார்த்தாலும் இருக்கணும். அவரின் காலைத் தொட்டு வணங்கணும்" என்றார் மகனிடம்.

(சிவ.சிதம்பரம் தன் மகனுக்கு அறிவாலயத்தில் திருமணம் வைத்திருந்தார். நான் போனபோது அங்கும் என் காலில் விழுந்து வணங்கினார். இன்றுவரை அந்த மரியாதையைச் செய்யத் தவறவில்லை. என் ராசிப்படி எனது படங் களில் யாரேனும் புதுமுகங்கள் அறிமுகமாவார்கள். அந்த ராசிப்படி 'மிருதங்க சக்ரவர்த்தி'யில் பாடகராக அறிமுகமானார் சிவ.சிதம்பரம். எனது அறிமுகங்களில் இவரளவுக்கு எனக்கு மரியாதை செய்பவர்கள் யாருமில்லை)

கே.ஆர்.விஜயா பாட, சிவாஜி மிருதங்கம் வாசிக்க... அதன் மூலம் இருவருக்கும் இடையே காதல் உண்டாகும் பாடல் பதிவானது.

'சுகமான ராகங்களே...

இசை சபையேறி வாருங்களேன்...' என புலமைப்பித்தன் இந்தப் பாடலை எழுதினார்.

இதே பாடல் க்ளைமாக்ஸில் சோகமாகவும் இடம் பெறும்.

இந்த இரு பாடல்களும் பதிவானது.

பாடல் பதிவு முடிந்ததும் டைரக்டர் சங்கரிடம் என் அபிப்ராயம் ஒன்றைச் சொன்னேன்.

"ஒவ்வொரு ராகத்தையும் சொல்லிச் சொல்லி... கே.ஆர். விஜயா பாடும்போது... ஒவ்வொரு ராகத்திற்கும் மூன்று இளம் பெண்களை ஆடவைத்தால் எப்படி இருக்கும்?" என்று கேட்டேன்.

சங்கர் யோசித்தார்.

"சார்... எதுக்காக இதைச் சொல்றேன்னா... முழுப்பாடலும் கர்நாடக சங்கீதத்தில் வருது. இது ரசிகர்களுக்கு சலிப்பேற்படுத்தலாம். நான் சொல்றபடி செய்தா இந்தக்கால ட்ரெண்ட்டுக்கு ஏத்த மாதிரி, ரிலாக்ஸா இருக்கும்"'என்றேன்.

# ஒரே மூர்த்தியான மும்மூர்த்திகள்!

சிவாஜிக்கும், கே.ஆர்.விஜயாவுக்கும் காதல் உருவாகக் காரணமாகும் 'சுகமான ராகங் களே' பாடலில் ராகத்தைக் குறித்து பாடும்போதெல் லாம் இளம் பெண்களை ஆட வைக்காலம் என நான் சொன்ன யோசனையை கேட்டு முதலில் தயங்கிய டைரக்டர் சங்கர், 'ரசிகர்களுக்கு போரடிக்காமல் இன்றைய ட்ரெண்டுக்கு ஏற்ற மாதிரி இருக்கும்' என்கிற என் விளக்கத்தைக் கேட்டு 'பலே' என எனக்கு கை கொடுத்தார்.
இதைக் கேள்விப்பட்ட சிவாஜி "சங்கர்... ஞானம் அருமையான யோசனை சொல்லீருக்கான். இந்த வயசுல நானும், கே.ஆர்.விஜயாவும் லவ் பண்றதை எவன் பார்ப் பான்" என கமெண்ட் அடித்தார்.

அந்தப் பாடல் காட்சியில் என் யோசனையை சேர்த்துக் கொண்டார் சங்கர்.

லொகேஷன் பார்ப்பதற்காக நானும், டைரக்டர் சங்கரும் சுசீந்திரம் கோயிலுக்குச் சென்றோம். அங்கே ஒரு குருக்கள் வயதிலும், பக்தியிலும் பழுத்த ஞானப்பழம் போல் உட்கார்ந்திருந்தார்.

அவருக்கு வணக்கம் தெரிவித்தேன்.

"அய்யா... இந்தக் கோயிலில் சுப்பையாபிள்ளை என்கிற மிருதங்க வித்வான் இருந்தார் என படித்திருக்கிறேன். அவருடைய வாழ்க்கையையும், இன்னொரு மிருதங்க வித்வானான பாலக்காட்டு மணி அய்யரின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தையும் மனதில் வைத்து ‘மிருதங்க சக்கரவர்த்தி'னு ஒரு படம் எடுக்கப்போறேன். அவங்களப்பத்தி உங்களுக்கு தெரிஞ்ச விஷயங்களைச் சொல்ல முடியுமா?"’எனக் கேட்டேன்.



"சுப்பையா பிள்ளையைப் பத்தி நல்லா தெரியும். மணிஅய்யர் பத்தி தெரியாதே" என்றார் குருக்கள்.

"சுப்பையாபிள்ளை பற்றி நீங்கள் சொல்லும் தகவல்களில் கூடுதலாக கிடைத்தால் கதைக்கு பயன்படும்" என்றேன்.

'பேஷா சொல்றேன்' என ஆரம்பித்தார்.

கொச்சின் மகாராஜா காலத்தில் சுசீந்திரம் கோயில் அவருக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது. கோயில் பஜனைப் பாடல்களுக்கு சுப்பையாபிள்ளைதான் மிருதங்கம் வாசிப்பார். இதெல்லாம் முடிந்ததும், இரவு தொடங்கி விடியும்வரை தாணுமாலையன் விக்ரகம் முன்பு அமர்ந்து

விடிய விடிய தனிஆவர்த்தனம் வாசிப்பார். இப்படி வாசித்து வாசித்தே வித்வானாகவும் மாறிவிட்டார்.

ஒருமுறை கொச்சி மகாராஜாவும், பிரதான மந்திரியும் கோயிலுக்கு வந்தனர்.

"வாசிப்பதை நிறுத்து. மகாராஜா வந்திருக்கார். எழுந்து தூரமாப் போ" என மந்திரி சொல்ல... வாசிப்பதை நிறுத்தாமலே "எனக்கு மகாராஜா இவர்தான்" என கடவுளை நோக்கி கைகாட்டிவிட்டு "நான் விடிய விடிய வாசிப்பேன். எழுந்து போகமாட்டேன்" என மேலும் ஆக்ரோஷமாக வாசித்திருக்கிறார் சுப்பையாபிள்ளை.

"நீ என்ன பெரிய வித்வானா? இங்கே ஒரு வாழைக்காய் குலையை கட்டுகிறேன். மிருதங்கம் வாசித்தே நீ கனிய வைப்பாயா?" என மந்திரி கேட்க...

"காயைக் கனியாக்கிக் காட்டுகிறேன். ஏற்பாடு செய்யுங் கள்" என சவாலை ஏற்றார்.

மந்திரியோ மகாராஜவைப் பார்க்க, அவரும் "அப்படியே ஆகட்டும்" எனச் சொல்லிவிட்டார்.

கோயிலிலேயே ஒரு இடத்தில் ஒரு தார் வாழைக்காயை கட்டினார்கள்.

சுப்பையாபிள்ளையின் வாசிப்பில் வாழைக்காய்கள், கனி யாகி... அதுவும் கசிந்து கீழே உதிர ஆரம்பித்தது. மகாராஜா வியந்துபோய், பொன்னாடை எடுத்துவரச் சொல்லி, சுப்பையா பிள்ளைக்கு போர்த்தியதுடன் "நீ சாதாரண வித்வான் இல்லை. தெய்வ கடாட்சம் பூரணமா இருக்கு" எனப் பாராட்டிவிட்டு, "மந்திரியாரே... சுப்பையாபிள்ளைக்கு மானியமாக நிலம் கொடுங்கள். கோயிலில் அவருக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுங்கள்" என உத்தரவிட்டார்.

இப்படி சுப்பையாபிள்ளையின் கதையைச் சொன்ன குருக்கள், "இந்தச் சம்பவம் நிகழ்ந்து ஆறு தலைமுறைக்கு மேல் ஆகிவிட்டது. அவரின் வாரிசுகளில் இன்னும் ஒருவர் இருக்கிறார். அவரை அறிமுகம் செய்து வைக்கிறேன்" எனச்சொல்லி கோயிலில் ஒரு ஓரமாக அமர்ந்திருந்த நபரை அறிமுகம் செய்துவைத்தார்.

(அந்த வாழைக்குலை கட்டப்பட்ட இடத்தில் படமாக்கிய போது, சுப்பையாபிள்ளையின் வாரிசை பார்வையாளராக முன் வரிசையில் உட்காரவைத்து கௌரவித்தோம்)

குருக்கள் என்னையும், டைரக்டர் ஷங்கரையும் கோயிலுக் குள் ஒரு இடத்திற்கு அழைத்துப் போனார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகி இற்றுப்போயிருந்த ஒரு மரத்தைச் சுற்றி இரும்புக்கவசம் போடப்பட்டு, சுற்றி இரும்பு வேலி அமைத்திருந்தார்கள்.

"நான் இப்போது சொல்லப் போகிற ஒரு கதைக்கும், இந்த மரத்திற்கும் சம்பந்தம் உண்டு" என ஆர்வத்தைத் தூண்டி கதையை ஆரம்பித்தார்.

பார்வதி, லட்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவி களுக்கும் இடையே 'யார் பெரியவர்?' என சவால் உண்டானதால் மேலோகமே பரபரப்பாக இருந்தது. அங்கே ஆஜரான மும்மூர்த்திகளும், "உங்க ஆணவத்தை அடக்க பூலோகத்தில் அநசூயா என்பவள் இருக்கிறாள். அத்தரி முனிவரான ரிஷியின் பத்தினி அவள். கூடிய விரைவில் நீங்கள் அவளைச் சந்திப்பீர்கள்" எனச் சொல்லிவிட்டு மூன்று கடவுளர்களும் சாமியார்களாக மாறி பூலோகம் வந்தனர்.

அநசூயாவின் குடிலுக்கு வந்து "தாயே பசிக்கிறது" எனக் கேட்க, மூவரையும் வீட்டுக்குள் அழைத்து அமுது பரிமாறினாள்.

"பிறந்தமேனியுடன் பரிமாறினால்தான் உண்போம்" என மூவரும் சொல்ல... வந்திருப்பவர்கள் மிக முக்கியமானவர்கள் என்பதை யூகித்த அநசூயா, மூவர் மீதும் தண்ணீரைத் தெளித்தாள். மூவரும் குழந்தை களாக மாறினார்கள். அவர்களுக்கு பிறந்த மேனியுடன் உணவு பரிமாறினாள். பசியமர்த்தி மூன்று தொட்டில்களை ஒரு மரத்தில் கட்டி அவர்களை தூங்க வைத்துவிட்டாள்.

இப்போது அகலிகை கதைக்கு வருவோம்.

கௌதம முனிவரின் மனைவி அகலிகை மீது இந்திரனுக்கு ஆசை ஏற்பட்டது. ஒருநாள் நள்ளிரவில் விடிந்துவிட்டதைப் போல திட்டமிட்டு சேவல் போல கூவினான் இந்திரன். முனிவர் நீராடச் சென்றார். முனிவரைப்போல மாறிய இந்திரன் அகலிகையுடன் உறவுகொண்டான். விடிந்ததற்கான அறிகுறி தெரியாத தால் முனிவர் மீண்டும் குடிலுக்குத் திரும்ப.... உள்ளிருந்து தன் ரூபத்தில் இந்திரன் வந்ததைப் பார்த்து விட்டார். இந்திரனும் பூனையாக மாறி தப்பி ஓட... "நீ இந்திரன் என்பது எனக்குத் தெரியும். இந்தக்கணம் முதல் உன் உடம்பெங்கும் ஆயிரம் பெண்குறிகள் ஆகட்டும்" எனச் சாபமிட்டார். இந்திரனின் உடல் முழுக்க பெண் குறிகள் முளைத்தது.

''நீ கல்லாகப் போகக் கடவது'' என அகலிகைக்கும் சாபமிட்டார் முனிவர்.

''இது நான் அறியாமல் செய்த தவறு'' என அகலிகை அழுததால், ''ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி மிதிலைக்கு திரும்பும் காலத்தில் அவரது திருவடி தூசு உன்மீது படும்போது உனக்கு விமோசனம் கிடைக்கும்'' என்றார் முனி. (அகலிகைக்கு அப்படியே விமோசனம் கிடைத்தது)

உடலெங்கும் பெண்குறிகள் இருந்ததால் அவமான மடைந்த இந்திரன் தலைமறைவாகவே வாழ்ந்துவந்தான். இருப்பினும் பார்வதியிடம் ''என் தவறை மன்னித்து விமோ சனம் தரவேண்டும்'' என்றான்.

''நீ மும்மூர்த்திகளையும் எப்போது ஒரே நேரத்தில் ஒன்றாக பார்க்கிறாயோ... அப்போது விமோசனம் கிட்டும்'' என அருள் பாலித்தாள்.

முப்பெரும் தேவிகள் விஷயத்திற்கு வருவோம்.

மும்மூர்த்திகளும் அநசூயாவால் குழந்தைகளாக்கப்பட்டி ருப்பது அறிந்து மூவரும் பூலோகம் வந்தனர். ''தாயே... எங்களுக்கு இடையேயான போட்டியில், உன் பத்தினித் தன்மையை இந்த உலகத்திற்கு தெரியப்படுத்தவே மும்மூர்த்திகள் நாடகமாடினார்கள். அதை மன்னித்து எங்களின் கணவன்மார்களை எங்களிடம் ஒப்படைத்துவிடு தாயே'' எனக் கேட்டனர்.

அநசூயா நீர் தெளித்து குழந்தைகளை மறுபடி சாமியார் களாக மாற்றினாள். சாமியார்கள் மூவரும் வேஷம் களைத்து மும்மூர்த்திகளாக தோன்றினார்கள்.

இந்திரன் அங்கேவந்து மும்மூர்த்திகளையும் ஒரே நேரத்தில் தரிசித்து விமோசனம் அடைந்தான்.

இந்தக் கதையைச் சொல்லிய குருக்கள், ''இதோ இந்த மரத்தில்தான் மும்மூர்த்திகளுக்கு அநசூயா தொட்டில் கட்டினாள். இந்த மரத்திற்கு பல்லாயிரம் ஆண்டுகள் வயதாகிறது. இந்திரன் இந்த இடத்தில் சுகப்பட்டதால்தான் 'சுக இந்திரப்பட்டணம்' என பெயர் வந்தது. அது மருவி 'சுசீந்திர பட்டணம்' ஆகி, இப்போது 'சுசீந்திரம்' எனப்படுகிறது. இதுதான் ஸ்தல வரலாறு. தாணுவாகிய சிவனையும், (திரு)மால் ஆகிய விஷ்ணுவையும், அய்யன் ஆகிய பிரம்மனையும் ஒரே விக்ரகத்தில் வார்த்து 'தாணுமால்அயன்' என வணங்கி வருகிறோம். நம் நாட்டிலேயே

மும்மூர்த்திகளும் ஒரே கருவறையில் இருப்பது இங்குதான்'' என விளக்கம் சொன்னார் குருக்கள்.

நானும், டைரக்டர் கே.சங்கரும் சிலிர்த்துப் போனோம்.

# சிவாஜியைப் பாராட்டிய எம்.ஜி.ஆர்,!

மிருதங்க வித்வான் சுசீந்திரம் சுப்பையா பிள்ளை வாழ்க்கைச் சம்பவங்களுடன், பாலக்காட்டு மணி அய்யர் வாழ்க்கைச் சம்பவங்களையும் 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தின் கதையில் சேர்த்திருந் தேன்.

மிருதங்க வாசிப்பில் தனித்துவம் கொண்ட பாலக்காட்டு மணிஅய்யர் பெரும் புகழ் பெற்றிருந்தார். ஒரு கட்டத்தில் அவருக்கும், சங்கீதம் பாடும் வித்வான்களுக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. 'இனி மணிஅய்யர் வாசிப்பில் நாங்கள் பாடமாட்டோம்' என பாடகர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதனால் கோபமான அய்யர் 'நீங்க என்ன என்னை ஒதுக்கி வைப்பது? உங்களை நான் ஒதுக்கி வைக்கிறேன்' என ஆவேசப்பட்டு, 'இனி நான் மிருதங்கமே வாசிக்க மாட்டேன்' என மிருதங்கம் மீதே சத்தியமும் செய்துவிட்டார். அதன்படி நீண்டநாட்கள் வாசிக்காமலே இருந்தார்.

பிரிதொரு சந்தர்ப்பத்தில் இதுபற்றி கேள்விப்பட்ட முதலமைச்சர் எம்.ஜி.ஆர், 'எனக்காக ஒரேஒருமுறை நீங்க மிருதங்கம் வாசிக்கணும்'எனக் கேட்டுக்கொண்டாராம். அதன்படி வாசித்திருக்கிறார் அய்யர். அதன்பிறகு அவர் வாசிக்கவேயில்லை. சிறிது காலத்தில் அய்யர் இயற்கை எய்தினார். மணிஅய்யர் குறித்து நான் செவி வழியாகக் கேள்விப்பட்டிருந்த இந்த விஷயத்தை 'மிருதங்க சக்கரவர்த்தி' கதைக்கு திருப்பு முனையாக வைத்துக் கொண்டேன்.

என். சகுந்தலா தயாரிப்பில், ஆர்.எம்.நித்யானந்தன், எஸ்.ஏ.நடராசன், கே.பொன்ராஜ், ஆகியோர் தயாரிப்பு நிர்வாகத்தை திறம்பட கவனித்தனர். அதனால் 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தை மிகச்சிறப்பாக எடுத்து முடித்தோம்.



முருகா

வேலை வணங்குவதே வேலை

107, சிங்கண்ண செட்டி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-600 002.
போன்: 846666

தேதி 12-9-83

வாழ்த்து

நேரிசை வெண்பா

படத்தில் பக்தி பிரசங்கர் கிருபானந்தவாரியாரும் சிறப்புத் தோற்றத்தில் நடித்திருந்ததால் முதலில் அவருக்கு படத்தைப் போட்டுக் காண்பித்தேன். படம் பார்த்துவிட்டு வெளியே வந்த வாரியார் தன் பையிலிருந்து லெட்டர் ஹெட் பேப்பரை எடுத்து எழுதி என் கையில் கொடுத்தார்.

வாழ்த்து

நேரிசை வெண்பா

தண்ணார் இனியமிரு தங்கக் கலை வாழி

கண்ணார் சிவாஜி கணேசனுமே - பண்ணார்

கலைஞானம் பைரவி காட்சிமிக ஓங்கி

நிலையாக வாழ்க நிறைந்து

அன்பன்

கிருபானந்தவாரி

பைரவி பிலிம்ஸ் கம்பெனியார்கள் மிருதங்க சக்கரவர்த்தி' என்ற படத்தை மிகச் சிறப்பாக எடுத்து தமிழுலகுக்கு வழங்குகின்றார்கள். டைரக்டர் கே.சங்கர் முழுமையாக எடுத்துள்ளார். இதில் பல அறங்கள் ஒளி செய்கின்றன. வாழி.

………. இப்படி எழுதிக் கொடுத்தார்.

சுமார் 32 வருடங்களாக அந்த வாழ்த்து மடலை பொக்கிஷம் போல பாதுகாத்து வருகிறேன்.

வாரியாருக்கு படம் போட்டுக் காண்பித்த மறுநாள்... மேனா தியேட்டரில் 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தின் கலைஞர்கள் அனைவருக்கும் சிவாஜி தலைமையில் படம் போட்டுக் காட்டினேன்.

இந்தப் படத்திற்காக முதன் முதலில் 'சுகமான ராகங்களே' பாடல் பதிவு செய்யப்பட்டபோது சந்தோஷமான ட்யூனில் அதைப் பாடி முடித்தார் வாணி ஜெயராம். அதே பாடலை சோகமாக பாடி முடித்ததும் ஒரு தனியறைக்குள் போய்விட்டார் வாணி ஜெயராம். அவரைப் பாராட்டுவதற்காக நானும், எம்.எஸ்.விஸ்வநாதனும் காத்திருந்தோம். அவர் வராததால் போய் பார்த்தபோது, வாயைப் பொத்தி அழுதுகொண்டிருந்தார்.



"என்னம்மா?" என பதறிப்போய்க் கேட்டேன்.

"சார்... மை லைஃப்... மை லைஃப்..." என்று கதறியபடியே சொல்லிக் கொண்டு காரேறிப் போய்விட்டார்.

இப்போது சிவாஜி தலைமையில் எல்லோரும் படம் பார்த்துக் கொண்டிருந்தபோது... க்ளைமாக்ஸில் சோக ராகத்தில் 'சுகமான ராகங்களே' பாடல் காட்சி திரையில் ஓட... அழுதபடி எழுந்த வாணிஜெயராம் திரையை நோக்கி கைநீட்டி 'மை லைஃப்... மை லைஃப்' என கதறிக் கொண்டே வெளியே ஓடினார். "அம்மா... அம்மா" என்றபடி நானும் பின்னாடியே ஓடினேன். ஆனால் பதில் சொல்லாமல் காரில் ஏறி கிளம்பிவிட்டார்.



மறுநாள் அவருக்கு போன் செய்து விசாரித்தேன். "ஒண்ணுமில்ல சார்" எனச் சொல்லிவிட்டார். அவர் ஏன் அப்படி அழுதார் என்பது எனக்கு தெரியவில்லை.

படத்தைப் பற்றி அண்ணன் சிவாஜியின் கருத்தை தெரிந்துகொள்வதற்காக அவரின் வீட்டிற்குப் போனேன்.

"ஞானம்... படம் பிரமாதமா வந்திருக்கு. சினிமா ஆட்களுக்கெல்லாம் ஒரு நாலு ஷோவாவது போட்டுக் காட்டு"'என்றார் சிவாஜி. அண்ணன் சொன்னதற்கும் மேலாக சுமார் பத்து காட்சிகள் வரை போட்டுக் காண்பித்தேன்.

ஒய்.ஜி.மகேந்திரனின் தாயார் படம் பார்த்தார். "நாளைக் கும் நான் வந்து படம் பார்க்கலாமா?" எனக் கேட்டார். அந்த அளவுக்கு படம் எல்லோரையும் கவர்ந்தது. எல்லோரும் பாராட்டியதால் எனக்கு நிலை கொள்ளமுடியாத மகிழ்ச்சி.

முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருக்கு நடிகர் சங்க தியேட்டரில் ஒரு ஷோ ஏற்பாடு செய்தோம்.

அந்தச் சமயம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கோரி எம்.ஜி.ஆர் கருப்புச் சட்டை அணிந்திருந்தார்.

தியேட்டரில்... எம்.ஜி.ஆர்., ஜானகி அம்மா ஒரு வரிசை யிலும், டைரக்டர் கே.சங்கரும் நானும் எம்.ஜி.ஆருக்கு பின் வரிசையிலும் அமர்ந்தோம்.

படம் ஆரம்பிப்பதற்காக விளக்குகள் அணைக்கப்பட்ட தும், முதல்வரின் பாதுகாவலர்கள் உள்ளிட்ட அதிகாரி கள் தியேட்டரை நிரப்பிவிட்டனர்.

படத்தின் க்ளைமாக்ஸில் சுமார் 15 நிமிடங்கள் வசனமே இல்லாமல் மிருதங்கம் வாசித்து நடித்தார் நடிகர் திலகம். இதை பல ஆங்கிள்களில் டைரக்டர் சங்கர் எடுத்திருந்தார். மிருதங்க வாசிப்பின் உச்சகட்டத்தில் சிவாஜியின் வாயிலிருந்து ரத்தம் கொட்டும். அதையும் பொருட்படுத்தாமல் வாசித்து போட்டியில் வெற்றி பெறுவார்.

சுபமான முடிவுடன் படம் முடிந்தது. விளக்கு போடும் முன் அதிகாரிகள் தியேட்டரைவிட்டு வெளியேறி தயார் நிலையில் இருந்தனர்.

நான், டைரக்டர் கே.சங்கர், ஜானகியம்மா... மூவரும் இருக்கையைவிட்டு எழுந்தோம். ஆனால்... எம்.ஜி.ஆர், தன் நாடியில் கைவைத்து படம் ஓடிமுடிந்த வெண் திரையையே பார்த்துக் கொண்டிருந்தார். சுமார் 5 நிமிடங்களாக அசைவற்று திரையையே பார்த்துக் கொண்டிருந்தார். நான் சங்கரைப் பார்க்க, சங்கர் ஜானகியம்மாவைப் பார்க்க... 'என்னாச்சு?' என முக பாவனையிலேயே கேட்டுக்கொண்டோம்.

ஆறாவது நிமிஷம்...

கையை மேலே தூக்கி பெருமூச்சு விட்டபடி எழுந்த எம்.ஜி.ஆர்., "சங்கர்... இந்த உலகத்துல ஒரே ஒரு நடிகன் இருக்கான்னா... அது தம்பி சிவாஜி கணேசன்தான். இதை நான் சொன்னதாச் சொல்லுங்க" எனச் சொல்லிவிட்டு வெளியே வந்தார்.

காரில் ஏறிய எம்.ஜி.ஆர், என்னையும், சங்கரையும் பார்த் தார். "இந்தப் படத்துக்கு நாலு அவார்ட் இருக்கு. நாளைக்கு நீங்க ஆபீஸ் வந்து என்னைப் பாருங்க" என சங்கரிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

# சிங்க நடை!

மக்கள் திலகத்தையே நெகிழ வைத்த நடிகர் திலகத்தின் 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தின் கதை என்ன?

கச்சேரியில் பாடுபவர்களுக்கு பக்க வாத்தியம்தான் மிருதங்கம். இந்தக் கதையில் மிருதங்கத்தை தனி ஆவர்த்தனமாக்கினேன்.

சிவாஜி (சுப்பையாபிள்ளை) மிருதங்கம் வாசிக்கிறார் என்றாலே மக்கள் கூடுவார்கள். ஒரு கச்சேரியில் சிவாஜியிடம் 'தனி ஆவர்த்தனம் வாசிக்கக்கூடாது' என பாடகர் நம்பியார் தடை போட... மக்களோ 'உன் பாட்டு வேண்டாம், சிவாஜியின் மிருதங்க இசை வேணும்' என்கிறார்கள். இதில் அவமானப் பட்ட இசைக்கலைஞர்கள் சங்கத்தலைவர் நம்பியார் சங்கத்தைக் கூட்டி "இனி சிவாஜியை யாரும் வாசிக்க அழைக்கக் கூடாது. அவரை சஸ்பெண்ட் செய்கிறோம்"என தீர்மானம் போடவைக்கிறார். சிவாஜி மன்னிப்பு கேட்டால் சஸ்பெண்ட் நீக்கப்படும். ஆனால் மன்னிப்புக் கேட்க மறுக்கும் சிவாஜி, 'உங்க எல்லாரையும் நான் சஸ்பெண்ட் பண்றேன்' எனச் சொல்லியதுடன் 'இனி நான் வாசிக்கப் போவதில்லை' என மிருதங்கம் மீது சத்தியம் பண்ணிவிடுகிறார். இதுவரை மகனுக்கு மிருதங்கம் கற்றுத் தந்த சிவாஜி 'இனி நீயும் வாசிக்காதே' என்கிறார். தனக்குத் தெரியாமல் வாசிக்கும் மகனை அடிக்கி றார். அந்த அளவுக்கு வெறுப்பான மனநிலையில் இருக்கிறார் சிவாஜி.

மகன் பிரபு வளர்ந்து வாலிபனாகி சென்னையில் படிக்கி றார். வருமானம் இல்லாத சிவாஜி வீட்டை பகுதி பகுதியாக விற்று பிரபுவின் படிப்பிற்கு பணம் அனுப்புகிறார்.



வயதான தம்பதியாக சிவாஜியும், கே.ஆர்.விஜயாவும் வறுமையில் உழன்றுகொண்டிருக்கிற நேரத்தில்... அகில இந்திய மிருதங்க வித்வான்கள் இசைப் போட்டி சென்னையில் நடப்பதாக பத்திரிகையில் விளம்பரம் வரும். இதைப் பார்த்த சிவாஜியின் அனுதாபிகள் 'உங்களுக்கு நல்ல காலம் பொறக்கப் போகுது. நீங்க இந்த போட்டியில் கலந்துக்கிட்டு ஜெயிச்சா, பரிசுப் பணம் மூலம் உங்க வறுமை நீங்கும்' என்கிறார்கள். ஆனால் 'இனி வாசிப்பதில்லை' என சத்தியம் செய்திருப்பதால் சிவாஜி தயங்குவார். மனைவி கே.ஆர்.விஜயாவோ 'இப்படி வைராக்கியத்துலயே வாழ்க்கை போயிட்டா, நம்ம பையனோட வாழ்க்கை என்னாகும்? அவனோட எதிர்காலத்துக்காகவாவது நீங்க இந்த போட்டியில் கலந்துக்கணும்' என்பார். இந்த வற்புறுத்தலால் சம்மதிப்பார் சிவாஜி.

சென்னையில் போட்டி நடக்கும் சபாவிற்கு, வசதியான வித்வான்களெல்லாம் காரில் வந்து இறங்குவார்கள். சிவாஜியும், கே.ஆர்.விஜயாவும் ஒரு ரிக்ஷாவில் வந்து இறங்குவார்கள். ஒரு காலத்தில் இதே சபாவில், தான் வாசிக்க வரும்போது கிடைத்த மரியாதையை நினைத்துப் பார்த்து, 'இன்று தன்னை வரவேற்க ஒரு நாதியும் இல்லையே' என ஃபீல் பண்ணுவார் சிவாஜி.

'இந்த வயசான காலத்துல இந்த போட்டி தேவையா? உங்களைப் பார்த்தாலே பாவமா இருக்கு' என ரிக்ஷாக்காரர் பரிதாபப்படுவார். இருப்பினும் மிருதங் கத்தை சுமந்தபடி தட்டுத் தடுமாறி உள்ளே செல்வார்கள்.

போட்டி ஆரம்பம். தொடர்ந்து 30-க்கும் மேற்பட்ட வித்வான்களை ஜெயித்துவிடுவார் சிவாஜி. 'இறுதிப் போட்டியில் சுப்பையாபிள்ளையுடன் போட்டியிடப் போவது அவரின் மகன்' என அறிவிப்பார்கள். சிவாஜி ஷாக் ஆவார். பிரபு அப்பாவை வணங்கிவிட்டு போட்டிக்கு அமர்வார்.

மேடையில் இருந்தபடியே கீழே பார்வையாளர் வரிசை யில் அமர்ந்திருக்கும் கே.ஆர்.விஜயாவைப் பார்ப்பார் சிவாஜி. 'பார்த்தியா உன் மகனை? என்னை எதிர்த்து என் மகன் போட்டியா?' என சிவாஜியின் வாய்ஸ் ஒலிக்கும். கே.ஆர்.விஜயா பார்வையாலேயே சமாதானம் சொல்வார்.

போட்டி ஆரம்பம்!

சிவாஜியும், பிரபுவும் மாறி மாறி வாசிக்க... ஒரு கட்டத்தில் சிவாஜியின் கை செயலிழந்து போகும். 'கணவனா? மகனா?' என பரிதவித்தபடி இருக்கும் கே.ஆர்.விஜயா, சிவாஜியின் கை செயலிழந்ததும் 'கணவன் தோற்று விடக்கூடாது' என வெறி கொண்டவர்போல "சுகமான ராகங்களே... 'இசை சபையேறி வாருங்களே' பாடலைப் பாடுவார். 'எங்கே என்னுடைய மிருதங்க சக்கரவர்த்தி' என அவர் ஆவேசமாகப் பாடப்... பாட... சிவாஜியின் கை மறுபடி செயல்படத் தொடங்கும். விதவிதமான பாவனைகளுடன் உச்சகட்ட வாசிப்பைத் தந்து, மக்க ளின் பலத்த ஆரவாரத்துடன் வெற்றி பெறுவார் சிவாஜி. அப்பாவின் கால்களில் விழுந்து வணங்குவார் பிரபு. தான் வாசித்த மிருதங்கத்தை மகனுக்கு பரிசளிப்பார் சிவாஜி. இதுதான் கதை.

ஏற்றுக்கொண்ட பாத்திரமாகவே ஆகிப்போகிற அற்புதக் கலைஞன் அண்ணன் சிவாஜி, இந்தப் படத்தில் 'மிருதங்க சக்கரவர்த்தி' சுப்பையாபிள்ளையாகவே வாழ்ந்துவிட்டார்தான். படம் நெடுக சிவாஜி நடிப்பால் அற்புதம் நிகழ்த்தியிருந்தாலும் சில காட்சிகளை இங்கே நான் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

'மிருதங்கத்தை இனி தொடப்போவதில்லை' என சத்தியம் செய்திருந்த சமயம்.. ஒருநாள்... நள்ளிரவு நேரம்... தூங்காமல் விழித்தபடி இருப்பார் சிவாஜி. அப்போது மழை பெய்யும். வீட்டின் பின்புறத்தில் கழுவப்போட்ட

பாத்திரங்கள் கிடக்கும். மழைநீர் தாழ்வாரம் வழியாக வழிந்து பாத்திரத்தில் சொட்டாக, வேகமாக, மெது வாக... இப்படி மாறிமாறி பல பாத்திரங்களில் விழுந்து கொண்டிருக்கும். மழைநீர் விழும் இந்தச் சத்தம் 'சொட்... சொட்... சொட... சொட...' என இசைபோல் ஒலிக்கும். இதனால் கோபமான சிவாஜி 'இந்த வீட்டில் இசை சத்தமே கேட்கக்கூடாது' என பாத்திரங்களை எட்டி உதைப்பார்.

இந்தக் காட்சியும், சிவாஜியின் நடிப்பும் படத்தில் ஹைலைட்டாக அமைந்தது.

சிவாஜி தன் இசையைக் கைவிடக் காரணமான நம்பியாருக்கு மாயவரம் நகரில் பாராட்டுவிழாவுக்கு ஏற்பாடு செய்தவர்கள் 'அவருக்கு நீங்க வந்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கணும்' என்பார்கள்.

'அவரு தலைக்கனம் பிடிச்சவராச்சே' என்பார் சிவாஜி.

'இப்ப அப்படி இல்லீங்க. நீங்க பொன்னாடை போர்த்துற துக்கு அவரும் சம்மதிச்சிட்டாரு' என்பார்கள்.

'நீங்க போய்ட்டு வாங்க. தப்பில்லை' என கே.ஆர்.விஜயா வும் சொல்ல, சிவாஜி சம்மதிக்க... விழாக்குழுவினர் மகிழ்ச்சியுடன் விடைபெற்று போவார்கள்.

'ஏங்க... சுசீந்திரத்துல இருந்து மாயவரம் போறதுக்கு போக்குவரத்து செலவுக்கு?' என கே.ஆர்.விஜயா கேட்க... 'அது ஒண்ணு இருக்குல்ல...' என்றபடி விழாக் குழுவினரிடம் பணம் கேட்பதற்காக போவார் சிவாஜி.

அவர்கள் பஸ்ஸில் அமர்ந்திருப்பார்கள். சிவாஜி பின்பக்க படிக்கெட்டில் ஏறுவார். அப்போது... 'போக்குவரத்து செலவுக்கு சுப்பையாபிள்ளைக்கு பணம் வேணுமானு கேட்கலையே' என்பார் ஒருவர்.

"அப்படியெல்லாம் கேட்டா அவரு அவமானமா எடுத்துக் குவாருடா" என இன்னொருவன் சொல்ல... பஸ் கிளம்பிவிடும்.

அப்போது... அந்த துயரிலும் ஒரு சிங்கநடை நடந்து வீட்டுக்கு வருவாரே சிவாஜி... அய்யோ!

வீட்டுக்கு வந்த சிவாஜி மனைவியை அழைப்பார்... "வள்ளியம்ம...'"

"என்னங்க?'"

"போக்குவரத்து செலவுக்கு பணம் வேணுமானு கேட்டா நான் அவமானமா எடுத்துக்குவேனாம். என் தலையெழுத்து எப்படிப் போச்சு

பார்த்தியா? வள்ளியம்ம... வாழ்ந்து கெட்டவன் சாகணும்னா விஷம் சாப்பிட்டு சாகணும்கிறதில்ல. அவனோட பழைய கௌரவமே அவனைக் கொன்னுடும்''என சிவாஜி சொல்வார். கே.ஆர்.விஜயா அழுவார். இந்தக் காட்சியை இப்போது நினைத்தாலும் என் கண்கள் கலங்கிப்போகும்.

விழாவுக்கு போவதற்காக பழைய சட்டைக்கு பட்டன் தைப்பார். அப்போது ஊசி விரலில் குத்த... அதை வாயால் உறிஞ்சுவார். இப்படி நுணுக்கமாக பாத்திரத்தின் சூழலை நடிப்பால் கண்முன் நிறுத்தினார். உலகத்தில் வேறு எவரும் இப்படியெல்லாம் நடிக்க முடியாது.

இசைப்போட்டிக்காக ரொம்ப வருடங்கள் கழித்து மிருதங்கத்தை தொட்டு எடுத்து அடித்துப் பார்ப்பார். அப்போது எழும் ஒலியில் தெம்பாகி ஆனந்தக் கண்ணீர் வடிப்பார்.

இப்படி சிவாஜியின் நடிப்பு நுணுக்கங்களை சொல்லிக் கொண்டே போகலாம். அதனால்தான் 'இந்த உலகத் திலேயே சிறந்த நடிகன் ஒருவன் உண்டென்றால்.. அது என் தம்பி சிவாஜிகணேசன்தான்' எனப் பாராட்டி னார் எம்.ஜி.ஆர். அந்த உயிரோட்டமான நடிப்பிற்கு மேலும் சிறப்புச் சேர்த்தது மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதனின் இசை. கதை எழுதி இந்தப் படத்தைத் தயாரித்ததற்காக காலமெல்லாம் நான் பெருமிதம் அடைகிறேன்.

முதல்வர் எம்.ஜி.ஆர். 'மிருதங்க சக்கரவர்த்தி''படம் பார்த்துவிட்டுச் சென்ற ஒரு வாரத்தில் டைரக்டர் சங்கர், எம்.ஜி.ஆரைப் பார்க்கப் போய்விட்டு திரும்பிவந்து சொன்னார்... ''கலைஞானம்... சிறந்த நடிகர் சிவாஜி, சிறந்த டைரக்டர் கே.சங்கர், சிறந்த கதாசிரியர் கலைஞானம், சிறந்த ஒளிப்பதிவாளர் சேகர்... என நான்கு தமிழக அரசு விருது 'மிருதங்க சக்ரவர்த்தி'க்கு கிடைக்கப்போகுது.''

நான் மிகுந்த சந்தோஷமடைந்தேன்.

ஆனால்...

# ஸ்டார் நைட்!

'மிருதங்க சக்கரவர்த்தி' படத்திற்காக தமிழக அரசின் 'சிறந்த நடிகர்' விருது சிவாஜிக்கும், 'சிறந்த இயக்குநர்' விருது கே.சங்கருக்கும், 'சிறந்த கேமராமேன்' விருது சேகருக்கும், 'சிறந்த கதாசிரியர்' விருது எனக்கும் கிடைக்கவிருக்கிற தகவல் அறிந்து நான் மகிழ்ச்சியடைந்தேன். இந்த தகவல் எப்படியோ வெளியில் கசிந்து, 'பேசும் படம்' உள்ளிட்ட சில சினிமா பத்திரிகை நிருபர்கள் என்னிடம் பேட்டி யெடுக்க வந்துவிட்டனர்.

''அரசு இன்னும் முறையாக அறிவிப்புச் செய்யவில்லை. அறிவிப்பதற்கு இன்னும் கால அவகாசம் இருக்கு. அதனால் இப்போது எதையும் எழுதாதீர்கள். ஆமா... அதுக்குள்ள உங்களுக்கு எப்படி இந்த தகவல் கிடைத் தது?'' எனக் கேட்டேன்.

''காற்றுப் புகாத இடத்திலும் நாங்க புகுந்திருவோம்'' என்ற நிருபர்கள், 'முறையான அறிவிப்பு' வந்த பிறகு சந்திப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

இந்தச்சமயம் முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடமிருந்து எனக்கு ஒரு நன்றிக் கடிதம் வந்தது.

எதற்காக அந்தக் கடிதம் என்றால்...

சத்துணவு திட்டத்திற்காக நிதி திரட்டிக்கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர். அந்தச் சமயம், திரையுலகினரிடம் நிதி வசூலிக்கும் பொறுப்பை பாரதிராஜா, பஞ்சு அருணாசலம் மற்றும் சித்ரா லட்சுமணன் ஆகிய மூவரும் மேற்கொண்டிருந்தனர். மூவரும் என்னிடம் நன்கொடை கேட்டு வந்தபோது, ஐயாயிரம் ரூபாய்க்கான காசோலையை கொடுத்தேன் நான்.



"மாசம் ரெண்டுலட்ச ரூபாய் சம்பாதிக்கிற ஒரு பாடகி வெறும் ஆயிரம் ரூபாதான் டொனேஷன் குடுத்திச்சு. ஆனா... படம் தயாரிக்க வட்டிக்கி வாங்கின பணத்தில் ஐயாயிரம் தர்றீங்களே. ஹேட்ஸ் ஆஃப் யூ" என்றார் பாரதிராஜா. அன்றைய தேதியில் அது பெரும் தொகைதான் எனக்கு. அதனால் நன்றிக்கடிதம் அனுப்பியிருந்தார் எம்.ஜி.ஆர். அந்தக் கடிதத்தையும் என் பொக்கிஷங்களில் ஒன்றாக பாதுகாத்து வருகிறேன்.

இந்தக் கடிதம் வந்த சில நாட்களில்... சென்னை மாவட்ட கலெக்டர் சுந்தரமூர்த்தி, சக அதிகாரிகளுடன் என்னைத் தேடிவந்தார்.



எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009

நாள் 6-12-1983

அன்புடையீர்,

ஏழைக் குழந்தைகளின் மதிய சத்துணவுத் திட்டத்திற்கென நிதியுதவியாகத் தாங்கள் வழங்கிய ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)-க்கான காசோலையைப் பெற்றுக் கொண்டேன். ஏழைக் குழந்தைகளின் நல்வாழ்வில் அக்கறை கொண்டு இந்த திட்டத்திற்கு நிதியுதவி வழங்க முன் வந்துள்ளதை நான் மிகவும் பாராட்டுவதுடன் எனது உளங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

(எம். ஜி. இராமச்சந்திரன்)

பெறுநர்:
திரு கலைஞானம் அவர்கள்,
பைரவி பிலிம்ஸ்,
17, முர்ரேஸ் கேட் சாலை,
சென்னை-600018.

6/19



எஸ். பாலசுப்ரமணியன்
ஆசிரியர்

ஆனந்த விகடன்
757, அண்ணா சாலை,
சென்னை - 600002

31.10.83

திரு. கலைஞானம்,
சென்னை-18.

அன்புள்ள திரு. கலைஞானம் அவர்களுக்கு,

வணக்கம்.

24.10.83 தேதியிட்ட தங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

'மிருதங்க சக்கரவர்த்தி' விமரிசனத்தில் நேர்ந்து விட்ட குறையை பெரிது படுத்தவில்லை என்று தாங்கள் எழுதியிருப்பது தங்கள் பெருந்தன்மையையேக் காட்டுகிறது. ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் ஒரு குறையைச் சுட்டிக் காட்டுமிடத்தில் தவறு நேர்ந்து விட்டதால் தண்டனை அவசியமாகிவிட்டது.

விகடன்மீது இத்தனை அன்பும், அக்கறையும் காட்டி தாங்கள் கடிதம் எழுதியதற்கு மிக்க நன்றி.

தங்களுக்கு என் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்.

தங்கள்,

எஸ். பாலசுப்ரமணியன்
ஆசிரியர்

"அய்யய்யோ... நான் எதுவும் தப்புப் பண்ணலையே" என பதறினேன்.

எனக்கு வணக்கம் வைத்த கலெக்டர், "உங்களால் ஒரு உதவி ஆகணும்" என்றார்.

"உட்காருங்க சார். என்ன விஷயம்?"

"சத்துணவு திட்டத்திற்காக 'ஸ்டார் நைட்' என டிக்கெட் போட்டு பொதுமக்களிடம் 50 லட்ச ரூபாய் வசூலித்து விட்டேன். ஆனா... எனக்கு எந்த ஸ்டாரையும் தெரியாது. 'மிருதங்க சக்கரவர்த்தி' படத் தயாரிப்பாளர் கலைஞானத்தைப் போய்ப் பாருங்க'னு என் நண்பர் ஒரு யோசனை சொன்னார். அதான் வந்தேன். நீங்க கூடவே இருந்து எனக்கு உதவணும்" என்றார் கலெக்டர்.

"சார்.. நான் மட்டும் இருந்து செய்ய முடியாது. என்னோட டைரக்டர் எம்.பாஸ்கர், என்னோட வசனகர்த்தா ஏ.எஸ். பிரகாசம், என்னோட நண்பர், நடிகர் மேஜர் சுந்தர்ராஜன்... இந்த மூணுபேரையும் நீங்க

பார்த்துப் பேசணும்'''என்றேன். அதன்படி அவர்களை கலெக்டர் சந்தித்துப் பேசினார். இப்போது நாங்கள் நால்வரும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டோம். அதாவது... நல்லது நடப்பதற்காக ஒரு பொய்.

அப்போது கமல், ரஜினி, பாரதிராஜா, பாக்யராஜ் ஆகியோர் ரொம்ப பரபரப்பாக இருந்தனர். அவர்களை விழாவுக்கு வரவழைப்பதற்காக அந்தப் பொய்யைச் சொன்னோம்... "இன்ன தேதியில், இந்த இடத்தில், இன்ன காரியத்துக்காக விழா நடக்குது. நீங்க கண்டிப்பா கலந்துக்கணும்னு எம்.ஜி.ஆர் சொல்லீட்டார்" என முழுப்போடு போட்டோம். அவர்களும் வருவதற்குச் சம்மதித்தனர்.

நேரு ஸ்டேடியம் அப்போது திறந்தவெளி அரங்கமாக இருந்தது.

அங்குதான் ஸ்டார் நைட் நடந்தது. இரண்டு, இரண்டு நட்சத்திரங்களாகச் சேர்ந்து ஒரு நிகழ்ச்சி என பலவித நிகழ்ச்சிகள் நடந்தன. ஆனால் என்னுடைய நிகழ்ச்சி முற்றிலும் புதுமையாக, பலத்த வரவேற்பைப் பெற்றது. இப்போதெல்லாம் மேடையில் குரூப் டான்ஸ் நிகழ்ச்சி நடப்பது சர்வசாதாரணம். ஆனால் மேடை யில் முதன்முதலாக குரூப் டான்ஸ் நிகழ்ச்சியை அரங்கேற்றியது நான் தான். அந்தச்சமயம் நான் அம்பிகா வை கதாநாயகியாக வைத்து ‘நீதிக்கு ஒரு பெண்' படத்தை தயாரித்துவந்தேன். அதில் ஒரு குரூப் டான்ஸில் 30 பெண்கள் ஆடுவதுபோல காட்சி. பிரபுதேவாவின் அப்பா சுந்தரம்தான் டான்ஸ் மாஸ்டர். அவரிடம் "யப்பா... சுந்தரம்... நீ 30 பேரை பயிற்சி கொடுத்து மேடையில் டான்ஸ் நிகழ்ச்சி பண்ணப்போறதா நான் எம்.ஜி.ஆர்.கிட்ட சொல்லீட்டேன். ‘அப்படியா? கண்டிப்பா அந்த நிகழ்ச்சி வேணும்'னு’ எம்.ஜி.ஆர் சொல்லீட்டார்" என புருடா விட்டேன். இரவுபகலாக ரிகர்ஸல் நடத்தி மேடையில் அரங்கேற்றிவிட்டார். எம்.ஜி.ஆர். முதல் எல்லா பார்வையாளர்களும் இந்த டான்ஃஸ ரொம்பவே கைதட்டி ரசித்தனர்.

நிகழ்ச்சி முடிந்தது. எம்.ஜி.ஆர். மேடைக்கு வந்தார்.

எத்தனை கலைஞர்கள் இந்த விழாவில் கலந்து கொள்ளப் போகிறார்கள் என்பதை கலெக்டரிடம் முன்கூட்டியே கேட்டுத் தெரிந்துகொண்ட எம்.ஜி.ஆர், மொத்தம் 123 பேர்களுக்கும், தலா ஒரு பவுன் மோதிரம் என 123 மோதிரங்களை வாங்கிவைத்து, மேடையில் ஒவ்வொருவருக்கும் பரிசளித்தார்.

122 பேர்களுக்கு பரிசளித்த பின் 'இன்னும் ஒருத்தர் குறையுதே... யார்?' என எம்.ஜி.ஆர். கேட்க... அப்போது 'இதோ வருகிறார் 'மிருதங்க

சக்கரவர்த்தி' தயாரிப்பாளர் கலைஞானம்'' என அறிவிப்பு செய்தார்கள்.

நான் மேடைக்கு வந்ததும் பூரித்த புன்னகையுடன் எம்.ஜி.ஆர்., என் விரலைப் பற்றி மோதிரத்தை அணிவிக்க... கரகோஷமும், கைதட்டலும் ஓய்ந்த நிலையில் ஒரே ஒருவரின் கைதட்டல் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்க... திரும்பிப் பார்த்தேன். அண்ணன் சிவாஜி சந்தோஷமாக கைதட்டிக் கொண்டிருந்தார். எம்.ஜி.ஆர். செய்த மரியாதையும், சிவாஜியின் ஊக்குவிப்பையும் நினைத்தால் இப்போதும் சிலிர்த்துப்போகிறேன்.

'மிருதங்க சக்கரவர்த்தி' படம் மக்களின் பெரும் வரவேற்புடன் ஓடிக்கொண்டிருக்க...

தமிழ்நாடு முழுக்க சிவாஜி ரசிகர்களிடமிருந்து எனக்கு கடிதங்கள் வந்து குவிந்தன. 'ஆனந்த விகடன்' விமர்சனத்தில், படத்துக்கு மார்க் குறைவாகப் போடப்பட்டிருந்ததாக ரசிகர்கள் வருத்தப்பட்டு எழுதி யிருந்தனர். இதேபோல ஆனந்த விகடனுக்கும் வருத்தத் தையும், கண்டனத்தையும் தெரிவித்து ரசிகர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இது, ஆசிரியர் பாலசுப்பிரமணியன் கவனத்துக்குவர... அந்தக் கடிதங்களைப் படித்த அவர், உடனே சாந்தி தியேட்டரில் 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தைப் பார்த்திருக்கிறார்.

அதன்பின் விமர்சனக் குழுவை அழைத்து ''படம் பார்த்தேன், பிரமாதமாக இருக்கு. உங்களுக்குள் ஏதோ கருத்து வேறுபாடு காரணமாக இப்படி குறைவாக எழுதி விட்டீர்கள். இதனால் விகடனுக்குத்தான் கெட்ட பெயர் வரும். எனவே... இன்றுமுதல் மூன்று மாதங்களுக்கு நீங்க விமர்சனம் எழுதக் கூடாது. அதுமட்டுமில்லை, உங்களை சஸ்பெண்ட் செய்கிறேன்'' எனச் சொல்லி தண்டித்துவிட்டார். இந்திய சினிமாவின் ஆகப்பெரிய ஆதாரங்களில் ஒருவரான எஸ்.எஸ். வாசனின் பிள்ளையாச்சே பாலசுப்பிரமணியன். அதனால் கண்டிப்புடன் இப்படி ஒரு முடிவை எடுத்துவிட்டார். அது மட்டுமில்லாமல் விகடனில் இதை அறிவிப்பாகவும் வைத்தார்.

அந்தவார விகடனை வாங்கிப் படித்தேன். நான் தயாரித்த ஒரு படத்தால் விமர்சனக் குழுவினர் சஸ்பெண்ட் நடவடிக் கைக்கு ஆளானது என்னை சிரமப்படுத்தியது. அதனால் ஆனந்தவிகடன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினேன்...

"அய்யா... பத்திரிகையில் உங்கள் அறிவிப்பை நான் படித்துப்பார்த்தேன். 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தை விமர்சித்ததில் சில குறைகள் இருக்கலாம். அதை நான் பெரிதுபடுத்தவில்லை. இருப்பினும், நீங்கள் பெரிய இடத்துப் பிள்ளை என்பதை நிரூபித்துவிட்டீர்கள். அதற்காக நான் உங்களுக்கு தலை வணங்குகிறேன். ஆனால் விமர்சனக் குழுவினரை மூன்று மாதங்களுக்கு சஸ்பெண்ட் செய்திருப்பதை ரத்து செய்ய வேண்டும்' என அந்த கடிதத்தில் கேட்டுக்கொண்டேன்.

அதற்கு பதில் கடிதம் ஒன்றை பாலசுப்பிரமணியன் அனுப்பினார். அதில்...

'மிருதங்க சக்கரவர்த்தி' விமரிசனத்தில் நேர்ந்துவிட்ட குறையை பெரிதுபடுத்தவில்லை என்று தாங்கள் எழுதி யிருப்பது தங்கள் பெருந்தன்மையையே காட்டுகிறது. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் ஒரு குறையைச் சுட்டிக் காட்டும் இடத்தில் தவறு நேர்ந்துவிட்டதால் தண்டனை அவசியமாகிவிட்டது'

...இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கடிதத்தையும் நான் இன்றளவும் பாதுகாத்து வருகிறேன்.

# பாகம் 4-ல் உள்ள சிறப்பம்சங்கள்!

சிறு குழந்தைகளைப் போல் விளையாடிக்கொண்ட எம்.ஜி.ஆர். - சிவாஜி

பாகவதர் காதல் காட்சியால் என் வாழ்க்கையில் உண்டான பிரளயம்

எம்.ஜி.ஆருக்காக எழுதிய கதையில் ரஜினி

பிரபல இயக்குநர் - நடிகர் கடும் மோதல்

பிரபல பாடகர் கே.ஜே. யேசுதாசுடன் நான் போட்ட சண்டை

யேசுதாஸ் செய்த சத்தியம்

சென்னையின் முதல் ஸ்டுடியோவான ஸ்டார் ஸ்டுடியோ -சில சுவாரசியத் தகவல்கள்

பானுமதியுடன் நான் கதை சொன்ன அனுபவம்

'இது நம்ம ஆளு' பட சர்ச்சை

பாக்யராஜுக்கு எம்.ஜி.ஆர். போட்ட கட்டளை

பாக்யராஜுடன் எனது கலைப்பயணம்

பாக்யராஜ்-பாலாஜி மோதல்! உண்மை என்ன? ரஜினி சமாதானம்

எழுமலை ஜமீன்தாரின் உருக்கமான, உயர்வான வாழ்க்கை கதை

குடும்பப் பிரச்சினையை என்னிடம் சொல்லி அழுத தேவிகா

அப்பாவுடன் சேர மறுத்த கனகா

சினிமாவில் இசையமைப்பாளராக ஜெயிக்க வேண்டும் என நினைத்த ஒரு டாக்டரின் வாழ்க்கையில் விதி ஆடிய விளையாட்டு -நெஞ்சை உருக்கும் சம்பவம்

இன்னும் பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது.

வாசியுங்கள்... வரலாறை!

**-கலைஞானம்**